பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறி

# கல்வியின் சமூகவியல் அடிப்படை

பகுதி 1

பட்டப் பின் ஆசிரியர் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

03201

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் சமூகவியல் அடிப்படை

அத்தியாயங்கள் 1 தொடக்கம் 6 வரை

பட்டப் பின்
ஆசிரியர் கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

பட்டப்பின் படிப்புக் கல்வி டிப்ளோமா பயிற்சி நெறிக்குரிய கல்வியின் சமூகவியல் அடிப்படை என்ற பாடத்துறையின் கீழ் இந்த மொடியூல் எழுதப்பட்டுள்ளது. இதனை எழுதுவதில் கல்வி சமூகவியல் துறை அறிஞர்களின் கருத்துக்களும் இவ்விடயம் பற்றி எழுதப்பட்ட பல நூல் களில் அடங்கியுள்ள விடயங்களும் துணைபுரிந்துள்ளன.அத்தோடு தேசிய நிறுவனங்கள், சமூக சூழல் என்பனபற்றிக் கவனத்தில் எடுத்து உரிய விடயப் பகுதிகள் முடிந்த அளவில் தேசியக் கண்ணோட்டத்தில் தரப்பட் டுள்ளன. எனவே இப்பாட நெறியானது உங்கள் வாழ்க்கை அனுபவங் களுடனும், உங்கள் சூழலுடனும் பெருமளவில் தொடர்புறுவதால் இத னைக் கற்பதில் சிரமம் இருக்காது.

இம்மொடியூல் பதினொரு அத்தியாயங்களைக் கொண்டுள்ளது. ஒவ் வொரு அத்தியாயமும் சிறு அறிமுகமொன்றுடன் ஆரம்பமாகிறது. அதனை அடுத்து ஒவ்வொரு அத்தியாயத்துக்குரிய விசேட இலக்குகள் தரப்பட்டுள்ளன. அதற்கடுத்ததாக அவ்வத்தியாயத்தில் முன்வைக்கப்பட் டுள்ள விடயங்கள்பற்றி ஏற்கனவே உங்களுக்குள்ள அறிவினை வெளிக் கொண்டுவருவதற்காகச் செய்யப்படும் முன் சோதனையொன்று உண்டு. இந்த முன் சோதனைக்கு இயன்றளவுக்கு நீங்கள் விடையளிப்பது கற் றல் செயற்பாட்டை எளிதாக்கும்.

ஒவ்வோர் அத்தியாயத்திற்குமுரிய பாடவிடயங்கள் அடுத்ததாகத் தரப்பட் டுள்ளன. பாடவிடயங்கள் படிமுறையாக வழங்கப்படும்போது இடையி டையே செயற்பாடுகள் சிலவும் தரப்பட்டுள்ளன. இச்செயற்பாடுகள் உங் கள் கற்றல் செயற்பாட்டை எளிதாக்குவதற்காக அமைக்கப்பட்டுள்ளன. எனவே அவற்றைப் பூர்த்தி செய்யாது அதற்கு அப்பால் செல்ல வேண் டாம். இம்மொடியூலின் ஆரம்பம் முதல் இறுதிவரை அவ்வாறு தரப்பட் டுள்ள செயற்பாடுகளை வரிசைக் கிரமமாகப் பூர்த்தி செய்வதன் மூலம் இந்த மொடியூலின் சரியான பயனைப் பெற்றுக் கொள்ள முடியும்.

ஒவ்வோர் அத்தியாயத்தினதும் பாடவிடயங்களின் முடிவில் சாராம்சம் ஒன்றும், மீட்டல் (மீள் நோக்கு) ஒன்றும் உண்டு. இந்த மீட்டலின் மூலம் உங்களைப் பற்றி நீங்களே சுயமதிப்பீடொன்று செய்து கொள்ள முடி யும். அவற்றுக்குரிய விடைகளும் அடுத்துத் தரப்பட்டுள்ளதால் உங்கள் விடைகளை நீங்களே இலகுவாக சரிபிழை பார்த்துக் கொள்ள முடியும். விடையளிக்கும் முன்னர் மொடியூலில் தரப்பட்டுள்ள விடைகளைப் பார்க்காமல் தவிர்த்துக் கொண்டால் நீங்கள் உங்களைப் பற்றி நம்பக மான அளவீடொன்றைச் செய்து கொள்ளலாம்.

மீட்டலை அடுத்து உங்களுக்காகச் சில ஒப்படைகள் தரப்பட்டுள்ளன. ஒவ்வோர் அத்தியாயத்தின் முடிவிலும் அவ்வொப்படைகளைச் செய்து முடிப்பதன் மூலம் உங்கள் கற்றல் உறுதி அடைவதோடு பின்னர் நடை பெறக்கூடிய மதிப்பீடுகளின் போது பயனுடையதாய் இருக்கும். அவ் வொப்படைகளைப் பூர்த்தி செய்தபின் நீங்கள் கல்விச் சமூகவியல் பிரச் சினைகள் பற்றிப் பரந்த, ஆழமான கணிப்பீடுகளையும், ஆய்வுகளையும் செய்யக்கூடிய திறனைப் பெற்றுக் கொள்வீர்கள்.

ஒப்படைகளை அடுத்து அந்தந்த அத்தியாயத்திற்குரிய கலைச் சொற்கள் உண்டு. அவற்றை நினைவில் வைத்திருப்பது மிகவும் பயனுடையது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியாக ஒவ்வோர் அத்தியாயத்திலும் அடங்கி உள்ள விடயங்கள் பற்றிய மேலதிகக் கற்றலுக்காக உதவக்கூடிய நூல்களினதும் மூலாதாரங்களினதும் பெயர்ப் பட்டியல் உண்டு. அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள பல நூல்கள் இந்நாட்டு நூலகங்களிலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடியவையே. எனவே அவற்றுள் சிலவற்றையாவது வாசிக்க முயல்வது அதிக பயன் தரும்.

இவ்வாறு இந்த மொடியூலை வெற்றிகரமாகக் கற்பதன் மூலம் இந்தப் பாடநெறியின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதோடு,, உங்கள் மாணவர்களையும் நீங்கள் சேர்ந்துள்ள சமூக நிறுவனங்கள், பரந்த சமூகம் என்பவற்றையும் ஒரு பரந்த கண்ணோட்டத்தில் பார்ப்பதற்குத் தேவையான ஆற்றலைப் பெற்றுக் கொள்வீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளடக்கம்

பக்கம்

**முதலாம் அத்தியாயம்**
சமூகமயமாக்கல் ........................................................... 05

**இரண்டாம் அத்தியாயம்**
சமவயதுக் குழுவினர் ............................................... 27

**மூன்றாம் அத்தியாயம்**
பாடசாலை ஒரு பண்பாட்டு நிறுவனம் ........................... 48

**நான்காம் அத்தியாயம்**
சமூகமயமாக்கலில் செல்வாக்குச் செலுத்தும் ஏனைய கருவிகள் 65

**ஐந்தாம் அத்தியாயம்**
பாடசாலை ஒரு சமுகத் தொகுதியாக .......................... 82

**ஆறாம் அத்தியாயம்**
வகுப்பறை ஒரு சமூகக் குழுவாக ................................ 107

1992 – தேசிய கல்வி நிறுவகம்.
பதிப்பு 1 : 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் அத்தியாயம்

## சமூகமயமாக்கல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம்.

உள்ளடக்கம்

1.0 அறிமுகம் ........ 07

2.0 சிறப்பு நோக்கங்கள் ........ 07

3.0 முற்சோதனை ........ 08

4.0 சமூகமயமாக்கல் ........ 08

4.1 சமூகமயமாக்கல் என்றால் என்ன? ........ 09

4.2 சமூகமயமாக்கற் கருவிகள் ........ 10

4.3 சமூகமயமாக்கலுக்குரிய நுட்ப முறைகள் ........ 11

4.4 சமூகமயமாக்கலில் குடும்பத்தின் செல்வாக்கு ........ 13

4.5 குடும்பத்தின் உயிரியற் காரணிகள் ........ 17

4.6 குடும்பத்திலிருந்து கற்றுக் கொள்பவை ........ 21

5.0 சாராம்சம் ........ 23

6.0 பிற்சோதனை ........ 24

7.0 விடைகள் ........ 25

8.0 ஒப்படைகள் ........ 25

9.0 கலைச்சொற்றொகுதி ........ 26

10.0 மேலதிக வாசிப்புக்குரிய நூல்கள் ........ 26



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1.0 அறிமுகம்

சமுகமயமாக்கல் என்பது மனித வாழ்க்கையை நடாத்திச் செல்லும் ஒரு பிரதான சக்தியாகும். இவ்வத்தியாயத்தின் முதல் பகுதியில் சமூகமய மாக்கல் என்றால் என்ன என்பது பற்றி விவரிக்கப்படுவதோடு மனித வாழ்க்கையின் மீது செல்வாக்குச் செலுத்தும் சமூகமயமாக்கற் கருவிக ளும் அறிமுகஞ் செய்யப்படும்.

அதற்கடுத்ததாக அக்கருவிகளுள் மிகச் சக்தி வாய்ந்ததும் முதன்மையான துமான கருவியாகிய குடும்பம் பற்றியும், அதன் இயல்புகள், அது ஏற் படுத்தும் பாதிப்பு என்பனபற்றியும் ஆராயப்படும்.

முற்காலத்தில் சக்தி வாய்ந்த சமுகமயமாக்க கருவியாக விளங்கிய குடும்பத்தினுடைய தொழில்களும் பணிகளும் பல்வேறு சக்திகள் காரண மாக வேறு கருவிகளிடம் சென்றடைந்துள்ள விதம் பற்றியும் குடும்பத்தி னால் நிறைவேற்றப்படும் கல்விச் சேவை பற்றியும் இங்கு ஆராயப்படு கிறது.

இவ்வத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைத் தமது அனுப வங்களுடன் இணைத்துக் கொள்வதற்காக இங்கு தரப்பட்டுள்ள தொழில் பாடுகளில் ஈடுபடுவது அதிக பயனளிப்பதாக அமையும். இதனை நல்ல முறையில் கற்பவர் மற்றவரைப் போன்று தன்னையும் இனங்கண்டு கொள்வர்.

# 2.0 சிறப்பு நோக்கங்கள்

சமூகமயமாக்கல் என்றால் என்ன என்பதை விளங்கிக் கொள்வர்.

சமூகமயமாக்கல் கருவிகளை இனங்காண்பர்

சமூகமயமாக்கல் நுட்பமுறைகளை இனங்காண்பர்.

தனியாளொருவனை சமூகத்துத்துரியவனாக்குவதில் குடும் பம் வலுவுள்ள செல்வாக்குச் செலுத்துகிறது என்பதைப் புரிந்து கொள்வர்.

குடும்பமானது கருவுக்குரியது. விரிவடைந்தது என இரு வகைப்படும் என்பதை விளங்கிக் கொள்வர்.

குடும்பம் கல்விப் பங்களிப்பொன்றினை நிறைவு செய்கின் றது என்பதை அறிந்து கொள்வர்.

குடும்பத்தின் பொறுப்பு மாறிவிடும் தன்மையது என்பதை அறிவர்.

உயிரியல், சமூகவியல் ஆகிய இரு துறைகளிலும் மனிதனு டைய விருத்தியில் குடும்பம் வலிமையான செல்வாக்குச் செலுத்துகிறது என்பதைப் புரிந்து கொள்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.0 முற்சோதனை.

இவ்வத்தியாயத்தைக் கற்க முன்னர் நீங்கள் புரிந்து கொண்டுள்ள விதத்தில் பின்வரும் விடயங்களை எழுதிவையுங்கள்.

1. நீங்கள் சமூகமயமாக்கல் என்ற சொல்லைப் பலதடவைகள் கேள்விப் பட்டிருப்பீர்கள். அது பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?

2. (1) உங்களிடம் கற்பவர்களை சமூகத்துக்குப் பொருத்தமான முறையில் இசைவாக்கம் பெறச் செய்வதில் உங்களைவிட வேறு என்ன கருவிகள் உதவுகின்றன அல்லது செல்வாக்குச்செலுத்துகின்றன.

   (2) அவற்றுள் மிக முக்கியமான கருவிகள் ஐந்தினை வரிசைக் கிரமமாக எழுதுக.

3. நீங்கள் உங்கள் மாணவர்களுக்குப் பெரும்பாலும் கற்பித்தல், ஆலோசனைகூறல்,சொல்லிக் கொடுத்தல் என்பவற்றின் மூலமே இசைவாக்கம் அடையச் செய்கிறீர்கள். இவற்றைத் தவிர இப்பணியை புரியக் கூடிய வேறு வழிமுறைகள் யாவை?

4. (1) குடும்பம் என்பது பற்றி நீர் கருதுவது யாது?

   (2) குடும்பங்களுக்கிடையில் யாதேனும் வேறுபட்ட தன்மையை நீங்கள் காண்கிறீர்களா?

   (3) அப்படியாயின் அவை யாவை?

5. (1) குடும்பம் ஒன்றின் கடமைகளையும் பொறுப்புக்களையும் நிரல் படுத்துக.

   (2) அப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் குடும்பம் ஒன்று எதிர் நோக்க வேண்டிய இடர்ப்பாடுகள் யாவை?

## 4.0 சமூகமயமாக்கல்

சமூகமயமாக்கல், சமூக இசைவாக்கல், சமூகத்துக்கு உரித்தாக்கல், சமுகப் பொருத்தப்பாடடையச் செய்தல் முதலிய பல்வேறு பெயர்களால் இவ் வெண்ணக்கரு அழைக்கப்படுகிறது. இது பற்றிய வரைவிலக்கணங்கள் பல முன்வைக்கப்பட்டுள்ளன. அவற்றுட் சில பின்வருமாறு.

(1) ஏதேனும் ஒரு சமூகத்தின் மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய ஆற்றலை அச்சமூகத்தின் அங்கத்தவர்களில் விருத்தி செய்தல் சமூகமயமாக்கல் பணிகளுள் ஒன்றாகும்.

(2) சமூகத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்ட அங்கத்தினராவதற்குச் செய்ய வேண்டியவை, செய்யக்கூடாதவை, அறிந்து கொள்ள வேண்டியவை என்பன பற்றிக் கற்றலே சமூகமயமாக்கற் செயன்முறையாகும் என உறவிக்உறேர்ஸ்ட் (Havinghurst) நியூகார்டன் (Neugarten) என்போர் வரையறுத்துள்ளனர்.

3. எமில் டர்கைம் (Emil Durkheim) என்பாரின் கருத்துப்படி சமூகமயமாக்கல் என்பது ஒரு தனியாள் த ஜுது சுற்றாடலின் சமூக சூழலுக்கேற்ப இசைவாக்கம் அடைவதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.1 சமூகமயமாக்கல் என்றால் என்ன?

சமூகம் என்பதனால் கருதப்படுவது முழு மனித சமுதாயமுமல்ல. இது ஒரு குறித்த பிரதேசத்தில் வசிக்கும் பொது இலக்குகளையும், விழுமியங்களையும் கொண்ட அமைப்புத் தொகுதிக்கு உரிமை பாராட்டும் ஒரு மக்கள் கூட்டமாகும். அத்தகைய மக்கள் கூட்டம் அல்லது சமூகம் சரியென ஏற்றுக் கொண்டுள்ள இலக்குகளையும், ஒழுக்கவியற்றொகுதிகளையும் தமது இளைய தலைமுறையினருக்கு உரித்தாக்குதலே சமூகமயமாக்கல் என்பதனால் கருதப்படுகிறது என்பது. மேற்குறித்த வரைவிலக்கணங்களிலிருந்து புலனாகும்.

ஒரு தனியாள் சமூகத்தில் தோன்றியது முதல் மரணம் எய்தும் வரை வாழும் காலத்தில் அவன் முற்றாகவே சமூகத்தில் தங்கியவனாகவே வாழ்கின்றான் எனக் கூறலாம். எங்கள் வாழ்க்கையின் எந்தப்பகுதியையும் சமூகத்திற்குப் புறம்பாக நடத்தக் கூடியதாக இல்லை. "பிறந்தது முதல் மரணம் கிட்டும் வரை சமூகத்தினால் நாம் இசைவாக்கப்படுகிறோம்" என்னும் கூற்றிலிருந்து சமூகமயமாக்கற் செயன்முறையின் இயல்பு நன்கு தெளிவாகிறது.

சமூகமொன்று தொடர்ச்சியாக நிலை பெறுவது அதன் அங்கத்தவர்களின் திறமையிலேயே தங்கியுள்ளது. சமூகத்தில் சேரும் புதிய அங்கத்தினர்களும் அத்திறமையைப் பெறவேண்டும். அதன்படி நோக்கினால், ஒரு பரம்பரை இன்னொரு பரம்பரைக்கு அந்த சமூகத்திறமையை வழங்குதல் சமூக மயமாக்கலாகும்.

பிறப்பு முதல் இறப்பு வரை சமூகத்தினுள் வாழும் மனிதன் தொடர்ச்சியாகச் சமூகமயமாக்கற் செயன்முறையை எதிர்நோக்குகின்றான். எனவே இது ஒரு குறித்த வயதெல்லைக்குள் மாத்திரமன்றி இறக்கும் வரையும் கூடிக் குறைந்து நிகழும் ஓர் ஆயுள் காலத் தொழிற்பாடாகும்.

குழந்தைப் பருவத்தில் இருந்த இடத்திலேயே மலம் கழிக்கும் குழந்தை பிள்ளைப் பருவத்தில் மலசலகூட உபயோகத்தைக் கற்றுக் கொள்கிறது. பாடசாலையில் எழுதவும் வாசிக்கவும் பழகிய பிள்ளை, கட்டிளமைப் பருவத்தில் தன் ஒத்த வயதினரின் மொழிக் கோலத்தைக் கற்கிறது. விளையாட்டுத் திடலில் திறமை காட்டிய சிறுமி பின்னொரு காலத்தில் சிறந்த மனையாளாகவும், தாயாகவும் மாறுகிறாள். திறமை மிக்க இளம் ஆசிரியர் ஐம்பத்து ஐந்து அல்லது அறுபது வயதின் பின்னர் ஓய்வு பெற்ற வாழ்க்கைக்குப் பழகுகிறார். இவையாவும் சமூக மயமாக்கலாகும். பல்வேறு, சமூகக் குழுக்கள், தொடர்ச்சியாகப் புதிய கற்றல் வாய்ப்புக்களை ஏற்படுத்துகின்றனர். புது எதிர்பார்ப்புக்களைத் தோற்றுவிக்கின்றனர். இதனால் தன் வாழ்நாள் முழுவதும் சமூக எதிர்பார்ப்புக்களுக்கு ஏற்பப் பொருத்தப்பாடடைய முயற்சிக்கின்றான்.

தனியொருவர், சமூக நடைமுறைகள் பற்றி விளக்கத்தைப் பெறுதல், அவற்றிற்கு ஏற்பப் பொருத்தப்பாடடைதல் அல்லது அடையாது இருத்தல், அவற்றைத் தவிர்த்தல் அல்லது அவற்றோடு தாக்கமுறுதல் ஆகிய அத்தனை தொழிற்பாடுகளும் சமூகமயமாக்கலில் அடங்கும் என்பது சமூகக் கணிப்பீடுகளின்படி எடுக்கப்பட்ட ஒரு முடிவாகும்.

சமூகமயமாக்கலானது நனவு நிலையில் போன்று நனவிலி நிலையிலும் சுய முயற்சியாலும், சுய முயற்சியின்றியும் நடைபெறக் கூடும். ஒரு தனியாளினது அல்லது ஒரு நிறுவனத்தினது அல்லது ஒரு தொடர்பு ஊடகத்தினது செல்வாக்கினால் சமூகமயமாக்கல் அடையலாம். அதே போன்று சமூகத்தில் வாழ்வதன் மூலம் முயற்சியின்றி சேகரித்துக் கொண்ட ஓர் அனுபவத்தின் மூலமும் சமூகமயமாக்கல் அடையலாம்.

ஒருவர் பிறப்புரிமையால் மாத்திரம் பெற்றுக் கொள்ளும் ஆற்றல்கள் மட்டும் அவனது சமூக வாழ்விக்குப் போதுமானவையல்ல. அத்தோடு அவரது இயல்பான திறன்களும் மனப்பாங்குகளும் சமூகத்திற்கு ஏற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையாகவோ ஒவ்வாதவையாகவோ அமையக்கூடும். எனவே, சமூகத்தில் அவர் திறமையான அங்கத்துவராவதற்கு அவருக்கு வழங்கப்பட வேண்டிய பண்பாடு ஒன்று உண்டு.

ஒரு சமூகத்தின் அங்கத்தவர்களால் உரிமை கோரப்படுவனவும், அவர்கள் தம் இளம் தலைமுறையினருக்கு உரித்தாக்குவனவும் ஆன நடத்தைகளும் அவற்றின் விளைவுகளும் அச்சமூகத்தின் பண்பாடாகும் என ரல்ப் லிண்டன் கூறுகிறார். ஒரு குழந்தை சமூக அமைப்பினுள் செயற்படுத்தப்படும் பண்பாடு அக்குழந்தைக்கு வழங்கப்பட வேண்டும், அதற்கு உரித்தாக்கப்பட வேண்டும். இவ்வாறு பண்பாடு உரித்தாவதும் உரித்தாக்கப்படுவதும் முறைசார்ந்து அல்லது முறைசாராது நிகழலாம். இதன்படி முறை சார்ந்து பண்பாட்டுக்குப் பயிற்சி பெறுவதும் சமூகமயமாக்கலாகும்.

அறிவு, மனப்பாங்குகள், திறன்கள் போன்ற பல்வேறு அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதற்கு மாத்திரமன்றி சமூக அறநெறிகளைப் புரிந்து கொள்ளவும், சமூகப் பிரச்சினைகளை வெற்றிகரமாகப் பயமின்றி எதிர்நோக்கி தான்வாழும் அமைப்பினுள் திறமைமிக்க அங்கத்தவனாவும் உரிய முறையிலான சமூக மயமாக்கலே உதவுகிறது.

ஒருவனுடைய வாழ்வின் பல்வேறு நிலைகள், அவரது அனுபவங்கள் என்பவற்றிற்கு ஏற்பவும், அவர்மீது செல்வாக்குச் செலுத்தும் சமூகமயமாக்கல் கருவிகளைப் பொறுத்தும், சமூகத்துக்குச் சமூகம் சமூகமயமாக்கல் செயற்பாடு வேறுபடலாம். ஒருவருடைய வாழ்வில் குழந்தை, பிள்ளை, முன்கட்டிளமை, கட்டிளமை, முதுமை ஆகிய பல்வேறு பருவங்களில் சமூகமயமாக்கல் கருவிகளின் பாதிப்புக் கூடிக் குறைந்து வேறுபடலாம். அத்தோடு ஒருவரின் உடலுக்குரிய, நுண்ணறிவுக்குரிய மனவெழுச்சிக்குரிய முதிர்வுடன் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளும் படிப்படியாக விரிவடைகின்றன. வாழ்க்கையின் தொடக்கத்தில் தாயும் ஏனைய குடும்ப உறுப்பினர்களும் குழந்தையின் மீது வலிமையாகச் செல்வாக்குச் செலுத்திய போதிலும், அக்குழந்தை வளர்ந்து பெரியவனாகும் போது அவன் வாழும் சமூகம் மாத்திரமன்றி முழு உலகமும் அவன் மீது செலவாக்குச் செலுத்துகின்றது.

சமூகமயமாக்கல் என்பது உயிர்ப்பானது; தொழிற்படுவது; ஆக்கபூர்வமானது. அதன் மூலம் பிள்ளைகளின் நடத்தை கட்டுப்படுத்தப்படுகிறது; எல்லைப்படுத்தப்படுகின்றது; விருத்தியடைகின்றது; தூண்டப்படுகின்றது; நிலைப்படுத்தப்படுகின்றது. அத்தோடு பல்வேறு அபிலாஷைகள் விருத்தியாக்கப்படுகின்றன. தேவையற்ற இயல்பூக்கங்கள் ஒழிக்கப்படுகின்றன.

செயற்பாடு 1

நீங்கள் வாழும் சமூக அமைப்பிலுள்ள சமூகமயமாக்கல் செயற்பாடு இடம்பெறும் முறையை மதிப்பீடு செய்க.

1.01 அவற்றின் மூலம் அச்சமூகத்தில் நிலைபெறக்கூடிய

1. பயனுள்ள செல்வாக்கு
2. பயனற்ற செல்வாக்கு எனும் இரு துறைகளின் கீழ் முடியுமான அளவு விடயங்களை ஒன்று திரட்டுக.


### 4.2 சமூகமயமாக்கற் கருவிகள்:

குழந்தையை சமூகத்துக்குரிய வளர்ந்த ஒருவராக்குவதற்கு அப்பிள்ளைக்கு பாதுகாப்பு வழங்கக்கூடிய, அன்பு செலுத்தக்கூடிய, பாராட்டு வழங்கக்கூடிய, ஏற்றுக் கொள்ளக்கூடிய தண்டனை வழங்கக்கூடிய எல்லா சமூக குழுக்களும் சமூகமயமாக்கற் கருவிகள் என அறிமுகப்படுத்த முடியும். இவற்றுள் மிகவும் முக்கியமானது எனக் கருதப்படக்கூடிய குடும்பம், சம வயதுக்குழு, பாடசாலை, சமய நிறுவனம், இளைஞர் கழகங்கள், தனியார் வகுப்புக்கள் வேறுபட்ட அரசியல், பொருளாதார பண்பாட்டியல் குழுக்கள், குடியியல் நிறுவனங்கள், திரைப்படம், தொலைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சி, வானொலி, செய்தித்தாள் முதலான பொதுசனத் தொடர்பு சாதனங்களுமாகும். இதனை இன்னொரு வகையாகக் கூறுவதாயின் தனி யாள் ஒருவன் இவ்வுலகில் தோன்றியதிலிருந்து இறப்புவரை தொடர்பு கொள்ளும் சகல சமூக செயற்பாடுகளும், நிறுவனங்கள், அமைப்புக்கள் யாவும் சமுகமயமாக்கல் கருவிகளாக அமையும். குழந்தைப் பருவ முதல் அச்சமூக பன்முகச் செயற்பாடுகள் செயற்படும் முறைகள் கீழே கொடுக் கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளன.




## 4.3 சமுகமயமாக்கலுக்குரிய நுட்ப முறைகள்

தனி ஆட்களின் சமூக இசைவாக்கம் பல்வேறு முறைகளில் நடைபெறும். அது பெருமளவு நிர்ணயிக்கப்படுவது தனியாள்களினதும் சமூகமயமாக் கல் கருவிகளினதும் தன்மையைப் பொறுத்தே.

1. பரிசு, தண்டனை முறைகள் சமூக இசைவாக்கத்திற்குரிய ஒரு நுண்முறையாகும். பரிசு மூலம் நன்நடத்தையை விருத்தி செய்யவும், தீய நடத்தையை தண்டனை மூலம் நீக்கவும் முடியும். இந்நுட்ப முறைகள் பிள்ளை முதிர்ச்சி அடையும் போது பயனற்ற அல்லது பொருத்தப் பாடற்ற முறையாக இடம்பெறும். எனினும் முதிர்ச்சியடைந்த போது கூட இம்முறைகள் பயன்படுத்தக்கூடிய சந்தப்பங்களும் உண்டு.

எடுத்துக்காட்டாக சிறு பிள்ளை ஒன்றுக்கு சொக்கலேட் துண்டோ, அல் லது ஐஸ்கிரீம் போன்ற ருசியான உணவைக் கொடுப்பதன் மூலமோ, ஆசிரியர் ஒருவருக்கு சைக்கிள் ஒன்றைப் பரிசளிப்பதன் மூலமோ, வளர்ந்த ஒருவனுக்கு பணக் கொடுப்பனவு ஒன்றைப் பரிசளிப்பதன் மூலமோ அல்லது இவைபோன்ற ஏதாவது ஒரு வழியில் சமூக இசை வாக்கம் இடம்பெற முடியும். பொருள் வழங்கல் இன்றியும் இதனைச் செய்ய முடியும். சிறு பிள்ளைக்கு தாயிடமிருந்து கிடைக்கும் முத்தம், இளைஞன் ஒருவனுக்கு நண்பர்களின் மதிப்பு அல்லது பாராட்டு, வயது வந்த ஒருவருக்கு தனது தொழில் வழங்குவரது பாராட்டு ஆதியன மூலமும் அவ்வவ் வயது மட்டத்தில் இந்நுட்ப முறைகளைப் பயன் படுத்த முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிழையான நடத்தையை நீக்குவதற்கு பயன்படுத்தக்கூடிய தண்டனையையும், பல்வேறு மட்டங்களில் பல்வேறு விதமாக பயன்படுத்த முடியும். சிறுபிள்ளையைக் கடிந்து கொள்வதன் மூலமும், அல்லது ஏசுவதன் மூலமும் பாடசாலைப் பிள்ளையை வகுப்பறை முன் முழங்காலில் நிற்கச் செய்வதன் மூலமும், இளைஞன் ஒருவனை அவனது குழுவிலிருந்து பிரித்து விடுவதன் மூலமும், வளர்ந்த ஒருவரை அவரது நண்பர் ஒருவர் அல்லது உறவினர் ஒருவரது உபசாரத்துக்கு அழைப்புக் கொடுக்காது விடுவதன் மூலமும் அவ்வத் தனியாளிடம் காணப்படும் பிழையான நடத்தையை நீக்கி சமூகத்துக்கு உரித்தாக்க முடியும். இதற்காகப் பயன்படுத்தக் கூடிய இன்னுமொரு உபாயம் அவ்வவ் ஆட்கள் மதிக்கும் ஆள் அல்லது பொருள்களிலிருந்து நீக்கிவிடுவதாகும். இவ்வாறு தனியாட்களிடம் பௌதீக அல்லது சமூக இசைவாக்கத்தாக்கத்தை ஏற்படுத்துவது அல்லது தண்டனை வழங்குவது சமூக உரித்தாக்குதலின் ஒரு நுட்ப முறையாகும்.

2. இரண்டாவது நுட்பமுறை போதனை அல்லது கற்பித்தலாகும். ஏதாவது ஒன்றைப் பற்றிய விவரங்களை வழங்குதல் ஏதாவது ஒன்றைச் செய்யும் முறையைச் சொல்லிக் கொடுத்தல், எதைச் செய்ய வேண்டும் எனச் சொல்லிக் கொடுத்தல் ஆகியன இந்நுட்ப முறையில் அடங்கும். இந்நுட்ப முறை பெருமளவு செயற்படுத்தப்படுவது பாடசாலையிலாகும். பெற்றோர், மூத்தோர், சமய சமூக நிறுவனங்கள் வேறு பொதுசனத் தொடர்பு சாதனங்கள் என்பவையும் இந்நுட்ப முறையைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் உண்டு.

எடுத்துக்காட்டாக புகைபிடித்தல், போதை பொருட்களிலிருந்து பாதுகாப்பு என்பன சம்பந்தமான கற்பித்தல் தற்சசமயம் பல்வேறு வகைகளில் வழங்கப்படுவதைக் குறிப்பட முடியும்.

3. சமூகவயப்படுத்தலின் மூன்றாவது நுட்பம் முன்மாதிரியும் பின்பற்றலுமாகும். இது நனவு நிலையிலும் நனவிலி நிலையிலும் நிகழலாம். மூத்தவர், ஆசிரியர் அல்லது சிறந்த உதாரணமாக விளங்கும் தனியாளை முன்மாதிரியாகக் கொண்டு தமது வாழ்வை அதுபோல் அமைத்துக் கொள்ள சில பிள்ளைகள் முயற்சி செய்யலாம். அதுபோன்றே மூத்தவர் ஒருவர் முன்மாதிரியான வாழ்க்கை நடத்தி இளைய தலைமுறையினரை நல்வழிப்படுத்த முற்படலாம். பின்பற்றலும் இதனுடன் தொடர்புடைய ஒரு நிகழ்வாகும். சில பிள்ளைகள் தாம் மிகக் கூடுதலாக அன்பு செலுத்தும், மதிப்பளிக்கும், அல்லது கௌரவிக்கும் ஆசிரியர், மூத்தவர் அல்லது நண்பரைப் பின்பற்றுவர். இன்றேல் அவரை ஒத்த நிலையை அடைய முற்படுவர். பின்னர் அதிக பற்று, பக்தி காரணமாக தாமும் அவருடன் இனங்காண முயற்சிப்பர். பெரும்பாலும், கட்டிளமை அல்லது இளமைப்பருவத்தில் சிலர் அரசியல்வாதிகள், நடிக நடிகையர், பாடகர், பாடகிகளைப் போன்றோருடன் இனங்காண முற்படுவர்.

சமூகமயமாக்கலுக்குட்படும் தனியாள் அவ்வச் சமூகச் சூழலில் (சந்தர்ப்பங்களில்) அடிபணிதல், வரவேற்றல், அனுமதித்தல், ஒத்துழைத்தல், சார்தல், இணங்குதல், பின்பற்றல், கடைப்பிடித்தல், ஒத்திசைவு பெறல் முதலாம் முறைகள் மூலம் சமூகமயமாக்கலுக்கு உட்படுகின்றான் என்பது தெளிவாகும்.

தனியாள் ஒருவரிடம் அமைந்து காணப்டும் உந்தல்கள்-பல வலுக்கள் சமூகமயமாக்கலுக்குப் பயனுள்ளதாக அமையும். எல்லா தன்யாட்களுள்ளும்

1. ஊகிக்கும் தன்மை (Suggestibility)
2. பாவனை செய்தல் (Imitation)
3. அனுதாபம் (Sympathy) முதலாம் உந்தல்கள் காணப்படுகின்றன.

எவராவது ஒருவர் இன்னொருவரால் கூறப்படும் அல்லது கற்பிக்கப்படும் விடயத்தை ஏற்றுக் கொள்ளுதல் அவரது ஊகிக்கும் தன்மை அல்லது விளக்கத்தைப் பொறுத்ததே. மொழி, பழக்க வழக்கம் முதலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவற்றை மனிதன் கற்றுக் கொள்வது பாவனை செய்தல் மூலமே. குழந்தையொன்று மொழியைக் கற்றுக் கொள்வது தனக்குக் கேட்கும் பல்வேறு ஒலிகளைப் பாவனை செய்வதன் மூலமே. அவ்வொலியை உச்சரித்தலுடன் தனக்கு எந்நேரமும் கேட்கும் சொற்கள் மூலமாகத் தனது சொல்லாட்சியைப் போதித்து வளர்க்கும்.

இவ்வாறு தனியாள் பல்வேறு உந்தல்களை வளர்த்துக் கொள்வது சமூகப் பின்பற்றல் மூலமாகும். மனக்கிலேசம் அல்லது அனுதாபம் முதலானவை மனிதத் தன்மையை வளர்க்கும் உந்தல்களாகும். பிள்ளைகளுக்கு, வயோதிபர்க்கு நோயாளிகளுக்கு, விலங்குகளுக்கு, அநாதரவானவர்களுக்கு அனுதாபத்தை ஏற்படுத்தும், உதவும், இரங்கும் இதயமொன்றை மனிதனுள் வளர்த்தல் ஆகும். இந்த அனுதாப உந்தல் காரணமாகவே, பரோபகாரத்துக்கு முற்படும் சமூக ஒத்தியைபு அல்லது இணைந்து வாழும் வலுவொன்று உருவாகின்றது. மேற்கூறப்பட்ட சமூகமயமாக்கல் செயற்பாட்டு முறைகளும் மனிதனுள் இயற்கையாகவே அமைந்து காணப்படுவனவாம். இச்சக்திகளின் துணையுடன் சமூகமயமாக்கல் செயற்பாடுகள் மனித குலம் முழுவதும் தொடர்ந்து நிலவும்.

செயற்பாடு 2.

சமூக மயமாக்கல் நுட்ப முறைகள் மூன்று மேலே குறிப்பிடப்பட்டுள்ளன. அந்த ஒவ்வொரு நுட்பமுறை மூலம் உங்கள் பாடசாலையில் உள்ள மாணவர்களை சமூக உரித்தாக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் தொடர்பாக முடிந்த அளவு உதாரணங்களைச் சேகரிக்கவும்.

## 4.4 சமூகமயமாக்கலில் குடும்பத்தின் செல்வாக்கு

சமூக மயமாக்கலில் செல்வாக்குச் செலுத்தும் சமூக நிறுவனங்களில் மிக முக்கியமானது குடும்பமாகும். தனியார் ஒருவர் முதலில் அங்கத்துவம் பெறும் நிறுவனம் அதுவாதலால் அத்தகைய முக்கியத்துவம் பெறுகிறது. வேறு எந்தச் சமூக நிறுவனமும் தனியாரில் இத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தாது. ஒரு சமூகத்தின் முதன்மையான அலகு குடும்பமாக இருப்பதுடன் பிள்ளை உருவாதல், பேணி வளர்த்தல் இடம் பெறுவதுவும் குடும்பத்திலேயேயாகும். அவ்வக் குடும்பத்தின் இயல்புகள் சிறு வேறுபாடு கொண்டிருப்பினும் எல்லாப் பண்பாட்டியல் சூழலில் பிள்ளைகள் முதன் முதல் சமூகம் உரித்தாக்கம் (அனுபவம்) பெறுதல் குடும்பத்தின்மூலமேயாகும்.

சமூகத்தின் உறுதிப்பாட்டுக்கும் தொடர்ச்சியாக நிலைத்த தன்மை பெறுவதற்கும் திறன் வாய்ந்த அங்கத்தவர் அவசியமாகும். சமூகத்தில் தோன்றும் புதிய அங்கத்தவர்களைப் பொருத்தமான முறையில் சமூகமயப்படுத்துவதில் முக்கிய பொறுப்பு பெற்றோரையும் குடும்பத்தையும் சார்ந்ததாகும். சட்ட ரீதியான மனஉறவு இன்றி பிள்ளைப் பேறு இடம் பெறுதல் சட்ட விரோதமான செயலாகும் என சில சமூகங்களில் கருதப்படுவது இதனாலாகும்.


பாடசாலை செல்லும் வயது வரும் வரை ஒரு பிள்ளை தனது முழு நாளையும் குடும்பத்திலேயே கழிக்கின்றது. அதனால் இக்காலப் பகுதியில் அப்பிள்ளை குடும்ப அங்கத்தவர்களின் உறவின் அடிப்படையிலேயே சமூக இணக்கம் பெறுகிறது. அது போன்றே மணவாழ்க்கையிலீடுபட ஒரு பிள்ளை தனது பெற்றோரை விட்டுப் பிரிந்து செல்லும் வரை தனது குடும்பத்தின் பழக்க வழக்கங்களை மேற்கொள்ளும். இதன்படி **சமூகமயபபடுத்தலில் குடும்பம் முதன்மையானதும் பிரபலமானதுமான கருவியாக இருக்கின்றது** என்பது தெளிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தின் இயல்பு:

குடும்பம் என்பது பரந்த சமூக அமைப்பினுள் உள்ள சிறிய அலகாகும். அது பரந்த சமூகத்தின் ஓர் எடுத்துக்காட்டாகும். குடும்பத்தின் மூலமாகச் செய்யப்படும் சமூகமயமாக்கலில் குடும்ப அமைப்பு பெருமளவுக்கு முக்கியமானதாகும். குடும்ப இயல்பு தீர்மானிக்கப்படுவது குடும்பத்தின் கட்டமைப்பு, பொறுப்பு, அங்கத்தவர்களின் மத்தியில் இடம்பெறும் தாக்கத் தொழிற்பாடுகள், அச்சமூகவர்க்கத்தின் இயற்கைத் தன்மையைப் பொறுத்ததாகும்.

குடும்ப அங்கத்தவர்களிடையே காணப்படும் அந்நியோன்ய உறவுகள், பல்வேறு தொழிற்பாடுகள் குடும்பத்தின் அமைப்பினைத் தீர்மானிக்கும் ஒரு முக்கிய காரணியாகும். வேறு எந்த சமூக நிறுவனங்களையும்விட குடும்பத்தில் நிலவும் உறவு அந்நியோன்யமானதும், நெருங்கியதும், மன எழுச்சி சார்ந்ததுமாகும். பெற்றோர், பிள்ளைகள் மாத்திரம் உள்ளடக்கிய குடும்பத்தில் தனியாளுறவு கீழ் குறிப்பிடப்படும் தன்மையைக் கொண்டிருக்கும்.




குடும்பத்தின் அமைப்பொன்றைத் தீர்மானிக்கும் ஏதுக்களுள் அச்சமூக வர்க்க இயல்பும், பொருளாதார நிலையும் முக்கிய பங்கினை வகிக்கிறது. கீழ்நிலைப் பொருளாதார மட்டத்தில் உள்ள குடும்பத்தில் சாதாரண குற்றங்கள், கல்வியறிவின்மை, பாலியல் குற்றங்கள், அசௌகரியங்கள் காணப்படும் என பல்வேறு ஆய்வுகள் நிரூபித்துள்ளன. எல்லா ஏழைக் குடும்பங்களிலும் இவ்வியல்பு காணப்படாவிடினும் பெரும்பாலான ஏழைக் குடும்பங்களைப் பொறுத்தவரையில் இந்நிலை பொதுவானது. தேவையான உணவு, உடை, உறையுள் முதலியன இல்லாமையாலோ குறைவாகக் கிடைப்பதனாலோ இத்தகைய குடும்பங்களில் பிள்ளைகளின் மனவெழுச்சிச் சமன்பாட்டு தொழிற்றிறன் முதலியனவும் பாதிக்கப்படும். உயிர் வாழ்வதற்காகப் போராட்டம் நடாத்த வேண்டி உள்ளமையால் உயர் கல்வி இலட்சியங்களுக்கு முதலிடம் கிடைக்காது. அதனால் இத்தகைய பொருளாதார வசதிக் குறைவினால் துன்பப்படும் குடும்பங்களில் உயர் நிலையிலான சமூகமயமாக்கலை எதிர்பார்க்க முடியாது. பெரும்பாலான சமூகங்களில் குடும்பத்தின் கட்டமைப்பு பற்றி சிந்தனை செய்யும் போது மூன்று வகையான தனியாள் நிலைகள் தென்படுகின்றன. அதாவது தாய், தந்தை, பிள்ளை என்பவை இந்நிலைகளாம். எனினும் சில வீடுகளில் தந்தை அல்லது தாய் அல்லது பிள்ளைகள் இல்லாத துரதிர்ஷ்ட நிலை காணப்படலாம். மேற் கூறப்பட்ட தனியாள் நிலை காணப்படும் குடும்பங்களை கருவுக்குரிய குடும்பங்கள் என இனம்காணலாம். குடும்பம் எதிர்காலத்தில் பெரும்பாலும் தந்தை, தாய், பிள்ளைகள் முதலாம் உறுப்பினர்களுடன் பாட்டன், பாட்டி, மாமா, மாமி, சிறியதந்தை, சின்னம்மாள் முதலியோரை உள்ளடக்கிய குடும்ப அமைப்புக்கு ஆளாகலாம். இத்தகைய குடும்பத்தை விரிந்த அல்லது அகன்ற குடும்பம் என இனம் காணமுடியும். தற்போதைய சமூக முறையிலும் குறிப்பாகக் கிராமப்புறங்களிலும் சிறிதளவு இத்தகைய விரிந்த குடும்ப முறையினைக் காண முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


விரிந்த குடும்பம் என்பது குடும்ப உறவினர் அல்லது முக்கிய உறவினர் என நாம் இனம் காணும் பல்வேறு உறுப்பினர்களை உள்ளடக்கியதாகும். இத்தகைய குடும்பத்தில் மண உறவினை விட முக்கியமாகக் கருதப்படுவது இரத்த உறவாகும். இத்தகைய குடும்பம் நிலவுவது ஒரு தனியாளையோ அல்லது தனியொரு சோடியையோ மாத்திரம் உள்ளடக்கியதாக இருக்க முடியாது. மண வாழ்க்கையில் சேர்ந்து கொண்ட உறுப்பினர் தனது மனைவியுடன் அக்குடும்பத்தில் இணைந்து கொள்வார். இவர்கள் தமது பிள்ளைகளைப் பெற்று வளர்ப்பது பாட்டன், பாட்டி, மாமி, மாமா, சித்தப்பா, சிற்றன்னை, மைத்துனி, மைத்துனன் எல்லோருடன் இணைந்தே காணப்படுவர். இத்தகைய சூழ்நிலையிலுள்ள பிள்ளையின் தாய், அல்லது தந்தை அல்லது இருவரும் இறந்து போனாலும் இக்குறையை நிவர்த்தி செய்ய ஏனையோர் அக்குடும்பத்தினுள் இருப்பர். குடும்பத்திற்குரிய சொத்துக்கள் பரம்பரை பரம்பரையாகப் பிரிக்கப்பட்டுச் செல்லும் அதே சமயம் விரிந்த குடும்பத்தில் பிரிக்கப்படாது பெரும்பாலும் தொடர்ந்து பாதுகாக்கப்படும். விரிந்த குடும்பத்தில் அங்கத்தவர் தொகை பலதரப்பட்டதாக இருப்பதால் அதனுள் பல இயல்புள்ள தனியாட்கள் இருப்பர்.

கருவுக்குரிய குடும்பத்தில் அங்கத்தவர்களிடையே சுதந்திரமும், தனித்துவமும் தெளிவாகத் தென்படும். விரிந்த குடும்பத்தில் அதனைவிட இணக்கமும், ஒத்துழைப்பும் பாதுகாப்புத் தன்மையும் காணப்படும்.

இவ்விரிந்த குடும்பம் அல்லது மரபுவழிக் குடும்பம் நவீன சமூக அமைப்பு முறையில் அழிந்து செல்வதனைக் காணமுடியும். விசேடமாக நாகரிகமடைந்த கைத்தொழில்துறை விருத்திக்கு உட்பட்ட சமூகங்களில் இவ்வழிவு அதிகமாக உள்ளது. பெருமளவு முன்னேற்றம் அடைந்துள்ள நாடுகளில் இத்தகைய குடும்ப முறை வேகமாக அழிந்து செல்லும். அதே சமயம் இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் ஆசிய நாடுகளில் குறிப்பாகக் கிராமப்புறங்களில் இவ்வமைப்பு தொடர்ந்தும் சிறிதளவு பேணப்படுவதனைக் காணமுடியும். தனியாள் சமூகமயமாக்கலில் சிறுபிள்ளைகளிடம் அதிக அளவு செல்வாக்குச் செலுத்துவது இத்தகைய விரிந்த குடும்பங்களே. இத்தகைய குடும்பங் களில் பல்வேறு குண இயல்புகள் இலகுவில் காணக்கூடியதாக உள்ளது. இத்தகைய குடும்பத்தில் சேரும் புது அங்கத்தவர்கள் இத்தகைய குண இயல்புடையோருடன் பழகுவதால் பல்வேறு அனுபவங்கள் மூலம் தமது சமூக வாழ்வினை அமைத்துக் கொள்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும்.

விரிந்த குடும்பத்தின் இயல்பு முதலாம் அட்டவணையில் காணப்படுகிறது. குறைந்தது மூன்று பரம்பரையாவது இதனுள் சம்பந்தப்படும். பாட்டன், பாட்டி, பெற்றோர்கள் பிள்ளைகள் ஒரு வீட்டில் ஒன்றாக வாழ்வர். இக்குடும்பத்தவர் நீண்ட காலம் வாழ்பவராயின் அங்கு நான்கு பரம்பரையினர் அல்லது அதனைவிடக் கூடிய தொகையினர் அடங்குவர்.

அட்டவணை 1




மூன்று பரம்பரை கொண்ட விரிந்த குடும்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கருவுக்குரிய குடும்பம்.

கருவுக்குரிய குடும்பம் இரண்டு பரம்பரை அதாவது பெற்றோர் பிள்ளைகளை மாத்திரம் உள்ளடக்கியது. இக்குடும்பத்தில் மிக முக்கியமானது திருமண உறவாகும். பெற்றோரது இறப்பில் அல்லது பிள்ளைகளின் திருமணத்தின் பின் இக்குடும்ப உறவு முடிவடையும். இவ்வாறு சிறுகுடும்பத்தின் ஆயுள் குறைவாக இருப்பதால் குடும்பச் சம்பிரமாயத்தை -அல்லது சொத்துக்களை தொடர்ந்தும் பாதுகாப்பது கடினம். இத்தகைய குடும்பத்தில் உறுப்பினர்களது பங்களிப்பு தனித்துவம் கொண்டிருப்பதுடன் தத்தமது மூத்த தலைமுறையினர் சார்பான விளக்கமும் படிப்படியாகக் குறையும்.

சிறு குடும்பத்தில் சேரும் புது அங்கத்தவர் அல்லது பிள்ளை மிகச் சிலருடனேயே உறவு கொள்வர்: அதாவது தமது பெற்றோர் சகோதர சகோதரிகள் இருப்பின் அவர்களுடன் மாத்திரமே உறவு கொள்வர். நவீன சிறு குடும்ப முறைகளில், ஒரு அல்லது இரு பிள்ளைகளே இருப்பர். இத்தகைய குடும்பம் ஒன்றில் தாய் தந்தையர் தொழில் புரிபவராயின் புது அங்கத்தவருக்கு அதிக நேரம் உறவு கொள்ள முடிவது பெண் வேலையாள் அல்லது ஆண் வேலையாள் ஒருவருடன் மாத்திரமே. இத்தகைய சூழ்நிலையில் பிள்ளைகளது முதலாவதும் சக்தி வாய்ந்ததுமான சமூகயமாக்கல் கருவியாக இடம்பெறுவது பெண் அல்லது ஆண் வேலையாள் பயிற்சியற்ற ஒருவராய் அமையும் போது பெருமளவு தாக்கம் ஏற்படுகிறது.

**திருமணத்தின் பின் குடும்பத்திலிருந்து பிரிந்து செல்லும் தனியாள் தானும் மனைவி பிள்ளைகள் உள்ளடக்கிய இனினுமொரு சிறு குடும்பத்தை உருவாக்கும் முறையினை இரண்டாவது அட்டவணையில் காணலாம்.**

அட்டவணை 2






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடு 03.

3.01 உங்களுக்கு நன்கு தெரிந்த பல உறுப்பினர்களைக்கொண்ட குடும்பத்தில் அவ்வுறுப்பினர்களது உறவுமுறை, வயது, கல்விநிலை, தொழில், விசேட திறன்கள், விசேட இயல்புகள் என்பன பற்றிய விவரங்களைச் சேகரிக்குக. (இதனை அட்டவணை போன்று ஒழுங்குபடுத்த முடியும்.

3.02 இதே போன்றே கருவுக்குரிய குடும்பமொன்று பற்றிய விவரங்களையும் சேகரிகக்குக.

3.03 இவ்விரு குடும்பங்களிலும் பிறக்கும் இரு பிள்ளைகள் அவ்வக் குடும்பங்களில் பழகுவதன் மூலம் பெற்க்கூடிய அனுபவங்களைக் காட்டும் இரு அட்டவணைகளை உருவாக்குக.

3.04 சமூகமயமாக்கலில் இவ்விரு குடும்ப முறைகளில் இடம் பெறும்செல்வாக்குப் பற்றி உங்களுக்குக் கிடைக்கப்பெறும்முடிவுகளைக் குறிப்பிடுக.

## 4.5 குடும்பத்தின் உயிரியற் காரணிகள்

### 1. இனப்பெருக்கம்

எல்லா மனித சமூகங்களும் தொடர்ந்து நிலைப்பது, அச்சமூகத்தில் இல்லாமல் போவோரது இழப்பை நிவர்த்தி செய்வதற்கு அதில் வந்து சேரும் புது உறுப்பி னர்களைலேயே ஆகும். குடும்பத்தின் நிலைப்பாடும் புது அங்கத்தவர்களை உரு வாக்கும் பிறப்புச் செயல்பாட்டிலே ரங்கியுள்ளது. மர்டொக் என்பார் உலகின்

பல்வேறு சமூகங்களில் தெரிவு செய்யப்பட்ட 892 குடும்பங்களில் மேற்கொண்ட பரிசோதனை மதிப்பீடுகளில் பாலியல் இயல்புகளில் பல வேறுபட்டதும் விவரமானதுமான விளக்கங்கள் பல வெளிவந்துள்ளன. அதனடிப்படையில் பாலியல் நடத்தைப் பண்புகளில் பிரதான மையமாக அமைவது திருமண உறவு சம்பந்தமானதாக இருக்கும். எனினும் பெரும்பாலான சமூகங்களில் இளம் வயதினருக்கு பாலியல் சுதந்திரம் காணப்படுவதுடன், அத்தகைய சமூகங்களில் இளவயதினருக்கு திருமணத்துக்கு முன் கருத்தரித்தல் மிகக்கடுமையாகத் தடை செய்யப்படவில்லை. சில சமூகங்களில் திருமணத்துக்கு அடிப்படைத் தகைமை, இளம்பெண் பிள்ளைப் பேற்றை அடையக்கூடிய தகுதி இருத்தலே. எவ்வாறாயினும் திருமணம் முடியாதோரது பாலியல் உறவு முதிர்ச்சிக்குப் பொருத்தம் அற்றதாகவே கருதப்படும். அதேசமயம் பாலியல் உறவு முதிர்ச்சி திருமணம் முடித்தோருக்கே பொருத்தமானதாகக் கருதப்படும்.

திருமணம் முடித்த தம்பதியர் பிள்ளைபெற்றெடுக்கும் போது சமூகத்தினால் அவர்களுக்குப் பெற்றோர் அந்தஸ்த்து வழங்கப்படுவதுடன் பிள்ளைகளுக்குரிய பொறுப்பும் வழங்கப்படும்.

### 2. நீண்டகால பராமரிப்புத் தன்மை:

திருமண உறவின் பின்னர் நிலவும் அடுத்த இறுக்கமான பிணைப்பாகக் கருதப்படுவது தாய்க்கும், பிள்ளைக்கும் இடையிலுள்ள உறவாகும். பெற்றோரிடமிருந்து அவர்களது பிள்ளைகளுக்கு நீண்ட காலப்பாதுகாப்பு அவசியமாகிறது. அதிலும் முதற்பொறுப்பு தாயிடமே உள்ளது. பிள்ளை சுயமாக இயங்கக்கூடிய தனியாளொருவனாக மாறும் வரை பிள்ளையின் தேவையைப் பூர்த்தி செய்யும் பொறுப்பு குடும்பத்தைச் சார்ந்ததாகும். தாயையும், பிள்ளையையும் பாதுகாப்பதும், தேவையானவற்றை வழங்குவதும், தந்தையைச் சார்ந்தனவாகக் கருதப்படுவதுடன் இத்தகைய இம்மூன்று தனியாட்களின் உறவானது குடும்பத்தின் பண்பு, ஒழுக்க மேம்பாடு என்பவற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

தற்காலத்தில் இந்நிலை மாறுபடுவதற்குரிய சூழ்நிலைகள் உருவாகி வருகின்றன. தாயினதும், தந்தையினதும் பங்களிப்பால் மாற்றங்கள் ஏற்படுவதனைக் காணக்கூடியதாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தின் கடமைகளும், பொறுப்புக்களும்:

எல்லா சமூக முறைகளிலும் குடும்பத்தின் பொறுப்புக்களை உள்ளடக்கிய நியதிகள் உண்டு. குடும்ப உறுப்பினர்களிடம் குறிப்பாக ஆண் பெண் பிள்ளைகளுக்குச் செய்ய வேண்டியதும், சமூகத்துக்குச் செய்ய வேண்டியதுமாக பொறுப்புக்களும் கடமைகளும் உள.

1. சமூகத்திலிருந்து நீங்கிச் செல்வோருக்குப் பதிலாக புதிய அங்கத்தவர்களை உருவாக்குதல்.

2. குடும்ப உறுப்பினர்களுக்கு சேவையும், பொருளும் வழங்குதல்.

3. உள அல்லது வெளிப்பிரச்சினைகளிலிருந்து குடும்பத்தின் அமைதியைப் பாதுகாத்துக் கொள்ளல்.

4. சமூகத்தின் முன்னேற்றமான உறுப்பினராய் அமைவதற்குத் தேவையான உறுப்பினரைப் பழக்குதலும், சமூகமயமாக்குதலும் ஆதியன ஒரு சிலவாகும்.

தமது பிள்ளைகளது கல்வி, பொருளியல், அரசியல், பாதுகாப்பு சமய காரியங்கள் பலவும் மனவெழுச்சிக் கட்டுப்பாடும், குடும்பத்தின் கடமை, பொறுப்புக்களுக்குள் அடங்கும். தமது பிள்ளைகளுக்கு நல்ல பெயர் பெற்றுக் கொடுத்தலும், சமூக அந்தஸ்தைப் பெற்றுக் கொடுத்தலும், சுயாதீனம் அல்லது ஆளுமை விருத்திக்கு வழி வகுத்தலும் நெருங்கிய உறவுகளை வளர்த்துக் கொள்வதற்கு உதவுதலும் குடும்பத்தின் கடமைகளாகும். குடும்பத்தின் கடமைகள் பொறுப்புகளில் சில காலங்களாகப் பெரும் தாக்கங்கள் இடம்பெற்று வருகின்றன. கடந்த காலங்களில் குடும்பம் பெருமளவிற்கு சுய தேவைப் பூர்த்திக்கான உற்பத்திகளைக் கொண்ட அலகாக இருந்தது. தமக்குத் தேவையான பொருள், சேவை என்பவற்றை குடும்ப அங்கத்தவர்களே அளித்து வந்தார்கள். ஆனால் நவீன கால கைத்தொழிலாக்கம், நாகரீக விருத்தி என்பவற்றின் விளைவாக தந்தை அலுவலகத்தில் அல்லது கைத்தொழிற்சாலையில் தொழில் செய்ய நேரிடும். நகரங்களில் தாயும் பெரும்பாலும் தொழில் ஒன்றைச் செய்வார். எனவே குடும்பத்துக்குத் தேவையான உணவு, உடை, வீடு, உபகரணங்கள் முதலாம் யாவற்றையும் வெளியிலிருந்து பணம் கொடுத்தே பெற்றுக் கொள்வர். எனவே தற்காலக் குடும்பம் உற்பத்திக் குடும்பமாக இராது நுகர்வோர் அலகாக மாறியுள்ளது.

பிள்ளைக்குத் தேவையான கல்வியின் பெரும் பகுதி குடும்பத்தினூடாகவே பெறப்பட்டது. ஆனால் இன்று முறை சார்ந்ததும் குடும்பத்துக்கு வெளியே முறைசாராததுமான முறைகளில் கல்வி வழங்கப்படுகிறது. சாதாரண தர, உயர் தர கல்வி மாத்திரமன்றி, பாடசாலை முன் கல்வி பெறும் பிள்ளைகளுக்காகவும் நிறுவனங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. பாடசாலை, கோயில் அல்லது சமயப்பாடசாலை இன்றேல் தமது நண்பர் குழாங்கள் சமயப் பயிற்சியை வழங்கும், விளையாட்டுகளிலும் பொழுது போக்குகளிலும் பிள்ளைகள் பெருமளவு ஈடுபடுவது, வீட்டுக்கு வெளியேயும் வேறு இடங்களிலும் வேறு குழுக்களுடனும் ஆகும்.

நல்ல குண இயல்புகள் ஒழுக்கம் என்பவற்றை விருத்தி செய்வதில் இன்று மிகவும் பயனுள்ளதாக அமைவது சமய நிறுவனங்கள் சாரணியம், கடேற் குழுக்கள் அல்லது வேறு குழுக்கள் ஆகிய முதலாம் ஒழுங்கமைப்புக்களாகும். இவ்வடிப்படையில் தனியாளை சமூகமயப்படுத்துவதில் வேறு நிறுவனங்கள், ஒழுங்கமைப்புக்கள், பொதுசனத் தொடர்பு சாதனங்கள் முதலியன குடும்பத்தை விட பிரபல்யமடைந்து வருவதை பல்வேறு ஆய்வுகள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தின் கடமைகள், பொறுப்புக்களின் எல்லைகள்.

கருவுக்குரிய குடும்ப முறை

இது சம்பந்தமான விளக்கங்கள் மேலே கொடுக்கப்பட்டுள்ளன. இக் குடும்ப முறையில் மூன்று நான்கு அங்கத்தவர்களைக் கொண்டிருப்பது குடும்பத்தின் கடமைகளும், பொறுப்புக்களும் குறைந்து காணப்படக் காரணமாகும்.

சமூக வகுப்பு:

பொருளாதார வறுமைக்குட்பட்ட குடும்பங்களில் நாளாந்த வாழ்வை நடத்துவதற்குத் தினமும் போராடிக் கொண்டிருப்பதால் அவர்களுக்கு குடும்பத்தில் இளையோர் மீது கவனம் செலுத்துவதற்குக் கிடைக்கும் நேரம் குறைவு. மத்திய குடும்பத்தினர் எனப்படுவோர் பெரும்பாலும் மேல் சமூக மட்டத்திற்குச் செல்வதற்குப் பெரும் ஆசையுடன் பெரும் முயற்சி செய்து கொண்டிருப்போராகக் காணப்படுவர். குறிப்பாக நகர மத்திய வகுப்பினர் பல்வேறு நிறுவன அமைப்புக்கள் மூலமாகப் பிள்ளைகளைச் சமூகவயப் படுத்துவதில் பெருமுயற்சி செய்துகொண்டிருப்பர். தரம் உயர்ந்த பாடசாலைகள் தனிப்பட்ட உபகார வகுப்புக்கள், விளையாட்டுக் கழகங்கள் முதலியவற்றில் அனுமதி பெற்று பிள்ளைகளின் இயல்பான திறன்களை விருத்திசெய்வதில் விருப்பு இருந்தாலும் இல்லாவிட்டாலும் சமூகம் ஏற்றுக்கொள்ளும் சிறு தொழிற்பாடுகளில் ஈடுபடுத்துவதில் பெற்றோர் பெரு முயற்சி மேற்கொள்வர்.

முன் பாடசாலை: (பாடசாலைக்கு முந்திய கல்வி).

பெரும்பாலான சமூகங்களில் அண்மைக் காலத்தில் பரந்த அடிப்படையில் விரிவடைந்து வருவது முன்பாடசாலை நிறுவனங்களாகும். இவை குடும்பச் செல்வாக்கினைப் பெருமளவுக்குக் குறைப்பதைக் காண முடிகிறது. பாடசாலை வயது வரும் வரை 5 அல்லது 6 வயது பூர்த்தியாகும் வரை பெற்றோர், சகோதர சகோதரிகள் மத்தியில் வளர்ந்து வந்த பிள்ளை 2 அல்லது 3 வயதில் முன் பாடசாலையில் சேர்வது நவீன போக்காகும். பிள்ளைகளுக்கு எதிர்காலத்தில் எதிர்கொள்ள நேரிடும் கல்விப் போட்டியை வெற்றிகரமாக எதிர்கொள்ள வலுவான அத்திவாரம் அமைக்கும் எதிர்பார்ப்பினால் தொடர்ந்தும் பெற்றோர் ஆதரவில் செல்லமாக வளர வேண்டிய பிள்ளையை முன் பாடசாலையில் சேர்ப்பதில் பெற்றோர் அக்கறை கொள்கின்றனர். இதனால் பிள்ளையின் உடலியல் மாத்திரமின்றி உளவியல் சார்ந்த தேவைகளையும் முன் பாடசாலை பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது.

பிள்ளைப் பராமரிப்பு நிலையங்கள்:

விருத்தியடைந்துத கைத்தொழில் உலகத்துக்கு மாத்திரம் உரித்துடையதாக இருந்த பகற்பொழுது பிள்ளை பராமரிப்பு நிலைய முறை, அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலும் இன்று விருத்தியடைந்து வருகிறது. பெற்றோர் இருவரும் தொழிலுக்குச் செல்ல முற்படும்போது பிள்ளைப் பராமரிப்பு நிலையங்களில் ஒப்படைத்து, மாலை தொழிலிலிருந்து வீடு திரும்பும் போது பிள்ளைகளை வீடு கொண்டு வந்து சேர்ப்பர். இதனால் குழந்தையின் பெரும்பாலான காலம் குடும்பத்துக்கு வெளியேயுள்ள தனியாட்களுடன் கழிகின்றது.

தாய் தொழிலில் ஈடுபாடு

அண்மைக் காலம்வரை இலங்கை போன்ற தென் ஆசிய நாடுகளில் பெண்கள் தொழிலில் ஈடுபடுதல் குறைவாகவே காணப்பட்டது. எனினும் கடந்த சில வருடங்களில் பெண்கள் தொழிலில் ஈடுபடுவது அதிகரித்து வந்தது. நகரம் சார்ந்த பகுதிகளில் பெண்கள் பல்வேறுபட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்களில் ஈடுபதல் பொது இயல்பாக அமைந்து வருகிறது. குடும்பத்தில் தாய் தொழில் செய்வது எந்தளவுக்கு சிறு குழந்தைகளில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பது பற்றி நடத்தப்பட்ட பல ஆய்வுகள் உள. அவ்வாய்வுகளின் முடிவுகளின் அடிப்படையில் தாய் தொழிலில் ஈடுபடுதல் குழந்தைகளின் கல்வியில் பயனுள்ளதாகவும் அதே சமயம் தீமையற்றதாகவும் அமைவது தெளிவாகிறது.

**வெளிநாட்டுத் தொழிலில் ஈடுபடுதல்:**

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலும் அண்மைக் காலத்தில் குடும்பம் எனும் நிறுவனத்தில் பெரும் மாற்றம் ஏற்படுத்துவதற்குக் காரணமாக அமைந்த இன்னொரு காரணியாக இருப்பதும் பெற்றோரது குறிப்பாகத் தாயினது வெளிநாட்டுத் தொழில் ஈடுபாடு ஆகும். சிறிது காலத்துக்கு முன் ஆண்களுக்கு மாத்திரம் உரித்துடையதான வரப்பிரசாதமாக இருந்த வெளிநாட்டுத் தொழில்.வாய்ப்பு, கடந்த காலங்களில் படித்த பெண்களுக்கும் தற்போது படிக்காத எழுத்தறிவற்ற பெண்களுக்கும் வீட்டுப் பணிப் பெண்கள் முதலாம் சிற்றூழியராக மத்திய கிழக்கிலும் சிங்கப்பூரிலும் வேலை செய்யும் சந்தர்ப்பத்தை அளிப்பதாக உள்ளது. கடந்த சில வருடங்களாக கொழும்பு பல்கலைக் கழகத்தில் கல்வி பீட பட்டப் பின் படிப்பு மாணவர்களால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு ஆய்வுகள் இந்நிலை துர்ப்பாக்கிய நிலையையே உருவாக்கியுள்ளது எனத் தெளிவு படுத்தியுள்ளன. திடீரெனக் கிடைத்த பணம், ஆடம்பரப் பொருள்கள், வெளிநாட்டில் கிடைத்த தண்டனை, விபத்துக்கள் இத்துர்ப்பாக்கிய நிலைக்குக் காரணங்களாக அமைந்துள்ளதுடன் தந்தைமார் மதுவுக்கும், சூதுக்கும் ஆட்பட்டுள்ளமை, பிள்ளைகளைக் கவனியாமை, பிள்ளைகள் மது போன்ற வஸ்துகளுக்கு அடிமையாதல், பாடசாலையைவிட்டு நீங்குதல் ஆதியன காரணமாக பிள்ள்கள் அநாதரவான நிலைக்குட்பட்டு குடும்பக் கூட்டுறவு சிதைந்து போயுள்ளது என இவ்வாய்வுகள் தெரிவிக்கின்றன.

குடும்பத்தின் கடமைகள், பொறுப்புக்கள், செல்வாக்கு என்பன வலுவிழந்து செல்வதற்கு முன் சொல்லப்பட்ட ஏதுக்களுடன் பல சமூகங்களில் புதிதாகச் சேர்ந்துள்ள காரணி பயங்கரவாதமாகும். உதாரணமாக இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் பயங்கரவாத இயக்கங்களாலும், வேறு காரணிகளாலும் பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வதிவிட வசதிகளை இழந்து காணப்படுவதாகும். பெரும்பாலான பிள்ளைகளுக்கு வீடு வாசல் மாத்திரமன்றி பெற்றோரையும் இழக்க வேண்டி நேரிட்டுள்ளது. அத்தகைய பிள்ளைகளும் குடும்பங்களும் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள அகதி முகாம்களில் காலம் கழிக்கின்றனர். சில இடங்களிலேயே பிள்ளைகள் புனர் வாழ்வுக்கு உட்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்கள் இடம் பெறுகின்றன. குடும்பத்தின் மூத்த பரம்பரையினரிடமும் பெற்றோரிடமும் இருந்து பிரிந்து வளர்ந்து வரும் பிள்ளைகளைப் பற்றி எதிர்காலத்தில் ஆய்வுகள் செய்வதற்கு உங்களுக்கு வாய்ப்பு ஏற்படலாம்.

இவை தவிர பெற்றோரின் மனமாற்றம், விவாகரத்து, பிள்ளைகளைப் பேணிப் பாதுகாக்காது தவறான வழியில் இட்டுச் செல்லல் முதலாம் காரணிகளும் குடும்பத்தின் சமூக மயமாக்கலில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

தொழிற்பாடு 04

1. உங்கள் ஊரில் அல்லது பாடசாலைப் பகுதியில் வெளிநாட்டில் தொழில் புரியும் தாய்மார் உள்ள குடும்பங்களைத் தெரிவு செய்க.

2. அக்குடும்பங்களில் பிள்ளைகளின் உறுதிப்பாடு சம்பந்தமாக தாய் வெளிநாடு சென்றுள்ளமை எத்தகைய பாதிப்பினை ஏற்படுத்தி உள்ளது எனக் கவனிக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடு 05.

பயங்கரவாத ஆபத்து அல்லது வேறு காரணிகளால் அகதிகள் ஆக்கப் பட்டுள்ள பிள்ளைகள் உள்ள அகதி முகாம்களுக்குச் சென்று.

1. அங்கு நடைமுறைப்படுத்தப்படும் செயற்பாடுகள் பற்றி விசாரணை செய்க.
2. அங்கு நடைபெறும் செயற்பாடுகளை குடும்பத்தின் கடமை, பொறுப் புக்களுடன் ஒப்பிடுக.

### 4.6 குடும்பத்தில் இருந்து கற்றுக் கொள்பவை

மனித சமூகத்தின் பயிலுனராக இடம்பெறும் குழந்தை முதல் எதிர் கொள்ளும் சமூக நிறுவனம் குடும்பமாகும். ஒருவரது எதிர்கால வாழ்க் கைப் பாதையின் ஆரம்பமும் கல்வியின் அத்திவாரமும் குடும்பமாகும். உடலியல், உளவியல் மன எழுச்சி விருத்திக்கான முக்கியமான பருவம் பிள்ளையின் முதல் சில வருடங்கள் என உளவியல் அடிப்படை சம்பந் தமான மொடியூல் மூலம் உங்களுக்குத் தெளிவாகியிருக்கும். இப்பரு வத்தில் பிள்ளை ஒன்று பூரணமாகக் குடும்பத்திலேயே காலம் கழிப்ப தால், தனியாள் ஒருவரின் வாழ்வில் குடும்பம் அதிக செல்வாக்குச் செலுத்துகின்றது என மேலே குறிப்பிடப்பட்டுள்ளது. பிள்ளை கல்வித் துறையில் எத்தகைய அனுகூலங்களைக் குடும்பத்தின் மூலம் பெறுகின் றது என்பதை இங்கு பரீட்சித்துக் காட்டப்பட்டுள்ளது.

சிறு பிள்ளையொன்றிற்கு முதல் முக்கியமானவர்கள் ஆசிரியர்களும், பெற்றோர்களும் என்பது இரகசியமல்ல. முதல் சில வருடங்களுள் பிள் ளையொன்றின் தன்னிச்சையற்ற செயல்கள் தவிர கல்வி சம்பந்த மான எல்லாக் குணவியல்புகளைக் கட்டி வளர்த்தல், இசைவாக்கம் பெறுதல், மாற்றுதல் என்பன பெற்றோரின் முயற்சியினால் நடைபெறும். சிறுவய தில் செல்வாக்குப் பெறும் அன்பு, பாதுகாப்பு, கண்காணிப்பு, அங்கீ காரம் முதலாம் உளவியல் தேவைகள் பெற்றோரின் தொடர்பினால் பிள்ளை பெற்றுக் கொள்கிறது. பெற்றோர் தொடர்பினால் பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டு பல்வேறு அனுபவங்களைப் பெற்றுக் கொள் வர். அந்நியர்களுடன் தொடர்பு கொள்ளவும், மன எழுச்சிக் கட்டுப்பா ட்டை மேற்கொள்ளவும் பிள்ளை பழகும். வளமான வாழ்வுக்கு தேவை யான அடிப்படை எடுத்துக்காட்டுக்களை விருத்தி செய்வதும் பெற்றோர் உறவினாலாகும்.

**ஒரு பிள்ளை முதல் ஐந்து வருடங்களுள் குடும்பத்தின் மூலமா கப் பெறும் அனுபவம் அதன் எதிர்கால வாழ்வைக் கட்டி எழுப்புவதில் பாதுப்பினை ஏற்படுத்தும் எனத் தெளிவாகி உள்ளது.**

மொழியாற்றல் வளர்ச்சி:

சிறுபிள்ளையொன்று முதலில் தனது மொழியைக் கற்றுக் கொள்வது தனது குடும்பத்தின் மூலமாகும். மூத்தோரது பேச்சுக்களைக் குழந்தைப் பருவத்திலிருந்தே அது கேட்கிறது. படிப்படியாக அவற்றைக் கேட்பதில் பழக்கப்படும் பிள்ளை மொழியை விளங்கிக் கொள்வதில் முயற்சி செய்யும். முதலில் "அம்மா" அல்லது அது போன்ற சொல்லைத் தான் குறிப்பிட்டு சொல்வளத்தை ஆரம்பிக்கும் பிள்ளை படிப்படியாக அதனை மேலும் வளர்த்துக் கொள்ளும். அத்துடன் வேறுபல செயற் பாடுகளுக்கும் பயன்படுவது மொழி அறிவாகும். ஒரு வயதளவில் உச்ச ரிக்க ஆரம்பித்தாலும் அவற்றைவிடக் கூடுதலான சொற் கூட்டங்களை விளங்கிக் கொள்ளும் சக்தி அதற்கிருக்கும். விளங்கிக் கொள்ளும் சொற் கூட்டங்கள் பயன்படுத்தப்படா சொற்கூட்டம் என்றும், பயன்படுத்தப் படும் சொற்கூட்டங்கள் செயற்படுத்தப்படும் சொற்கூட்டங்கள் என்றும் அழைக்கப்படலாம். பதினெட்டு மாதங்களுக்குப் பின்னர் செயற்படுத்தப்ப டும் சொற்கூட்டம் விரைவாக வளர்ச்சியடைவதும் அது வளர்ந்து செல் லும் விதம் பற்றி மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் முடிவுகள் வருமாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்படுத்தப்படும் சொற்கூட்டம்

வயது

| வருடம் | மாதம் | |
|---|---|---|
| 1 | .................. | 3 |
| 1 | 6................ | 22 |
| 2 | .................. | 272 |
| 3 | .................. | 896 |
| 4 | .................. | 1540 |
| 4 | 6................ | 1870 |
| 5 | .................. | 2070 |

இம்முடிவு வேறு ஆய்வுகளின் மூலமும் நிரூபிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் குழந்தைப் பருவத்தைவிட முற்பிள்ளைப் பருவத்தில் பிள்ளைகளினது சொல்லாட்சி வேகமாக வளர்வது தெளிவாகின்றது. 5 வயது பூர்த்தியடைந்து பாடசாலைக்குள் நுழையும் பிள்ளை ஒன்று 2000 அளவு சொற்கூட்டங்களையும் 4, 5 வாக்கியங்களையும் கையாளும் திறமையும் கொண்டதாக முறைசார் கல்வியை ஆரம்பிக்கும் என அறியலாம். இது பூரணமாக பிள்ளை குடும்பத்தால் பெற்ற கல்வியாகும். எவ்வாறாயினும் குடும்பத்தின் கல்வி நிலை, சமூக பொருளாதார நிலை, வாழும் சூழல், உறவு கொள்ளும் ஆட்களைப் பொறுத்து குடும்பத்திற்குக் குடும்பம் வேறுபட்ட தன்மை ஏற்படலாம்.

நுண்மதி விருத்தி:

குழந்தைப் பருவம், முற்பிள்ளைப் பருவம் என்பன புலக்காட்சி வளர்ச்சிப் படியில் வேகமாக அபிவிருத்தி அடையும் காலம் என உளவியலாளரும், கல்வியியலாளரும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இவ்வடிப்படையில் மனித வாழ்வில் நுண்மதி விருத்தி சம்பந்தமான அடிப்படை உருவாவதும் குடும்பத்தில் வாழும் முதல் சில வருடங்களிலாகும். பல்வேறு வயதடிப்படையில் புலக்காட்சி விருத்தி குடும்பத்தினால் நிறைவேற்றப்படும் முறை பற்றி விரிவான கருத்து கல்வி உளவியல் அடிப்படை சம்பந்தமான மொடியூல் மூலம் நீங்கள் பெற்றிருக்கக் கூடும். குறிப்பாக இங்கு கவனிக்க வேண்டிய முக்கிய விடயமாக அமைவது பிள்ளை தன் ஆரம்பப் பருவத்தில் பெறும் கல்வி அதனது குளியல், உணவு, நித்திரை, கழிவுப் பொருள் வெளியேற்றம் முதலாம் உயிரியல் செயல்பாடுகளின் மூலம் கிடைப்பதாகும்.

தொழிற்பாடு 06:

1. மழலை மொழி பேசும் குழந்தையைக் குளிப்பாட்டுதல், உணவு கொடுத்தல், நித்திரை செய்ய வைத்தல், மலம் கழித்தல் முதலாம் சந்தர்ப்பங்களில் பெற்றோர்கள் பயன்படுத்தும் சொல், செயன்முறைகள் மூலம் பிள்ளை எவ்வாறு அனுபவம் பெறுகின்றது என கணிப்பு அட்டவணை ஒன்றைத் தயாரிக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு பிள்ளையைப் பண்பாட்டை உடையவராக ஆக்குதல், மூத்தவரரொருவரைப் பண்பாடடையச் செய்வதிலும் பார்க்க இலகுவாகும். எல்லாக் குடும்பத்திலும் பிள்ளைகளுக்கு இளம் வயதிலேயே பயனுள்ள பழக்க வழக்கங்களையும் நற்பண்புகளையும் கற்பிப்பர். பரிவு, கருணை, பொறுமை, நேர்மை, ஒத்துழைப்பு, பரோபகார சிந்தை முதலாம் குண நலன்களைப் பிள்ளைகளிடம் அபிவிருத்தி செய்வதில் முதலில் முயற்சிப்போர் பெற்றோராவர். அதுபோல் சமூக நற்பண்புகள் சம்பந்தமான அத்திவாரமிடப்படுவதும் குடும்பத்தின் மூலமாகும். குடும்ப உறுப்பினர் பிள்ளையின் பிழையான செயல்களை ஏற்றுக் கொள்ளாதிருத்தல் மூலமும், பிழையான செயல்களுக்கு முக்கியத்துவம் கொடாதிருத்தல் மூலமும், தன்வயப்படுத்தல், அவதானித்தல், மூத்தோரது ஆலோசனை எனபன மூலமும் பிள்ளைகள் குடும்பத்தினூடாகத் தமது குண இயல்புகளை வளர்த்துக் கொள்வர். குடும்ப உறுப்பினர்களிடம் நெருங்கிய உறவும் உயர் குணங்களும் இருக்குமாயின் பண்பாட்டியல் வளர்ச்சி அதிகரிக்கும்.

தொழிற்பாடு 07:

1. உங்களது பாடசாலையில் மிக பண்புடைய பிள்ளையொன்றையும் பண்பில் குறைந்த பிள்ளையொன்றையும் தெரிவு செய்க.

2. பண்புடைய பிள்ளையின் குடும்ப விவரங்களையும், பண்பில்லாத பிள்ளையின் குடும்ப விவரங்களையும் சேகரிக்குக.

3. இவ்விவரங்களை ஒப்பிட்டு இரு பிள்ளைகளினதும் பண்பியல் வேறுபாடுகளுக்கு அவர்களது குடும்பங்கள் செல்வாக்குச் செலுத்தி உள்ளனவா எனப் பரிசோதனை செய்க.

* இவ்வத்தியாயத்தின் ஆரம்பத்தில் உங்களது முன்னறிவுச் சோதனை ஒன்றுக்கு நீங்கள் உட்பட்டீர்கள்.

* இப்போது நீங்கள் இவ்வத்தியாயத்தைக் கற்று முடித்துள்ளீர்கள். ஆதலால் முற்சோதனையின் போது எழுதியவற்றை மீண்டும் கவனத்திற் கெடுக்கலாம்.

* ஆசிரியரென்ற அடிப்படையில் நீங்கள் சமூகமயப்படுத்தல் சம்பந்தமாக ஏற்கனவே தெரிந்திருந்தவற்றைப் பற்றி எந்தளவு திருப்திப்படுவீர்கள்?

## 5.0 சாராம்சம்

1. சமூகமயமாக்கல் என்பது சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நோக்கம் விழுமிய ஒழுங்குகளை தமது இளைய தலைமுறையினருக்கு உரிமையாக்குவதாகும்.

2. தனியாளொருவரில் செல்வாக்குச் செலுத்தும் சமூகமயமாக்கல் கருவிகள் பல உண்டு. அவற்றுடன் குடும்பமே அதிக செல்வாக்குச் செலுத்துவதாகும்.

3. பரிசு, தண்டனை, உபதேசம், முன்மாதிரி, பாவனை முதலானவை சமூகமயமாக்கல் நுண்முறைகளாகும்.

4. குடும்பமானது சிறு குடும்பம் விரி குடும்பம் என இரு வகையினதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. குடும்பத்தின் கடமைகளும், பொறுப்புக்களும் பெரும ளவு சிக்கல் நிறைந்தனவாகும்.

6. சமூகமயமாக்கலில் குடும்பச் செல்வாக்கு தற்காலத்தில் பல்வேறு ஏதுக்களால் குறைந்து காணப்படும்.

7. பிள்ளையின் மொழியாற்றல், நுண்மதி, பண்பாட்டி யல் வளர்ச்சிக்காக குடும்பத்தினால் பயனுள்ள கட மைகளும், பொறுப்புக்களும் நிறைவேற்றப்படுகின் றன.

## 6.0 பிற்சோதனை

நீங்கள் இவ்வத்தியாயத்தின் மூலம் சமூகமயமாக்கல் சம்பந்தமாக விளக் கம் பெற்றுள்ளீர்களாதலால் கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு பிழையின்றி விடையளிக்க முற்படவும். அதனடிப்படையில் உங்கள் அறிவினை உறுதிபெறச் செய்யுங்கள். கீழே கொடுக்கப்பட்ட வினாக்க ளிலிருந்து பிழையற்றதைத் தெரிவு செய்யுங்கள்.

1. சமூகமயமாக்கல் எனும் கோட்பாட்டினால் அறிந்து கொள்வது:

(1) சமூகத்தின் உயர்ந்த பயனுள்ள பழக்க வழக்கங்கள் சம்பந்தமான தனியாள் பெறும் விளக்கம்.

(2) பிறப்பு முதல் இறப்புவரை தனியாளொருவர் தமது சூழலில் சமூக சுற்றாடலுக்கு ஏற்ப இசைவாக்கம் பெறுதல்.

(3) பாடசாலை மாணவர் வளர்ந்ததும் பொருத்தமாக வாழ்க்கைக்குத் தயாராக்குவதற்கான வழிமுறைகள்.

(4) பிள்ளைகளிடம் சமூக விருத்திக்குப் பொருத்தமான எண்ணக்கரு வை விருத்தி செய்தல்.

2. சமூகமயமாக்கல் தொழிற்பாட்டில் தனியாள் ஒருவர் இன்னுமொரு தனியாளரினால் சொல்லப்படும் அல்லது சைகை மூலம் காட்டப்ப டும் ஒன்றை ஏற்றுக் கொள்வது.

(1) அவனிடமிருக்கும் புரிந்துகொள்ளும் சக்தி அல்லது யூகத்தின் மூலமாகும்.

(2) அவனிடமிருக்கும் பின்பற்றாது செய்யும் திறனின் அடிப்படையி லாகும்.

(3) அவனிடமிருக்கும் அனுதாபத்தின் அடிப்படையிலாகும்.

(4) அவனிடமிருக்கும் ஒத்த தன்மைத் திறனினாலாகும்.

3. சிறு குடும்பம் என நாம் கருதுவது:

(1) பாட்டி, பாட்டன், மாமி, மாமா, ஆகியோர் உள்ளடங்கிய குடும் பமாகும்

(2) தானும், தந்தை, தாய், சகோதரர்கள், மனைவி, பிள்ளைகள் உள்ளடங்கிய குடும்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) தாய், தகப்பன், பிள்ளைகள் உள்ளடக்கிய குடும்பம்.

(4) பரம்பரை பல கொண்ட உறுப்பினர்களை உள்ளடக்கிய ஒன்றாக வாழும் குடும்பம்.

4. கீழ்வரும் சொற்கூட்டங்களிலிருந்து பொருத்தமானவற்றைத் தெரிந்து கீறிட்ட இடங்களை நிரப்புக.

(ஒத்த தன்மை, பாவனை, ஹெலிங்ஹாட்டும் நியூகாட்டனும், போதனையும் கற்பித்தலும், அனுதாபம், மனிதத்தன்மை, சமூக இசைவு, ஏல்டர்கைம்.)

(1) சமூகம் ஏற்றுக்கொண்ட உறுப்பினராவதற்குச் செய்ய வேண்டுவையினையும், செய்யக் கூடாதவையினையும் தெரிந்து கொள்ள வேண்டியதையும் சமூகமயமாக்கல் தொழிற்பாடு என ................. புலப்படுத்துகின்றனர்.

(2) சமூகமயமாக்கல் நுண்முறைகளுள் ஒன்றான .................. மிகவும் பின்பற்றுவது பாடசாலையிலாகும்.

(3) சமூகமயமாக்கல் செயற்பாடு தனியாள் ஒருவரின் செயல்படுதல், அது தொடர்பான நுணுக்க முறையும் .................. ஒத்துழைப்பு வழங்குவதுமாகும்.

## 7.0 விடைகள்

பிற்சோதனை1.1, 2.1, 3.1

4) ஹெவிகாஸ்டும், நியூகாட்டனும்.

5) போதனையும், கற்பித்தலும்

6) மனிதத் தன்மை

## 8.0 ஒப்படைகள்:

1. (1) சமூகமயமாக்கல் என்றால் என்ன?

(2) சமூகமயமாக்கல் காரணிகளைச் சுருக்கமாகத் தருக.

(3) தனியாளொருவரிடம் சமூகமயமாக்கலை ஏற்படுத்துவதில் அக் காரணிகள் செல்வாக்குச் செலுத்துவதனை இலங்கை சமூகத்தை ஆதாரமாகக் கொண்டு உதாரண மூலம் விளக்குக.

2. சமூகமயமாக்கல் நுட்ப முறைகளைத் தெளிவுபடுத்தி, அவை, செயற்படும் முறைகளை உதாரணங்கள் மூலம் விளக்குக.

3. குடும்பம் சமூகமயமாக்கலில் நிறைவேற்றும் கடமைகளையும் பொறுப்புக்களையும் தெளிவுபடுத்துக.

4. சமூகமயமாக்கல் காரணிகள் எனும் அடிப்படையில் குடும்பத்தின் செல்வாக்கு தற்போது குறைந்துள்ளது. இவ்வடிப்படையில் பாடசாலையை ஊடகமாகக் கொண்டு அதன் பொறுப்புக்களை குறிப்பிடுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.0 கலைச் சொற்றொகுதி

| | |
|---|---|
| கருக் குடும்பம் | - Nuclear or Conjugal Family |
| இனங்காணல் | - Identification |
| முதிர்ச்சி | - Maturity |
| இயல்திறன்கள் | - Potentialities |
| உணர்வுகள் | - Feelings |
| சமூகமயமாக்கல்/ சமூகமயப்படுத்தல் | -- Socialization |
| சமூகமயப்படுத்தலின் முகவர் | - Agent of Socialization |

## 10.0 மேலதிக வாசிப்பிற்குரிய நூல்கள்


1. யூ.டி. ஜயசேகர - சமூகமும் கல்வியும் கல்வி இல. 7, 8.


2. Richard M. Lerner, G.B. Spencer and J. Belsky, **"The Child in the Family".** In C.B. Kopp and J.B. Kratow, **The Child Development in a Social Context,** Addition Wesley. Publishing Co. Inc, 1982.

3. Havighurst, R.J. and Neugarten, B.L. **"Society and Education"** Allyn and Bacon, P. 59.

4. Durkheim E, **Socialization** Encylopaedia of Educational Research, 4th Edition.

5. Neil J. Smelser and James A. Davis, Ed K, Sociology, The **Behavioural and Social Sciences Survey** (Englewood Chiffd, N.J. Prentice Hall, 1969) P. 67.

6. Ottaway, A.K.C. **Education and Society,** Rontledge and Kegan Panl, 1966, P. 147




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் அத்தியாயம்

# சமவயதுக் குழுவினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கம் பக்கம்


| | | |
|---|---|---|
| 1.0 | அறிமுகம் | 29 |
| 2.0 | சிறப்பு நோக்கங்கள் | 29 |
| 3.0 | முற்சோதனை | 30 |
| 4.0 | சமவயதுக் குழு | 30 |
| 4.1 | சமவயதுக் குழு என்றால் என்ன? | 30 |
| 4.2 | சமவயதுக் குழு ஏன் உருவாகின்றது? | 32 |
| 4.3 | குழுக்களின் கட்டமைப்பு | 33 |
| 4.4 | சமவயதுக் குழுவும் மூத்தோர் உலகும் | 33 |
| 4.5 | சமவயதுக் குழுவினால் நிறைவேற்றப்படும் செயற்பாடுகள் | 35 |
| 4.6 | சமவயதுக் குழுவும் பாடசாலையும் | 37 |
| 4.7 | கற்றல் கற்பித்தலில் ஒத்த வயதுக்குழுவைப் பயன்படுத்தல் | 38 |
| 4.8 | சமூகமான பரீட்சை | 39 |
| 4.9 | சமூகமான வரைபடப் பகுப்பாய்வு | 41 |
| 4.10 | சமூகமான பரிட்சை முடிவுகளைப் பயன்படுத்தும் போது கவனிக்க வேண்டியவை | 43 |
| 5.0 | சாராம்சம் | 44 |
| 6.0 | பிற்சோதனை | 45 |
| 7.0 | விடைகள் | 46 |
| 8.0 | ஒப்படைகள் | 46 |
| 9.0 | கலைச்சொற்றொகுதி | 46 |
| 10.0 | மேலதிக வாசிப்பிற்குரிய நூல்கள் | 47 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1.0 அறிமுகம்

தனியாள் சமூகமயமாக்கலில் குடும்பத்தின் செல்வாக்கினைப் பற்றி முந்திய அத்தியாயத்தில் விளக்கப்பட்டது. அதனை அடுத்து அதிக செல்வாக்குச் செலுத்தும் கருவியாக கருதப்படக்கூடியது ஒத்த (சம) வயதுக் குழுவாகும். பிள்ளையின் வயது அதிகரிக்கும் போது குடும்பத்தின் செல்வாக்கினின்றும் படிப்படியாக விடுபட்டு சமவயதுக் குழுக்களின் உறுப்பினராக மாறுவர். இது உளவியல் ரீதியாலும் சமூக ரீதியாலும் ஓர் அவசியத்தேவையாகும். ஒத்த வயதுக் குழுவின் இயல்புகள் அதன் கடமைகளும், பொறுப்புக்களும், அக்குழு தனியாள் ஒருவனின் மீது ஏற்படுத்தும் செல்வாக்கும் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் பாடசாலைக்கும் ஆசிரியருக்கும் இவ்வயதுக் குழுவினரின் உதவியைப் பெறக்கூடிய வழிவகைகளையும் இவ்வத்தியாயத்தில் விளக்க முனைவோம். தனக்குக் கீழ் கற்கும் மாணவர்கள் மத்தியில் காணப்படும் குழுக்களை இனம் காணும் முறையாக சமூகமான பரீட்சை நடாத்தும் திறனை ஆசிரியரிடம் வளர்ப்பது பற்றியும் இவ்வத்தியாயத்தில் அதிக கவனம் செலுத்தப்படுகின்றது.

# 2.0 சிறப்பு நோக்கங்கள்

* தனியாளைச் சமூகமயப்படுத்துவதில் குடும்பத்துக்கு அடுத்ததாக சமூகமயமாக்கல் கருவி ஒத்த வயதுக் குழு எனத் தெளிவு பெறுவர்.
* ஒத்த வயதுக் குழு, அதன் தன்மை பற்றி விளங்கிக் கொள்வர்.
* சமவயதுக் குழு உருவாவதற்கான காரணங்களைத் தெளிவுபடுத்துவர்.
* சமவயததுக் குழுவின் கடமைகளையும், பொறுப்புக்களையும் இனங்காண்பர்.
* சமவயதுக் குழுவுக்கும், மூத்த உலகுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை விளங்கிக் கொள்வர்.
* ஒத்தவயதுக் குழு பாடசாலையிடையே காணப்படும் அன்னியோன்ய உறவை விளங்கிக் கொள்வர்.
* கற்றல் அனுபவங்களை வழங்கும் போது சமவயதுக் குழுவினர் ஆசிரியரிடம் பெறும் முக்கியத்துவத்தினை விளங்கிக் கொள்வர்.
* சமூகமான பரீட்சை நடாத்தும் திறனை விருத்தி செய்து கொள்வர்.
* சமூகமான பரீட்சை மூலம் ஆசிரியரது கடமைகளையும், பொறுப்புக்களையும் மிகச் சிறப்பாகச் செய்யும் திறனைப் பெறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.0 முற்சோதனை

இவ்வத்தியாயத்தை படிப்பதற்கு முன் கீழ்வரும் வினாக்களுக்கு சரியானது என நீங்கள் கருதும் விடையைத் தெரிவு செய்க.

1. ஒத்த வயதுக்குழு என்பது ஒரே வயதுப் பிள்ளைகள் கூட்டமாகும். (இது ஒரு பூரண விளக்கமாகும்/அவ்வாறானதல்ல.)

2. ஒத்த வயதுக்குழு பிள்ளைகளுக்கு மாத்திரம் பொருந்தக் கூடியது (ஆம்/இல்லை.)

3. நீங்கள் ஒரு சமவயதுக் குழு அங்கத்தவரா? (ஆம்/இல்லை.)

4. ஒத்த வயதுக்குழு (நிரந்தரமானது/நிரந்தரமற்றது.)

5. ஒரு தனியாள் ஒரே நேரத்தில் பல சமவயதுக்குழு உறுப்பினராக (இருக்கலாம்/இருக்க முடியாது)

6. சமவயதுக்குழு உறுப்பினராதல் பிள்ளை கெட்டுப் போவதற்கு (காரணமாகும் / காரணமாகாது / காரணமாகவும், காரணமாகாமலும் இருக்கலாம்.)

7. குடும்பத்திலுள்ள மன எழுச்சி இணைப்பைவிட சமயதுக் குழு மன எழுச்சி இணைப்பு (கூடுதலானது / குறைவானது.)

8. பிள்ளை சமூகம் சம்பந்தமான பரந்த விளக்கத்தைப் பெறுவது (குடும்பத்தின் மூலமாகும்/சமவயதுக் குழு மூலமாகும்.)

9. பாடசாலையின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு சமவயதுக் குழுவைப் பயன்படுத்த (முடியும்/முடியாது.)

10. சமூகமானப் பரீட்சை மூலம் பல்வேறு சமூகத்தைப் பற்றிய அறிவைப் பரிசீலிக்க முடியும் (ஆம்/இல்லை.)

11. சமூகமான பரீட்சையை நடாத்தும் திறன் ஆசிரியருக்கு இருப்பது அதிக (பயனுள்ளது/பயனுள்ளதல்ல.)

## 4.0 சமவயதுக் குழு

### 4.1 சமவயதுக் குழு என்றால் என்ன?

சமமான வயதினைக் கொண்ட பிள்ளைகள் கூட்டத்தினரை ஒத்த வயதுக் குழு எனலாம். சமவயது இங்கு அடிப்படை இயல்புகளில் ஒன்றாகும். இது குடும்பத்தைப் போன்று நிரந்தரமானதல்ல. நீண்ட கால இலக்குகளும் இதற்கு இல்லை. குறுகியதும் நிரந்தரமற்றதுமான ஆசைகள் பலவற்றைக் கொண்டிருக்கும். எனினும் ஏதாவது அமைப்பில் பழக்க வழக்கங்களையும் அமைப்புக்களையும் கொண்டிருக்கும். சிலசமயம் ஒருசில பிள்ளைகள் குழுவாக இயங்குவது சில நிமிடங்களுக்கோ சில மணித்தியாலங்களுக்கோ நீடிக்கலாம். ஆனால் **சமவயதுக் குழு** மிகவும் முறையில்லாததும், தற்காலிக விளையாட்டுக் குழுவிலிருந்து ஒழுங்கமைந்த சாரணியம், கடேற் முதலாம் குழுவாகவும், மூன்று, நான்கு பேர் கொண்ட கோஷ்டி முதல் பரந்த அரசியல் இயக்கமாகவும் விரிவடையலாம்.

ஒரு சமூகம் பின்வரும் சந்தர்ப்பங்களில் குழுவாக இயங்கும்:


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சமூகம் பின்வரும் சந்தர்ப்பங்களில் குழுவாக இயங்கும்

1. உறுப்பினர் உள்ளிணைப்பு, செயற்பாடுகள் அமையும்போது.

2. ஒரே மாதிரியான மதிப்பீட்டு மாதிரிகளை மேற்கொள்ளும் போது.

3. எல்லா உறுப்பினரும் தாம் அச்சமூகத்தைச் சேர்ந்தவர் எனக் கருதும் போது.

4. ஒருவருக்கொருவர் பழக வேண்டிய முறைபற்றி கட்டமைப்பு அல்லது ஒழுங்கமைக்கப்பட்ட முறை அமையும் போது.

மாணவர் தொகுதி ஒன்று திடீரென ஒன்றுகூடி இயங்க முடியுமென்னும் ஒத்த வயதுக் குழு ஒன்று குறுகிய காலத்தில் உருவாகாது. இத்தகைய குழு உருவாவது பெரும்பாலும் அடிக்கடி தொடர்ச்சியாக இடம்பெறும் அவதானம், இணைந்த செயல்பாடுகள், மதிப்பீடு என்பவற்றின் அடிப்படையிலாகும். நடத்தைக் கோலங்கள் பலவும் சமூக நிலையும் உருவாவது கால ஓட்டத்தை ஒட்டியதாக அமையும்.

பிள்ளையொன்று வயது செல்லச் செல்ல தனது குழுவையும்,, அடிக்கடி மாற்றிக் கொள்ளும். அதே போல் ஒரே நேரத்திலேயே ஒரு பிள்ளை அல்லது கட்டிளைஞன் எத்தனையோ குழுக்களில் அங்கம் வகிப்பதுண்டு. அயலார், கோயில், இளைஞர் இயக்கம், டியூசன் வகுப்பு முதலியவற்றால் உருவான ஒத்த வயதுக்குழு பலவற்றில் அவன் அங்கத்துவம் பெறமுடியும். குடும்பத்தைப் போலவே சமவயதுக் குழுக்களும் ஒன்றுக்கொன்று வேறுபட்டுக் காணப்படலாம். பிள்ளைப்பருவ, கட்டிளமைப் பருவ ஒத்த வயதுக் குழுக்களில் அவரவர்களுக்கு உரியதும், விசேடமானதுமான பழக்க வழக்கங்கள், நடத்தை இயல்புகள், சம்பிரதாயங்கள் மாத்திரமன்றி புது மாதிரியான மொழியமைப்புக்கூடக் காணப்படலாம். எல்லாக் குழுக்களிலும் எல்லா அங்கத்தவருக்கும் ஏதாவது ஓர் இடம் இருப்பதுடன் அதற்கேற்ற நடத்தைக் கோலங்களும் காணப்படலாம்.

இத்தகைய நடத்தைக் கோலம் அல்லது குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியமங்கள் (Norms) உறுப்பினர்களின் நடத்தைச் செயற்பாடுகளைத் தீர்மானிக்கும். அவ்வச் சமூக பண்பாட்டு அடிப் படையில் வழங்கப்பட்டுள்ள நியமங்கள் உள்ளன எனினும், ஒத்த வயதுக்குழு தத்தமக்குரிய நியமங்களைத் தீர்மானிப்பர். முற்பாடசாலைப் பருவம் போன்ற இளம் பருவக் குழுக்களது நியமங்கள் மூத்தோரது விருப்பு வெறுப்புக்களுக்கு ஏற்ப திர்மானிக்கப்படுமாயினும் பிள்ளை, கட்டிளமைப் பருவ நியமம் அக்குழுவினாலேயே உருவாக்கப்பட்டிருக்கும்.

ஒத்த வயதுக் குழு அங்கத்துவம் பிள்ளைகளுக்கு அவசியம் என்பதை மூத்தோர் ஏற்றுக் கொள்வர். எனினும் சமூகமயமாக்கல் கருவிகளுள் இதன் முக்கியத்துவத்தைக் குறைத்தே மதிப்பிடமுயல்வர். குடும்பம் / பாடசாலை முதலாம் ஏனைய சமூகக் கூட்டுறவுகள் போல் அது பரந்ததாகவோ, நிறுவனமயமானதாகவோ இல்லை. சட்டப்படி அமைந்துள்ளதாகவும் இல்லை. வெளிச் சமூகங்களின் பொறுப்புக்களோ அல்லது கடமைகளோ இல்லை. எனினும் அது பிள்ளையின் விருத்தியோடு அவனை சமூகமயமாக்குதலுடனும் சமூகத்தினை அறிமுகம் செய்து கொடுக்கும் முக்கிய பொறுப்புக்களைச் செய்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால வயதடிப்படையில் நோக்கும் போது தனியாள் ஒருவனுக்கு இரண்டாவதாக முக்கியமாக அமையக் கூடியது ஒத்த வயதுக் குழுவாகும். 4-7 வயதுவரை பிள்ளை ஒன்றின் உறுப்பினரைக் கொண்ட உலகம், குடும்பத்தினை மையமாகக் கொண்ட சிறு உலகம் முதல் சமவயதுக் குழுவைக் கொண்ட பரந்த உலகம் வரை விரிந்து காணப்படும். அதில் இருந்து பிள்ளைகள் தமது ஒத்த வயதுக் குழுவுடன் உறவு கொண்டு அனுபவம் பெறுவர். இது பிள்ளை, கட்டிளமைப் பருவத்தினருக்கு மாத்திரமன்றி மூத்தோர் விடயத்திலும் உண்மையானது. வாழ்க்கையிலும் இறுதிக் கட்டம் வரை ஒருவர் தமது வயதினரிடம் கற்பார்.

## 4.2 சம வயதுக்குழு ஏன் உருவாகின்றது?

மனிதன் இயல்பாகவே கூட்டு வாழ்க்கையை விரும்புவான். தனிமையாக வாழ்வதற்கோ, மதிக்கப்படாத வெறும் ஆளாக வாழ்வதற்கோ மனிதர்கள் விரும்புவதில்லை. இது உளவியல் தேவையுமாகும். உடலியல் உறுப்பமைவைவிட இம்மனித உறவு மனிதனுக்கு அவசியமாகும்.

பிள்ளை அபிவிருத்தியோடு பிள்ளையொன்றுக்கு தமது மூத்தோரின் உடலியல், உளவியல் சார்ந்த இயல்புகள் படிப்படியாக முதிர்ச்சியடையத் தொடங்கும். அத்துடன் பாதுகாப்பு, அன்பு என்பவற்றுக்காக அப்பிள்ளை ஒத்த வயதுக் குழுவுடம் சேர்ந்து கொள்ளும். தமது பிள்ளை இப்படிப் படிப்படியாகத் தம்மிலிருந்து வேறுபட்டுச் செல்லல் பெற்றோருக்கு வேதனை தருவதாயினும் அப்பிள்ளையின் விருத்திக்கு அது முக்கியமானதாகும். சமூக பண்பாட்டியல் காரணங்களாலும் ஒத்த வயதுக்குழு உருவாகும். சமூக அமைப்பு எவ்வாறாயினும் உலகம் பூராவும் பிள்ளைகள் ஏதோ ஒரு வகையில் குழுக்களாகச் சேர்கின்றனர். அவர்கள் ஒன்றாகவே இருக்கிறார்கள். பாய்கிறார்கள், போராட்டம் செய்கிறார்கள். ஏனையோரது, உறவை விரும்புகிறார்கள். பல்வேறு சமூகத்திலுள்ள ஒத்த வயதுக் குழுக்களிடையே வேறுபட்ட தன்மை காணமுடியும். குறிப்பாக மேற்கு நாடுகளில் சமவயதுக் குழு முத்தோர் எதிர்பார்ப்புக்களிலிருந்து அதிகம் வேறுபடுகின்றது. இது நவீன இளம் சமூகம் என அறிமுகப்படுத்தக் கூடியளவு பிரபலமானதாக இருப்பதுடன் மிக நெருங்கிய ஒத்த தன்மையும் நடத்தைக் கோலங்களும் பிரபல உறுப்பினரமைப்பும் கொண்டிருக்கும். இப்போது ஆசிய நாடுகளிலும் இத்தகைய பிரபல உறுப்பமைப்பும் பொது ஒத்துழைப்பும் கொண்ட குழுக்கள் உருவாகி வருவதைக் காணக் கூடியதாக உள்ளது.

குடும்பத்துக்கும் சமூகத்துக்குமிடையே அன்னியோன்யமான தொடர்ச்சியான உறவுகள் இருந்து வருமாயின், குடும்பம் சமூகம் ஆகிய இரண்டும் ஒரே உருவத்தில் சமூக விழுமியங்களையும், கடமைகளையும் பெருமளவிற்கு மதிக்கும். இத்தகைய சமுகம் பெருமளவிற்கு சம்பிரதாய பூர்வமான சமூகமாக இருப்பதோடு அது குடும்ப முறையினது வெளிப்பாடு எனவும் அடையாளம் காண முடியும். எனினும் இவ்விரு நிறுவனங்களிடையே அவ்வளவு நெருங்கிய உறவு இன்றேல் பிள்ளைகள் குடும்பத்தில் பெறும் குண இயல்புகள், திறன்கள், பொதுச் சமூகத்தில் வாழ்வதற்குப் போதியதாக இரா. அத்தகைய சூழ்நிலையில் குடும்பத்தையும், சமூகத்தையும் இணைக்கும் சங்கிலியாக அமைய வேண்டியது ஒத்தவயதுக் குழுவாகும்.

தற்காலத்தில் குடும்பத்தின் சிறிய அமைப்பும், வலுவிழந்து செல்லும் கடமைகள் பொறுப்புக்கள், செல்வாக்கு முதலியன பற்றியும் கவனிக்கும் போது நவீன சிக்கலான சமூக அமைப்பினுள், வாழ்வதற்குத் தேவையான திறன், அறிவு முதலியவற்றைப் பெறுவதற்குரிய வழியாக ஒத்த வயதுக்குழு இருத்தல் அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.3 குழுக்களின் கட்டமைப்பு

ஒத்த வயதுக் குழு கட்டமைப்பு சம்பந்தமாக அக்குழு உறுப்பினரிடம் வினவினால் "நாம் நண்பர் கூட்டம் எங்களுக்குத் தலைவர் ஒருவர் இல்லை. நாம் எல்லோரும் ஒரே சமமானவர்" எனக் கூறுவர். எனி னும் மிக அவதானமாக அக்குழு ஒன்றைப் பரீட்சித்துப் பார்த்தால் வெளித் தோற்றத்தைவிடச் சிறப்பான கட்டமைப்பு அதனுள் இருப்பது தெளிவாகும். பெருமளவிற்கு இக்குழுவின் கட்டமைப்பு, குழுவின் தொழிற்பாட்டின் மூலம் நிர்ணயிக்கப்படும். வேறுபாடு எவ்வாறாயினும் எல்லாக் குழுக்களுள்ளும் உறுப்பினர் மத்தியில் வேறுபட்ட தன்மைகளும் நிலைகளும் அமைந்து இருக்கும். குழு இயல்பு (Norm) போலவே குழுக் கட்டமைப்பு சிலம் அவ்வவ் உறுப்பினரது தொழிற்பாடுகள் தீர்மானிக்கப்படும். வயது கூடிய குழுவை விட வயது குறைந்த பிள் ளைகளது குழுக்களின் கட்டமைப்பு உருவாகியிருப்பது குறுகிய எதிர் பார்ப்புக்களின் அடிப்படையிலாகும். அதனால் சில குழுக்களில் அதி காரப் போக்கு காணக்கூடியதாக இருக்கும். விசேடமாக வெற்றி தோல் வியை மையமாகக் கொண்ட ஆதிக்க பின்பற்றல் அமைப்பு, வயது குறைந்த பிள்ளைகளின் குழுக்களிடையே காணப்படுவதாக பரிசோத னைகள் மூலம் தெளிவாகியுள்ளன. ஆதிக்கத் தோற்றப்பாடுள்ள குழு உறுப்பினர்கள் ஏனைய உறுப்பினர்களை விட பல்வேறு திறன்களை உடையவராக இருப்பர். அதே போல் அவர்கள் ஏனைய உறுப்பினர் களின் விசேட கவனிப்புக்கு உட்படுவதுடன் ஏனைய உறுப்பினர் அவர் களைப் பின்பற்றவும் முயற்சி செய்வர். குழுச் செயற்பாடுகளை நன்றாக ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கும், ஆற்றலுள்ள உறுப்பினர்கள் மூலமாக சமூகத்திறனை அதிகளவிலும், பயன்படத்தக்க முறையிலும் கற்பதற்கும் ஒத்தவயதுக் குழுவினரின் ஆதிக்கப் பண்புகள் காரணமாக அமைவதாக பரிசோதனைகள் மூலம் காட்டப்பட்டுள்ளன.

மூத்தோர் குழுக்களைப் போலவே, கட்டிளமைப் பருவ ஒத்த வயதுக் குழுக்களில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் உரிய இடமும் கௌரவமும் மதிப்பும் உள்ளன. ஏழு அல்லது எட்டு வயதுப் பிள்ளைகளின் குழுக் களாயின் அவர்களிடமுள்ள சொப்பர் சைக்கிள் அல்லது தானாக இயங்கும் விளையாட்டுப் பொருட்களின் நிலையைப் பொறுத்தும், இளவயதினர் குழுவாயின் அவர்களுடைய விசேட திறமையைக் கொண் டோ, அவர்களுடைய மோட்டார் சைக்கிள் வாகனங்கள் ஆகியவற்றின் தன்மை, வர்க்கம் விலை அடிப்படையிலோ ஒத்த வயதுக் குழுவின் நிலை, மதிப்பு ஆதியன தீர்மானிக்கப்படும்.

**செயற்பாடு 1**

1. உங்கள் பாடசாலையில் அல்லது ஊரில் ஒத்த வயதுக் குழு ஒன் றைத் தெரிந்து அதன் உறுப்பனர்களது நிலை மதிப்பு என்பன அவர்களிடையே பகிர்ந்து காணப்படும் முறையை மதிப்பிடுக.

2. அவ்வாறு அது பிரிந்து இருப்பதற்கான ஏதுக்களை ஆராய்ந்து கண் டறிக.

## 4.4 சம வயதுக்குழுவும் மூத்தோர் உலகும்

மூத்த சமூகத்தில் பிள்ளை பராமரிப்பின் கீழ் இருக்கும்; முக்கியத்துவம் கொண்டதாக இராது; பணிந்து நடக்கும்; அடிமையாக இருக்கும். எனினும் ஒத்த வயதுக் குழுவில் அவன் ஏனையோருடன் சம மானவனாவான்; தலைவனுமாவான். அவன் அதனுள் செயல்படுவது தனது வயதை ஒத்த முதிர்ச்சியை அடைந்த பிள்ளைகளுடனும் மதிப்பும் சமூக நிலையையும் பொறுத்தவரை தனக்குச் சமமானவர்களுடனுமே ஆகும். ஏனையோரது கருத்துக்கள் கொள்கைகள் முதலானவற்றை ஏற்றுக்கொள்ளவோ மறுக்கவோ சுதந்திரம் உண்டு. ஏனெனில் குழுவின் ஏனைய உறுப்பினர்கள் புத்தியிலும் அனுபவத்திலும் அவனை விட அதிக உயர்நிலையை வெளிக்கட்டாதிருப்பதனாலாகும். தனது சிந்தனை களையும், கொள்கைகளையும் உருவாக்கும் உரிமை அவனுக்கு உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்த வயதுக் குழுக்கள் குடும்பத்தைப் போல் பிள்ளையில் அதிக மன வெழுச்சித் தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை. குறைந்த வயதில் குறைந்த புலனுணர்ச்சியைப் பெறும் பிள்ளை பிந்திய பிள்ளைப் பருவத்தையும் கட்டிளமைப் பருவத்தையும் அடையும் போது கூடிய சுய புலக்காட்சி ஆற்றலைப் பெறும். அதனால் இளம் வயதில் பிள்ளை விளைவுகளில் அவ்வளவு அக்கறை காட்டாது ஒரு நண்பரிடமிருந்து இன்னொரு நண் பரைப் பெறவும், ஒரு குழுவிலிருந்து இன்னொரு குழுவுக்கு மாறவும் அவனுக்குச் சுதந்திரம் உண்டு. குடும்பத்திலோ பாடசாலையிலோ மனவெழுச்சிக்கு உட்பட்ட ஐக்கியம் ஒன்று ஒத்த வயதுக் குழுக் களிடையே பெரும்பாலும் காணப்படாது.

பிள்ளைப் பருவத்திலும் முன்கட்டிளமைப் பருவத்திலும் ஒத்த வயதுக் குழுவில் இன்னுமொரு முக்கிய இயல்பாகக் காணப்படுவது அவற்றின் நிரந்தரமற்ற தன்மையாகும். சாதாரண பாடசாலைப் பருவப் பிள்ளை ஏனைய இரண்டு மூன்று பிள்ளைகளுடன் உறவை வளர்த்து அதனைத் தனது குழுவாகக் கொள்வதோடு சில காலத்தில் அவன் அக்குழுவிலி ருந்து பிரிந்து விடலாம். இவ்வாறு அடிக்கடி தனது குழுவை மாற் றும் இயல்பு ஒத்த வயதுக் குழுவில் உண்டு. கட்டிளமை அல்லது மூத்த குழுக்களிலும் இத்தகைய குழு மாற்றம் சில சமயம் காணப்பட லாம். இதற்கான பிரதான காரணம் குடும்பத்தைப் போன்று மன எழுச்சி இணக்கம் இக்குழுக்களிடையே காணப்படாமையும் உளச் சுதந் திரமும் இருப்பதாகும்.

பிள்ளையின் வயது படிப்படியாக அதிகரிக்க குடும்பத்தின் செல்வாக்கு படிப்படியாக குறைந்து செல்வதோடு ஒத்த வயதுக் குழுவில் செல் வாக்கு அதிகரிக்கும். குறைந்த வயதில் ஏனையோர் செய்வது போன்று செய்யப் பழகும் பிள்ளை 14 அல்லது 15 வயதில் ஒத்த வயதுக் குழு வில் உறுப்புரிமை பெறல் அத்தியாவசியமானதாக அமையும். இத னால் கட்டிளமைப் பருவத்தில் ஏனைய சமூகமயமாக்கல் கருவி களை விட ஒத்த வயதுக் குழு பிள்ளையின் மீது அதிக செல் வாக்குச் செலுத்தும்.

பிள்ளை, கட்டிளமைப் பருவ குழுக்களில் மூத்தோருக்கு அதிக முக்கிய இடம் கிடையாதிருப்பது போல சில குழுக்கள் பெற்றோர் அல்லது மூத் தோருடன் நேரடியாக மோதிக் கொள்ளும். சில சட்டத்தையும், அமைதி யையும் குலைத்து நாசத்தை ஏற்படுத்தும் குழுக்களாகும். பெற்றோர்க ளது எதிர்ப்பார்ப்புக்களுக்கும் விருப்பத்துக்கும் மாறான இத்தகைய குழுக்கள் நாசகாரக் குழுக்களாக இல்லாவிடினும் பெற்றோர் விரும்பாத நடையுடை, பேச்சுக்கள் நடத்தை போன்றவற்றை உடையதாக இருக்கும். இதனடிப்படையில் ஒத்த வயதுக் குழுவுக்கும் மூத்த உலகத்துக்கு மிடையே பெரும்பாலும் பரஸ்பர விரோதமான உறவே நிலவும் என முடிவு செய்யலாம்.

ஒத்த வயதுக்குழு ஒன்றினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பழக்க வழக்கச் செயற்பாடுகள் பெருமளவிற்கு மூத்தோரால் உயர்ந்தது எனக்கருதப்படும் பழக்க வழக்கங்களிலும் வேறுபட முடியும். பெற்றோரின் சூழலில் இது வரை ஒரு பிள்ளை மேற்கொண்டு வந்த நடத்தைக் கோலம் ஒத்த வய துக் குழுவினால் மாற்றப்படலாம். எவ்வாறாயினும் ஒத்த வயதுக் குழுவின் பண்பாட்டு இயல்பு ஒவ்வொரு வகையில் வேறுபட்டுக் காணப்பட்டாலும் அது பரந்த அளவில் நிலவும் சமூகத்தின் பண்பாடாகவே அமையும். மூத்த அல்லது ஒத்த வயதுக் குழுவி டையே எத்தகைய வேறுபட்ட தன்மை காணப்படினும் இரு பிரிவினர துமு அபிவிருத்திக்கு காரணமாக இருப்பது முயற்சி, உறுதிப்பாடு, சுறு சுறுப்பு, கீழ்ப்படிதல் தனியாளின் தனித்துவம், இணக்கம் என்பனவா கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்தோர் சமூகத்தில் வழக்கிலுள்ள சமூக அமைப்பினைச் சில ஒத்த வயதுக் குழுக்களில் காணக்கூடியதாக இருக்கும். பெரும் அளவுக்குப் பிள்ளைப் பருவத்திலும் கட்டிளமைப் பருவத்திலும் இவ்வியல்புகள் காணப்படும். ஒரு பிள்ளை பெரும்பாலும் தன்னிலும் உயர்ந்த சமூக நிலையிலுள்ள ஒரு பிள்ளையை அல்லது தனக்குச் சமமான சமூக நிலையிலுள்ள பிள்ளையே நண்பனாகத் தெரிவு செய்யும். தன்னிலும் குறைந்த சமூக நிலையில் உள்ள பிள்ளையை நண்பரென அடையாளம் காண்பது அரிதாகவே இருக்கும். 15 அல்லது 16 வயது வரை இத் தகைய சமூக வகுப்பு வேறுபாடு காணப்படினும் அது ஓரளவு சிக்கலான இயல்பைப் பெறும். எவ்வாறாயினும் சமூக வகுப்பு வேறு பாட்டை எவ்விதத்திலும் கருத்திற் கொள்ளாத சமவயதுக் குழுக்களும் உள.

## 4.5 சமவயதுக் குழுவினால் நிறைவேற்றப்படும் செயற் பாடுகள்

பிள்ளைகள் குடும்பத்தின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டுச் செல்லு வதற்கு முதன் முதல் வழியமைப்பது சமவயதுக் குழுவாகும். குடும்பத்தைவிட சுதந்திரமும், சமத்துவமும் உடைய உறவினை வைத்துக் கொள்ளும் சந்தர்ப்பம் முதலில் கிடைப்பதும் சமவய துக் குழுவினாலாகும். குடும்பம் எத்தகைய சனநாயக அமைப்புக் கொண்டிருந்த போதிலும் பிள்ளை மூத்தோரது பராமரிப்பில் இருக்குமா தலால் எச்சூழ்நிலையிலும் பெற்றோருக்கும், பிள்ளைகளுக்கும் சமத்துவ நிலையிலான உறவு ஏற்படுவதில்லை. இதனால் சமநிலை உறவு வளர்ச்சியடைவதும் ஒத்த வயதுக் குழுவினாலாகும்.

குடும்பத்தில் கிடைக்காத இத்தகைய அறிவு கிட்டுவதும் இத்த கைய குழுவினரிடமிருந்தேயாகும். ஒரு வகையில் பாலியல் சம்பந்த மான விடயம் அல்லது கட்டிளமைப் பருவத்துக்கு முக்கியமாகக் கருதப் படும் உடைகள், அணிகலன்கள், படம், சங்கீதம், முலியன பற்றிப் பிள்ளை அறிந்து கொள்வது கூட குழு உறுப்புரிமையின் அடிப்படை யிலேயேயாகும்.

பிள்ளை, கட்டிளமைப் பருவங்களில் பெரும்பாலான விடயங்கள் சம்பந் தமாக சிக்கலான விளக்கம் கொடுப்பதும் இக்குழுவாகும். குறிப்பாக சிறுகுடும்ப முறையினுள் வளரும் பிள்ளை குழு இயல்புகளைக் கொண்ட பிள்ளைகளுடன் பழக நேரிடுவதால் சமூக இயல்புகளைப் பற் றியும் அதிக விளக்கங்களைப் பெறக்கூடியதாக இருக்கும். இதனால் பிள்ளையின் உலகம் விரிவடையும்; புலக்காட்சியும் விரிவடையும். குடும் பம் அதி முக்கியம் எனக் கருதும் குறுகிய நோக்கினின்றும் விடுபட்டு மிக விரிந்த சமூக நோக்கினடிப்படையில் அவதா னிக்கத் தூண்டப்படுவர். கலாசாரத்தை ஒப்படைக்கும் செயற் பாட்டையும் ஒத்த வயதுக்குழு நிறைவேற்றும். ஒத்தவயதுக் குழு வுக்கேயுரிய தனி கலாசாரமாக அது இருக்கலாம். அது பெரும் பாலும் மூத்த சமூகத்தினை பின்பற்றுவதாக அமையாது; மூத் தோரது நற்பழக்கங்களை மீளவலியுறுத்துவதாக இராது.

ஒவ்வொரு உறுப்பினரதும், அவர்கள் ஆண் பெண் பிள்ளையாயிருந்தா லும், நிறைவேற்றப்பட வேண்டிய செயல்கள் (Roles) ஒத்த வயதுக்குழு மூலம் நிறைவேற்றப்படுவதோடு குடும்பத்தில் ஏற்கனவே கற்பிக்கப்பட்ட வற்றை மிக விவரமாகவும், தெளிவாகவும் விமர்சிப்பதன் மூலம் இங் கும் கற்றல் இடம் பெறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தில் நடைமுறையிலுள்ள சிற்சில சட்டதிட்டங்கள் பற்றியும், அவை உருவாகிய முறை, அவற்றை எவ்வாறு மாற்றலாம் என்பது பற்றியும், அத்தகைய சட்டதிட்டங்களுக்கு உட்பட முடியுமா அல்லது ஏற்றுக் கொள்ளாதிருக்கலாமா என்பது பற்றியும் பெரும்பாலும் பிள்ளைகள் கற்பது ஒத்தவயதுக் குழுக்களிடமிருந்தாகும். தேசியம், சமயம், தமது சமூகவகுப்பு என்பவற்றின் இயல்புகள் மூத்தோரது கலாசாரம், ஏனைய கலாசாரங்கள் என்பவை பற்றிய விளக்கத்தையும் ஒத்தவயதுக் குழுவே உறுப்பினர்களுக்கு வழங்கும்.

தமது குழுவிலுள்ள உறுப்பினர்களுக்குப் பல்வேறு சமூக அமைப்புக்களைப் பற்றி அறிமுகப்படுத்துவதோடு சில சமயங்களில் சமூக ஒருமைப்பாட்டுக்கும் குழு உதவும். தாழ்ந்த வகுப்பினராகக் கருதப்படும் சமூகத்துப் பிள்ளை, ஒழுங்கும் கட்டுப்பாடுமுடைய இளைஞர் குழுவொன்றினால் உயர் சமூகத்துக்குரிய பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொள்ள முடியும். மத்திய வகுப்பு நண்பர்களுடன் உறவாடுவதன் மூலம் அப்பிள்ளை மத்திய வகுப்புக்குரிய நடத்தையைக் கற்றுக் கொள்ளலாம்.

இதனால் அப்பிள்ளை சில சமயங்களில் தனது குடும்ப வகுப்பு நிலைக்கு மேல் உயர் நிலைக்குரிய எதிர்பார்ப்புக்கள், கருத்துக்களை உடைய தனி நபராகலாம். பொது சமூகமான பாடசாலையில் கீழ் மத்திய வகுப்புப் பிள்ளைகளிடையே நிலவும் உறவுகள் காரணமாக மத்திய வகுப்பு வாழ்க்கை முறையைப் பழகுவதற்கு கீழ்நிலைச் சமூக வகுப்புப் பிள்ளைகளுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கிறது. இதனால் ஒத்த வயதுக்குழு சமூக ஒருங்கிணைப்பிற்குப் பெரும் தொண்டாற்றுவது தெளிவாகும்.

ஒத்தவயதுக் குழுவின் இன்னுமொரு முக்கிய செயற்பாடு புது சமூகத்துக்கான பாத்திரங்களையும் குணநல இயல்புகளையும் பழக்குவதாகும். உதாரணமாக அதிகார பூர்வ அடக்குமுறை அமைப்பைக் கொண்ட குடும்பத்தில் வளரும் பிள்ளை சனநாயக அணுகுமுறை கொண்ட சூழலை உடைய குழுவில் உறுப்புரிமை பெறுவதன் மூலம் சனநாய அணுகுமுறை கொண்ட குடும்பமொன்றில் வளரும் பிள்ளையின் இயல்பையும், அதே போன்று கட்டுப்பாடும் அடக்குமுறையும் கொண்ட குழுவில் இடம்பெறுவோர் அத்தகைய அனுபவங்களையும் பெறுவர். குடும்பத்திலுள்ள மகன், மகள், சகோதரி, சகோதரன் எனும் அடிப்படையில் வளரும் பிள்ளை குழுவொன்றில் நண்பனாக அல்லது பகைவனாக இன்றேல் தலைவர் அல்லது பின்பற்றுவோராவதற்குக் கற்றுக் கொள்வர். அதேபோல் அவன் அல்லது அவள் தனது குழுவில் புத்திசாலி, அறிவிலி, சண்டியன், அப்பாவி, ஊழியன், போதகன் ஆக முடியும். இத்தகைய புதிய பாத்திரங்கள் ஏற்றலும் அனுபவம் பெறலும் அவனது எதிர்கால சமூக வாழ்க்கைக்குப் பெருமளவு உதவ முடியும்.

குழுவினால் **கிடைக்கும் உதவி புதிய வலுவை உருவாக்கும்.** குடும்பத்தில் மூத்தோருடன் அல்லது பெற்றோருடன் இடம்பெறும் கொடுக்கல் வாங்கல் அல்லது பேச்சுவார்த்தையின் போது முன்னரை விட சுதந்திரமும் வலுவுமுடைய சுபாவம் அல்லது இயல்பு உருவாகும். பின்பற்றலுக்கும் இனம் காணுதலுக்கும் பொருத்தமான குணநல இயல்புடையவர் குழுவில் எதிர்ப்படுவர். **சுயமான கற்றல், தன்னைப்பற்றிய தெளிவு, சுயவலு, நம்பிக்கை வளரும்.**

வேகமாக மாறும் புதிய சமூக முறையினுள் ஒத்த வயதுக் குழுவின் செல்வாக்கு விரைவாக அதிகரித்து வருகிறது. விசேடமாக நகர்ப்புறக் குழுக்களில் இத்தகைய செல்வாக்கு அதிகம் எல்லா அம்சங்களிலும் இடம் பெறும். நவீனமயச் செயற்பாடு மூத்த பரம்பரையினரை விட இளம் தலைமுறையினரிடையே அதிக செல்வாக்குச் செலுத்தியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களிடம் நவீனமயமாதல் பற்றிய விருப்பு அதிகம் ஏற்படுகிறது. அத்தகைய விடய சம்பந்தமான மேலதிக விபரம் அறிவுரை வழிகாட்டல் மிக அவசியமாகும். இதனால் ஒத்த வயதுக்குழு அதிக செல்வாக்குச் செலுத்துவதோடு அதனால் நிறைவேற்றப்படும் கடமைகளும் பொறுப் புக்களும் அதிகம்.

## 4.6 சமவயதுக் குழுவும் பாடசாலையும்

குடும்பம் ஒன்றினுள் பிள்ளையைத் தனியாளாகக் கருதிய போதும், பாடசாலையில் பிள்ளைகள் பலர் இருப்பதால் அவர்களைக் குழுவா கவே கருதுவர். அத்தோடு மட்டுமன்றி சில ஒழுங்கு விதிகளின்படி பாடசாலையில் மாணவரைச் சமவயதுக் குழுக்களாகப் பிரித்துள்ளனர். இதனால் பாடசாலையும் ஒத்த வயதுக் குழுவும் நெருங்கிய தொடர் புடையன. எனினும் பாடசாலையில் தரம் அல்லது ஆண்டு அடிப்ப டையில் உருவாக்கப்பட்டுள்ள குழுக்களும் இங்கு ஆராயப்படும் ஒத்த வயதுக் குழுவும் ஒன்றல்ல. ஒரு வகுப்பு அல்லது ஆண்டில் பல ஒத் தவயதுக் குழுக்கள் இருக்கலாம். அத்துடன் ஒரு ஒத்தவயதுக் குழுவின் அங்கத்தவர்கள் பல வகுப்புக்களில் இருக்கலாம்.

பாடசாலையின் எதிர்பார்ப்புக்கு ஒத்துப் போகக்கூடிய ஒத்த வயதுக்குழு போலவே அதற்கு எதிர்ப்புடைய குழுக்களும் இரு க்க முடியும். பெரும்பாலும் ஒத்த வயதுக் குழுவுக்குத் தலைமை தாங் குவதும் பாடசாலை நண்பர்களிடையே பிரபல்யமான திறமை உடைய மாணவராவர். எனினும் பெருமளவிற்குஆசிரியரால் சிறந்தவர் எனக் கருதப்படுபவர், ஆசிரியரின் அன்பைப் பெற்றவர், புத்தகப் பூச்சி, வால்பிடிப்பவர், கோள் சொல்பவர் போன்றோர் ஒருபோதும் குழுவில் பிரபலமானவராய் இருக்க முடியாது. பாடசாலையின் எதிர்ப்பார்ப்புக் களுக்கு ஏற்ப நடக்கும் குழு எப்போதும் தமது கல்வி முன்னேற்றத் தையும் பாடசாலையின் முன்னேற்றத்தையும் எதிர்பார்க்கும். அதே சம யம் அதற்கு எதிரான குழு கல்வியையும் ஆசிரியரையும் பாட சாலையையும் குறைகூறும் கருத்துக்களையே கொண்டிருக்கும். இன்னும் வேறு சில குழுக்கள் முக்கியமெனக் கருதுவது விளையாட்டு மன்றங்கள் போன்றவற்றையாகும். எனினும் கல்விச் சாதனைகளுக்கும் ஒத்தவயதுக் குழுக்களின் எதிர்பார்ப்புகளுக்கிடையே நெருங்கிய பிணைப் பும் இருக்க முடியும்.

கல்வி எதிர்பார்ப்புக்கள் சம்பந்தமாகப் பெற்றோர், பிள்ளைகள், பாட சாலைக்கிடையே வேறுபாடுகள் காணப்படலாம். பெற்றோர்களையும், பாடசாலையையும் விட பிள்ளைகளின் எதிர்பார்ப்புக்களில் கட்டிள மைப் பருவத்தில் செல்வாக்குச் செலுத்துவது அவர்களைச் சார்ந்த ஒத்த வயதுக் குழுவாகும். அதனால் பெற்றோர் போன்றே பாடசா லையும் இப்பருவத்தில் பிள்ளைக்குழுக்கள் சம்பந்தமாக அதிக கவனஞ் செலுத்துதல் மிக அவசியமாகும். முற்பருவத்தில் பாடசாலையை விட் டுச் செல்லும் பெரும்பாலான பிள்ளைகள் கற்பதிலுள்ள திறமையின் மையை விட குழுவின் அங்கீகாரம் கிடைக்காமையால் ஒத்த வயதுக் குழுக்கள் மத்தியில் கைவிடப்பட்டவராகவும் கருத முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.7 கற்றல் கற்பித்தலில் ஒத்தவயதுக் குழுவினைப் பயன்படுத்தல்:

பாடசாலையில் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டினை மிகச் சிறப்பாக வெற்றி பெறச் செய்வதற்கு ஒத்த வயதுக் குழுவையும் பயன்படுத்த முடியும். ஆசிரியர் ஒருவர் தம்முன்னே இருக்கும் மாணவர்களின் குழுவை மாத்திரமின்றி அக்குழுவிலுள்ள ஒன்றிணைந்த செயற்பாடுகள், மதிப்பீடுகள், கொள்கைகள், திறன்கள் என்பவை பற்றி விளக்கம் பெற்றிருத்தல் வேண்டும். எந்தக் குழுச் செயற்பாடும் வெற்றி பெறுவது அக்குழுவின் நோக்கம், ஊக்கல், ஒத்துழைப்பு என்பவற்றின் அடிப்படையிலாகும். திறமைமிக்க ஆசிரியர்கள் பாடசாலையின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற ஒத்த வயதுக் குழுவைப் பயன்படுத்துவர். பாடசாலை விளையாட்டுக்கள், விவாதம், கடேற், சாரணீயம், நடனம், சங்கீதம் மாணவர் தலைவர், பாதுகாப்பு முதலிய குழுத்தெரிவிலும், மாணவர் மன்ற உறுப்பினர்கள், நடவடிக்கைக் குழு, ஒழுங்குபடுத்தற்குழு, என்பவற்றைத் தெரிவு செய்யும் போதும் கண்காட்சி, நடனவிழா, சுற்றுலா, கலைநிகழ்ச்சி, விளையாட்டுப் போட்டி ஆகிய விடயங்களை ஒழுங்கு செய்யும் போதும் இவ்வொத்த வயதுக் குழுக்களைப் பெருமளவு பயன்படுத்தலாம். அந்நிலையில் ஆசிரியர் ஒருவருக்கு எதிர்கொள்ள நேரும் பிரச்சினை ஒத்தவயதுக் குழுவை இனங்காணுதலாகும். இதற்காகப் பொருத்தமான வழிகாட்டுதலைப் பின்வரும் இரு தொழிற்பாடுகள் இரண்டின் பின்னர் காணலாம்.

தொழிற்பாடு : 02.

1. உங்கள் பாடசாலையில் ஆரம்ப, கனிஷ்ட இடைநிலை, சிரேஷ்ட இடைநிலை ஆகிய நிலைகளில் ஒத்த வயதுக் குழுக்கள் மூன்றினைத் தெரிந்து அவதானிக்குக.

2. அக்குழுக்களின் உறுப்பினர்களது தொகை, வயது, சமூக வகுப்பு, நடத்தைக் கோலம் (நடை, உடை, பேச்சுவழக்கு பழக்க வழக்கம் ஆகியவற்றினால் வெளிப்படுத்தப்படும் இயல்புகள்). முதலாம் நிலைகளில் நீங்கள் முக்கியம் எனக் கருதுபவற்றை அட்டவணைப் படுத்துக.

3. இக்குழுக்கள் மூன்றுக்குமிடையே காணப்படும் தெளிவான வேறுபாடு எவை என முடிவு செய்க.

தொழிற்பாடு : 3

1. உங்களது பாடசாலையில் கல்வியைப் பூரணப்படுத்தாது பாடசாலையை விட்டுச் சென்ற மாணவர்கள் சிலரைப் பற்றி விவரம் சேகரிக்குக.

2. அவர்களது முடிவு சம்பந்தமாக அவர்களுடன் ஒன்றாகக் கற்ற ஏனைய மாணவர்களது கருத்துக்களை விசாரித்துப் பார்க்க.

3. ஒத்த வயதுக் குழுக்களுள் இடம்பெற முடியாமை அல்லது அக்குழுக்களால் தவிர்க்கப்படுவது அவர்களது முடிவில் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளதா என அறியவும்.

4. அவர்களது முடிவுகளை மாற்றுவது சம்பந்தமாக ஆசிரியர் என்ற முறையில் நீங்கள் ஏதாவது செய்ய முடிந்ததா? அப்படியாயின் அதனைக் குறிப்பிடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.8 சமூகமான பரீட்சை

பாடசாலை அல்லது வகுப்பறையினுள் இடம்பெறும் சமூக உறவுபற்றி ஆசிரியருக்கு விளங்கக்கூடியதாயிருப்பது வினாக் கேட்டல், அவதானித்தல், கண்காணித்தல் மூலம் ஒருவரைப் பற்றி இன்னொருவருடன் விசாரித்தல் மூலமாகும். எனினும் இம்முறைகளில் பெறும் விவரங்கள் பிழையாகலாம் என்பதால் விஞ்ஞான ரீதியான கணிப்பீடாக இராது. பாடசாலையில் அல்லது வகுப்பறையில் உள்ள குழுக்களின் உறவுகள் பற்றிய விஞ்ஞான ரீதியான முறை ஒன்றுள்ளது. அது சமூகமான **நுண்முறை** ஆகும்.

சமூகமான நுண்முறை முதன் முதல் அறிமுகப்படுத்தப்பட்டது ஜே.எல். மொறேனோ (Moreno) என்பவராலாகும். மிக எளிய வெளிப்படையாகத் தென்படும் இயல்போடு விசேட முக்கியத்துவம் இதில் உள்ளது. இம்முறையை நடைமுறைப்படுத்தும் சாதாரண முறை ஒருவர் அடுத்தவரைப் பற்றிக் காட்டும் விருப்பினைப் பயன்படுத்தி நெருக்கமான உறவுபற்றி விசாரிப்பதாகும். உதாரண மூலம் இதனை விளக்குவது மிகப் பொருத்தமாகும்.

கடந்த இரண்டு வாரங்களுள் நாம் கற்ற அலகு சம்பந்தமாக மீட்டல் ஒன்றைக் குழு முறையில் செயல்படுத்தக் கருதுகின்றோம். இது சம்பந்தமாக உங்களது குழுவுக்குள் அனுமதி பெற விரும்புவோரை உங்களது விருப்பத்தின் அடிப்படையில் ஒழுங்குபடுத்தி 1, 2, 3 எனும் அடிப்படையில் பெயர்களைக் குறிப்பிடவும். உங்களது குழுவில் அனுமதிக்கப்டுவதற்கு உங்களுக்கு விருப்பமில்லாது இருந்தால் 0 என அடையாளமிட்டு அவரின் பெயரை எழுதுக.

குழு முறையில் மீட்டலொன்றைச் செய்ய விரும்பும் ஆசிரியர் ஒருவர் மேற் குறிப்பிட்ட முறையில் பிள்ளைகளைப் பயன்படுத்தி காகிதத் துண்டுகளை எழுதிக் கொண்டதாக நினைப்போம். இதன் பின்னர் மாணவர்களிடமிருந்து பெறப்படும் மறுமொழியை மதிப்பீடு செய்தல் வேண்டும். இதனைப் பல்வேறு முறையில் செய்ய முடியும். எவ்வாறு மீட்டலைச் செய்த போதும், குழுக்களை எவ்வாறு பிரிப்பது என்பது பற்றி இதன் மூலம் தெளிவு பெறமுடியும்.

அனுமானம்: இவ்வாறு மாணவரது மதிப்பீட்டினைச் செய்யக்கூடிய ஒரு முறையான, **சமூகமான அட்டவணையினுள்** (Socio-metric Chart) மாணவரது துலங்கல்களை உட்படுத்துக. பின்வரும் முறையில் இத்தகைய அட்டவணையைத் தயாரிக்க முடியும்.

- ஆலோசனை அட்டவணையில் புள்ளியிடும்போது 1ம் தெரிவுக்கு 3 புள்ளிகளும், 2ம் தெரிவுக்கு 2 புள்ளிகளும், 3ம் தெரிவுக்கு 1 புள்ளியும், விருப்பமின்மைக்கு 0ம் இடுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தெரிவு செய்யப் படுபவர். | தெரிபவர் | தர்மன் | மலினி | சுதன் | சன்துஜ் | சிறீதரன் | ஹஸினி | சத்னா | மதி | ரஜிதா | குமுதினி | |
| 1. தர்மன் | | | | | | | | | | | | |
| 2. மலினி | | | | | | | | | | | | |
| 3. சுதன் | | | | | | | | | | | | |
| 4. சன்துஜ் | | | | | | | | | | | | |
| 5. சிறீதரன் | | | | | | | | | | | | |
| 6. ஹஸினி | | | | | | | | | | | | |
| 7. சத்னா | | | | | | | | | | | | |
| 8. மதி | | | | | | | | | | | | |
| 9. ரஜிதா | | | | | | | | | | | | |
| 10. குமுதினி | | | | | | | | | | | | |
| 11. | | | | | | | | | | | | |
| 12. | | | | | | | | | | | | |

இவ்வட்டவணையை கீழ்வரும் முறையில் பூர்த்தி செய்ய முடியும். இங்கு 4ம் இலக்கமுடைய மாணவன் தர்மனின் தெரிவு பின்வருமாறு எனக் கருதுவோம்.

தர்மன்

விருப்பம்.

1. சிறிதரன்
2. மலினி
3. சிறீதரன்

விருப்பின்மை


குமுதினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தா்மனது இப்பிரதிபலிப்பு இக்குறிப்பிட்ட அட்டவணையில் உட்படுத்தும் போது அட்டவணையில் உள்ள ஆலோசனைப்படி புள்ளியிட்டுள்ள முறையைக் கவனிக்க. இவ்வாறு வகுப்பில் உள்ள எல்லாப் பிள்ளை களினதும் விருப்பு அட்டவணையில் குறிப்பிட்டு இறுதியாக ஒவ்வொரு மாணவரதும் புள்ளிகளின் மொத்தத் தொகையைக் கணிக்க முடியும். அதன் மூலம் வகுப்பறையில் பிரபலமான மாணவர் யார் என்பதை உடனடியாக விளங்கிக் கொள்ள முடியும். அதே போன்று குழு வேண்டும் என்பது பற்றியும் மாணவர் எக்குழுவில் இடம் பெற வேண்டும் என்பது பற்றியும் தெளிவாகும்.

சமூகமான பரீட்சையில் மாணவரது விருப்பு மதிப்பீட்டினைச் செய்யக்கூடிய இன்னுமொரு முறை வரைபட மூலம் விளக்குவ தாகும். கீழே கொடுக்கப்பட்டுள்ளது அத்தகைய சமூகமான வரைபட மாகும்.




தொழிற்பாடு 4

1. உங்கள் வகுப்பு மாணவர்களுக்காக இத்தகைய சமூகமான பரீட்சை ஒன்றை நடத்துக.

2. இவ்வடிப்படையில் பெறும் முடிவுகளை அடிப்படையாகக் கொ ண்டு மேலே உள்ளது போல் அட்டவணை தயாரிக்குக.

3. அதனடிப்படையில் நீங்கள் பெறும் முடிவு யாது?

## 4.9 சமூகமான வரைப்படப் பகுப்பாய்வு

இவ்வரைபடத்தில் எல்லா வட்டங்களிலும் மாணவர்களே குறிப்பிடப்படு கின்றனர். ஒவ்வொரு மாணவருக்கும் 1-20 வரை இலக்கங்கள் கொடுக் கப்பட்டுள்ளன. அதனால் ஆசிரியரைத் தவிர வேறு எவரும் அம்மாண வரை இனம் காணமுடியாது. வட்டத்தினுள் ஓரத்தில் மாணவர் தெரிவு காட்டப்பட்டுள்ளது. அட்டவணை போன்று இங்கு புள்ளிகள் வழங்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படவில்லை. மாணவர்கள் நேரடியாகத் தெரிவு செய்த நிலைகள் 1, 2, 3 எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. சமனான அம்புக் குறிகளால் காட்டப்பட்டுள்ளவை அன்னியோன்யமான தெரிவுகளாகும். பிரபல்யமான மாணவர்களை அளவீடு செய்வதற்காக வரையப்பட்டுள்ளதால் அதிகமாக 1ம் 2ம் தெரிவுக்குட்பட்டவர்களது வட்டங்கள் பெரிதாக வரையப்பட்டுள்ளன. இங்கு 10 ஆம் இலக்க மாணவன் பெரும்பாலோரது தெரிவுக்கு உட்பட்டிருப்பதோடு 1ம் 2ம் தெரிவுகளைப் பெற்ற பிரபலமான

மாணவராக இருப்பதை ஒரே தடவையில் கூறலாம். இல. 5 பலரால் தெரிவு செய்யப்பட்டு இருப்பினும் இம்மாணவன் 2ம் இடத்தையே பெற்றிருக்கிறான். முறிகோடுகளால் காட்டப்படுவது மாணவிகளையாகும். எந்த மாணவனும் தனது குழுவுக்கு மாணவி ஒருத்தியைத் தெரிவு செய்யாதிருப்பது இக்குழுக்களிடை நல்லுறவு நிலவாமையையே காட்டுகிறது. எனினும் 18ம் 19ம் இலக்க மாணவிகள் மாத்திரம் மாணவர்களைத் தெரிவு செய்துள்ளனர். 05, 10, 15ம் இலக்க மாணவரிடையே அன்னியோன்ய உறவுகள் உள. ஓரளவு மூலையில் இருக்கும் 13ம் இலக்க மாணவன் பிரபலமான 10ம் இலக்க மாணவனது நண்பன். 18, 19, 20ம் இலக்க மாணவியரது குழுவில் 17ம் இலக்கம் ஒதுங்கியுள்ளது. 5ம் 10ம் இலக்கங்கள் இக்குழுவில் நட்சத்திரங்கள். 11, 12ம் இலக்கம் ஒதுக்கப்பட்ட மாணவர்களாவர் அல்லது தனிமைப்படுத்தப்பட்டவர்களாவர்.

இவ்வாறு சமூகமான வரைபடத்தின் மூலம் குழு உறவுகளின் அன்னியோன்யத் தெரிவு, தனியாளைச் சுற்றித் தெரிவு நடைபெறும் முறை, தான் அடுத்தவரை விரும்பிய போதும் தன்னை எவரும் விரும்பாததன்மை முதலிய பல்வேறு விவரங்களை விசேடமாக இரகசியமான விபரங்கள் பலவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும்.

தொழிற்பாடு 05.

1. உங்களால் முன்னர் செய்யப்பட்ட சமூகமான பரீட்சை முடிவுகளை இவ்வாறு வரைபடத்தில் வரைக.

2. வரைபடத்தில் சமூக நட்சத்திரம், தனிமைப்படுத்தப்பட்டவர் அன்னியோன்ய உறவுகள் உள்ளோர், குழு முதலாம் அம்சங்களைக் குறிப்பிடுக.

சமூகமான பரீட்சைகளின் முக்கிய குறைகளில் ஒன்று மிகச்சரியான விடையை வழங்குவதில் உள்ள சிரமமாகும். என்றாலும் இம்முறை மூலம் மாணவரது மறுமொழிகளை இரகசியமாகப் பெறமுடியும். பகிரங்கமாக விருப்பத்தினைக் கேட்பதன் மூலம் சரியான அபிப்பிராயத்தைப் பெறமுடியாது. எனினும் மாணவரது விருப்பங்களை இரகசியமாகப் பெற்று, ஆசிரியர் விபரங்களை சேகரித்துக் கொள்வதன் மூலம் மிகப் பிழையற்ற பயன்படக்கூடிய தகவல்களைப் பெறமுடியும். ஆசிரியரால் இரகசியமாக இவ்வாறு பெறப்படும் விவரங்களின் இரகசியத்தன்மை சம்பந்தமாக அவர் பொறுப்பேற்க வேண்டும். சமூகமான பரீட்சையின் மூலம் மிகப்பயனுள்ள பலாபலனை உடனடியாகக் கிடைத்த முடிவின் அடிப்படையில் செயல்பட வேண்டும்.

சமூகமான வரைபடம் ஒன்றை முதன் முதல் அமைத்தல் கடினமாகும். அவ்வாறு கடினமாவது தேர்வுக்கோடுகள்அல்லது அம்புக் குறிகள் நேராக நிற்குமாறு வட்டத்தை நிலைப்படுத்தலாகும். மாணவரது தொகை அதிகரிக்கும் போது இது மேலும் கடினமாகும். சமூகமான அட்டவணை ஒன்றைத் தயாரித்தல் அதனை விட இலகுவாகும். எனினும் அதன் மூலம் விளங்கக் கூடியது, மாணவர் உறவு சம்பந்தமான மாதிரிகள் சிலவற்றை மாத்திரமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.10 சமூகமான பரீட்சை முடிவுகளைப் பயன்படுத்தும் போது கவனிக்க வேண்டியவை.

சமூகமான பரீட்சைகள் மூலம் கிடைக்கும் முடிவுகள் சில சமயம் ஆச்சரியமானதாயமையும். ஆசிரியர் எக்காரணம் கொண்டும் தலைமைத்துவத்துக்குப் பொருத்தமானவர் எனக் கருதாத ஒரு பிள்ளை, சில சமயம் பிரபலமான தலைவராக காட்டப்படலாம். வெளிப்படையாகத் தென்படும் தலைவர் உண்மையில் மாணவரால் அங்கீகரிக்கப்படாத தனியாளாக இருக்க முடியும். மாணவரது இத் தெரிவு எவ்வளவு தூரம் நம்பக் கூடியது என்பது பிரச்சினைக்கு உரியதாகும். ஒரு வாரத்தில் அவர்கள் தெரிவு செய்த குழு அடுத்த வாரத்தில் வேறுபடலாம். அதே போன்று ஒரு காரியத்துக்காக உருவான குழு இன்னொரு காரியத்துக்கு வேறுபடலாம்.

சமூகமான அளவீடு ஆசிரியர் ஒருவருக்குப் பெருமளவு உதவுவது குழுச் செயற்பாடுகளுக்காகும். பயனுள்ள மனித உறவு எவ்வளவு செயற்பாட்டுத் திறனுடையது என்பதை அளவிடவும் சமூகக் கட்டமைப்பினுள், மிக ஆழமான மாறுதல் நடைபெறும் முறையை விளங்கிக் கொள்வதற்கும் இவ்விவரங்கள் பயனள்ளவை. மாணவரது சமூக விருப்பினடிப்படையான உறவினைப் பாதிக்கும்பல்வேறு காரணிகளை விளங்கிக் கொள்வதற்கும் பிள்ளைகள் சில சமயம் பல ஆண்டுகள் செலவிட நேரிடலாம். புதிய ஆசிரியர் ஒருவருக்கு இத்தகைய விருப்பு மாற்றத்தை ஒரே முறையில் விளங்கக் கொள்வது கடினம்.

வகுப்பறைக் குழுக்களுள் உள்ள உண்மையான தலைவர்களை அறிந்து கொள்ளுதல் ஆசிரியருக்கு அதிக பயன் உடையது. அதன் மூலம் வகுப்பறையில் மாத்திரமன்றி பாடசாலையில் இடம்பெறும் ஏதாவது ஒழுங்கற்ற தன்மை அடக்கமின்மை, ஒழுங்குப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். அதே போன்று அத்தலைவர்களை ஒழுங்கான முறையில் பயிற்றுவித்து தமது எதிர்பார்ப்பினை நிறைவு செய்ய மாணவரது பங்களிப்பினையும் பெறமுடியும். பெரும்பாலும் உண்மைத் தலைமைத்துவம் உள்ள மாணவருக்குப் பாடசாலையில் தலைமைத்துவத்துக்குச் சந்தர்ப்பம் கிடையாத இடத்து, சில சமயம் பிழையான வழிகளில் செல்ல நேரிடலாம். இன்றேல் தமது சக்தியை உணர முடியாது போகலாம். ஏனைய மாணவர் மூலம் அவர்கள் அழிவுப் பாதையில் செல்வதற்கும் இடமுண்டு. எனினும் தமது வகுப்புக்களிலுள்ள உண்மைத் தலைவரை இனம் கண்டு கொள்வது ஆசிரியர் என்ற முறையில் உங்கள் கடமையை இலகுபடுத்தும்.

மேலே காட்டப்பட்ட சமூகமான வரைபடத்தில் உங்களது கவனத்தைச் செலுத்தவும். இருபது பேரில் பெண்பிள்ளைகள் நால்வரும் உளர். மாணவிகள் நால்வரும் வகுப்பில் கற்பதில் வல்லவர்கள். அவர்களில் இருவரைத் தெரிவு செய்துள்ள ஆண்பிள்ளைகள் முன்னொரு போது அவர்களுடன் சேர்ந்து படித்தவர்கள்.

இலக்கம் 10ஐக் கொண்ட பிரபலமான மாணவன் பாடசாலை மாணவர் மன்றத்தில் பங்குபற்றுவதோடு, உண்மையிலேயே தலைமைத்துவ இயல்பு கொண்ட மாணவனாவான்; ஆயினும் மொழிக் குறைபாடும் வெட்கமும் கொண்ட மாணவனாவான். வகுப்புக்குப் பொறுப்பான ஆசிரியரது முடிவு, அம்மாணவனுக்கு அன்பு செலுத்தும் எம்மாணவனும் இல்லை என்பதாகும். எனினும் ஒரு மாணவியும் ஏனைய நான்கு மாணவரும் அவனைத் தெரிவு செய்துள்ளனர். இது அவனது அதிக மௌனமும் வெட்கப்படும் இயல்பும், தனிமையும் காரணமாக அவனைப் பாதுகாப்பதற்கு ஏனைய மாணவர் மூலம் செய்யப்பட்ட நடவடிக்கைகளெனக் கருத முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பரீட்சையை நடாத்த முன்னர் ஆசிரியர் தமது வகுப்பிலுள்ள பிரபலமான மாணவராக தெரிவு செய்து இருந்தது இலக்கம் 12 ஆகும். எனினும் எவரதும் விருப்பைப் பெறாத இம்மாணவன் தனிமைப்படுத்தப்பட்ட மாணவனாவான். (மாணவர்களால் காட்டப்பட்ட விருப்பமின்மை இவ்வரைபடத்தில் உட்படுத்தப்படவில்லை.) ஆசிரியரது கருத்து தமது வகுப்பிலுள்ள எம்மாணவரேனும் எவரதும் விருப்பமின்மைக்கு உட்படவில்லை என்பதாகும். எனினும் இலக்கம் 7 இன்மீது மூவர் தமது வெறுப்பை வெளிப்படுத்திக் காட்டினர். இவ் ஆசிரியர் தமது வகுப்பு சம்பந்தமாக அத்தகைய பிழையான தீர்மானம் எடுத்திருந்தார் என்பதை இதன் மூலம் அறியமுடியும். ஆதலால் அவர் வகுப்புக் குழுச் செயற்பாட்டை ஒழுங்குபடுத்தும் போது தீவிரமான பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிட்டது.

இவ்வாறு சமூகமான பரீட்சை மூலம் மாணவர் குழு அவர்களது உறவு, விருப்பம் என்பவற்றை இனம் கண்டதன் பின் வகுப்பறைக் கற்றல் அல்லது கற்பித்தல் தொழிற்பாடு மாத்திரமன்றி பாடசாலையின் வெவ்வேறு தொழிற்பாடுகளிலும் இக்குழுக்களின் கூடிய பயனைப் பெறமுடியும். ஒழுங்குப் பிரச்சினைகள் போன்றவற்றை இதனால் தீர்க்கக் கூடிய வாய்ப்புக் கிடைக்கும். ஆதலால் சமூகமான பரீட்சை நடாத்துதல், பகுப்பாய்வு செய்தல் தொடர்பான திறன்கள் இருப்பின் சகல ஆசிரியர்களும் தமது காரியங்களை வெற்றிகரமாகச் செய்ய இயலுமாகும்.

தொழிற்பாடு 06.

1. இவ்வத்தியாயத்தின் ஆரம்பத்தில் உங்களது முன் அறிவு பரீட்சிக்கப்பட்டது.
2. இப்போது அத்தியாயத்தைக் கற்றுள்ளீர்கள். ஆதலால் நீங்கள் முன் அளித்த விடை எவ்வளவு தூரம் பிழையற்றது எனப் பார்க்கவும்.
3. உங்களது விடைகளுள் 10 அல்லது அதற்கு மேற்பட்டவை சரியாயிருப்பின் நீங்கள் உங்களது மாணவர்கள் சம்பந்தமாக சரியான விளக்கம் பெற்றுள்ளீர்கள்.

## 5.0 சாராம்சம்.

1. ஒத்த வயதுக்குழு என்பது சம வயதினர் மத்தியில் உருவாவதுடன் வேறு பல்வேறுபட்ட தேவைகள் அடிப்படையில் ஒழுங்கமைப்புப் பெறும் பிரபலமான சமூகமயமாக்கற் கருவியாகும்.

2. பிள்ளை, கட்டிளமை, இளமை, முதிர்ச்சி ஆகிய பல்வேறு பருவத்தினரிடையே சில குறிப்பிட்ட வேறுபாடுகள் உண்டு.

3. இளமைப் பருவத்தினரின் குழுக்களுக்கும் முதிர் பருவத்தினருக்கும் இடையே சில குறிப்பிட்ட வேறுபாடுகள் உண்டு.

4. தனியாளது சமூகமயமாக்கலில் ஒத்த வயதுக் குழுக்களினால் செயற்படுத்தப்படும் காரியங்கள் பல உள.

5. ஒத்த வயதுக் குழுக்களுக்கும் பாடசாலைகளுக்குமிடையே நெருங்கிய உறவுகளுண்டு.

6. கற்றல் அல்லது கற்பித்தல் செயற்பாட்டில் ஒத்த வயதுக் குழுவினைப் பெருமளவு பயன்படுத்தலாம்.

7. சமவயதுக் குழுவில் இடம் பெறும் இடைத் தொடர்புகளை இனம் காண்பதற்கு சமூகமான முறையினைப் பயன்படுத்த முடியும்.

8. சமூகமான முறையினைத் தெரிந்திருத்தல் பெருமளவிற்கு ஆசிரியருக்குப் பயனுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6.0 பிற்சோதனை

இவ்வத்தியாயத்தைப் படித்ததன் மூலம் நீங்கள் பெற்ற விளக்கத்தை மதிப்பீடு செய்வதற்கு கீழ்வரும் 1–5 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

1. ஒத்த வயதுக்குழு உருவாக்கப்படும்போது பல்வேறு இயல்புகள் தென்படும். அவ்வாறு அமையாத இயல்பு யாது?

   (1) மாணவர் முகாம் ஒன்றில் சமூக இடைத் தொழிற்பாடுகள் ஒழுங்காக அமைதல்.

   (2) மாணவர் சமூகம் ஒன்றில் ஒரே வகையான மதிப்பீட்டு அமைப்பு ஒன்று பின்பற்றப்படுதல்.

   (3) மாணவர் சமூகம் திடீரென்று உருவாதல்.

   (4) மாணவர் சமூகம் ஒன்றில் தொடர்ந்தும் அவதானிப்பு இடம் பெறல்.

2. ஒத்த வயதுக்குழு ஒன்றில் தலைமைத்துவத்தைத் தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணியாவது.

   (1) குழுவின் வயதில் கூடிய உறுப்பினராயிருத்தல்.

   (2) மிகத்திறம்பட அமையும் திறன் உடைய உறுப்பினராதல்.

   (3) உடலமைவில் உயரமும் பருமனும் உள்ள உறுப்பினராயிருத்தல்.

   (4) ஆசிரியரால் நல்லவர் எனத் தீர்மானிக்கப்படும் உறுப்பினர்.

3. பிள்ளை மீது பெருமளவு மனவெழுச்சித் தாக்கத்தை ஏற்படுத்துவது:

   (1) ஒத்த வயதுக் குழு

   (2) குடும்பம்

   (3) பாடசாலை

   (4) ஆசிரியர்.

4. ஆசிரியர் ஒருவர் பின்வருவனவற்றுள் எவ்விடயத்தில் சமூகமான பரீட்சை மூலம் அதிகப் பயனைப் பெறக்கூடியதாயிருக்கும்.

   (1) இளம் வயதினருக்கு உளச்சுதந்திரத்தைப் பெற வழிகாட்டுவது சமவயதுக்குழு மூலமாகும்.

   (2) சமவயதுக் குழுவில் எல்லா உறுப்பினருக்கும் சமூக இயக்க வாய்ப்புக் கிடைக்கும்.

   (3) சமவயதுக் குழு மூலம் மூத்த சமூக அறநெறிகள் மீள்வலியுறுத்தப்படும்.

   (4) ஒத்த வயதுக் குழுவினால் இளம் பருவத்தவரது உலகமும் ι லக் காட்சியும் விரிவடையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7.0 விடைகள்

பிற்சோதனை

1 - 3
2 - 2
3 - 2
4 - 1
5 - 4

## 8.0 ஒப்படைகள்

1. வெற்றிகரமான கற்றல் அல்லது கற்பித்தல் செயற்பாட்டுக்கு ஒத்த வயதுக் குழுவைப் பயன்படுத்தக்கூடிய முறைகளைப் பற்றி தெளிவு படுத்துக.

2. 1. சமூகமான பரீட்சை என்றால் என்ன?

   2. அத்தகைய பரீட்சை ஒன்றினால் ஆசிரியர் அடையும் பயன் என்ன?

   3. வகுப்பறையில் தனிமைப்பட்டிருக்கும் மாணவரை சமூகமயமாக்கலில் நீங்கள் செய்யக்கூடிய செயற்பாடுகளைக் குறிக்க.

## 9.0 கலைச்சொற்றொகுதி

| | | |
|---|---|---|
| குற்றவாளி | - | Delinquent |
| எதிர்பார்ப்பு | | Anticipation |
| மீளவலியுறுத்தல் | - | Reinforcement |
| இனங்காணல் | - | Identification |
| ஆளுமைப்பண்புகள் | - | Personality Traits |
| நியமங்கள் | - | Norms |
| கருக்குடும்பம்(சிறுகுடும்பம்) | - | Nuclear Family |
| மனவெழுச்சித் தாக்கம் | - | Emotional Effect |
| பங்கு | - | Role |
| புலக்காட்சி | - | Perception |
| சமவயதுக்குழு | - | Peer Group |
| திரண்ட/திரட்டிய | - | Cumulative |
| சமூகமயமாக்கல் | - | Socialisation |
| சமூகமயமாக்கற் கருவிகள் | - | Socialisation Agents |
| சமூமானப் பரீட்சை | - | Sociometrict Test |
| சமூக நகர்வு | - | Social Mobility |
| சமூகமான அட்டவணை | - | Sociometric Chart |
| நட்சத்திரங்கள் | - | Stars |
| தனிமைப்படுத்தல் | - | Isolate |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10.0 மேலதிக வாசிப்பிற்குரிய நூல்கள்

1. Kopp, Claire B. & Krakow, Joanne B.,
**The Child, Development in a Social context.**
Addison - Wesley Publishing Company, Inc. 1982, P. 549

2. Havighurst, R.J. & Neugarten, B.L.,
**Society and Education,**
Allyn & Bacon Inc. 1957 P. 108

3. Strayer, F.F., and Strayer, J.
**"An Ethological Analysis of Social agonism and dominance relation among the school children"** Child development, 1976, PP 47, 980 - 989.

4. Brembeck, Cole S., **"Social Foundation of Educaiton,"** John Wiley & sons, Inc., 1971 PP. 140-141.

5. Robert E. Harriott, **"Some Social Determinants of Educational Aspirations"** Harward Educational Review, 33 (2) Spring 1963, PP 157 - 177.

6. Moreno, J.L. **Who Shall Survive?,** Washington D.C. Nervous and Mental Disease Publishing Company 1934.

7. Gramb, J.D. and Carr, J.C., **Modern Methods in Secondary Education,** Holt Rinehart and Winston, USA. 1979, P. 2.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் அத்தியாயம்

# பாடசாலை ஒரு பண்பாட்டு நிறுவனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை ஒரு பண்பாட்டு நிறுவனம்

உள்ளடக்கம் பக்கம்


1.0 அறிமுகம் ........ 50

2.0 விசேட இலக்குகள் ........ 50

3.0 முற் சோதனை........ 50

4.0 பாடசாலை பண்பாட்டுப் பரிவர்த்தனை நிறுவனமாக ....... 50

4.1 பாடசாலைபண்பாட்டு பரிவர்த்தனை நிலையமாக .. 51

4.2 கல்விக் கலைத்திட்டம் ........ 58

4.3 பாடசாலை சமயச் செயற்பாடு ........ 59

5.0 சாராம்சம் ........ 61

6.0 பிற்சோதனை........ 62

7.0 விடைகள் ........ 63

8.0 ஒப்படைகள் ........ 63

9.0 கலைச்சொற்றொகுதி ........ 63

10.0 மேலதிக வாசிப்புக்கான நூல்கள்........ 64


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.0 அறிமுகம்

பாடசாலை சமூகத் தேவைக்காக உருவாக்கப்பட்ட நிறுவனமாதலால் அதன் மூலம் சமூக நிலைப்பாடு உறுதி செய்யப்படல் வேண்டும். சமூக நிலைப்பாடு உறுதி செய்யப்படுவதற்காக அச்சமூகப் பண்பாட்டியல் சிறப்புகளும் விழுமியங்களும் அடுத்த பரம்பரையினருக்கு அளிக்கப்படல் அவசியமாகும். அதற்காகப் பாடசாலை உறவு முறையும் அதற்காகப் பயன்படுத்தப்படும் கருவிகள் சம்பந்தமாகவும் விவரிக்கும் இவ்வத்தியாயத்தில் பாடசாலையைப் பற்றி எழுந்துள்ள கண்டனங்கள் சம்பந்தமாக இங்கு ஆராயப்படுகிறது.

## 2.0 சிறப்பு நோக்கங்கள்

* பாடசாலை பண்பாட்டியல் பரிமாற்றத்தில் முதன் முதலில் சம்பந்தப்படும் நிறுவனம் என இனம் காணல்

* பண்பாட்டியல் பரிமாற்றத்திற்குப் பாடசாலை பயன்படுத்தும் பல்வேறு கருவிகள் பற்றி விளக்குதல்.

* குறித்த கலைத்திட்டத்திற்கு மேலதிகமாக மறைவான கலைத்திட்டம் (Hidden curriculum) ஒன்று பாடசாலை மூலம் செயல்படுத்தப்பட வேண்டுமென விளங்கிக் கொள்ளல்.

* பாடசாலை ஒழிக்கப்பட வேண்டிய நிறுவனமாகும் என எழுப்பப்பட்டுள்ள கண்டனத்தை விமர்சித்தல்.

## 3.0 முற்சோதனை

1. சமூகம், பாடசாலையெனும் நிறுவனத்திலிருந்து பெற எதிர் பார்க்கும் அடிப்படை செயற்பாடுகள் யாவை?

2. அச்செயற்பாடுகளை நிறைவேற்றுதற்கு பாடசாலை பயன்படுத்தும் பல்வேறு கருவிகளைக் குறிப்பிடுக.

3. பாடசாலையில் மறைவான கலைத்திட்டம் செயற்படுவதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா?

4. சமய விடயங்களைச் செயற்படுத்துவதன் மூலம் பாடசாலையில் எதிர்பார்க்கப்படுவதென்ன?

5. பாடசாலையில் செயற்படும் சட்டதிட்டங்கள்,மரபுகள் யாவை எனக் கூறமுடியுமா?

## 4.0 பாடசாலை பண்பாட்டுப் பரிவர்த்தனை நிறுவனமாக

மேலே தொடுக்கப்பட்ட வினாவுக்கான விடயங்களுள் பண்பாட்டியல் பரிமாற்றமும் இடம்பெற்றுள்ளதா எனப் பார்க்கவும். சில சமயங்களில் இக்கருத்தை நீங்கள் தெரிவிப்பதற்காக நீங்கள் பயன்படுத்தும் சொல் மாத்திரம் வேறுபட இடமுண்டு. எவ்வாறாயினும் இவ்விடயத்தை யிட்டு பாடசாலையினால் நிறைவேற்றப்படும் வேறு எதனையும் அடிப்படை விடயமாக உங்களால் குறிப்பிட முடியாதிருக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4-1 பாடசாலை பண்பாட்டுப் பரிவர்த்தனை நிறுவனமாக

பண்பாட்டியல் பரிமாற்றம் செய்யும் நிறுவனமென பாடசாலை யின் செயற்பாட்டை கவனிக்க முன்பு பண்பாடு, கலாசாரம் எனப்படுவது யாது எனச் சிந்திப்போம். எக்கல்விச் செயற்பாட்டிலும் அடிப்படை இலக்காக அமைவது பயனுள்ள அறிவினை இளம் தலைமுறையின ரிடம் கையளிப்பதாகும். அவ்வறிவுப் பொக்கிசம் உலகில் நாம் வாழும் சமூகத்தில் பரம்பரை பரம்பரையாக, தொடர்ச்சியாகச் சேகரித்து வைக்கப்பட்டு அச்சமூகத்திற்கே விசேடமாகக் கையளிக்கப்படுகின்றது. இதனைப் பண்பாடென மிகச் சாதாரணமாகக் கூறமுடியும்.

மெதிவ் ஆர்னால் குறிப்பிடுவது போன்று உயர்ந்ததெனக் கருதும் எல் லாவற்றையும் பண்பாடென ஏற்றுக் கொள்ளலாம். பீ.எச்.பென்டொக் பண்பாடென்பதை இரண்டு அர்த்தமுள்ளதாக விளக்கியுள்ளார். அவ ரது கருத்துப்படி மானிடவியலாளர் அச்சொல்லை அகிலத்துவ வாழ்க் கைக் கோலமெனக் குறிப்பிடுவர். அக்கருத்துப்படி மனிதர்கள் ஒத்து வாழுதல் மாத்திரமன்றி அவர்கள் வேறுபட்டு நிற்கும் தன்மையும் சமூக வாழ்வில் பல்வேறு பழக்கவழக்கங்கள், விழாக்கள், கட்டுப்பாடுகள் என் பனவும் அகிலத்துவ வாழ்க்கைக் கோலத்துள் அடங்குவன. எனவே அது தெரிவு செய்யப்பட்ட முக்கியமான கூறுகளை மாத்திரம் உள்ளடக் காது மனிதனால் கையாளப்படும். சகல பண்பாட்டு செயற்பாடுக ளையும் குறிக்க நேரிடும்.

பென்சொக் அவர்கள் வெளிப்படுத்தும் 2வது கருத்து

தெரிவு செய்து பாதுகாக்கப்பட்டு வந்தவை பண்பாடென இனம் காண முடியும். இவ்வடிப்படையில் மனிதன் உயர்ந்த நாகரிகச் சிறப்பை விருத்தி செய்து கொண்டு வருகையில் உருவாக்கிக் கொண்ட சிந்தனை கள், கருத்துக்கள், நம்பிக்கை, அவனது படைப்பாற்றலால் உருவான மொழி, இலக்கியம், கலைகள் முதலாம் அம்சங்களையும் பண்பாடென அழைக்க முடியும். மனிதனது சிந்தனை உயர் இலட்சியங்களை அடிப் படையாகக் கொண்டு வளர்ந்து ஆழமடைந்ததன் விளைவாக உருவான இவ் அங்கங்கள் யாவும் மனப்பாங்குகளும் நடத்தைக் கோலங்களும் ஒழுங்கமைவதில் விசேடமாகப் பாதிப்பை உண்டுபண்ணுபவை எனக் கருத முடியும்.

அவ்வாறெனில், பண்பாடெனப்படுவதன் கருத்து மனிதன் மிக உன் னதமானதெனக் கருதும் விழுமியங்கள் பலவும் அடங்கிய செய ற்பாடுகள் எனல் பிழையல்ல.

எத்தனியாளாயினும் தான் பிறந்த பண்பாட்டுச் சூழலில் வேறுபட்டு வாழ முடியாது. நீங்கள் வாழும் சமூகத்தில் உறுப்புரிமை பெறுவதற்கு அச்சமூகத்துக்குரிய பண்பாட்டு இயல்பினை நீங்கள் பெறவேண்டும். அவ்வாறின்றேல் நீங்கள் அச்சமூகத்திற்குப் பொருத்தமற்றவராக ஆவது நிச்சயம். இவ்வாறு சமூகம் ஏற்றுக்கொண்ட இலட்சியம், விழுமியங்கள் உயர் பண்புகள் இளைய தலைமுறையினருக்கு வழங்கப்படுதல் சமூக மயமாக்கல் என இனம் காணப்படுவதாக நீங்கள் முதலாம் அத்தி யாயத்தில் கற்றிருப்பீர்கள்.

சமூகமயமாக்கலை குறிப்பிட்ட நிறுவனத்துக்கோ அல்லது விசேட வயது எல்லைக்கோ வரையறைப்படுத்த முடியாது. அதே வேளை அச்சமூக மயமாக்கல் ஒருவரது வாழ்நாள் முழுவதும் காணப்படும் தொழிற்பாடு ஆகும். சமூகத்தில் மாறுதல் ஏற்படும் போது, அவ்வச் சமூகங்கள் உயர் வாகக் கருதும் விழுமியங்களையும், நியமங்களையும் வாழ்நாள் முழுவதும் அச்சமூக உறுப்பினர் மதிகக நேரிடும். சமூகமயமாக்கலுக்கு உதவும் அல்லது அதற்குப் பாதிப்பினை ஏற்படுத்தும் பிரதான கருவி களாக அமைவது வீடு, பாடசாலை, சமய கூட்டுறவு, பொதுசனத் தொடர்பு சாதனம் முதலானவையாகும். அவற்றுள் பாடசாலைக்கு ஐயத் துக்கு இடமின்றி மிக முக்கிய இடம் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை கலாசாரப் பாரம்பரியங்களை இளைய பரம்பரையினருக்கு விசேடமாக வழங்கும் நிறுவனமாகும். சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப் பட்ட விழுமியங்கள் நியமங்கள், சம்பிரதாய பூர்வமாக இருந்து வரும் சிறப்பம்சங்கள் முதலியன சம்பந்தமாகத் தெளிவான விளக்கத்தை அளித்தல் அவ்வடிப்படையில் வழிநடாத்தி நடத்தையை உருவாக்குதல் பாடசாலை மூலமே நடைபெறும். பாடசாலையின் தொழிற்பாடு சம்பந்த மாகக் கருத்துத் தெரிவிக்கும் "பிகரின்" பாடசாலை மூலமாக எல்லாக் குடிமகனுக்கும் தேவையான அறிவு, மனப்பாங்குகள், திறன்கள் வழங் கப்பட வேண்டும் என்றும், நோக்கங்களை உருவாக்கும் வழிகள் பற்றி யும், இறுதி நோக்கம் பற்றியும் அடிப்படை விளக்கமளிக்கப்பட வேண் டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். அதனால் பாடசாலை ஒரு நிறுவனம் என்பதனை விட சமூகக் கூட்டுறவு அமைப்பெனில் மிகப்பொருந்தும். சமூகம் இளைய தலைமுறையினருக்கு பண்பாட்டியல் பரிமாற்றம் செய் யும் முயற்சியில் பரந்த இலக்குத் தொகுதிகளை வழங்குவதற்குப் பாட சாலை மூலம் முயற்சிக்கப்படுகிறது என்பது தெளிவாகும். அச்சமயம் அச்சமூகத்தில் நிலவும் எதிர்பார்ப்புக்கள் சிந்தனைகள்,செயல்கள், கருத் துக்கள், நம்பிக்கைகள் மாத்திரமன்றி, அவற்றின் உண்மைகள் எடுத்துக் காட்டுக்கள் சிறப்புக்கள் சம்பந்தமாக விமர்சன நோக்கில் ஞானத்தைத் தெளிவு பெறச் செய்தல் அல்லது அதிகரிக்கச் செய்தல் எதிர்பார்க் கப்படுகிறது. அவ்வாறின்றேல் பண்பாட்டியல் பரிமாற்றம் செய்தல் என்பது அர்த்தமற்றதாகிவிடும்.

தொழிற்பாடுகள் 01

1. உங்கள் பாடசாலைச் சூழலில் தற்போது நிலவும் பண்பாட்டியல் அம்சங்களுக்கு உதாரணங்களைத் தேடிப் பெறுக.

   (1) பழக்க வழக்கம்
   (2) நம்பிக்கை
   (3) வழிபாடுகள்
   (4) சம்பிரதாயம்

2. பண்பாட்டியல் சிறப்புக்கள் சம்பந்தமாக இலங்கைப் பாடசாலைக் கலைத்திட்டம் வெளிப்படுத்துவனவற்றைத் தேடிப்பெறுக.

3. நீங்கள் கற்பிக்கும் பாடங்கள் மூலம் பண்பாடு சம்பந்தமாக சிறப் புக்களை வெளிப்படுத்தக் கூடிய சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.

உங்கள் கவனத்தை மீண்டும் முற்சோதனையின் போது வினவப்பட்ட இரண்டாம் வினாவுடன் தொடர்பு படுத்துக. பண்பாட்டியல் பரிமாற்றத் துக்கான செயற்பாட்டுக்கு பாடசாலை பயன்படுத்தும் கருவிகளுள் பாடசாலைக் **கலைத்திட்டமும்** ஒன்று என நீங்கள் இனம் கண்டீர் களா? **பாடசாலைக் கலைத்திட்டம்** என்பதில் அடங்குவன யாவை எனத் தேடிப் பார்ப்போம். பீ.எச்.டெலர் விடய உள்ளடக்கம், கற்பித் தல் முறை, எதிர்பார்ப்புக்கள் என்பவற்றைக் கலைத்திட்டத்துள் அடக் கினார். **ஜோன் எப். கர்** இக்கருத்தை மேலும் விரிவு படுத்தி பாட சாலை மூலம் மாணவருக்கு ஒழுங்குபடுத்தி வழங்கப்படும் எல்லாக் கற்பித்தலையும், வழங்கப்படும் அனுபவங்களையும் கலைத்திட்டத்தில் உள்ளடக்கினார். அக்கற்பித்தல் அனுபவம் பாடசாலையிலோ, பாடசா லைக்கு வெளியிலோ, தனியாகவோ, குழுக்கள் மூலமாகவோ வழங் கப்பட முடியும் என்பது அவர் கருத்து. "வோர்விக்" என்பார் பாடசாலைக் கலைத்திட்டம் என்பது **மாணவரது உளவியல் தேவை கள் இடம்பெறும் பண்பாட்டியல் விருத்தி வளத்துக்கு ஏற்ப பாடசாலையில் வழங்கப்படும் கல்வித் தொழிற்பாடுகள் என விளக்கினார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கருத்துக்கள் யாவற்றையும் சுருக்கமாகக் கூறுவதாயின் பாடசாலைக் கலைத்திட்டம் சம்பந்தமாக பின்வரும் முடிவிற்கு வரமுடியும். அதாவது கலைத்திட்டத்தின் உறுதியான நோக்கம், அபிலாசைக்காக கற்றலுக்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தும் திட்டமிட்ட ஒழுங்குகள் என இனம் காணலாம். மேலே விளக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் கலைத் திட்டம் என்பது பல்வேறு பாடவிடயங்களைத் தொகுப்பாக மாத்திரமன்றி நோக்கங்கள், பாடவிடயங்கள், கற்பித்தல் முறை, உபகரணங்கள், பாட நூல்கள் ஆகிய எல்லாவற்றையும் உள்ளடக்கியதாக உள்ளது என்பது உங்களுக்குத் தெளிவாகும்.

பாடசாலை பண்பாட்டியல் பரிமாற்றத்துக்கான கருவியாக கலைத் திட்டம் செயற்பட்டபோதிலும் அதில் பெரும்பாலும் பாடசாலைக்கு மிக அருகிலுள்ள சமூகத்துக்குத் தேவையான விடயங்கள் இருப்பதில்லை. இது தொடர்பாகச் செல்வாக்குச் செலுத்தும் முக்கிய காரணிகளைக் கவனத்திற் கொள்ள முடியும். கலைத்திட்டத்தை உருவாக்குவதிலும் விருத்தி செயவதிலும் மாற்றம் ஏற்படுத்துவதிலும் செல்வாக்குச் செலுத்தும் அவ்வம்சங்களாவன:

கலாசாரம், பொருளியல், தத்துவவியல் அல்லது அரசியல் செல்வாக்கு ஆதியன ஆதிக்கம் செலுத்துவதை அனுபவ வாயிலாகக் கண்டு கொள்ள முடியும். ஒருபுறம் இவ்வாறு சமூகத் தாக்கம் செல்வாக்குச் செலுத்துமிடத்து, தனியாள் விருத்தியை ஏற்படுத்துவதிலும் கலைத்திட்டத்தினை உருவாக்குவோர் கவனம் செலுத்த வேண்டும். அதுமாத்திரமன்றி தனியாள் ஒருவன் பெற்றுக் கொள்ள வேண்டிய கற்றல் அனுபவ இயல்புகளையும், அதற்காகப் பாடசாலைகளில் உள்ள வளங்கள் முதலானவை பற்றிக் கருத்து செலுத்த வேண்டி ஏற்படும். இங்கு பின்னர் குறிப்பிட்ட விடயம் 2ம் இடம் பெறும் அளவிற்கு, சமூகத் தாக்கத்தினால் பாடசாலைக் கலைத்திட்டத்துக்கு ஏற்படுத்தப்படும் செல்வாக்கு அதிகமாகும். சமூகத் தொழிற்பாடு எப்போதும் மாற்றமுறும் தன்மைக்குரியது. சமூகத்தில் ஏற்கனவே நிலவும் சிறந்த மரபுகள் அழிந்து போகாது மாறும் சமூக நிலைக்கேற்ப ஈடுகொடுக்கும் திறன்களையுடைய தனியாட்களை உருவாக்குவதற்கான பாடசாலைக் கலைத்திட்டத்தை உருவாக்க நேரிடும். ஓர் இயக்கமுறும் சமூகத்தில் கலைத்திட்டத்தை உருவாக்குவோர் கவனம் செலுத்த வேண்டியவை பற்றி கருத்துத் தெரிவிக்கும் வில்லியம் ரேகன் என்பார், கலைத்திட்ட ஒழுங்கமைப்பு விரைவாக மாறும் சூழ்நிலைக்கும் தேவைக்கும் பொருத்தமான முறையில் தொடர்ச்சியாகச் செயல்படுத்தப்பட வேண்டும் என்றும் பாடசாலைகளில் கற்பிக்கப்படுவனவும் சமூகத்தில் நிகழ்வனவற்றுக்குமிடையே தொடர்பு இருக்க வேண்டும் என்றும் கருத்து வெளியிட்டுள்ளார். அதன்படி சமூக முன்னேற்றத்தோடு கலைத்திட்ட அபிவிருத்தியும் மாற்றமுற்று தற்போதைய நிலையை அடைந்துள்ளது. சமூக தாக்கத்துக்குப் பொருத்தமுற கலைத்திட்டத்தில் ஏற்படுத்தப்படும் மாற்றம் இலங்கையைப் போன்றே ஏனைய நாடுகளிலும் எடுத்துக்காட்டுக்கள் மூலம் தெளிவுபடுத்த முடியும்.

சோவியத் ரஷ்யாவிலும் ஒக்டோபர் புரட்சிக்குப் பின்னர் அந்நாட்டின் நவீன சமூக அமைப்புக்கு பொருத்தமான முறையில் பாடசாலை அமைப்பும் கலைத்திட்டமும் மாற்றப்பட்டன. கல்வி, மனித, பௌதீக வளங்களை மிகக் கூடுதலாக விருத்தி செய்து, அதன் உச்ச கட்டப் பயனை சமூகத்திலுள்ள எல்லா உறுப்பினர்களுக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கக் கூடிய முறையிலும் ஒழுங்குபடுத்தப்படுகிறது. பொதுக் கலைத்திட்டம் ஒன்றை ஆரம்பக் கல்வி நிலை முதலே செயல்படுத்தும் சோவியத் நாட்டுப் பாடசாலைகளில் ரஷ்ய மொழி, இலக்கியம், கணிதம், வரலாறு, சூழல் கல்வி, புவியியல், இயற்கை விஞ்ஞானம் உட்பட 12 பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. 1960களில் ஆசிய நாடுகளிலும் தேசிய விடுதலை கிடைத்தபின் கலைத் திட்டத்தில் வேகமான மாற்றங்கள் ஏற்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19: 1953ம் ஆண்டுகளில் இந்திய இடைநிலைக் கல்வி ஆணைக்குழு இடை நிலைக் கல்வியின் முக்கிய பாடத்துறைகள் சம்பந்தமாக விளக்க மளித்தது. இதனடிப்படையில் கனிட்ட நிலையில் பொதுக் கலைத்திட்டமும் சிரேட்ட இடைநிலையில் பொதுக் கட்டாய பாடங்களும் தெரிவுப் பாடங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. கட்டாய பாடங்களாக மொழி, சமூகக் கல்வி, அடிப்படைக் கணிதம் என்பனவும் தெரிவுப் பாடங்களாக மனிதப் பண்பியல் விஞ்ஞானம், கைத்தொழில், வர்த்தகம், விவசாயம் ஆகிய பாடங்களும் கற்பிக்கப்படும்.

இலங்கையிலும் 10-11ம் வகுப்பு வரை பொதுக் கலைத்திட்டம் நடைமுறையில் உள்ளது. இக்கலைத்திட்டத்தின் பின்வரும் பாடங்கள் உள்ளதா எனக் கவனியுங்கள்.

* சமயம்
* மொழி
* இரண்டாம் மொழி
* கணிதம்
* விஞ்ஞானம்
* அழகியற் கல்வி
* சுகாதாரமும் உடற்கல்வியும்
* வாழ்க்கைத்திறன்கள்

சிரேஷ்ட இடைநிலையில் மாணவர்களுக்கு கலை விஞ்ஞானம், வர்த்தகம் மனையியல் விஞ்ஞானம் ஆகிய கலைத்திட்டங்களுள் ஒன்றைத் தெரிவு செய்து கற்க வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

கல்வியின் நோக்கம், செயற்பாடு என்பவற்றில் மாற்றம் ஏற்படுத்தும் சமூகக் காரணிகளுள் அரசியல் தாக்கமும் முக்கியமானது.


எந்த நாட்டிலும் நிர்வாக அதிகாரத்தைப் பெற்ற அரசியல் கட்சியின் நோக்கினை பாடசாலைக் கலைத்திட்டம் மூலம் செயற்படுத்த முயற்சிப்பது தவிர்க்க முடியாது நிகழ்வதாகும். இவ்வடிப்படையில் ஜனநாயகக் கொள்கைகளை ஏற்றுக் கொள்ளும் அரசியல் கட்சி நாட்டில் சுதந்திரம், சமத்துவம் என்பவற்றின் மூலமாக எல்லாத் தனியாளது விருத்தி மூலம் சமூக விருத்திக்கும் வழிவகுக்க முடியும். இலங்கையில் 1972இல் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பாதையும், 1981இல் அறிமுகப்படுத்தப்பட்ட கல்வி வெள்ளை அறிக்கையும் மாற்றமுறும் அரசீயல் சூழ்நிலைக்கேற்ப கலைத்திட்டத்தில் மாற்றம் ஏற்படுத்தும் சூழ்நிலைகளுக்கு எடுத்துக் காட்டுகளாகக் கூறலாம்.

1972 வரை நிலவிய கல்வியமைப்பு சமூகத் தேவை, நாட்டின் தேவை என்பவற்றுக்கேற்ப இளைய தலைமுறையினருக்குக் கல்வி வழங்கவில்லை என்றும் சுதந்திரத்தின் பின்னர் தேசிய தேவைக் கேற்ப மனித வலுவின் உச்சப் பயன்பாட்டை தேசிய அபிவிருத்திக்கும் பயன்படுத்துவதன் முலம் பெறக்கூடியதாகக் கல்வியை வழற்குவதற்கே புதிய கல்வித் திட்டம் மறு சீரமைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டதாக "எச்.எம். மொரடுவகம" குறிப்பிட்டுள்ளார். இக்கல்வித் திட்டக் கட்டமைப்பு 1ம் வரைபடத்தில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய கல்வித் திட்டம் - 1972




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்பாடு 02

1. 1981ஆம் ஆண்டு வெள்ளை அறிக்கையைச் செயற்படுத்தும் போது முக்கிய இடம்பெற்ற சமூகத்தாக்கத்தினைஇனம் காண்க.

2. அவ்வெள்ளையறிக்கையில் இடம்பெற்ற கலைத்திட்ட மாற்றம்பற்றிய விவரங்களைத் தொகுத்துக் கூறுக.

3. 1972இன் மாற்றங்களுடன் அது எவ்வாறு வேறுபடுகிறது என ஒப்பிட்டுப் பார்க்க.

கல்வி பயனுள்ள முதலீடாகும். அண்மைக் காலத்தில் கல்வி அமைப்பு காலத்துக்கு ஏற்ற வகையில் முக்கிய பொறுப்புக்களைக் கொண்டுள்ளது. எந்நாட்டிலும் சமூக பொருளாதார, விருத்தி நோக்கம், காணப்படும். அவசியமான சக்தியை உடைய மனித நிபுணத்துவத்தையும், உழைப்பையும் உருவாக்குவதை அபிவிருத்தி அடைந்த நாடுகள் மாத்திரமன்றி அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளும் ஏற்றுக் கொண்டுள்ளன. பொருளியல் வளமூலம் கல்விக்கான முதலீடு இடம் பெறுவதால் கல்வியமைப்பின் ஒரு செயற்பாடாக பொருளாதாரத்தை விருத்தி செய்வதற்கான முயற்சியையும், தொழில் அறிவையும் பெற்றுக் கொடுத்தலைக் கொள்ளலாம். அதேபோன்று கல்வி மூலம் சீராக்கப் பெற்றதும், சமூக நோக்கில் சூழல் பொருத்தப்பாடுடையதுமான தனியாள் ஒருவனை உருவாக்குவதற்கு உழைப்புச் சந்தையில் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய ஒவ்வொரு தனியாளினாலும் எத்தகைய நிபுணத்துவம் எதிர்பார்க்கப்படுகின்றது என்பது ஏற்கனவே திட்டமிடப்பட வேண்டியது அவசியமாகும். "பிலிப்ஸ் கூம்ஸ்" என்பார், கல்விச் செயற்பாடு, உள்ளீட்டு- வெளியீட்டுச் செயற்பாடு எனவும், பொருளாதாரத்துக்கும், கலைத்திட்டத்துக்கும் இடையே தொடர்புண்டெனவும் குறிப்பிட்டுள்ளார்.

இன்று அபிவிருத்தியடைந்த நாடுகளாகக் கருதப்படுபவை பெரிய பிரித்தானியா, சீனா, யப்பான், ரஷ்யா முதலாம் நாடுகள் துரிதமாக முன்னேற்றமடைந்து வருகின்றன. அந்நாடுகளின் கல்வியமைப்புகளும் நாட்டின் தேவைக்கு ஒட்டியதாகச் செயற்பட்டுள்ளன.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளும் கல்வியைப் பொருளாதார அபிவிருத்திக்கான வழிமுறையாகக் கருதுகின்றன. பொருளியல் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கான மனித வளத்தை 'முன்னேற்றமுறச் செய்யும் முதலீடாகவே கல்வியைக் கருத வேண்டுமென இலங்கையின் 1972/76 ஐந்தாண்டுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவின் **கோதாரிக் கமிஷன்** அறிக்கையில் (1964/66) கல்வி தேசிய அபிவிருத்தியின் முக்கிய வழி எனக் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் உணவில் தன்னிறைவு, பொருளியல் அபிவிருத்தியினை ஏற்படுத்தல். முதலியனவும் கல்வியின் பொறுப்பாகும் என ஏற்றுக் கொண்டுள்ளது. இக்கருத்தின் அடிப்படையில் சமகால பொருளாதாரத் தேவைக் கேற்பத் தொழிற்பயிற்சி, தொழில் முன்னிலைக் கல்வி, வாழ்க்கைத் திறன் முதலாம் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படும் கல்விக்கும் செயல்முறைக் கல்விக்கும் முக்கியத்துவம் அளிக்கும் முயற்சிகளை இலங்கையின் கலைத் திட்டத்திலும் காணமுடியும்.

பாடசாலைக் கலைத்திட்ட உருவாக்கத்தில் சமூகத் தாக்கம் அடிப்படையாகச் செல்வாக்குச் செலுத்துவதனையும், அதில் செல்வாக்குச் செலுத்தும் ஏனைய அம்சங்கள் உண்டென்பதனையும் ஏற்கனவே விளங்கிக் கொண்டிருப்பீர்கள். இரண்டாவது முக்கிய அம்சம், **தனியாள் விருத்தியாகும்.** நீண்ட காலமாகக் கல்வி அமைப்பினைத் திட்டமிடுவோரும் கலைத்திட்டத்தை மறுசீரமைப்போரும் ஆரம்பக் கல்வி வசதிகளிலேயே முக்கிய கவனம் செலுத்தினர். இப்போது முற்பருவத்தவரது விருத்தி சம்பந்தமாக புதிய கருத்துக்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன. ஒவ்வொரு வளர்ச்சிப் பருவத்துக்கும் பொருத்தமான பாடசாலைக் கலைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டம் உருவாக்கப்படுவதற்குச் செய்யப்பட்ட முயற்சியும் தனியாள் விருத்திக்கான கொள்கைகளின் தாக்கத்தின் செல்வாக்கை உறுதிப்படுத் தும். பாடசாலை முன்பருவம், ஆரம்பநிலைப்பருவம் ஆகியவற்றுக்கு ஒன்றிணைந்து பாடவிதானம் செயற்படுத்தப்படுவது இவ்வடிப்படையி லாகும். தனியாள் அபிவிருத்தி சம்பந்தமாகப் புதிய கணிப்பீடுகள் உரு வாக்கப்படுகின்றன. மேலும் தனியாள் எவ்வாறு கற்கிறான்? கற்ப தின் இயல்பு எத்தகையது? அதற்கான உள்ளடக்க எல்லைகள் யாவை? முதலாம் அம்சங்கள் சமூகத்தின் அத்தகைய முன்னேற்றத்துடன் நவீன மயப்படுத்தப்படுகின்றன. அத்தகைய நவீனமயப்படுத்தல் கலைத்திட்ட மறுசீரமைப்புக்களில் செயல்படுத்தப்படுவதாக அறிய முடியும்.

தொழிற்பாடு 03

1. தனியாள் ஒருவரிடம் கற்றல் இடம்பெறும் முறைகள் யாவை என் பதை உளவியல் பாடம் மூலம் கண்டறியுங்கள்.

2. இத்தகைய கருத்துக்களில் நவீனமயப்படுத்தல்.. காரணமாக கலைத்தி ட்டத்தில் மாற்றம் நிகழ்ந்த சந்தர்ப்பங்களை இனம் காண்க.

3. ஆரம்ப நிலை, இடைநிலை மட்டங்களுக்குச் செயற்படுத்தப்படும் கலைத்திட்டத்தில் உங்களுக்குப் பொருத்தமான பாடத்தைத் தெரிவு செய்து, அது பிள்ளை அபிவிருத்திக்குப் பொருத்தமானதா அல்லது பொருத்தமற்றதா என்பதை உங்களது பாடசாலை அனுபவத்தின் அடிப்படையில் அலசிப்பார்க்க.

இத்தகைய தாக்கத்துக்குப் பொருத்தமான முறையில் உருவாக்கப்படும் பாடசாலைக் கலைத்திட்டம், சமூகத்துக்குப் பொருத்தமான நோக்கு, ஒருங்கிணைந்த கற்பித்தல் முறை, மதிப்பீட்டு முறைகளால் உருவாக் கப்பட்டது என்பதை முதலில் நீங்கள் தெரிந்து கொண்டீர்கள். இத்த கைய கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் பாடசாலையில் நிறைவேற்றப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படும் அடிப்படை செயற் பாடுகள் இரண்டாகும். அவையாவன.

1. மூத்த பரம்பரையினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அறிவுச் செல்வங் களை இளைய பரம்பரைக்கு வழங்குதல்.

2. சமூக மனப்பாங்குகளையும் வாழ்க்கைத் திறன்களையும் பெற்றுக் கொடுத்தல். அத்தகைய நோக்கங்களை நிறைவேற்றுவதற்குச் செயற் படுத்தப்படும் கல்விக் கலைத் திட்டத்துக்கு மேலதிகமாக ஒவ்வொரு பாடசாலைச் சூழலுக்கும் விசேடமான கலைத்திட்டம் செயல்படுத்தப் படுவதாகப் பலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். உங்கள் பாடசாலைச் சூழல் அடிப்படையில் இத்தகைய கலைத்திட்டம் செயல்படுத்தப்படு கிறதா என விசாரணை செய்யுங்கள். இது சம்பந்தமாகக் கருத்துத் தெரிவிக்கும் "மஸ்குரோவ்" பாடசாலைக் கலைத்திட்டத்தை இரண்டு பிரிவுகளுக்குட்படுத்துகிறார்.அவையாவன :அறநெறிக் கலைத்திட்டம், கல்விக் கலைத்திட்டம் என்பன. இதற்கு மேலதிகமாகப் பாடசாலை யினுள் செயல்படும் மறை கலைத்திட்டம் (Hidden Curriculum) சம்பந்தமாகவும் அவர் கருத்துத் தெரிவித்துள்ளார். பாடசாலை மூல மாக நிறைவேற்றப்பட மறைவான செயற்பாடு ஒன்று சம்பந்தமாக கவனம் செலுத்தும் "**ஜோன் ஹோல்ட்டும்** முதற் கூறப்பட்ட கருத்தை ஏற்றுள்ளார். அவரது கூற்றுப்படி பாடசாலை நிறை வேற்ற எதிர்பார்க்கப்படும் தொழிற்பாடுகள் கீழே கொடுக்கப்பட்டுள தற்கேற்ப உள.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பிள்ளைகளை அளவுக்கு மீறி அடக்கி வைத்தல்.

2. சிறையிலிருத்தல், தவறாது பாடசாலை செல்லச் செய்வதன் மூலம் பாடசாலையினுள் சிறைவாசம் பெறல்.

எவரெட்ரெய்னே இத்தகைய தொழிற்பாடுகளை நான்காக வகைப் படுத்தியுள்ளார்.

* பாதுகாப்புச் சொயற்பாடு
* சமூக பாத்திரத் தெரிவு
* அளவுமீறி அடக்கிவைத்தல்
* அறிவு சார்திறன்-அறிவிசார் கற்றல்

இக்கருத்துகள் மூலம் வெளிப்படுத்தப்படுவது பாடசாலையில் செயற்ப டுத்தப்படும் கல்வித்துறை மற்றும் ஒழுக்கக் கலைத்திட்டத்துடன் மறை கலைத்திட்டமும் தொழிற்படுத்தப்பட முயற்சி மேற்கொள்ளப்படுகின்ற தென்பதாகும். பெரும்பாலும் ஒவ்வொரு பாடசாலைக்கும் சிறப்பாக உள்ள சட்டதிட்டங்கள் அல்லது கோவைகளின் மூலமாகக் கல்வி பெறும் பிள்ளைகள் அநாவசியமாக கட்டுப்பாடு செய்யப்படுகின்றனர். கட்டாயமாகப் பாடசாலை வரச் செய்வதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சி எனும் அடிப்படையில் கலைத்திட்ட அமுலாக்கம் செய்யப்படு வது மறுக்க முடியாத உண்மையாகும்.

## 4.2 கல்விக் கலைத்திட்டம்

சமூக பாதுகாப்பையும், மேம்பாட்டையும் வழங்குவதற்கு உதவும் கல் விக் கலைத்திட்டத்தை உருவாக்கித் தருவோர் ஏற்றுக் கொள்ளப்பட்ட எண்ணக் கருக்களுக்கும் உலகப் பொது நியாயங்களுக்கும் அமையவே அதனை உருவாக்குவதற்கு முயற்சிகள் செய்கின்றனர். பொதுக் கல் விக்கு எத்தகைய கலைத்திட்டம் பொருத்தமானது? இணைபாட விதா னம், சமநிலைக் கலைத்திட்டம் அல்லது செயற்பாட்டுக் கலைத்திட்டம் ஆகியவற்றுள் எக்கலைத்திட்டத்தினால் தேசிய நோக்கங்களை நிறை வேற்ற முடியும்? ஆகிய பிரச்சினைகளுக்கு நிரந்தரமான முடிவு ஒன்று இல்லையெனினும் சாஸ்திரீய (Classical) பாடங்கள், பொருளியல் சமூகத் தேவைகளுக்குப் பொருத்தமற்றதென தற்போது தெளிவாகி வருகிறது. இலங்கையில் ஆரம்ப நிலைக் கல்வி மூலம் எல்லோருக்கும் பொதுவான கலைத்திட்டமும் அந்நிலைக்கு மேல் பாடசாலைத் தரத்துக்கு ஏற்ப தெரிவு செய்வதற்கு ஏற்ற பாடங்களை உள்ளடக்கிய கலைத்திட்டம் ஒன்றினைச் செயற்படுத்துவதாக ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இடைநிலைக் கல்வி நிலையில் தமது திறமையில் ஒன்றையோ பலவற்றையோ தெரிவு செய்வதற்கு வசதியாக அத்துறை யில் எல்லாப் பாடங்களைப் பற்றியும் நியாயமான அறிவு வழங்குவ தோடு அத்தகைய அறிவு நாளாந்த வாழ்வின் பிரச்சினைகளைத் தீர்ப்ப தற்கு உபயோகிக்கும் முறைகள் சம்பந்தமாக அனுபவ அறிவினைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. தொழில் முன்னிலைப் பாடம் அல்லது வாழ்க்கைத் திறன், தொழில் நுட்பம் அழகியல் முத லிய பாடங்கள் பாடசாலை மட்டத்தில் தெரிவு செய்யப்படவேண்டிய பாடங்களாதலால், அதிபர் ஆசிரியர் குழு, பெற்றோர் இது சம்பந்த மாகத் தீர்மானம் மேற்கொள்ளும் போது ஏதாவது தாக்கத்தை ஏற்படுத்த முடியுமாயினும் சமூக வேறுபாடுகளைக் குறைப்பதற்கான மார்க்கமாக அது தென்படவில்லை. பிரபலமான பாடசாலைகள் இப்பாடங்களை மக்கள் கவனத்தை ஈர்க்கும் உபாயமாகப் பயன்படுத்துகின்றன. கணனி வியல், மோட்டார் இயந்திரவியல், ரேடியோ தொழில்நுட்பம் முதலாம் பாடங்கள் கற்பதற்காக ஒழுங்குகள் செய்யப்பட்டிருப்பதிலிருந்து இத னைப் புரிந்து கொள்ள முடியும். இத்தகைய பாடங்கள் போட்டிகள் நிறைந்து காணப்படும் உலகில் அதிக கவர்ச்சியை உடைய பாடங் களாக இருப்பதால் பெருந்தொகையான மாணவர்களை அப்பாடசாலை களில் வைத்திருப்பதற்கு அடிப்படைக் காரணமாக உள்ளன. எனினும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமப்புறங்களிலுள்ள பாடசாலைகளில் பொருளாதாரப் போட்டி நிலவும் உலகில் பெறுமதி வாய்ந்த இப்பாடங்களுக்குப் பதிலாக விவசாயம், நெசவு முதலிய பாடங்களைக் கற்பதற்கு வாய்ப்புக் கிடைக்கிறது. எனவே தொழில் அடிப்படையில் அவர்கள் முன்னேறு வதற்கான வாய்ப்பு குன்றுகிறது.

இப்பாடங்கள் பாடசாலைகளில் மாணவர்களைத் தொடர்ந்தும் வைத்தி ருப்பதற்கு உதவி உள்ளன. எனினும் கிராமப்பாடசாலைகளில் கற்கும் மாணவர்களுக்கு இத்தகைய போட்டிப் பொருளாதாரத்துக்கு ஏற்ற பாடங்களுக்குப் பதிலாக விவசாயம், நெசவு முதலிய பாடங்களையே கற்க நேரிடுவதால் அவர்களுக்குத் தொழிலடிப்படையில் முன்னேறுவ தற்கான வாய்ப்பு கிடைப்பதில்லை.

பெருமளவு ஒழுக்க விழுமியங்களும் சாஸ்திரிய அதாவது கல்விக் கலைத் திட்டத்தில் உள்ளடக்கியுள்ளது. ஓர் எடுத்துக் காட்டாக இலங் கையில் சமூகக் கல்வியுடன், சனத்தொகைக் கல்வியையும் அறிமுகப்ப டுத்துவதன் மூலம் சனத்தொகைக் கட்டுப்பாட்டின் அவசியத்தை. சிறு பருவ முதலே பிள்ளைகளின் சிந்தனையில் இடுவதற்கு முயற்சி மேற் கொள்ளப்படுகின்றது. இலங்கையின் புராதன இராசதானிகள் அங்கு ஆட்சி செய்த பிரபலமான அரசர்கள் அவர்கள் நாடு, மக்கள், சமயங்க ளுக்குச் செய்த சேவைகள் என்பவற்றைத் தெளிவு படுத்தும் சமூகக் கல்விப் பாடமூலம் தேசிய கலாசார பாரம்பரியம் பற்றி மாணவர்கள் மத்தியில் பொருத்தமான அறிவினை வளர்ப்பதற்கு முயற்சிக்கப்படு கிறது. கல்விக் கலைத்திட்டம் பெருமளவு நிரந்தரத் தன்மையுடையது. எனினும் அதனைச் செயல்படுத்தும் பாடசாலைச் சூழல் ஆசிரியர் சமு தாயம் முதலாம் அம்சங்களின் தாக்கத்தினால் இதற்கு மேலதிகமான அம்சங்கள் சேர்க்கப்படவோ அல்லது நீக்கப்படவோ சந்தர்ப்பம் ஏற்பட லாம் என்பதை மறுக்க முடியாது.

### தொழிற்பாடு 04

1. உங்களுக்கு விருப்பமான வகுப்புக்கு சமூகக் கல்விப் பாடப் புத்த கம் ஒன்றைத் தெரிவு செய்யுங்கள்.

2. அப்புத்தகத்தில் அடங்கியுள்ள பாடத்தொகுதி அடிப்படையில் கலா சாரப் பாரம்பரியங்கள் சம்பந்தமாகப் பயனுள்ள அறிவினை மாண வரிடம் வளர்ப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பற்றி விசா ரணை செய்து அது சம்பந்தமாக அறிக்கை ஒன்றைத் தயாரிக்க.

## 4.3 பாடசாலைச் சமயச் செயற்பாடு

### இணக்கம், சம்பிரதாயங்கள்

இப்பிரிவில் **ஒழுக்கக் கலைத்திட்டம்** ஒன்று அறிமுகம் செய்ய முடி யும். பாடசாலை, கலாசார விழுமியங்களைப் பேணிப் பாதுகாக்கும் நிறுவனமாகக் கருதப்படுவதாயினும் சமூகத்தில் பின்பற்றுவதற்கு சந்தர்ப் பம் கிடைப்பது அரிது. எல்லாச் சமூகங்களிலும் சமயமும் கலாச்சார மும் இணைந்ததாகவே வளர்ச்சி அடைகின்றன. எந்தச் சமூகத்திலும் சமயமின்றிக் கலாசாரமும், கலாசாரமின்றிச் சமயமும் பொருந்தக் கூடிய முறையில் கற்பிக்க முடியாதெனக் **கலாநிதி ஹென்றி வீரசிங்க** அவர்கள் தனது கல்விச் சிந்தனையின் மூலம் தெளிவு படுத் தியுள்ளார். சமய ஒழுக்கம் ஒரு விசேட பாடத்தின் மூலம் பிள்ளைக ளுக்கு அறிமுகப்படுத்தப்படுகிறது என்பது உங்களுக்குத் தெரியும். இதற்கு மேலதிகமாகப் பாடசாலையில் இடம்பெறும் எத்தகைய செயல் பாட்டினால் அது மீண்டும் மீண்டும் பயிற்றுவிக்கப்படுகிறது என்பதை விசாரித்துப் பாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையிலும், மாலையிலும் பாடசாலை ஆரம்பிக்கும் போதும் முடிவடையும் போதும் விசேட சமயச் சார்பான செயற்பாடுகள் இடம்பெறும். சில தனிப்பட்ட பாடசாலைகளில் அனுமதிக்கப்படுவோர் அப்பாடசாலைச் சமயத்துக்கு இணக்கமான சமயச் சார்புடைய பெற்றோரது பிள்ளைகள் மாத்திரமே. வேறு சில சமயங்களைச் சேர்ந்தோர் சிறு தொகையினர் இப்பாடசாலைகளில் சேர்க்கப்பட்டாலும் அவர்களது சமயத்தைப் பின்பற்றுவதில் இப்பாடசாலைகளில் பெரும் கட்டுப்பாடுகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. அவ்வாறு நடைபெற்றாலும் எல்லாப் பாடசாலைகளிலும் இடம்பெறும் சமயம் தொடர்பான செயற்பாடுகளில் ஒழுக்க முறையொன்று இருப்பதனைக் காணமுடியும். அதே போன்று மூத்தோரை மதித்தல், தீயபழக்க நீக்கம், பொய் சொல்லாமை முதலானவையும் சமயங்கள் மூலம் மதிக்கப்படும் ஒழுக்கங்களும் பாடசாலையில் இடம்பெறும் பல்வேறு சம்பிரதாயங்களுள் ஏற்றுக்கொள்ளப்பட்டு செயற்படுத்தப்பட முயற்சிக்கப்படுகின்றன.

பாடசாலை சமூகத்தினுள் இயங்கும் ஒரு சிறு அங்கமாகும். அது தொடர்ந்து செயல்படுவது, அதனுள், வளர்க்கப்பட்டுள்ள இணக்கம் சம்பிரதாயம் என்பவற்றின் மூலமாகும். பாடசாலைகளின் தனித்துவத்தைப் பேணும் பாடசாலைக் கீதம், இலச்சினைகள், கழுத்துப்பட்டி, சீருடை முதலானவை அதன் உப கலாசாரத்தைப் பாதுகாப்பதற்கு அவசியமான முக்கிய அம்சமாகக் கருதப்படுகின்றது. இச்சமூகத்தினுள்ள சமூக உறுப்பினர் வயது ஒழுங்கு அடிப்படையில் குழுக்களாகத் தரங்களாகப் பிரிக்கப்பட்டு வேறுபடுத்தப்பட்டுள்ளனர். சில பாடசாலைகளில் அமைந்து காணப்படும் கட்டமைப்புக்கள் மூலம் திறமை அடிப்படையில் அவர்கள் குழுக்களாகப் பிரிக்கப்பட்டிருப்பதையும் காணமுடியும். இத்தகைய அடிப்படையில் திறமை, திறமையின்மை எனும் அடிப்படையில் மாணவர்கள் தமக்கு வழங்கப்படும் பெயர்ச்சுட்டி அடிப்படையில் தமக்குச் சொந்தமான வகுப்பைத் தெரிவு செய்வர். கல்வியில் திறமை க்ாட்டும் மாணவர் மாத்திரமன்றி ஏனைய துறைகளில் திறமை காட்டும் மாணவர்கள் தமக்கு வழங்கப்படும் பெயர்ச்சுட்டி அடிப்படையில் தமக்குச் சொந்தமான வகுப்பைத் தெரிவு செய்வர். கல்வியில் திறமை காட்டும் மாணவர் மாத்திரமன்றி ஏனைய துறைகளில் திறமை காட்டும் மாணவர்களும் ஆசிரியர், அதிபர், பாடசாலையில் உள்ள அனைவரது மதிப்பையும் கௌரவத்தையும் பெறுவதில் வெற்றி காண்பர். மாணவ தலைவர், பாடத்தலைவர், வகுப்பறைத் தலைவர்களாக அவர்கள் விளங்குவர். தமக்குக் கிடைக்கும் கௌரவப் பெயர் காரணமாக பாடசாலைச் சமூகத்தில் அதிக சலுகை பெறும் வாய்ப் பையும் பெறுவர். வகுப்பறைச் செயற்பாட்டில் சம்பந்தப்படுத்தலைப் போல் எல்லாச் செயற்பாடுகளிலும் தமது நிபுணத்துவத்தைக் காட்ட பாடசாலையில் செயல்படுத்தப்படும் தொடர் மதிப்பீட்டு முறை வழி கோலுகிறது. பரீட்சைகளில் கூடிய புள்ளிகளைப் பெற்ற குழு ஒன்று உயர் வகுப்பில் நுழையும் பாக்கியம் பெற குறைந்த புள்ளிகளைப் பெறுவோர் பாடசாலைகளை விட்டுச் செல்ல முயற்சிப்பர்.

இலங்கையில் பாடசாலை நூல்கள் இலவசமாக வழங்கப்பட்ட போதிலும் தொடர்ந்தும் பாடசாலையில் கற்போரது தொகையை நோக்கினால் பாடசாலையில் உள்ள பண்பாட்டியல் தன்மைக்கு ஏற்ப நிலவும் சம்பிரதாயம், இணக்கம், சட்டதிட்டங்கள் ஆதியன பாடசாலையை விட்டுச் செல்லும் நிலை உருவாவதற்குக் காரணமாக அமைவதனைக் காண முடியும்.

தினமும் பாடசாலைக்கு வராதிருத்தல் பாடசாலைப் பண்பாட்டியலில் தண்டனைக்குரிய குற்றமாகும். எனினும் பல்வேறு பாடசாலை நிலைக்கேற்ப அது வேறுபடும். மிகப்பிரபலமான அதேபோல் உயர் நிலையுடையது எனக் கருதப்படும் பாடசாலைகளில் தினமும் சமூகம் அளிக்கத் தவறும் மாணவர்களுக்கு எதிராக அதிபரும் ஆசிரியரும் கடும் நடவடிக்கை மேற்கொள்வர். எனினும் பிரபலமடையாத வசதி குறைந்த பாடசாலைகளில் இத்தகைய சட்டதிட்டங்கள் குறைவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை ஆரம்பிக்கும் நேரம், அதனுடன் சம்பந்தப்பட்ட இணக்கச் செயல்பாடுகள் பாடசாலைகளுக்கிடையே வேறுபடும் முறை சூழலி லுள்ள பாடசாலைகளுடன் உங்கள் பாடசாலையினை ஒப்பிட்டு அறிந்து கொள்ள முடியும். உரிய நேரத்தில் பாடசாலைக்கு சமுகமளித்தல் நக ரப் பாடசாலைகளில் அத்தியாவசிய அம்சமாக இருப்பினும் கிராமப் புறப் பாடசாலைகளில் உரிய நேரத்துக்குச் சமுகமளிக்காதிருத்தல் பொது அம்சமாகும். நகரப்பாடசாலைகளில் உரிய நேரத்துக்குச் சமுகம ளிக்க முடியாதிருப்பின் பாடசாலை நுழைவாயில் அல்லது பாடசாலை அருகில் அதிக நேரம் காத்திருந்துவிட்டுச் செல்லும் மாணவர்களது அடுத்த நடவடிக்கை எதுவாக இருக்குமென உங்களால் சிந்தித்து உணரமுடியும்.

தெரிவு செய்யப்படும் கலைத்திட்டத்தில் எதிர்கால சந்ததியினர் சமூக பங்களிப்பு செய்வதற்கான முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது. இலங் கையில் கலைப்பாடங்களைக் கற்ற மாணவர்களும் விஞ்ஞான பாடங்க ளைக் கற்ற மாணவர்களும் தாம் எதிர்காலத்தில் தொடர்பு கொள்ளும் சமூகக் குழுக்களின் தன்மையைப் பற்றிப் பாடசாலையைவிட்டு விலகு முன் தீர்மானிக்கப்படலாம். இலங்கையின் பெரும்பாலான பாடசாலை களில் ஆணும் பெண்ணும் இணைந்து கற்ற போதும், ஆணும் பெண்ணும் வெவ்வேறாகக் கற்கும் பாடசாலைகளும் பெருமளவு உள. அவற்றுள் நுழைவு பெறும் ஆணும் பெண்ணும் வேறுபடுவது போலவே அப்பாடசாலைச் செயற்பாட்டு ஒழுங்கிலும் வேறுபாடு காணப்படும். பாடசாலையில் நடைபெறும் விளையாட்டு, மன்றங்கள், கூட்டங்கள், விழாக்கள், ஏனைய நிகழ்ச்சிகள் போன்றவற்றில் அத்த கைய வேறுபாடுகள் தெளிவாக வேறுபட்ட நுழைவாயில், ஓய்வறைகள் இருப்பதன் மூலம் தெரிந்து கொள்ளமுடியும்.

இவ்வாறு கலைத்திட்டத்தில் எதிர்பார்க்கப்படும் கல்விச் செயற்பாடு கள் தொகுதியொன்றே ஒவ்வொரு பாடசாலையிலும் எதிர்பார்க்கப்ப டும். இணக்கம், சம்பிரதாயங்களுக்கு உட்பட்ட கல்வியல்லாத தொழிற் பாடுகள் தொகுதிகளையும் நிறைவேற்றுவதற்கு முயற்சித்துக் கொண்டு, பண்பாட்டைப் பரிமாற்றம் செய்யும் காரியத்தையும் செய்வதற்குப் பாட சாலை முயற்சிப்பதைக் காணமுடியும்.

தொழிற்பாடு 05

1. உங்கள் பாடசாலையில் செயற்படும் சட்டம், சம்பிரதாயம் இணக்கம் எவையெனத் தேடிப் பெறுங்கள்.

2. சூழலிலுள்ள பாடசாலைகளில் செயற்படும் சட்டம், சம்பிரதாயம், இணக்கம் என்பவற்றுடன் ஒப்பிட்டு அறிக்கை சமர்ப்பிக்கவும்.

## 5.0 சாராம்சம்

பாடசாலை சமூகத்தின் தேவைக்கேற்ப உருவாக்கப் பட்ட நிறுவனமாதலால் அச்சமூக நிலைப்பாட்டையும், முன்னேற்றத்தையும் நோக்காகக் கொண்டு செயல்பட வேண்டும். அதற்காகப் பாடசாலை பயன்படுத்தும் முக்கிய உபகரணமாக கலைத்திட்டம், சமய இணக் கம், சம்பிரதாயம் என்பன கல்விக் கலைத்திட்டமும், ஒழுக்கவியல் கலைத்திட்டமும் என இடம் பெறும். மேற்குறிப்பிட்ட கருவியைத் தொழிற்படுத்தும் போது, ஒவ்வொரு பாடசாலைகளும் விசேடமாக உள்ள மறைகலைத் திட்டம் தொழிற்படுதல் சம்பந்தமாக பாடசாலைகளில் கண்டனம் எழுந்தள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6.0 பிற்சோதனை

கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களில் பொருத்தமான சொற்களைக் கொண்டு இடைவெளிகள் நிரப்புக.

1. சமூகம் ஏற்றுக்கொண்ட இலட்சியங்கள், விழுமியங்கள், மதிப்புக்குரியவைகளை இளைய தலைமுறையினருக்கு வழங்குதல் ..................... என அழைக்கப்படும்.

2. பாடசாலை மூலம் அது நிலவும் சமூகத்தின் சிந்தனைகள், கருத்துக்கள், நம்பிக்கைகள் அவதானிப்புக்களை மாத்திரமன்றி அவற்றின் உண்மைத் தன்மை முன்மாதிரிகள் சம்பந்தமாக ............................... சிறப்புக்களும் இடம்பெற வேண்டும்.

3. பண்பாட்டைப் பரிமாற்றும் காரியத்துக்காகப் பாடசாலையால் தொழிற்படுத்தப்பயன்படும்பிரதானஉபகரணம்............................

4. 1972 இன் புதிய பாதை மறுசீரமைப்பும் 1981ன் கல்வி வெள்ளை அறிக்கை மூலமும் தெளிவாவது கலைத்திட்டத்தில்............................ செலுத்தும் செல்வாக்காகும்.

5. பொரளாதாரம் கலைத்திட்டம் என்பவற்றிடையே காணப்படும் தொடர்பினைத் தெளிவுபடுத்தும் பிலிப் கூம்ப்ஸ் கல்விச் செயற்பாடு .............................. செயற்பாடு எனக் கூறப்படும்.

கீழே தொடுக்கப்படும் கூற்றுக்கள் சரியா, பிழையா எனத் தீர்மானிக்குக.

6. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் கல்வியைப் பொருளாதார விருத்திக்கான உபாயமாக ஏற்றுக் கொள்வதில்லை. (சரி/பிழை)

7. தனியாள் விருத்தி சம்பந்தமாகப் புதிய கணிப்பீடுகள் முன்வைக்கப்பட்டுள்ளமையால் பாடசாலைக்கு முந்திய பருவம் கல்வி அமைப்பினை உருவாக்குவோரது முக்கிய கவனம் செலுத்தப்படுகிறது. (சரி/பிழை)

8. ஜோன் ஹோல்ட், வெரெட்ரைடர் முதலானோர் பாடசாலையில் செயற்படும் மறைகலைத்திட்டம் கடுமையாகக் கண்டுபிடிக்கவில்லை. (சரி/பிழை)

9. பாடசாலைப் பண்பாட்டியல் சிறப்புக்களைப் பேணிப் பாதுகாக்கும் நிறுவனமாகக் கருதப்படுவதற்கு, நிலவும் சமூக சமய, பழக்கவழக்கம் சிந்தனைகள், கருத்துக்கள் என்பவற்றிலிருந்து விடுவிக்க நேரிடும். (சரி/பிழை)

10. பொதுவாக நோக்குமிடத்து பாடசாலை ஒழுங்கமைப்பில் இடம்பெறும் சம்பிரதாயங்கள், இணக்கம், சட்டதிட்டம் காரணமாக பிள்ளைகள் பாடசாலையை விட்டுச் செல்ல நேரிடலாம். (சரி/பிழை).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7.0 விடைகள்

1. சமூகமயமாக்கல்
2. சீர்தூக்கி நோக்கும் அறிவு
3. கலைத்திட்டம்
4. அரசியல் தாக்கம்
5. வரவு செலவு
6. பிழை
7. சரி
8. பிழை
9. பிழை
10 சரி

## 8. ஒப்படைகள்

1. தனியாள் விருத்திக்கேற்ப கலைத்திட்டத்தை மாற்ற வேண்டிய சந்தர்ப்பத்தை உங்களுக்குரிய பாடங்கள் மூலமாகத் தெளிவுபடுத்துக.

2. 1981 கல்வி வெள்ளை அறிக்கை மூலம் கலைத்திட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றங்கள் யாவை?

3. பாடசாலை அழித்தொழிக்கப்பட வேண்டிய நிறுவனம் என அண்மைக் காலத்தில் வளர்ந்து வரும் கண்டனங்களைக் கருத்திற் கொண்டு தற்காலத் தேவைக்கேற்ப பாடசாலையில் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்களை ஏற்படுத்தும் முறைகளைப் பற்றி கருத்துப் பரிமாற்றம் செய்க.

## 9.0 கலைச்சொற்றொகுதி

| | | |
|---|---|---|
| 1. | விழுமியங்கள் | - Values |
| 2. | இசைவாக்கம் | - Adaptation |
| 3. | எதிர்பார்ப்பு | - Expectation |
| 4. | உப-பண்பாடு | - Sub-Culture |
| 5. | தொழிற்பாட்டு கலைத்திட்டம் | - Functional Curriculum |
| 6, | இயக்கத்துக்குரிய | - Dynamic |
| 7. | நியமங்கள் | - Norms |
| 8. | கட்டமைப்பு | - Structure |
| 9. | சமூகப்பங்கு | - Social Role |
| 10. | சமூகமயமாக்கல் | - Socialisation |
| 11. | ஒன்றிணைந்த கலைத்திட்டம் | - Integrated Curriculum |
| 12. | மறைவானகலைத்திட்டம் | - Hidden Curriculum |
| 13 | | - Adjustment |
| 14. | துணைக்கலைத்திட்டம் | - Co-Curriculum |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10.0 மேலதிக வாசிப்புக்கான நூல்கள்


1. மெதிவி ஆனோல்ட்-கஹுத்துக்கள், கலாநிதி வீரசிங்க கல்விச் சிந்தனைப் பிரவேசம் -லேக்ஹவுஸ் இன்வெஸ்ட்மன் கம்பனி - 1977

2. எச்.எம். மொரடுவகம - இலங்கையின் புதிய கல்வி

3. யு.டி. ஜயசேகர - சமூகமும் கல்வியும் கல்வி இல. 7.8.1989 ஒகஸ்ட்.

4. Bantock G.H. - Culture, Industrialization and Education 1968, London.

5. Pickering G. - The Challenge to Education, Pelican - 1969

6. Tayler G.H. - Curriculum Development, Penguin - 1971

7. Kerr G.F. - Changing the Curriculum Hodder and Slenghton, London 1976

8. Warwick D - Curriculum Structure and Design - University of London Press 1975

9. Kothari - Report of the Education Commission (1964-1966) Education & National Development - Ministry of Education, Government of India.

10. Musgrave P.W. - Sociology of Education - 1983

11. Holt John - How Children Learn Pitman Publishing Co. New York - 1967

12. Reimer Evarette - School is dead - Penguin Education Specials, England 1963.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்காம் அத்தியாயம்

# சமூகமயமாக்கலில் செல்வாக்குச் செலுத்தும் ஏனைய கருவிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூகமயமாக்கலில் செல்வாக்குச் செலுத்தும் ஏனைய கருவிகள்

### உள்ளடக்கம்


1.0 அறிமுகம் ........ 67

2.0 சிறப்பு நோக்கங்கள் ........ 67

3.0 முற்சோதனை ........ 68

4.0 சமூகமயமாக்கலில் செல்வாக்குச் செலுத்தும் ஏனைய கருவிகள் ........ 68

4.1 சமய நிறுவனங்கள் ........ 68

4.2 இளைஞர் இயக்கங்கள் ........ 70

4.3 மூத்தோர் அமைப்புக்கள் ........ 71

4.4 தனிப்பட்ட வகுப்புக்கள் ........ 72

4.5 தொலைக்காட்சி ........ 73

4.6 வானொலி ........ 75

4.7 திரைப்படம் ........ 76

4.8 நூல்கள், சஞ்சிகைகள், புதினத்தாள்கள் ........ 77

5.0 சாராம்சம் ........ 78

6.0 பிற்சோதனை ........ 78

7.0 விடைகள் ........ 80

8.0 ஒப்படைகள் ........ 80

9.0 கலைச்சொற்றொகுதி ........ 81

10.0 மேலதிக வாசிப்புக்குரிய நூல்கள் ........ 81


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.0 அறிமுகம்

பிரதான சமூகமயமாக்கல் கருவியாக குடும்பம், பாடசாலை, ஒத்த வயதுக் குழு, தனியாள் மீது செலுத்தும் செல்வாக்கு சம்பந்தமாக விளக்கம் மேலே கொடுக்கப்பட்ட அத்தியாயங்களில் நாம் பெற்றுக் கொண்டோம். மேற் கூறப்பட்ட பிரதான சமூகமயமாக்கல் காரணிகள் மாத்திரமன்றி சிக்கலான சமூக சூழலில் வாழும் தனியாள் சமூகமயமாக்கலை ஏற்படுத்தும் வேறு பல கருவிகளின் செல்வாக்குக்கு உட்பட வேண்டி நேரிடும் என உங்களுக்கு சிந்திக்க முடியுமா? பல்வேறு சமய நிறுவனங்கள், இளைஞர் இயக்கங்கள், தனிப்பட்ட உதவி வகுப்புகள், பொதுசன தொடர்புச் சாதனங்கள், மூத்தோர் அமைப்புகள் முதலானவை தனியாளின் சமூகமயமாக்கலின் செயல்பாட்டில் செல்வாக்குச் செலுத்தும் தன்மையினை விளங்கிக் கொள்வதற்கு இவ் அத்தியாயம் பெறும் உதவி புரியும். தனியாள் வேறுபாடு அடிப்படையில் நோக்கும் போது சிலர் மீது, பிரதான கருவிகள் போன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட நிலையிலோ வேறு சமூகயமாக்கல் கருவிகள் செல்வாக்குச் செலுத்துவதை இனம் காணமுடியும். சில சந்தர்ப்பங்களில் முறைசாராத முறையில் உருவாகிய வேறு சமூகமயமாக்கல் கருவிகள் தனியாள் மீது விரும்பத்தகாத தாக்கங்களை ஏற்படுத்துவதை காணமுடியும். முறை சார்ந்ததாகவோ முறைசாராததாகவோ உருவாக்கப்பட்ட இத்தகைய சமூகமயமாக்கல் கருவிகளின் செல்வாக்கு சம்பந்தமாக இவ்வத்தியாயத்தில் கலந்தாலோசிக்கப்படும்.

## 2.0 சிறப்பு நோக்கங்கள்

* சமூக மயமாக்கல் தொழிற்பாட்டில் முக்கிய காரணிகள் செல்வாக்குக்கு மேலதிகமாக ஏனைய சமூக மயமாக்கல் கருவிகளின் செல்வாக்கும் உண்டு என அறிவித்தல்.

* இலங்கையில் பல்வேறு சமய அமைப்புக்களால் சமூகமயமாக்கலில் செல்வாக்குச் செலுத்தப்படும். இச்செல்வாக்கினை விளக்குதல்.

* பல்வேறு இளைஞர் இயக்கங்கள், மூத்தோர் அமைப்புக்களின் தொழிற்பாடுகள் சமூகமயமாக்கல் செயற்பாட்டில் செல்வாக்குச் செலுத்துவதனை தெரிந்து கொள்ளுதல்.

* தனிப்பட்ட வகுப்புகளால் இடம்பெறும் சமூகமயமாக்கலையும் தன்மையையும் விளக்குதல்.

* சமூகமயமாக்கலில் பொதுசனத் தொடர்புச் சாதனங்களின் முக்கியத்துவம் அத்தோடு, தற்போது இலங்கையில் பொதுசனத் தொடர்பு சாதனங்கள் செலுத்தும் செல்வாக்கை விளங்கிக் கொள்ளுதல்.

* முறைசாரா அமைப்புக்கள் சமூகமயமாக்கலில் ஏற்படுத்தும் சில பொருத்தமற்ற தாக்கங்களை விளக்குதல்.

* மாணவர்களுக்கு ஏனைய சமூகமயமாக்கல் கருவிகள் மூலம் பயனுள்ள விளைவுகளைப் பெறக்கூடியதாக வழிகாட்டலுக்கு தேவையான திறன்களை வளர்த்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.0 முற்சோதனை

1. குடும்பம், பாடசாலை, ஒத்த வயதுக் குழு தவிர்ந்த ஏனைய சமூக மயமாக்கல் கருவிகள் மூன்றைக் குறிப்பிடுக.

2. மனிதனது வாழ்க்கையை ஒழுங்குபடுத்துவதில் சமய அமைப்புக்கள் மூலம் நிறைவேற்றப்படும் தொழிற்பாடுகளைக் குறிப்பிடுக.

3. அரசாங்க வழிகாட்டலின் அடிப்படையில் உருவான இளைஞர்களா லேயே உருவாக்கப்பட்ட இரண்டினையும் பெயரிடுக.

4. தனிப்பட்ட வகுப்புகளுக்குச் செல்வதால் ஏற்படும் விளைவுகளுள் நன்மை என நீர் கருதுவனவற்றையும், தீமையென கருதுவனவற்றை யும் குறிப்பிடுக.

5. நீங்கள் சிந்திக்கும் அடிப்படையில் தற்போது இலங்கையில் பயன்ப டுத்தப்படும் பொதுசனத் தொடர்பு சாதனங்களுள் மக்கள் வாழ்க் கையில் அதிக செல்வாக்கு செலுத்தும் சாதனம் எது காரணத் துடன் தருக.

6. ஏனைய சமூகமயமாக்கல் கருவிகள் சம்பந்தமாக ஆசிரியருக்கு ஏன் விளக்கம் பெற வேண்டியுள்ளது விளக்கம் தருக.

## 4.0 சமுகமயமாக்கலில் செல்வாக்குச் செலுத்தும் ஏனைய கருவிகள்.

### 4.1 சமய நிறுவனங்கள்

பண்டைக்கால பூரிவீக சமூகம் தொட்டு தற்காலத்தில் நிலைபெறும் சமூகக் கோலம் வரையும் தனியாளைச் சமூகத்துக்குப் பயிற்றுவிக்கும் காரியத்தைச் செய்வதில் சமய அமைப்பு முக்கிய இடத்தை வகிக்கிறது. இவ்வுலகில் தோன்றிய எல்லா சமய மெய்ஞ்ஞானிகளும் தமது தத்துவ விளக்கத்தின் மூலம் தனியாள் இறுதியாக அடைய வேண்டிய நிலை பற்றி விளக்கியுள்ளானர். இவற்றை பெற விரும்பும் தனியாள் பின் பற்ற வேண்டிய தார்மீக அம்சங்கள் பலவற்றையும் பற்றி குறிப்பிட் டுள்ளானர். புத்த தர்மம் நிர்வாணத்தையும், இந்து தர்மம் பிரம்மத்து டன் ஒன்றறக் கலந்த நிலையையும், கிறிஸ்தவ சமயம் சுவர்க்கம் செல்ல பிரார்த்தனையையும், இஸ்லாம் இறைநேசத்தையும் பெற நெருங் குதலையும் வலியுறுத்தி எதிர் பார்ப்பதோடு அதற்காக இவ்வுலக வாழ் வைப் பயனுள்ளதாக ஒழுங்குபடுத்துவதற்கு உதவக்கூடிய சமூக தர்மங்கள் பலவற்றை வழுங்குகின்றன. இத்தகைய தர்மங்களைப் பின் பற்றுவோர் சமூகமய மாக்கப்பட்ட தனியாளாக மாற்றமுறுவர். அத னால் பல்வேறு சமயங்களிலும் சமுகமயமாக்கல் தொழிற்பாடுகள் நிரந்தரமாக உள என நீங்கள் விளங்கிக் கொள்வீர்கள்.

தனியாள் ஒருவன் இவ்வுலகில் பிறந்தது முதல் தனது தாய் தந்தையை வணங்கும் சமயத்தின் செல்வாக்கு அவன் மீது ஏற்படலாம். பெற் றோரை மதிக்கும் சமய கோலத்திற்கு ஏற்ப சமூகத்தால் மதிக்கப்படும், நற் செயல்கள் யாவை? தீச்செயல்கள் எனக் கருதப்படுபவை யாவை என வேறுபடுத்தி தனியாள் நடத்தைக் கோலத்தை உருவாக்கிக் கொள் வதற்குச் சமய நிறுவனங்களிலிருந்து முக்கிய விளக்கம் பெறுவான். தனியாள் தனது வாழ்நாளில் எல்லா முக்கிய விடயங்களையும் சமய பழக்க வழக்க அடிப்படையில் உருவாக்கிக் கொள்வான். உதாரணமாக அவனது பிறந்த தின விழா, முதற்சோறூட்டல் வைபவம், எழுத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் கற்றல், முதலில் பாடசாலை செல்லுதல், திருமணம், பல் வேறு நோய்களுக்கு நிவாரணம் காணல் முதலியவற்றிற்கு மாத்திர மன்றி தமது இறுதிநாள் சடங்குகளையும் சமய தர்ம நியதிகளுக்கு ஏற்ப ஒருவனுக்கு செய்ய நேரிடும் என்பதைக் காணமுடியும். இதன் அடிப் படையில் தனியாள், சமூகமயமாக்கலில் சமய நிறுவனங்களின் செல் வாக்கு நிரந்தரமாக அமைவதைக் காணலாம். பன்சலையில், பள்ளியில் அல்லது கோவிலில் இடம்பெறும் நிகழ்ச்சிகள் மூலம் சமய நிறுவனங் களில் தனியாள் ஒருவன் சிறந்த சிந்தனையை தனியாள் நடந்துகொள்ள வேண்டிய சம்பிரதாயங்கள் உள. புண்ணிய செயற்பாடுகள், தர்ம போதனை, தானம் வழங்கல், மலர்பூசை முதலிய சமயவழிபாடுகள் மூலம் பொருந்தி நடத்தல், சமத்துவ இயல்பு, ஒழுக்கத்தைக் கடைப் பிடித்தல், பொறுமை, மைத்திரியம், கருணை, பரோபகார சிந்தை முதலியன மூலம் தனியாள் ஒருவனிடம் விருத்தியடைய வேண்டிய ஆளுமைச் சிறப்பியல்புகள் பலவற்றை வளர்த்துக் கொள்ள முடியும். எல்லாச் சமயங்களிலும் வழிபாட்டுடன் தொடர்புடைய அம்சங்கள் யாவும் தனியாளிடம் சமூக இசைவாக்க விருத்தியை ஏற்படுத்தும் விதத்திலேயே அமைந்துள்ளதுன. சமயச் சூழலில் சந்திக்கும் சமூகக் குழுக்களுடன் பழகும் தனியாளுக்கு அங்கு கிடைக்கும் அனுபவம் வெளிச் சமூக கூட்டுகளில் வாழ்வதற்கு உதவும், அதுமாத் திரமன்றி தனியாள் செயல்பட முடியாது தடுக்கும். முதலாது பொருத் தமற்ற உளவியல் தன்மைகளிலிருந்து விடுபட்டு நிம்மதி பெறுவதற்கு பின்பற்ற வேண்டிய நடத்தைகளை எல்லாச் சமயங்களினதும் சமயத் தலைவர் களது போதனையில் இடம்பெற்றுள்ளன. அதனால் தனியாள் தனது சூழலிலுள்ள சமூக அமைப்பிற்கு ஏற்ப நடத்தை உருவாக்கம் பெறும் என எமில் டர்கைட் சமூகமயமாக்கல் பற்றிக் கூறும் கருத்தை உறுதி செய்வது போன்ற செயல்பாடுகள் சமய நிறுவனங்கள் மூலம் நிறைவே றுகின்றதென்பதை அறிந்து கொள்ள முடியும்.

நீங்கள் இதுவரை கற்றவற்றிலிருந்து பொதுவாக சமயம் மூலமாக இடம் பெறும் சமூகமயமாக்கல் செயல்பாடுகளைப் பற்றி விளங்கிக் கொண்டிருப்பீர்கள். இது சம்பந்தமாக சிறப்பாக மேலும் சிந்தித்து பார்க்கும் போது சமயமும் அது தொடர்பான நிறுவனங்கள் பலவும் இருக் கின்றதென்பதும் அவை அதன் மூலம் சமூகமயமாக்கலில் அதிக செல் வாக்கு செலுத்துகின்றன என்பது தெளிவாகும். மிகப் பழங்காலந் தொட்டே சமயத்தவர்களால் சமயப் பிரசாரம் செய்யவும் அதன் அடிப் படையில் நடந்து கொள்ளவும் அதில் பயிற்சி பெறவும் பல்வேறு சமயங்களும், அதனைச் சார்ந்த நிறுவனங்களும் உருவாகியுள்ளன என் பதை நாம் அறிவோம். சமய அடிப்படையிலும் பெயர் அடிப்படையி லும் வேறுபாடு இருப்பினும் தனியாளைச் சமூகமயப்படுத்துவதில் அடிப்படை நோக்கமான சமூகப் பொதுமைப்பாடு இந்நிறுவனத்தில் உண்டு. பன்சலைக்குப் பக்கத்தில் அமைந்த பிரிவெனா அன்றுமுதல் இன்று வரை தனியாளைச் சமூகமயப்படுத்துவதில், பாடசாலை போ ன்றே சேவை செய்துள்ளது. இஸ்லாமியரது பள்ளிவாசலும், வணக்கத் தலங்களும் இதுபோன்ற சேவையைச் செய்துள. பரமஞான பௌத்த சங்கம், முஸ்லிம் சங்கம், தர்மபாடசாலை நிறுவனங்கள் மூலம் இடம் பெறும் உபதேசங்கள் சமூகமயமாக்கலில் ஏற்படுத்தும் செல்வாக்கு முக் கியமானது.

தொழிற்பாடு 1

1. சமய நிறுவனங்கள் மூலமாக செயல்படுத்தப்படும் உங்களது பாட சாலையின் கல்வி வேலைத் திட்டம் சம்பந்தமாக விபரங்களைத் தெரிந்து கொள்க.

2. உங்களது பகுதியிலுள்ள மக்களது நாளாந்த வேலைகளில் அவர் களுடன் தொடர்பு கொண்டிருக்கும் சமய நிறுவனங்கள் யாவை? அவற்றினால் மக்களது குண இயலபு விருத்திகளுக்காக நிறைவேற் றப்படும் காரியங்கள் யாவை என அறிக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.2 இளைஞர் இயக்கங்கள்

இளைஞர் பருவம் மூத்த சமூகத்தில் நுழைய காலடி எடுத்து வைக்க எத்தனிக்கும் பருவமாகும். என்றாலும் இளம் பருவத்திற்குரிய பழக்க வழக்கங்கள் சிந்தனைக் கருத்துக்கள் விழுமியங்கள் என்பவற்றை உள்ளடக்கிய உப கலாசாரங்களை உள்ளடக்கியதாக இளம் பருவ அமைப்புக்களைக் குறிப்பிட முடியும். எனவே இளம் பருவ எண்ணங்கள், செயல்கள், நடத்தை, நடை, உடை பெரும்பாலும் மூத்தோரது கண்டனங்களுக்கு உட்படும்.

இளம் பருவத்தில் ஏற்படும் சிந்தனை விருத்தியுடன் சுதந்திரமாகச் செயல்பட விரும்பும் அடிப்படைத் தேவை அதிகரிக்கும். இளைஞர்கள் சமூகத்தில் நிலவுவன எல்லாவற்றையும் காலம் கடந்தவை என்றும் அல்லது தமது சிந்தனைக்கு தடையாக அமைந்தவைஎனக் கருதத் தொடங்குவர். இம்முயற்சியின் போது அவர்கள் பல்வேறு தடைகளை எதிர்நோக்க வேண்டிவரும். தொழிலின்மை காரணமாக எழும் பொருளாதாரக் கஷ்டம்; அவர்களது தனித்துவத்தை, மூத்தோர் மதியாமை, சிந்தனை அடிப்படையில் மூத்தோர், இளைஞர்களுக்கிடையிலான பரம்பரை வேறுபாட்டு விரிவு என்பன இவற்றுள் முக்கியமானவை. இதனால் இளம் பருவத்தவர் தமக்கு விசேடமானதும் முறைசார்ந்ததும் முறைசாராததுமாக உருவாக்கப்பட்டதுமான இளைஞர் இயக்கங்களில் நுழைவதைக் காணமுடியும். அவர்களுக்கு வழிகாட்டுவதற்காக அரச நிறுவனங்களாலும், தொண்டர் தாபனங்களாலும் உருவாக்கப்பட்ட இளைஞர் மன்றங்கள் இளைஞர் தாமாகவே உருவாக்கிய முறைசார் இளைஞர் குழுக்களும்சமூகத்தில் காணப்படுகின்றன என்பதை நாம் அறிவோம். இவ் எல்லா அமைப்புக்களாலும் சமூக மயமாக்கலுக்கான ஏதாவது ஒரு பகுதி தொழிற்பாடாவது நிகழும் என்பது உண்மை.

முறையாக உருவாக்கப்படும் இளைஞர் அமைப்புகளில் அடிப்படை இலக்கு இளைஞரது பலத்தை சரியான பாதையில் செலுத்தி அதனைத் தமதும் சமூகத்தினதும் நன்மைக்காக பயன்படுத்துவதாகும். இத்தகைய இயக்கங்கள் பல இலங்கையில் செயல்படுவதைக் காணமுடியும்.

முழு இலங்கையிலும் பொதுவாக செயற்பட்டுவரும் தேசிய இளைஞர் சேவை மன்றம், அடிப்படை இலக்குகள் சிலவற்றை மையமாகக் கொண்டு செயல்படுகின்றது.

1. தனக்கும் தேசத்திற்கும் விரும்பத்தக்க செயல்பாடுகளில் ஈடுபடல்.

2. செயற்றிறனும் பொறுப்புமுடைய மூத்த பருவத்துக்காகத் தயார் செய்தல்.

3. பொருளாதார ரீதியாக சமூகமயமாக்க முயற்சித்தல்.

இவ்விலக்குகள் இளைஞர்கள் மூத்த சமூகத்தின் பொறுப்புக்களை ஏற்பதற்கான திறன்கள் பொருத்தமான ஆளுமை என்பவற்றைப் பெற்றுக் கொள்ளும் பயிற்சிகளைப் பெறும் நோக்குடனாகும். கிராமிய மட்டத்தில் உருவாகும் இளைஞர் இயக்கங்கள் தலைமைத்துவம், ஒத்துப் போதல், அடுத்தவரை மதித்தல், பொறுமை, ஒழுங்கமைக்கும் சக்தி, ஆரம்பிக்கும் வலு முதலாம் சமூக விருத்திக்கு அவசியமான திறன்களை வளர்க்கும் சந்தர்ப்பங்களை வழங்குகின்றன.

இளைஞர் மன்றங்களுள் மாவட்ட ரீதியாக நடைபெறும் போட்டிகள் வருடாந்தம் நடைபெறும் இளைஞர் விழா (யௌவனர் விழா) முதலாம் சந்தர்ப்பங்கள் மூலமாக சமூகமயமாக்கலுக்கு இளைஞர்கள் பெறும் சந்தர்ப்பங்களை கருத்திற் கொள்ளவும்.

இளைஞர் விவசாயக் கழகங்கள் முதலியன அரச முயற்சியால் மேற்கொள்ளப்படும். மேலும் இத்தகைய அமைப்புகள் பற்றி உங்களுக்கு விபரங்கள் சேர்த்துக் கொள்ள முடியும். பௌத்த இளைஞர் சங்கம், முஸ்லிம் வாலிபர் சங்கம், முதலாம் சமயத்துடன் இணைந்த இளைஞர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்றங்கள் மூலம் எதிரபார்க்கப்படுவது அவ்வவ் சமயங்கள் மூலமாக வாலிபர் மத்தியில் பக்திக் குண இயல்பு விருத்தி ஏற்படுத்தி சிறந்த பிரஜைகளை உருவாக்குவதற்கான முயற்சியாகும். சர்வோதயம் இயக்க மூலமாக மேற்கொள்ளப்படும் இளைஞர் கூட்டு வேலைத் திட்டத்தின் இலக்கு இளைஞர் மத்தியில் நற்குணம், பரோபகார சிந்தை சமூக பொருத்தப்பாடு முதலாம் குண இயல்புகளை விருத்தி செய்வதன் மூலம் அவர்களை நல்வாழ்க்கைக்கு தயார்ப்படுத்தலாம்.

இளைஞரது பல்வேறு விழிப்புணர்வுகளால் உருவான விளையாட்டு மன்றம், வாசிப்போர் சங்கம், என்பன மூலமாக சமூகமயமாக்கலில் அதிக செல்வாக்கிடம் பெறுகிறது. பல்வேறு அரசியல் கட்சிகளுள் இணைந்த மன்றம், அமைப்பு, இளைஞர் கழகங்களாலும் தலைமைத்து வம், கொள்கைகளை மதித்தல், ஒருமித்து இயங்கும் இலக்கை நோக்கிச் செயற்படல் மூலம் குண இயல்புகள் வளர்க்கப்படு கின்றன.

எல்லாச் சமூகங்களிலும் செயல்படும் இளைஞர் இயக்கங்களால் மிகப் பயனுள்ள சமூகமயமாக்கல் இடம்பெறுவது அச்சமூகத்தின் அடிப்படை நோக்கங்களுக்கு ஏற்ப தொழிற்படுவதாலேயாகும். சோவியத், நாட்டி லுள்ள இளைஞர் இயக்கம் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளது. அங்கு இளம்கொமியுனிஸ்டுகள் என அழைக்கப்படும். அமைப்புக்களின் அடிப்படை இலக்கு சமதர்ம சமூகத்தில் குடிமக்களுக்கு அவசியமான குண இயல்புகளை இளைஞர் மத்தியில் விருத்தி செய்வதாகும். இளை ஞர் மத்தியில் சுய ஒழுக்க விருத்தி செய்வதற்கும், பொறுப்புக்களை ஏற்கவும், தலைமைத்துவத்துக்கான முறையான பயிற்சியைப் பெறவும் இளைஞர் அமைப்புக்களின் வேலைத்திட்டங்களுக்கு மூத்தோர் வழிகாட் டல் அவசியமாகின்றது. இவ்வாறன்றி இளைஞர்கள் பூரணமாக சுதந்திரமாக இயங்குமிடத்து அத்தகைய இளைஞர் பெரும்பாலும் போதைவஸ்து முதலான சமூக விரோதச் செயல்களில் ஈடுபட உட்படுத்தப்படலாம் என பொன்பன் பெனர் குறிப்பிடுகிறார். இன் னொரு வகையில் சோவியத் இளைஞர்கள் பெருமளவு சத்தியத்தை பேணுபவர்களாகவும் சமூக சேவைக்கு விருப்புடையவர்களாகவும் காணப்படுகின்றனர்.

இளைஞர் இயக்கங்கள், இளைஞர்கள் மேலும் மேலும் மூத்த சமூகத் தோடு இணைவதற்கு முயற்சித்தல் அதிசிரமமாகும். இதற்காக மூத்த சமூகம் பொறுப்பு ஏற்கவும், தேவையான திறன்களை வழங்கவும், மூத்த சமூகம் மதிக்கும் விழுமியங்களை அவர்களை பின்பற்றச் செய்ய வும் இளைஞர் இயக்கங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தொழிற்பாடு 2

1. நீங்கள் சேவைசெய்யும் பிரதேசத்தில் இளைஞர்களும, யுவதிகளும் அங்கம் வகிக்கும் இயக்கங்கள் பற்றி பின்வரும் தலைப்புகளில் விட யங்களைத் தொகுக்க.

2. இலக்குகள்

3. கட்டமைப்பும் தொழிற்பாடும்.

4. தனியாளை சமூகமயமாக்குவதில் ஏற்படுத்தும் செல்வாக்கு.

## 4.3 மூத்தோர் அமைப்புக்கள்

சமூகத்தில் மூத்தோரினால் மேற்கொள்ளப்படும் பல்வேறு இலக்குகளைக் கொண்டு செயற்படும் சங்கங்கள் தனியாளைச் சமூகமயப்படுத்துவதில் முக்கியமான செயற்பாடுகளும் பொறுப்புக்களும் கடமைகளும் உள. இவை மூத்தோர் அமைப்புக்கள் என அழைக்கப்படட போதும் இளை ஞர்களும், யுவதிகளும் அவற்றில் அங்கம் வகிப்பர். இவைமூத்தோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்புக்களாயினும் பெருமளவுக்கு சமூக நலன்பாட்டு இலக்குகளைக் கொண்டன. இவற்றில் பங்கு பற்றுவதன் மூலம் பெருமளவுக்கு அங்கத்தவர்களில் சமூக விருத்திகள் எனப்படும் முக்கிய ஜனநாயக சமூக வாழ்க்கைக்கு அவசியமான ஒழுங்கமைப்பு தலைமைத்துவம் பரோபகார சிந்தை ஒப்புரவு மனப்பான்மைக்கு மாற்றும் திறன் முதலாம் சிறந்த இயல்புகளைப் பயிற்றுவித்தல் முதலியன இவ்வமைப்புக்களால் கிடைக்கும்.

உங்களது பிரதேசத்தில் உள்ள சமுதாய சபைகள் கிராம விருத்தி மன்றம், மரண உதவிச் சங்கம், மகளிர் இயக்கம், சர்வோதய இயக்கம் முதலாம் அமைப்புக்கள் அவற்றின் செயற்பாடு என்பவற்றில் தனியாட்களது சமூகமயமாக்கலில் அவை செலுத்தும் செல்வாக்கினை நீங்கள் அறிந்து கொண்டிருப்பீர்கள்.

## 4.4 தனிப்பட்ட வகுப்புகள்

தனிப்பட்ட வகுப்புக்கள் முறைசார் கல்வியைப் பூரணப்படுத்துவதற்கு ஏற்படுத்தப்பட்ட நிறுவனமாக அன்றி நேரடியாகவே போட்டிப் பரீட்சையை நோக்காகக் கொண்டு பிள்ளைகளைத் தயாராக்குவதற்காகவே உருவாக்கப்பட்ட நிறுவனமாக இனம் காணமுடியும். பெருந்தொகை குழுக்களைக் கொண்டதாக அமையும் தனியார் வகுப்புக்களையும் வீடுகளில் இடம்பெறும் சிறு மாணவர் தொகை கொண்ட தனிப்பட்ட வகுப்புக்களில் சேவை செய்வோருள் பெரும்பாலானோர் இன்று பாடசாலையில் சேவையாற்றுபவராக இல்லை.

அத்துடன் அவர்கள் கற்பித்தல் துறையில் விசேட பயிற்சிகள் பெற்றவர்களல்லர், எல்லா பாடசாலையிலும் சகல வகுப்புகளிலும் கற்கும் பிள்ளைகளில் பெரும்பாலானோர் தனிப்பட்ட வகுப்புகளில் கல்வி பெறுவோராக இருப்பதால் அவை அவர்களது சமூக மயப்படுத்தலில் ஏற்படுத்தும் செல்வாக்கு சாதாரணமானதாகக் கணக்கிட முடியாது.

இலங்கையில் தனிப்பட்ட வகுப்புக்களுக்கு மாணவரைச் செல்லச் செய்வதில் முக்கிய காரணியாக அமைவது கல்வித் துறையில் குறிப்பாக பரீட்சை முறைகளில் நிலவும் போட்டித் தன்மை ஆகும். ஏனைய மாணவரைவிடத் தம் மாணவர் சிறப்பாகச் சித்தியெய்த வேண்டுமென்பதும் இங்கு தெளிவாப் புலப்படும். பாடசாலையில் உள்ளது போன்று மிகக் கட்டுப்பாடான சட்ட திட்டங்கள் இல்லாமை, மாணவர் கள் மத்தியில் நெருங்கிய உறவுகளை வளர்க்கக் கூடியதாக அமையும் சுதந்திரம், ஆசிரியர் இளவயதினராயிருத்தல் முதலாம் காரணங்களும் தனிப்பட்ட வகுப்புகளுக்குப் பிள்ளைகள் செல்ல முக்கிய காரணம் என விசாரணைகளிலிருந்து புலப்படுகின்றது. தனிப்பட்ட வகுப்புக்கள் பாடசாலைகள் போல் திட்டமிடப்பட்ட இலக்குகளை உடையனவல்ல. அதனால் தனிப்பட்ட வகுப்புகளால் வேறுபட்ட விழுமியங்கள் சிந்தனை நடத்தைக்கோல அமைப்பு உருவாக்கலாம். இளம் மாணவரிடையே பல்வேறுபட்ட நடை உடை, பேச்சு வழக்கு, உணவு பழக்கங்கள் விரிவடைய முக்கிய காரணம் தனிப்பட்ட வகுப்புகளாகும். இத்தகைய வகுப்புகளுக்குத் தெரிவாவோரில் பெரும்பாலானோர் கீழ் மத்திய வகுப்பைச் சேர்ந்தோராவர். எனவே இத்தகைய வகுப்புக்களில் பெருமளவு கடைப்பிடிக்கப்படுவது மத்திய வகுப்பு இயல்புகளாகும். இளம் மாணவரிடையே மத்திய வகுப்பு சமூக இயல்புகள் பரவுவதற்கு இது முக்கிய காரணமாகும்.

தனிப்பட்ட வகுப்புகளால் விருத்தியாகும் போட்டி மனப்பான்மை காரணமாக் கல்விச் செயற்பாட்டில் பெரும் ஊக்கம் உண்டாகிறது. இச் சூழ்நிலைகளால் கல்விக் குழுக்கள் அமைத்தலுக்கும் இடமுண்டு. பல்வேறு பாடசாலைகளிலிருந்தும் பிரதேசங்களிலிருந்தும் வரும் மாணவர்கள் சந்திப்பதால் சமூக உறவுகளும் விரிவடையும். பாடசாலை வகுப்புக்களிலே அடைபட்டிருக்கும் துணிந்து செயல்பட முடியாதிருப்போர் துணிந்து செயல்படவும் தலைமை தாங்கவும் இங்கு சந்தர்ப்பம் கிடைக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிப்பட்ட வகுப்புக்கள் சமுதாயமாக்கலில் செல்வாக்கு செலுத்தக் கூடிய சந்தர்ப்பங்கள் உண்டென்பதை நாமறிவோம். விசேடமாக மாண வர்கள் போதைவஸ்துக்கள் பாவனை, புகைத்தல் முதலான பழக்கங் களுக்கு தனிப்பட்ட வகுப்புக்களின் போதே ஈடுபடுகின்றனர் என்பது பெரும்பாலோர் எண்ணமாகும்.

இவ்வகுப்புகளில் இத்தகைய தீய பழக்கங்கள் ஏற்படும். தனிப்பட்ட வகுப்புகளுக்குச் செல்வதாகக் கூறிக்கொள்ளும் மாணவர்கள் பொருத்த மற்ற உறவுகளுக்கும் சமூக விரோத இயல்புகளுக்கும் உட்படுவதற்கு தூண்டப்படலாம்.

தனிப்பட்ட வகுப்புகளால் ஏற்படும் தீய விளைவுகள் பற்றிச் சமூகம் கவனம் செலுத்த வேண்டும். இப்பிரச்சினையை நீக்குவதற்குப் பாடசா லையில் வழங்கப்படும் கல்வி பல்வேறு துறைகளில் விருத்தி செய் யப்படல் மூலம் மாணவர்களுக்கு இக்கல்வியில் ஆழமான ஈடுபாட்டை ஏற்படுத்தல், மாணவர்கள் பாடசாலை செல்லும் நேரத்தை அதிகரித்தல், நலன்புரி முயற்சிகள் மூலம் பாடசாலை நேரங்களிலேயே மேலதிக வகுப்புக்களை நடத்துதல், தனிப்பட்ட பாடசாலைகளைத் தடைசெய்தல் முதலிய ஆலோசனைகள் வழங்கப்பட்டு உள்ளன. அப்படியிருப்பினும் மிகுந்த கட்டுப்பாடுகளின்றி தனிப்பட்ட வகுப்புக்கள் நடத்தப்படுவதோடு இதன் தீய விளைவுகள் பற்றி முடிவுகள் எதுவும் செய்யப்படவில்லை என்பது புலனாகும். எனவே கல்வித் துறையில் ஈடுபட்டிருக்கும் பொறுப்புடையவர்களும் பெற்றோரினதும் மிகக் கூடிய கவனம் இது விடயத்தில் செலுத்தப்பட வேண்டும்.

**தொழிற்பாடு 03**

உங்கள் பாடசாலையில் கற்கும் மாணவர்களில் எத்தனை பேர் தனிப் பட்ட வகுப்புகளுக்குச் செல்கின்றனர் என அறிக: தனிப்பட்ட வகுப்புக ளில் கூடுதலாகக் கவனம் செலுத்துவோர் எந்தத் தரங்களைச் சேர்ந் தோர்? அவர்கள் அவ்வாறு சொல்வதற்கான காரணங்கள் யாவை? தனிப்பட்ட வகுப்புகளுக்குச் செல்வோரில் எத்தகைய நோக்கத்துக்குட் பட்டுள்ளனர் முதலானவை பற்றி விபரம் திரட்டுக.

## 4.5 தொலைக்காட்சி

சிறார், இளம் பருவத்தினர் முதியவர் எல்லோருக்கும் இரசனையளிப்ப தாகவும், புத்தி விருத்திக்கு வழி வகுப்பதாகவும், ஓய்வு நேரங்களை மகிழ்ச்சியாகவும் தாம் வாழும் சமூகத்துக்கு ஏற்ப நடத்தை மாற்றம் பெற உதவுவதாகவும் தொலைக்காட்சி இருந்து வருகிறது. கட்புலன், செவிப்புலன் ஆகிய இருவழிகளிலும் நேயர்களைக் கவர்வதற்கு தொ லைக்காட்சிக்கு முடியுமாதலால் பொதுசன தொடர்பு சாதனங்களுள் அதற்கு அதிக முக்கியத்துவம் உண்டு. தொலைக்காட்சி நேயர்கள் மத்தி யில் ஏற்படுத்தும் செல்வாக்கினைப் பற்றி பல்வேறு பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. அயோவாப் பல்கலைக் கழக "லெனாட் இவோன்" இது சம்பந்தமாக 3ம் ஆண்டைச் சேர்ந்த 600 மாணவர்களிடம் மேற் கொண்ட பரிசோதனையில் அவர்களுள் எதிர்ப்புணர்வு கொண்ட மாண வர்கள் பயங்கரமான தொலைக்காட்சிப் படங்களைப் பார்த்தவர்கள் என் பது தெளிவாகிறது.

கனடாவில் வோடர்லு பல்கலைக்கழக திவர்ட்வோல்டர் மருத்துவத் தாதிமார்களை அவர்களில் தொலைக்காட்சி விளைவு பற்றிய பரிசோ தனை செய்தார். அவர்களுள் கத்தியால் குத்தப்படும் தொலைக்காட்சிப் படங்களைப் பார்த்தோர், வரைந்த காட்சிகளைப் பார்த்த தாதிக ளைவிட நோயாளருக்கு முழுமையாக மின்னொளி பாய்ச்சுவராகக் கண்டார் எனத் தெளிவாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது சம்பந்தமாக பெண்டுரா என்பவரால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை முக்கியமானது. போளுக்கமுள்ள நேரடிக் காட்சிகளையும் அதனடிப்படையிலான தொலைக்காட்சிக் "கார்டூன்" அதாவது கேலிச்சித்திரப் படங்களையும் பார்த்த பிள்ளைகள் இரு குழுக்களுக்கும் அத்தகைய காட்சிகள் ஒரே மாதிரியான தாக்கத்தையே ஏற்படுத்தின எனப் புலனாகியது. இவ்வுதாரணங்கள் மூலம் தொலைக் காட்சி நேயர்களில் பெருந் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என அறியக் கூடியதாயுள்ளது. பாடசாலையில் பெரும்பாலான மேல்நாடுகளில் பிள்ளைகள் தொலைக்காட்சி நேரங்களில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என அறியக்கூடியதாயுள்ளது. பெரும்பாலான மேல்நாடுகளில் பிள்ளைகள் பாடசாலையில் கழிக்கும் நேரங்களை விடவும் அல்லது தமது பெற்றோரோடு கழிக்கும் நேரங்களை விடவும் கூடுதலான நேரம் தொலைக் காட்சியை இரசிக்கின்றனர். இத்தகைய கூடுதலான நேரத்தை செலவழிக்க வைக்கும் தொலைக்காட்சி, குடும்பம் பாடசாலை, ஒத்த வயதுக்குழு பிள்ளை அபிவிருத்தி சமூகமயமாக்கல் என்பவற்றில் அதிக செல்வாக்குச் செலுத்துவதை ஏற்க வேண்டியுள்ளது.

தொலைக்காட்சி பிள்ளை விருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் ஏதுக்களுள் ஒன்றாகும். இது பிள்ளை விருத்தியின் பல்வேறு ஏதுக்களிலும் இணைந்து தனது செல்வாக்கைச் செலுத்தி வருகிறது. மாணவர்கள் ஏனைய சாதனங்களால் கற்பது போன்றே நேரடியாகவும், மறைமுகமாகவும் தொலைக்காட்சியும் கற்பிக்கின்றது. தொலைக்காட்சி திரையில் காட்டுவதைப் பிள்ளைகள் பின்பற்றுகின்றனர். எனினும் மாணவர்கள் தொலைக்காட்சியைப் பார்ப்பது புதிய சமகால இணைப்பு, எதிர்கால எதிர்பார்ப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கி அவர்களுக்கே உரிய விசேட விருப்பு காரணமாகவே. தொலைக் காட்சியினால் இரசிப்பது யாது? அதில் அவதானம் செலுத்தப்படுவது யாது? அதனால் பெற்ற அனுபவங்களை வெளிப்படுத்துவது எவ்வாறு? ஞாபகத்தில் இருப்பவை எவை? அனுபவம் காட்சி எனபற்றை சம்பந்தப்படுத்துவது எவ்வாறு என்றெல்லாம் அவரவரது முன்னேற்றம் மூலமாகவே தீர்மானிக்கப்படும்.

ஏனைய சமூகமயமாக்கல் கருவிகளைப் போன்றே தொலைக்காட்சியும், பண்பாட்டியல் உபகரணமாகவும் கருதப்படும். அது தேசிய, வெளிநாட்டுக் கலாசாரங்களைப் பொது மக்களுக்கு அறிமுகப்படுத்தும். அதன் மூலமாக் மக்களிடத்தில் தற்பொழுது நிலவும் சமூக நிலைகளைத் தொடர்ந்து மேற்கொள்ளவும் உறுதிப்படுத்தவும், எல்லா நாடுகளிலும் தொலைக்காட்சி ஆழமான ஆதிக்கத்தைப் பெற்றுள்ளது என்பது புலனாகும். அதனடிப்படையில் தொலைக் காட்சி பிள்ளைகள் மத்தியில் சமூகமயமாக்கல் ஏற்படுத்தும் தொழிற்பாட்டில் நிரந்தரத் தன்மை பெற்றுள்ளது என்பது புலனாகும்.

தொலைக்காட்சி ஏற்படுத்தி உள்ள மதிப்பீட்டு அமைப்புடன் நேயர் தொடர்புறுகின்றார். அவர் அதனைத் தனதாத்மாவுடன் இணைக்கிறார். அதனைப் பின்பற்றுகிறார். தொலைக்காட்சி தரும் சங்கீதம், விளையாட்டு வியாபார விளம்பரம், அரசியல் முதலான முக்கிய அம்சங்கள் இடம்பெறும் முறை மாதிரிகள் நேயர்களிடம் வெளிவந்துள்ளது. சமூகமயமாக்கல் கருவி எனும் அடிப்படையில் அது விசேட சக்தி வாய்ந்தது என்பது புலனாகும்.

தொலைக்காட்சி ஆரம்பித்த முதற்கட்டத்தில் எல்லாச் சமூக கல்வியிலாளர்களுக்கும் ஈடானதாகக் கருதப்பட்டது. எனினும் சமூகமயமாக்கல் கருவி எனும் அடிப்படையில் தொலைக்காட்சியின் எல்லை பற்றி எல்லா விமர்சகர்களதும் கவனம் செலுத்தப்படலாயிற்று. தொலைக்காட்சி சிலரோடும், பலரோடும் உறவாடும் சாதனமாகும். அதனால் அது வழங்கும் யாவும் நாம் எதிர் பார்ப்பதாக இராது. பிள்ளைகளுக்குப் பொருத்தமானது என, பிள்ளைகள் பார்க்கக்கூடியது என உத்தரவாதமளிக்க முடியாது. மேலும் பிள்ளைகள் அதிகமாகப் பார்ப்பது வளர்ந்தோருக்கு ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்ச்சியே ஆகும். இதனால் நிகழ்வது பிள்ளை வளர்ந்தோர் என்போரிடம் வெவ்வேறாக உள்ள


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபகலாசாரங்களின் எல்லைகள் அற்றுப் போவதாகும். பிள்ளை வளர்ந்தோர் உலகம் பற்றி தொலைக்காட்சித் திரையில் காணும் சுருக்கமான மாதிரிகள் மூலம் கிடைக்கும் அனுபவம் வீட்டில் வளர்ந்தோருடன் படிப்படியாகப் பழகிக் கிடைக்கும் அனுபவம் போல் யதார்த்தமானதல்ல. பெற்றோர், அது போன்ற ஏனைய மூத்தோர், ஏனைய பிள்ளைகள் ஆகியோருடன் உறவு கொள்வதற்கு உரிய சந்தர்ப்பங்களும் இதனால் குறைகின்றன. இதனாலேயே தொலைக்காட்சி பிள்ளைகள் உண்மையான அனுபவங்களைப் பெறும் சந்தர்ப்பங்களைப் பறிக்கிறது என்ற கருத்தும் பரவியுள்ளது.

பிள்ளைகளுக்கு மிகக் கவர்ச்சியாக அமைந்து உள்ள வியாபார விளம்பரங்கள் மூலமாக பண்டங்களின் உயர்வு தாழ்வு சம்பந்தமாக பிழையான சிந்தனை அவர்களுள் வளரவும் முடியும். இந்நிலை பிள்ளைகள் அனுபவ ரீதியான் நுகர்வோராக மாறுவதனை தடுக்க முடியும்.

விருத்தியடைந்த நாடுகளின் உற்பத்திகளைப் பற்றி மேற்கொள்ளப்படும் விளம்பரங்களை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் காட்சியளிக்கச் செய்வதன் மூலம் பெருமளவு தீமையினையே ஏற்படுத்தும். இதன் மூலம் இத்தகைய நாடுகளில் பிள்ளைகள் மத்தியில் நுகர்வோர் அடிப்படையிலான சிந்தனை வளர்ச்சியிலும் பண்பாடு வளர்ச்சியிலும் பொருத்தமற்ற நடத்தைக் கோலங்கள் பரவுதலாலும் தீமையே ஏற்படும். சமூகமயமாக்கல் கருவி எனும் அடிப்படையில் தொலைக்காட்சியின் சக்தி அதன் எல்லைகள் என்பவற்றைத் தீர்மானித்து பிள்ளை அபிவிருத்திக்காக இச்சாதனத்தினைப் பொருத்தமான முறையில் பயன்படுத்தல், இத்துறை பற்றிய கொள்கை வகுத்தல் என்பனவும் கல்விக் கொள்கையை உருவாக்குவோரது கடமையாக உள்ளது.

தொழிற்பாடு **04**

1. நீங்கள் கற்பிக்கும் வகுப்பு மாணவர்கள் பார்க்கும் தொலைக் காட்சி நிகழ்ச்சி அதற்காக அவர்கள் செலவிடும் நேரம் பற்றி விசாரித்து அறிக.

2. அத்தகைய தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மாணவர் குண இயல்புகளில் செல்வாக்கு ஏற்படுத்தி உள்ளனவா என்பதைப் பற்றி விசாரணை செய்க.

## 4.6 வானொலி

சமூகமயமாக்கல் கடுகதியாக நீண்ட காலமாக மக்களின் கவனத்தைக் கவர்ந்த சாதனமாக இது விளங்குகிறது. பல்வேறு கல்வி நிகழ்ச்சிகளை ஒலிபரப்புவதற்கு கென்யா, கானா, டென்ஸானியா, தென்கொரியா முதலாம் நாடுகளில் **இன்னும் மிகப் பிரபலமான தொடர்புச் சாதனமாக விளங்குவதற்கு அங்கு குறைந்த விலையில் கிடைப்பதும், மிகக் கூடுதலான நேயர்கள் மத்தியில் அது நெருங்கியதாகக் காணப்படுவதும், எல்லா விதமான தடைகளையும் மீறி அவரவர் வசதிகளுக்கேற்ப ஒலிபரப்பைக் கேட்க வாய்ப்பாக அதன் அமைப்பு அமைந்து காணப்படுவதுமாகும்.** இலங்கையிலும் பல்வேறு மொழிகளிலும் பல்வேறு சேவைகள் பல்வேறு தரத்தவருக்கும் ஏற்ற முறையில் நிகழ்ச்சிகள் பல பயனுள்ள முறையில் ஒலிபரப்பப்படுகின்றன. தொலைக்காட்சி அதன் கவர்ச்சி மூலமாக இச்சேவைக்கு அபாயத்தை ஏற்படுத்திய போதும் பொதுமக்களிடையே மிக நெருங்கிய உறவுகொண்ட சாதனமாக அது இருப்பது எவ்விதத்திலும் குறையவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களைப் பல்வேறு விதத்தில் ஈர்க்கும் விதத்தில் வானொலியில் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுகின்றன. வானொலியில் ஒலிபரப்பாகும் பல்வேறு நிகழ்ச்சிகள் மூலம் நேயர்கள் இன்பம் பெறுவதோடு அவர்களது புத்தி விருத்திக்கானதும், ஒழுக்கவியல் விருத்திக்கானதுமான ஒலி பரப்புகளும் இடம்பெறுகின்றன. வானொலியில் இடம்பெறும் சமய நிகழ்ச்சிகளின் நோக்கம், மக்களது ஒழுக்க விருத்தியை ஏற்படுத்துவதேயாகும். பல்வேறு துறைகளைச் சார்ந்த கலந்துரையாடல்கள் அறிவு விருத்திக்கு உதவுவதோடு சமூக உயர் விழுமியங்கள் மற்றும் முக்கிய விடயங்களை அறிமுகப்படுத்துவதற்குமாகும். பெண்களுக்கான நிகழ்ச்சிகள், இளைஞருக்கான நிகழ்ச்சிகள், பிள்ளைகளுக்கான நிகழ்ச்சிகள் யாவும் சமூகத்தில் அவ்வப் பிரிவினரின் சிந்தனை, திறன் விருத்தியை மையமாகக் கொண்டு தயாரிக்கப்பட்டவையாகும். கற்போரது அறிவு விருத்திக்காக கல்விச் சேவை நிகழ்ச்சிகள் மூலம் சமூகத்தில் நிலவும் பண்பாட்டியல் அம்சங்களை விளக்குவதற்காகவும், சமூக வாழ்க்கைக்கு அவசியமான அறிவு, திறன், மனப்பாங்கு என்னும் அம்சங்களை விருத்தி செய்வதற்குமான நோக்கினை உடையது என்பது இதனால் தெளிவாகும்.

சமூகமயமாக்கல் கருவி எனும் முறையில் வானொலியை மிகவும் பொருத்தமான முறையில் பயன்படுத்துதல் கொள்கைகளையும் நிகழ்ச்சிகளையும் திட்டமிட்டு ஒழுங்கு செய்வோரின் பொறுப்பாகும்.

## 4.7 திரைப்படம்

தொலைக்காட்சி அபிவிருத்தியடைந்த நாடுகளில் மக்கள் மத்தியில் பிரபல்யம் அடையுமுன் திரைப்படத் துறையே மக்களிடம் பிரபலமான முக்கிய சாதனமாக விளங்கியது. எனினும் அது கல்வியூட்டும் முக்கிய சாதனமாக முன்னேற்றமடைந்திருப்பது முன்னேற்றமடைந்த நாடுகளிலேயே. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் இது இன்பமாக ஓய்வு நேரங்களைக் கழிப்பதற்கே பயன்படுகிறது. குறிப்பாக தொலைக்காட்சியை அதிகம் நாடாத நேயர்களுக்காகத் தயாரிக்கப்பட்ட வர்த்தக நோக்கம் கொண்ட படங்கள் இலங்கை போன்ற நாடுகளில் திரையிடப்படுகின்றன. பிள்ளைகளது கல்வி வளர்ச்சிக்காகத் திரைப்படம் தயாரிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டையும் அது பெறுகிறது. அது போன்றே "பொன்ட் படங்கள்", "கராட்டி" படங்கள் முதலாம் திரைப் படங்களால், "பொப் சங்கீதத்தை" மையமாகக் கொண்ட படங்களால் சமூகத்தில் ஏற்படும் தீய விளைவுகளில் கவனம் செலுத்த வேண்டும். இலங்கையில் தயாரிக்கப்பட்ட ஒரு திரைப்படத்தைப் பார்ப்பதற்காக ஒரு சிறு பிள்ளை தனது சகோதரனால் கடுமையாக தண்டிக்கப்பட்டது பற்றி பத்திரிகைச் செய்தி மூலம் நாம் தெரிந்துகொள்ள முடிந்தது. அதனால் இளம் பருவத்தினர் பார்வைக்கு விடப்படும் சில படங்களால் அவர்களிடம் சமூக விரோத நடத்தைகள் வளர்வதற்கான சந்தர்ப்பம் ஏற்படலாம். தேசிய கலாசாரம் போன்றே பிறநாட்டு பழக்க வழக்கங்கள், விழுமியங்களின் சிறப்பு சம்பந்தமான சமநிலை காட்டும் விமரிசனங்களை முறையாக மேற்கொள்ளக்கூடிய உயர் நோக்கங்கள், சிறந்த அம்சங்கள் கொண்ட படங்களைத் தயாரிப்பதாலும் இறக்குமதி செய்து திரையிடுவன் மூலம் சமூகமயமாக்கல் கருவி எனும் முறையில் இத் துறையினால் அதிக பயன் அடைய முடியும்.

திரைப்படத் துறை மூலமாகப் பிள்ளைகளிடம் சமூகமயமாக்கலை ஏற்படுத்துவதற்கு பிள்ளைகளுக்கான திரைப்படங்கள் முக்கிய இடத்தைப் பெறும். கூட்டுறவு, ஒத்துழைப்பு வீரம், குழுநடத்தை, பரோபகாரம் முதலாம் குண இயல்புகள் விருத்தியடையவும், கல்வித்துறைத் தாரளமாக இத்தகைய பிள்ளைகளுக்கான படங்களை விருத்தி செய்யவும் முடியும். சோவியத் நாடு, செக்கோஸ்லவேக்கியா முதலாம் நாடுகளில் பிள்ளைகள் மத்தியில் சமூகமயமாக்கலை ஏற்படுத்துவதற்கு பிரபல சாதனமாகப் பிள்ளைகளுக்கான திரைப்படங்கள் பெருமளவு பயன்படுத்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகின்றன. பிள்ளைகளுக்காகவே உருவாக்கப்படும் இத்தகைய திரைப் படங்கள் இலங்கையில் மிக அருமையாகவே தயாரிக்கப்படுகின்றன. இலங்கையில் திரைப்படங்கள் பிள்ளைகளின் சமூக மயமாக்கல் செயல் பாடு சம்பந்தமாக எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தலாம் என நீங்கள் அவதானம் செலுத்தவும்.

## 4.8 நூல்கள்-சஞ்சிகைகள்-புதினத்தாள்கள்

எந்நாளும், எல்லா நிமிடங்களிலும் ஒருமுறை உலகில் எங்காவது ஒரு இடத்தில் புத்தகம் ஒன்று வெளியாகிறது. அப்படியாயினும் இவற்றில் ஐந்தில் நான்கு நூல்கள் வெளியிடப்படுவது ஒருசில நாடுகளிலேயாகும் என இலங்கையின் கல்வி நூற்றாண்டு மலரில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதிலிருந்து அபிவிருத்தியடைந்த நாடுகளில் புத்தகங்கள், இலகுவில் கிடைக்கின்றன. எனினும் புத்தகப் பாவனை விருத்தி சம்பந்தமான விமர்சனம் செய்வோனுக்கு உலகில் நூல்கள் தட்டுப்பாடு இருப்பதாக கண்டுகொள்ள முடியும். 1980 ஆகும் போது ஒவ்வொரு 1/2 நிமிடத் துக்கும் ஒவ்வொரு புத்தகம் வெளிவரும் என 1970இல் எதிர்பார்க்கப் பட்ட போதும் இன்று தேவைக்குப் போதுமான நூல்கள் வெளிவராம லிருப்பதைக் காரணமாகக் கூறமுடியும். பல்வேறு துறைகளையும் சார்ந்த பல்வேறு தொழில்களிலும் நூல்கள் வெளியிடும் நூலாசிரியர்கள் இன்று குறைவாகக் காணப்படுகின்றனர். இன்னொரு பக்கத்தில் போதிய வசதிகளைக் கொண்டுள்ள அதிகமானோர் வேறு பிரபலமாக கவர்ச்சிகரமாகப் பயன்படுத்துவது தெளிவாகி உள்ளது.

நூல்கள் விடயத்தில் மக்களின் அக்கறையைத் திருப்புவதற்காக சர்வ தேச நூல் ஆண்டு கொண்டாடப்பட்டு பல்வேறு முறைகளில் புத்தகங் களை வெளியிடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் இன்று பிள்ளைகள், இளைஞர்கள், வளர்ந்தோர் மத்தியிலும் நூல் படிக்கும் வழக்கம் அவ்வளவு விருத்தியடையவில்லை. பிரான்சில் மேற் கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் வளர்ந்தோரில் 50% மானோர் எத்தகைய நூல்களை விலைகொடுத்து வாங்கவில்லை என்பதும் நூலகங்களில் 9% ஆனோரே அங்கத்தவர்களாகின்றனர் என்பதும் தெளிவாகியது. எவ்வா றாயினும் வேறுபட்டுச் செல்லும் சமூகத்தில் சிக்கலான அறிவுடன் கூடிச் செல்வதற்கு நவீன சமூக உறவுகள், சமூக முன்னேற்றத்தைப் புரிந்து கொள்வதற்கும் நூல்களால் கிடைக்கும் உதவி அளப்பரியது.

தினமும், வாராந்தம், மாதாந்தம் வருடாந்தம் வெளிவரும் பத்திரிகை கள், சஞ்சிகைகள் மாறிச் செல்லும் அறிவு-மக்கள் உறவு என்பவற்றை ஏற்படுத்துவதில் உதவியாக அமையும். அரசியல் கருத்துக்களை உரு வாக்குவதில் முன்னணியிலும் அதே போன்று சமூகப் பிறழ்வினை ஏற்படுத்துவதில் முன்னிற்கும் பத்திரிகை மக்களை மிகநெருங்கித் தனது கடமைகளையும், பொறுப்புக்களையும் நிறைவேற்றவதில் வெற்றி கண்டுள்ளது. அண்மைக் காலங்களில் இளைஞர்களை வெகுவாகக் கவர்ந்திருக்கும் சித்திரக் கதைப்பத்திரிகை அவர்களில் கல்வியில் ஏற்படவேண்டிய ஆழத்தைப் பலவீனப்படுத்தி பல்வேறு குண இயல் புடைய பாத்திரங்களை போலியாகப் பின்பற்றச் செய்வதில் ஆதிக்கம் செலுத்தியுள்ளது என்பது புலனாகின்றது. இவற்றினால் உருவாகும் புதிய கலாசாரத்தைப் பின்பற்ற முயற்சிப்பதன் மூலம் சமூகத்தில் நிலவும் கலாசார இலட்சியங்கள் சீரழியவும் வழி உண்டு.

### தொழிற்பாடு 05

1. நீங்கள் கற்பிக்கும் வகுப்பொன்றில் சித்திரக் கதைகள் படிப்பதில் ஆர்வம் கொண்ட மாணவர்கள் யார் என்பதை அறிந்து அதன் மூலம் அவர்களது நடத்தைக் கோலம், உடைநடை பாவனை, பேச்சு முதலானவற்றில் உள்ள வேறுபாட்டைக் கண்டு அறிக்கை தயா ரிக்குக.

2. சித்திரக் கதை சம்பந்தமாக பிரசித்த எழுத்தாளர், கல்வியாளர் பெற் றோர் கூறும் கருத்துக்களை விமர்சிக்குக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. உங்கள் வகுப்பிலுள்ள மாணவரது மேலதிக வாசிப்பு சம்பந்தமாக மதிப்பீடு செய்க. ஆய்வில் வெளியான உண்மைகளை அறிக்கையாகச் சமர்பிக்குக.

## 5.0 சாராம்சம்

* குடும்பம், பாடசாலை, சமவயதுக் குழு தவிர்ந்த சமூகமயமாக்கலில் செல்வாக்குச் செலுத்தும் ஏனைய சாதனங்களும் பல உள.

* மிகப் பழங்காலத்திலிருந்து இன்று வரை தனியாளை சமூகமயப்படுத்தும் செயல்பாட்டில் பல்வேறு சமயங்களும் அவற்றுடன் தொடர்புடைய நிறுவனங்களும் பெருமளவு முயற்சி ஈடுபட்டுள்ளன.

* தற்காலச் சமூகத்தில் வளர்ந்துவரும் முறைசார்ந்ததும், முறைசாராததுமான இளைஞர் இயக்கங்களைக் காணக்கூடியதாக உள்ளது. தனியாளை சமூகத்துக்குப் பழக்குவித்தலில் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்துவதோடு, தீய தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாகவும் உள்ளது.

* மூத்தோர் மாத்திரமன்றி இளைஞர்களும், யுவதிகளும் அங்கத்துவம் பெறும் மூத்தோரது சங்கங்கள், அடிப்படை நோக்கம் சமூகத்தின் பொது நலனை உயர்த்தும் தனியாட்களை உருவாக்குவதாகும்.

* தனிப்பட்ட உதவி வகுப்புக்கள் வேகமாக பரவி வருவதோடு அவை தனியாளது ஆளுமை விருத்தியில் நன்மையளிப்பதும், தீமையளிப்பதுமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதுன.

* தொலைக்காட்சி, வானொலி, நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகை முதலாம் பொதுசன தொடர்பு சாதனங்களும் தற்காலத்தில் சமூகமயமாக்கலில் பிரபலமான கருவிகளாகச் செல்வாக்குச் செலுத்துவதுடன் ஒரு கோணத்தில் பயனுள்ள தாக்கத்தையும், அவற்றைப் பயன்படுத்தும் தன்மையைப் பொறுத்து தீய தாக்கத்தையும் ஏற்படுத்துகின்றன.

## 6.0 பிற்சோதனை

கீழே கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1. சமயக் கல்வி சம்பந்தமாக இன்று ஏற்பட்டுள்ள கவர்ச்சி என்பது

   1. மாணவர்களது ஒழுக்கவியல் விருத்திக்காக கலைத்திட்டத்தில் கட்டாயப் பாடமாக இருக்க வேண்டுமெனும் கருத்து.

   2. சமயம் மாணவரது சுதந்திர சிந்தனையில் குழப்பத்தை ஏற்படுத்தும் விடயங்களைக் கொண்டு இருப்பதால் அதனை கல்வித் துறையிலிருந்து நீக்க வேண்டும் எனும் கருத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. சமயக் கல்வியை சமய நிறுவனங்களிடம் ஒப்படைக்க வேண்டும் எனும் கருத்து.

4. சமயபாடம் குறிப்பிட்ட காலத்துக்கும் பொருத்தமானதாக அமைய மறுசீரமைக்கப்பட வேண்டுமெனும் கருத்து.

2. இளைஞர் கழகங்களை சமூகமயமாக்கல் கருவியொன்றாக பயனுள்ளதாக பயன்படுத்துவதற்கு மிகப் பொருத்தமான வழி.

1. மூத்தோர் வழிகாட்டலின் அடிப்படையில் தமது கருத்துக்களை நடைமுறைப்படுத்த இளைஞர் கழகங்களை உருவாக்குதல்.

2. மூத்தோர் கருத்துக்களின் அடிப்படையில் இளைஞர் கழகங்களை உருவாக்குதல்

3. மூத்தோர் தொடர்பு ஏதுமின்றி பூரண சுயாதீனத்தின் அடிப்படையில் இளைஞர் கழகங்களை உருவாக்குதல்.

4. அரசாங்கக் கொள்கை அடிப்படையில் சட்டதிட்டங்களுக்கமைய இளைஞர் கழகங்களை உருவாக்குதல்.

3. கல்வி நிலையங்கள் எனும் அடிப்படையில் தனிப்பட்ட வகுப்புகளில் நிலவும் பிரதான முறையானது.

1. மாணவர்களிடம் அதிக கட்டணம் அறவிடல்.

2. கற்பித்தல் முறை விரிவுரையாக இருத்தல்.

3. முறையான சட்டதிட்ட அமைப்பு செயல்படாமை.

4. மாணணவர்களது ஆளுமை விருத்திக்கு ஏற்ப பொருத்தமான கல்விச் செயல்பாடு இல்லாமை.

4. பரிசோதனைகளிலிருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மாணவர்களது கவனத்தை மிகக் குறைவாக ஈர்க்கும் துறை.

1. நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகை.

2. வானொலி

3. தொலைக்காட்சி

4. திரைப்படம்.

5. சமூகமயமாக்கல் கருவி என்ற முறையில் தொலைக்காட்சி துறை விளங்குவதற்குப் பிரதான காரணம்.

1. அது வீட்டிலேயே இலகுவாகப் பார்ப்பதற்கு வாய்ப்பிருத்தல்.

2. பிள்ளைகளது கவனத்தை ஈர்க்கும் கவர்ச்சித்தன்மை கொண்டிருத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. நன்மை, தீமை ஆகிய இருவழியிலும் எல்லாக் கருத்துக்களையும் தெளிவாக இரண்டம்சங்களையும் கொண்டிருத்தல்.

4. எழுத்து அறிவு இல்லாதிருப்பினும், விளங்கக்கூடியதாயிருத்தல்.

6. தொலைக்காட்சித் துறை மூலமாக பிள்ளைகளது சமூகமயமாக்கல் செயல்பாடு சம்பந்தமாக நிகழும் மிகக்கூடிய தீமையான தாக்கம் எனக் கருதக்கூடியது.

1. பிள்ளைகளது ஒழுக்க விருத்திக்குத் தடையாக இருத்தல்.

2. பிள்ளையில் யாதர்த்த ரீதியிலான பகுப்பாராய்வு ஆசையை ஏற்படுத்துவதில் தடையாய் இருத்தல்.

3. பிள்ளைகளது ஆக்கத்திறனில் தடையாயிருத்தல்.

4. பிள்ளைகளுக்கு உண்மையான அனுபவத்தைப் பெறுவதில் உள்ள சந்தர்ப்பங்களைத் தடுத்தல்.

## 7.0 விடைகள்

1. 3
2. 1
3. 4
4. 1
5. 3
6. 2

## 8.0 ஒப்படைகள்

1. உங்கள் பாடசாலையில் கற்கும் பல்வேறு வயதினரான மாண வர் குழு 3ஐத் தெரிவு செய்க. ஒரு குழுவில் மாணவர் 15 பேர் இருத்தல் வேண்டும்.

2. அக்குழுக்களின் நூல் வாசித்தல்,பத்திரிகை வாசித்தல், தொலைக் காட்சி பார்த்தல், வானொலி கேட்டலில் உள்ள கவர்ச்சியை அளவிடுவதற்காக வினாக்கொத்தொன்றைத் தயாரிக்குக.

3. நீங்கள் தயாரித்த வினாக்கொத்தை மாணவரிடம் கொடுத்து விடை பெற்றுக் கொள்க.

4. பொருத்தமான முறையொன்றைப் பயன்படுத்தி மாணவரது விடையை மதிப்பீடு செய்து அதனடிப்படையில் நீங்கள் பெறக் கூடிய முடிவு அல்லது வழங்கக் கூடிய ஆலோசனைகளை கலந்துரையாடுக. இங்கு வயதுக் குழு அல்லது ஆண், பெண் வேறுபாட்டினடிப்படையில் வேறுபாடு காணப்படுகிறதா என அறிதல் பயனுடையது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.0 கலைச் சொற்றொகுதி.

| | |
|---|---|
| உப கலாசாரம் | - Sub Culture |
| இனங்காணல் | - Identification |
| இலக்கு | - Goal |
| ஊக்கல் | - Motivation |
| உண்மை | - Real |
| தொலைக்காட்சி ஊடகம் | - Television Media |
| சமூகமயமாக்கல் முகவர்கள் | - Agents of Socialization |
| சமவயதுக் குழுவினர் | - Peer Group |

## 10.0 மேலதிக வாசிப்புக்குரிய நூல்கள்


1. Musgave P.W — The Sociology of Education Methurn London and New York - 1983.
2. Nicholas Tucker — Understanding the Mass Media. Cambridge - Unipress 1968.
3. Curier Unesco — "Television in Focus" 1979 March
4. அரம்பன்ன, D — சமயக்கல்வி, கல்வி நூற்றாண்டு மலர் 3
5. எட்காபோர உட்பட்ட குழு - வாழ்வதற்கான கற்றல், 1978 — பக். 203
6. இலங்கைத் தொலைக்காட்சி - பொருளாதாரத் தீர்வு 1979, ஒக். நவம்பர், பக்கம் 308.


2) அ) [illegible]

ஆ) [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் அத்தியாயம்

## பாடசாலை ஒரு சமுகத் தொகுதியாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை ஒரு சமூகத் தொகுதியாக

உள்ளடக்கம் பக்கம்


1.0 அறிமுகம் .................................... 84

2.0 சிறப்பு நோக்கங்கள் .................................... 84

3.0 முற்சோதனை .................................... 85

4.0 பாடசாலை ஒரு சமூகத் தொகுதியாக .................................... 85

4.1 சமூகம், சமுதாயமும், கல்வியும் .................................... 85

4.2 பாடசாலை ஒரு சமூகத் தொகுதியாக .................................... 87

4.3 பாடசாலையின் முறைசார் அமைப்பு .................................... 88

4.4 பாடாசாலையினுள் காணப்படும் முறைமையற்ற சமூக ஒழுங்கமைப்புக்கள் .................................... 97

5.0 சாராம்சம் .................................... 102

6.0 பிற்சோதனை .................................... 102

7.0 விடைகள் .................................... 104

8.0 ஒப்படைகள் .................................... 104

9.0 கலைச்சொற்றொகுதி .................................... 105

10.0 மேலதிக வாசிப்புக்கான நூல்கள் .................................... 106


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1.0 அறிமுகம்

கல்விக்கும் சமூகத்துக்கும் இடையேயான நெருங்கிய தொடர்பு தொடர்பாகப் பல்வேறு தத்துவஞானிகள் கருத்துக்களைச் சமர்ப்பித்துள்ளனர் என்பதைக் கல்வியின் தத்துவார்த்த அடிப்படைகள் எனும் மொடியூலின் மூலம் நீங்கள் அறிந்திருப்பீர்கள். அவ்வாறே இலங்கையின் கல்வி தொடர்பான ஆலோசனைகளைச் சமர்ப்பிக்கும் 1981ஆம் வருட. கல்வி வெள்ளை அறிக்கையில் இடமாற்றங்கள்.. பிள்ளையின் வளர்ச்சி, முதலியன நெகிழ்ச்சியுடன் நிகழ இடமளித்து, அதனூடாகப் பிள்ளையைச் சமூகத்துக்கும், சமூகத்தின் யாதேனும் வேலைக்கும் பொருத்தமான ஒருவனாக ஆக்குதல்.! எனும் கூற்றின் மூலமும் கல்விக்கும் சமூகத்துக்கும் இடையே நெருங்கிய தொடர்பு காணப்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. அத்தோடு பாடசாலையை ஒரு சமூகத் தொகுதியாகக் கருத முடியுமா என்பது தொடர்பாக இவ்வத்தியாயத்தில் மேலும் ஆய்ந்தறியப்படுகின்றது. அத்தோடு, பாடசாலை ஒழுங்கமைப்பிலும், பாடசாலையிலும் காணப்படும் முறைசார்ந்த நிருவாக அமைப்பின் தன்மை பற்றியும், பாடசாலையினுள் காணப்படும் முறைமையற்ற ஒழுங்கமைப்புக்களுக்கும், பாடசாலை நிருவாகத்துக்கும் அதனால் ஏற்படக்கூடிய தாக்கங்கள் தொடர்பாகவும் இவ்வத்தியாயத்தின் மூலம் விளக்கப்படுகின்றது.

# 2.0 சிறப்பு நோக்கங்கள்

இவ்வத்தியாயத்தின் இறுதியில் பின்வரும் சிறப்பு நோக்கங்கள் ஏற்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

* பாடசாலையின் மூலம் எய்தப்பட வேண்டும் எனச் சமூகம் எதிர்பார்க்கும் கருமங்களை விளக்குதல்.
* அக்கருமங்களைச் சிறப்பாக நிறைவு செய்வதற்காகப் பாடசாலையுள் நல்லொழுங்கமைப்பு காணப்படல் வேண்டும் எனும் மனப்பாங்கைக் கட்டியெழுப்பிக் கொள்ளல்.
* ஒழுங்கமைப்பொன்றில் காணப்படவேண்டிய இயல்புகளையும், அதன் வெற்றிகரமான தன்மையில் பங்களிப்புச் செய்யும் கருமங்களையும் விளங்கிக் கொள்ளல்.
* பாடசாலையில் காணப்படும் முறைசார்ந்த அமைப்பை இனங்காணலும், பாடசாலைக்குப் பொருத்தமான விதத்தில் முறைசார்ந்த அமைப்பைக் கட்டியெழுப்பும் திறனைப் பெறலும்.
* பாடசாலையில் முறைசார் அமைப்பினுள் பல்வேறு தனியாட்களால் ஆற்றப்படவேண்டிய கருமங்களை வகைப்படுத்தக் கூடிய திறமையைப் பெறல்.
* மேற்படி முறைமையற்ற ஒழுங்கமைப்புக்கள், பாடசாலையில் உள்ள முறைசார்ந்த ஒழுங்கமைப்புக்களின்பால், உகப்பான விதத்திலோ, உகப்பற்ற விதத்திலோ தாக்கம் விளைவிக்கக்கூடும் என்பதை உணர்ந்து கொள்ளல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* பாடசாலையில் காணப்படும் அவ்வாறான முறைமை யற்ற ஒழுங்கமைப்புக்கள், முறைமைசார்ந்த ஒழுங்க மைப்பில் தாக்கம் விளைவிக்கக்கூடிய பல்வேறு வழி வகைகளைப் பகுப்பாய்வு செய்யக்கூடிய தன்மையைப் பெறலும், முறைமையற்ற ஒழுங்கமைப்புக்களைப் பாடசாலை நடவடிக்கைகளுக்குத் துணையாக ஆக்கிக் கொள்ளக்கூடிய விதத்தை விளங்கிக் கொள்ளலும்.

* பாடசாலையின் முறைமையான அமைப்பு தொடர் பான விளக்கத்தை ஆசிரியர்கள் பெறவேண்டியது அவசியம் என்பதை உணர்ந்து கொள்ளல்.

## 3.0 முற் சோதனை

பின்வரும் கூற்றுக்களின் எதிரே தரப்பட்டுள்ள சொற்களுள் பொருத்த மற்ற சொல்லைக் கீறிவிடுக.

(அ) பாடசாலையும், சமூகமும், முற்றிலும் ஒன்றிலிருந்தொன்று வேறு பட்ட இரண்டு தனியான ஒழுங்கமைப்புக்களாகும். (ஆம்/இல்லை)

(ஆ) பாடசாலையில் சமூக எதிர்ப்புக்கள் எய்தப்படல் வேண்டும். (ஆம்/இல்லை)

(இ) ஒவ்வொரு பாடசாலையிலும் ஒழுங்கமைப்பு காணப்பட வேண்டி யது அவசியமாகும் (ஆம்/இல்லை)

(ஈ) பாடசாலை ஒழுங்கமைப்பினுள் முறைமையான அமைப்பு காண ப்படுவது (அவசியமாகும்/அவசியமற்றதாகும்)

(உ) ஒவ்வொரு பாடசாலையிலும் முறைசார்ந்த அமைப்புக்களுடன் முறைமையற்ற ஒழுங்கமைப்புக்களும் கட்டியெழுப்பப்படும். (ஆம் / இல்லை)

(ஊ) உங்களது பாடசாலை மாணவருக்கிடையே முறைமையற்ற ஒழுங் கமைப்புக்கள் காணப்படுகின்றனவா? (ஆம்/இல்லை)

(எ) பாடசாலையில் காணப்படும் முறைமையற்ற ஒழுங்கமைப்புக்கள் பற்றி, அதிபரும், ஆசிரியர்களும் கவனஞ்செலுத்த வேண்டியது (அவசியமாகும்/அவசியமற்றதாகும்).

இவ்வத்தியாயத்தைக் கற்று முடிந்த பின்னர் நீங்கள் காட்டும் துலங்கல் களையும், மேலே நீங்கள் வழங்கிய துலங்கல்களையும் நீங்களாகவே ஒப்பிட்டுக் கொள்ளலாம்.

## 4.0 பாடசாலை ஒரு சமூகத் தொகுதியாக

### 4.1 சமூகமும், சமுதாயமும் கல்வியும்

பாடசாலையை ஒரு சமூகத் தொகுதியாக நோக்க முன்னர், சமூகம் என்பது யாது எனக் கவனித்தல் அவசியமாகும்.

கூட்டாக வசிக்கும் மனிதக் குழுவினரே பொதுவாக சமூகம் அல்லது சமுதாயம் (A Society or Community) என அழைக்கப்படுகின்றனர். இவ்விரு பதங்களும் பெரும்பாலும் ஒரே அர்த்தத்தில் பிரயோகிக்கப் பட்ட போதிலும், அவற்றுக்கிடையே வேறுபாடு பேணப்படுகின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என ஓட்டாவே எடுத்துக் காட்டியுள்ளார். குழுக்களின் ஒழுங்கமைப்புத் தன்மை, சமூக வாழ்க்கை தொடர்பாக அவர்களிடத்தே காணப்படும் உணர்வு ஆகியவற்றுக்கு அமைய இவ்வேறுபாடுகள் ஏற்படுகின்றன எனவும், விசேடமான நிலப்பரப்பைச் சேர்ந்திருத்தல், ஒரே வகையைச் சேர்ந்திருத்தல் ஆகியனவே சமூகத்துக்கும் சமுதாயத்துக்குமிடையிலான பொது இயல்புகளாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சமுதாயம் என்பது பரந்த அர்த்தத்தைக் கொண்டதாகும். சமூகம் என்பது குறித்த சிறப்பான சமுதாயத்தைக் குறிப்பதாகும். இது சமுதாயத்தை விடச் சிறப்பான தன்மையை உணர்த்தும் பதமாகும். ஆர். ஜா. கொலின்வுட் அவர்களின் கருத்துக்கு அமைய, "சமுதாயம் என்பது ஒரு குறித்த பிரதேசத்தில் வாழுகின்ற குறித்த பொதுச் சமூக முறையைச் சேர்ந்த சிறுவர்களையும் வளர்ந்தோரையும் சமூகமயமாக்கமடைந்த, சமூகமயமாக்கமடையாத அனைவருமேயாகும்." எனினும் அச்சமுதாயத்தினைச் சேர்ந்த ஒவ்வொருவரும், அதன் ஒழுங்கமைப்பை அல்லது நோக்கங்கள் பற்றிய விளக்கத்தைப் பெற்றிருக்கவும் கூடும் எனவும் அவர் குறிப்பிடுகின்றார். (உ-ம்) சிறுவர்கள், சமுதாயத்தைச் சேர்ந்தோராயிருப்பினும் அவர்கள் சமுதாயத்தின் அங்கத்தவர்களாக் கருதப்படாமைக்கான காரணம், அவர்களுக்குச் சமூக அறநெறிகள், விழுமியங்கள், அதன் தொழிற்பாடு, என்பன பற்றியோ முழுமையான பிரசையாக, அவர்களின் பொறுப்புக்கள், உரிமைகள் என்பன பற்றிய விளக்கமோ காணப்படாமையாகும்.

அவ்வாறாயின் "சமூகம்" என்பது முற்குறிப்பிட்ட பரந்த சமுதாயத்தில், சமூக விழுமியங்கள், பொறுப்புக்கள், கடமைகள் ஆகியன தொடர்பான பூரண விளக்கத்தைக் கொண்ட சமூக உணர்வைக் கொண்ட பிரிவினராகும் எனக் குறிப்பிடலாம்.

கல்விமுறை சமூகத்தின் ஊடாகவே, தோன்றுகின்றது. அது சமூகத்துள் தொழிற்படுவதோடு, அதன் நோக்கங்கள் முறைகள், நிறுவனங்கள், நிருவாகம், கலைத்திட்டம் ஆகியன அச்சமூகத்தின் தன்மைக்கு ஏற்பவே தீர்மானிக்கப்படும். எனவே கல்விக்கும், சமூகத்துக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. **சமுதாயத்தின் அங்கத்தவர்களான இளஞ்சந்ததியினரைச் சமூகத்தின் அங்கத்தவர்களாகத் தயார்ப்படுத்தும் கருமத்தின் போது கல்விக்கே முதலிடம் கிடைக்கப்பெறுகின்றது.**

**தொழிற்பாடு 1**

(1) நீங்கள் கடமையாற்றும் பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை, அயற்சமுதாயத்தினர் ஆகியோரைத் துணையாகக் கொண்டு பின்வரும் தகவல்களைச் சேகரிக்க.

(2) இதற்காகப் பாடசாலையின் வெவ்வேறு பிரிவுகளும், வகுப்புக்களும், பிரதிநிதித்துவப்படுத்தப்படும் வண்ணம் (ஏறத்தாழ 25 பேரைக் கொண்ட) மாணவர் மாதிரியையும் வெவ்வேறுபட்ட (ஏறத்தாழ 10) கல்வி மட்டங்களும் பாடங்களும் பிரதிநிதித்துவப்படுத்தப் படும் வண்ணம் ஆசிரியர் மாதிரியையும், சமுதாயத்தின் வெவ்வேறுபட்ட (ஏறத்தாழ 25) பிரிவுகள் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் வண்ணம் சமுதாய மாதிரியையும் பயன்படுத்துக.

(உங்களது பாடசாலை, அயற் சமுதாயத்தின் தன்மை ஆகியவற்றுக்கு ஏற்ப, மாதிரியின் எண்ணிக்கையை மாற்றியமைத்துக் கொள்வதில் தவறில்லை.)

(3) பாடசாலையினால் ஆற்றப்பட வேண்டும் என அவர்கள் எதிர்பார்க்கும் கருமங்கள் தொடர்பான தகவல்களைச் சேகரிக்க.

(தகவல்களைச் சேகரிப்பதற்காக, நேர்முகக் கலந்துரையாடல்கள், வினாக்கொத்துக்கள் போன்ற முறைகளைப் பயன்படுத்துக.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) நீங்கள் சேகரித்த தகவல்களை பொருத்தமானதென நீங்கள் கருதும் ஒரு விதத்தில் அல்லது பின்வரும் விதத்தில் வகைப்படுத்துங்கள்.

1. கல்வி சார்ந்த
2. அரசியல்
3. சமூக
4. பொருளாதார
5. கலாசார
6. பிற

உங்கள் பாடசாலையின் அயற் சமூகம், உங்கள் பாடசாலையிலிருந்து எவற்றை எதிர்பார்க்கின்றது என்பது தொடர்பாக போதிய விளக்கம் இதன் மூலம் உங்களுக்குக் கிடைக்கப்பெறும்.

(2) இச்செயற்பாட்டின் மூலம் சேகரிக்கும் தகவல்களை செயலமர்வின் போது உங்களது ஆலோசகருடனான கலந்துரையாடலின்போது வெளிக் கொணரப்படும் தகவல்களுடன் ஒப்பிடுக.

## 4.2 பாடசாலை ஒரு சமூகத் தொகுதியாக

"...........கல்வி நிலையம் அதாவது பாடசாலை, தனது சொந்தக் கலாசாரத்தைப் பேணிச் செல்கின்ற ஒரு மத்திய நிலையமாக சமுதாயத்தினால் ஆக்கப்பட்ட பிரதானமான நிறுவனமாகும்......2

(ஜயசேக்கர யூ.டீ. கல்வியும் சமூகமும்.)

கல்வி தொடர்பான மேற்குறிப்பிட்ட பாரிய பொறுப்பை ஆற்றுவதற்காகச் சமூகத்தினால் ஏற்படுத்தப்பட்ட நிறுவனமே பாடசாலையாகும் என்பது இதிலிருந்து தெளிவாகின்றது.

பாடசாலை, **அதனைச் சூழவுள்ள பரந்த சமூகத்துள், அதற்கெனவே விசேடமான,ஒழுங்கமைப்பொன்றினைக் கொண்ட, சிறியதொரு சமுதாயமாக அல்லது சமூகக் குழுவாகக் கரும மாற்றுகின்றது.** சில சந்தர்ப்பங்களில், பாடசாலை ஒரு சமூகமாகக் கருதப்பட்ட போதிலும், சமூகம் என்பதன் உண்மையான பொருளைக் கருதுகையில், அது தவறானது என்பதும், அதன் அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும், சமூகத்தின் பூரணமான அங்கத்தவர்களாகக் காணப்படாமையால் அதனை ஒரு சமூகமாக அன்றி ஒரு சமுதாயமாகக் கருதுவதே பொருத்தமானது என ஒட்டாவே காட்டியுள்ளார்.

பெரிய பிரித்தானியாவின் கல்வி முறை தொடர்பான பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள, "ஸ்பென்ஸ்" அறிக்கையிலும், பாடசாலை என்பதும், ஒரு சமூக அலகாக அல்லது விசேட வகையைச் சேர்ந்த ஒரு சமூகமாகவோ குறிப்பிடப்பட்டுள்ளது. "..தற்போதைய பாடசாலையானது கல்வி நிலையமாக மட்டும் கருதப்படுவதில்லை. அது வளர்ந்தோர், இளம் அங்கத்தவர்கள், மாணவர்கள், கற்பிப்போர் ஆகியோரைக் கொண்ட பல்வேறு விதத்தில் பாரபட்சமும் ஒத்துழைப்பும் காட்டப்படும் ஒழுங்கமைப்பொன்றுக்கு அமைவான ஒன்றியவாழ்வுடன் கருமமாற்றுகின்றதுமான ஒரு சமூக அலகாகும். அல்லது விசேட வகையைச் சேர்ந்த சமூகமாகும்......(3)

ஐவர் மொரிஸ் (4) என்பாரும், பாடசாலையை ஒருவித சமூகமாகக் கருதலாம் எனக் குறிப்பிட்டுள்ளார். அதில் அங்கத்தவர்கள் காணப்படுகின்றனர். அதன் மூலம் எதிர்பார்க்கப்படும் குறித்த நோக்கங்களும் உள்ளன. அவற்றை எய்துவதில் அர்ப்பணிப்புடன் கருமமாற்றும் அதிபரும் ஆசிரியர் குழுவினரும் உள்ளனர். அதன் அங்கத்தவர்களாகிய மாணவர்களால் விளங்கிக் கொள்ள வேண்டிய ஒழுக்க நெறிக் கோவையொன்றும் அங்கு காணப்படுகின்றது. இதற்கு அமைய, பாடசாலையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னது, பரந்த சமூகத்தைச் சேர்ந்த, கூட்டிணைக்கப்பட்ட ஒரு ஒழுங்கமைப்பாகக் காணப்படவேண்டும் என மொரிஸ் கருதுகிறார். பாடசாலை புறச் சமூகத்துடன் பரஸ்பர தொடர்பைக் கொண்ட ஒற்றுமையான நிறுவனமொன்றாகக் கருதியே அது கருமமாற்றுதல் வேண்டும். சில பாடசாலைகள் தனித்து இயங்கிய போதிலும், சமூகத்துக்கும், பாடசாலைக்கும் இடையே பல தொடர்புகள் நிலவுகின்றதென மொரிஸ் மேலும் குறிப்பிடுகின்றார்.

**பாடசாலையானது முழுச் சமூகத்திலிருந்தும் தோன்றி, அதனுள்ளேயே செயற்படும், அதனுடன் ஒன்றிணைந்த, ஆனால் அதற்கெனவேயுரித்தான ஒழுங்கமைப்பைக் கொண்ட உறுதியான ஒரு தொகுதியாகும் என்பதே இக்கருத்துக்களின் மூலம் தெளிவாகின்றது.**

சுற்றாடலுடன் கொண்டுள்ள இடைவீடற்ற தொடர்புகளின் மீது, அத் தொகுதியின் நிலவுகை தங்கியிருக்கின்றமையே தொகுதியொன்றின் அடிப்படை இயல்பாகும். அவ்வாறெனின் பாடசாலை எனும் தொகுதியின் நிலவுகைக்காக, அது இடம்பெறுகின்ற சுற்றாடலான, பரந்த சமூகத்தின் தேவைகளுக்கும் எதிர்பார்ப்புக்களுக்கும் இயையக் கூடியவாறு, பாடசாலையின் தொழிற்பாடு, ஒழுங்கமைக்கப்படல் வேண்டியுள்ளது. தொகுதியானது அதன் சுற்றாடலுடன் இடைத் தொழிற்பாடுகளைக் கொண்டுள்ளமையே இதற்கான காரணமாகும்.

செயற்பாடு 2

(1) 1. செயற்பாடு - 1 இல் நீங்கள் சேகரித்த தகவல்களுக்கு அமைய அயற் சமூகம் உங்களது பாடசாலையிடமிருந்து எதிர்பார்க்கும் கருமங்கள் எந்த அளவுக்கு ஆற்றப்படுகின்றன என்பதை ஆராய்ந்தறிக.

2. அவ்வாறாக ஆற்றப்படாத நிறைவு செய்யப்படாத நோக்கங்கள் இருப்பின், அவற்றை எய்துவதற்காக உங்கள் பாடசாலையினால் மேற்கொள்ளக்கூடிய வழிவகைகள் யாவை எனப் பிரேரிக்க.

(2) உங்களது பாடசாலைக்கும் அயற் சமூகத்துக்கும் இடையே நிலவும் பரஸ்பரத் தொடர்புகள் பற்றிய பட்டியலொன்றினைத் தயாரிக்க.

## 4.3 பாடசாலையின் முறைசார் அமைப்பு

சமூகத் தொகுதியாகப் பாடசாலை நிலைத்திருக்க வேண்டுமெனின், அதில் சிறப்பான ஒழுங்கமைப்பு காணப்படல் வேண்டும் என முன்னர் குறிப்பிடப்பட்டது. ஒழுங்கமைப்பு என்றால் என்ன என்பது பற்றிய விளக்கத்தைப் பெறாது, பாடசாலையின் ஒழுங்கமைப்பு, அமைப்பு தொடர்பான விடயங்களைச் சமர்ப்பிப்பது பொருத்தமற்றதாகும். எனவே ஒழுங்கமைப்பு என்றால் என்ன என்பதை முதலில் கவனிப்போம்.

### ஒழுங்கமைப்பு என்பது யாது?

**ஒழுங்கமைப்பு என்பது "குறித்த நோக்கத்தை அல்லது நோக்கங்களை எய்துவதற்காக, தனியாள்கள் இருவர் அல்லது பல தனியாள்கள் ஒன்று சேர்ந்து, ஆற்றும் பல கருமத்தொடர்களதும் பல நடிப்பங்குகளினதும் ஒன்றிணைக்கப்பட்ட கூட்டுமொத்தமான கோலமாகும்", எனக் குறிப்பிடலாம்.**

ஒழுங்கமைப்பொன்றில் காணப்படவேண்டிய அடிப்படை அம்சங்கள் பற்றியும் ஒழுங்கமைப்பின் செயற்றிறனில் பங்களிப்புச் செய்யும் காரணிகள் பற்றியும் கல்வி முகாமைத்துவம் தொடர்பான மொடியூல்களின் மூலம் நீங்கள் அறிந்து கொள்ளலாம்.. செயலமர்வின் போது உங்களது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலோசகருடன் மேற்படி விடயங்களைக் கலந்து உரையாடுவதன் மூலமும் விடயங்களைப் பெற்றுக் கொள்ளலாம். எனவே இங்கு, பாடசாலை ஒழுங்கமைப்பின் அடிப்படை அம்சங்கள் தொடர்பாக மட்டுமே கவனஞ்செலுத்தப்படுகிறது.

பாடசாலை ஒழுங்கமைப்பு

பரந்த சமூகத்தின் நோக்கங்களை எய்துவதற்காகக் கருமமாற்றுகையில் பாடசாலையினால் பின்பற்றப்பட வேண்டிய பின்பற்றக்கூடிய மேற்கொள்ளக் கூடிய பல கருமத் தொடர்கள் காணப்படுகின்றன. இக்கருமத் தொடர்களின் வெற்றி அல்லது தோல்வியானது அவையனைத்தையும் கூட்டாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்ட பாடசாலை ஒழுங்கமைப்பின் தன்மையிலேயே தங்கியுள்ளது.

பாடசாலை நிருவாகத்தை எளிதாக்கும் முறைசார்ந்த நிருவாக அமைப்பே, பாடசாலை ஒழுங்கமைப்பில் இடம்பெறும் அம்சங்களுள் மிக முக்கியமானதும், பிரதானமானதுமான அம்சமாகும்.

முறைமையான நிருவாக அமைப்பு

பாடசாலையின் நிருவாக நடவடிக்கைகளுக்காக, இலங்கைப் பாடசாலைகளில் பொதுவாகக் காணப்படுகின்ற முறைசார்ந்த நிருவாக அமைப்பு கீழே தரப்பட்டுள்ளது.

**கல்வி அமைச்சு - கல்விச் செயலாளர்**

**பிராந்தியக் கல்வி அலுவலகம் - பிராந்தியக் கல்விப் பணிப்பாளர்/ பிரதம கல்வி அதிகாரி.**

|

**அதிபர்**

|

**உப அதிபர்**

|

**பிரிவுத் தலைவர்கள்**
**(ஆரம்ப, கனிட்ட, இடைநிலை, சிரேட்ட நிலை, கல்லூரி நிலை)**

|

**பாடத் தலைவர்கள்**

|

**தரத் தலைவர்கள்**

|

**தரங்களுக்குப் பொறுப்பான ஆசிரியர்கள் (வகுப்புப் பொறுப்பாசிரியர்)**

|

**மாணவர் தலைவர்கள்**

|

**வகுப்புத் தலைவர்கள்**

|

**மாணவர்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் இலங்கையின் ஒவ்வொரு பாடசாலையிலும் இம்முறை கையா ளப்படுகின்றதென்பது இதனால் கருதப்படவில்லை. ஒவ்வொரு பாடசா லையினதும் விசாலம், ஆசிரியர் தொகை, பாடசாலையின் வசமுள்ள மனித, பௌதிக வளங்கள், அதிபரின் கருத்துக்கள், மனப்பாங்குகள் பாடசாலை அமைந்துள்ள பிரதேசம், பெற்றோரதும் அயற் சமுதாயத் தினரதும் நோக்கங்கள், மனப்பாங்குகள் ஆகிய பல்வேறு காரணிகளின் மீது முறைசார்ந்த அந்நிருவாக அமைப்பில் பல்வேறு மாற்றங்கள் ஏற்ப டலாம்.

மேலே தரப்பட்ட உதாரணத்துக்கு அமைய, நிருவாக நடவடிக்கைகளின் தலைவர் **அதிபராவார்**. நிருவாகத்தை இலகுவாக்கும் பொருட்டு, உப அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். பாடசாலையினுள் நிருவாகக் கருமங்களின் தலைவர், அதிபராக இருப்பினும் கூட, அதற்கு அப் பாற்பட்ட விதத்தில் பாடசாலையின் முறைசார்ந்த ஒழுங்கமைப்பில் கல்வி அமைச்சும், பிராந்தியக் கல்வித் திணைக்களமும் பங்களிப்புச் செய்கின்றன. உப அதிபரின் கீழ், வெவ்வேறு பிரிவுகளுக்குப் பொறுப் பான, பிரிவுத் தலைவர்கள் கருமமாற்றுகின்றனர். சில பாடசாலைக ளில் ஒரே பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் பலர் காணப்படும் போது அப்பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவரும் **பாடத்துக் குப் பொறுப்பான தலைவர்** ஒருவரின் கீழ் ஒழுங்கமைக்கப்படுவர். அப்பாடத்தைக் கற்பிப்பது தொடர்பான வசதிகள், குறைபாடுகள், பிரச் சினைகள் போன்றவை பற்றி ஆய்ந்தறிதல், முடிவெடுத்தல் என்பன பாடத்துக்குப் பொறுப்பான தலைவரால் மேற்கொள்ளப்படும். சில பாடசாலைகளில் ஒரே தரத்தைச் சேர்ந்த பல சமாந்தர வகுப்புக்கள் காணப்படுவதுண்டு. உம்: ஆண்டு 6 அ, ஆ, இ, ஈ என்றவாறு பல வகுப்புக்கள் காணப்படலாம். இவ்வாறான சந்தர்ப்பங்களில் அவ்வெல் லாத் தரங்களிலும் கருமங்களை ஒன்றிணைப்பதற்காக தரங்களுக்குப் பொறுப்பான தலைவர்கள் நியமிக்கப்படுவர். இது தவிர்ந்த விடத்து, ஒவ்வொரு வகுப்புக்கும் பொறுப்பாக ஒவ்வொரு ஆசிரியர் வீதம் நிய மிக்கப்படுவர். அவர்கள் **வகுப்புப் பொறுப்பாசிரியர்களாவர்**. ஒவ் வொரு வகுப்பிலும் அன்றாட நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல், நிர்வகித்தல் ஆகியன தொடர்பான சில பல அதிகாரங்கள் வகுப்புப் பொறுப்பாசிரியர்களிடம் ஒப்படைக்கப்படும். அவ்வகுப்பாசிரியர்களின் தலைமையில், **மாணவர் தலைவர்களும், வகுப்புத் தலைவர்களும்** சில கருமங்களை ஆற்றுவர். மாணவர்க்காகப் பாடசாலையினால் ஆற் றப்பட வேண்டிய கருமங்களை உரிய விதத்தில் ஆற்றுவதற்காகவே இந்நிருவாக அமைப்பு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

தொழிற்பாடு 3

1. நீங்கள் கற்பிக்கும் பிரதேசத்தில் காணப்படுகின்ற பெருந்தொகை யான மாணவர்களைக் கொண்ட ஒரு பாடசாலையினது முறைமை சார்ந்த நிருவாக ஒழுங்கமைப்பின் அமைப்பைப் பாய்ச்சற் கோட்டுப் படம் மூலம் காட்டுக.


2. உங்களது பாடசாலையில் உள்ள கொத்தணி மூலாதாரப் பாடசா லையின் முறைசார்ந்த நிருவாக அமைப்பை ஆய்க.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெவ்வேறு வகைப்பட்ட பாடசாலைகளில் காணப்படக்கூடிய முறை சார்ந்த நிருவாக அமைப்புக்கள் வருமாறு.

A - சிறிய ஆரம்பப் பாடசாலையின் ஒழுங்கமைப்பு





B - பெரிய ஆரம்பப் பாடசாலையொன்றின் ஒழுங்கமைப்பு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பப் பிரிவுடன் ஆண்டு 6 - 11 வரையிலான வகுப்புககளைக் கொண்ட பாடசாலையினி ஒழுங்கமைப்பு





பல பாடசாலைத் துறைகளையும் பல சமாந்தர வகுப்புக்களையும் கொண்ட பாட வெளிவேலைகள் ஆகியன இடம்பெறுகின்ற பாடசாலையொன்றின் நிருவாக அமைப்பு இதனைவிடச் சிக்கலான தன்மையைக் கொண்டிருக்கும். கற்பனையான ஓர் உதார ணம் கீழே தரப்பட்டுள்ளது.

ஆரம்ப வகுப்புக்களையும் ஆண்டு 6-8 வரையிலான வகுப்புக்களையும் கொண்ட பெரிய பாடசாலையொன்றின் ஒழுங்கமைப்பு







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பாடசாலையின் முறைமைசார்ந்த நிருவாக அமைப்பு தொடர்பாகக் கவனிக்கையில், நிருவாகக் கருமத்தில் துணையாக அமையும் மற்றுமோர் அம்சம் காணப்படுவதை அறிய முடிகிறது. துணைக் கருமக் குழுவே அதுவாகும். பெரிய பாடசாலைகளில் துணைக்கருமக் குழு ஒழுங்கமைப்பு அமைப்பைக் காணலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இவ்வாறான விசேடமான ஒழுங்கமைப்பு காணப்படும் வேளைகளில் அப்பிரிவு, தனியான உப அதிபர் (நிருவாகம்) ஒருவரின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள விதத்தை நீங்கள் முன்னர் தரப்பட்ட உருவின் மூலம் விளங்கிக் கொண்டிருப் பீர்கள். ஈற்றில் இவர்கள் அனைவரும் அதிபருக்குப் பொறுப்புடையவர்களாக இருத்தல் வேண்டும்.

சில பாடசாலைகளில் பாடவெளிவேலைகளைச் சிறப்பாக நடத்துவதற்காக அவ்வகுப்புக்களிலும் விசேடமான ஒழுங்கமைப்பு அமைப்பு கட்டியெழுப்பப் பட்டுள்ளமையைக் காணலாம். அதற்கான கற்பனையான ஓர் உதாரணம் கீழே தரப்பட்டுள்ளன.

## இல்ல முறை






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. விளையாட்டுப் பிரிவு

அதிபர்

உப அதிபர்- (பாடவெளி வேலைகள்)

விளையாட்டுப் பிரிவுத் தலைவர்

அவ்வவ் விளையாட்டுகளுக்குப் பொறுப்பான ஆசிரிய ஆசிரியைகள்

விளையாட்டுத் தலைவர்கள்/தலைவிகள்

விளையாட்டு வீரர்கள் (மாணவ மாணவிகள்)

அத்தோடு பாடசாலையுள் காணப்படக்கூடிய மற்றும் பல முறைசார் ஒழுங்கமைப்புக்கள் காணப்படுகின்றன.

1. சமய ஒழுங்கமைப்புக்கள்
2. சுகாதார ஒழுங்கமைப்புக்கள்
3. பழைய மாணவர் ஒழுங்கமைப்புக்கள்
4. கடேற் வீரர் ஒழுங்கமைப்புக்கள்
5. சேமிப்போர் சங்கம்
6. நலன்புரிச் சங்கங்கள் - (மாணவர்-ஆசிரியர்)
7. கலை வட்டங்கள்
8. பாடசாலை அபிவிருத்திச் சங்கம் போன்றன.

இவையும் முறைசார்ந்த விதத்தில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதோடு, பாடசாலையின் நோக்கங்களை எய்துவதற்கும், நிருவாக நடவடிக்கைகளின் போது செயற்றிறனைப் பேணுவதற்கும் உதவுவனவாகவும் உள்ளன. இவ்வொழுங்கமைப்புக்களும், முறைசார் நிருவாக அமைப்பினுள் உள்ள குறித்த பதவியொன்றின் கீழ் அமைக்கப்பட்டிருக்கும். ஈற்றில் இவையனைத்தும் அதிபரின் அதிகாரத்தின் கீழ் இடம்பெறல், பாடசாலை ஒழுங்கமைப்பில் காணப்படுகின்ற விசேடமான ஒரு பண்பாகும்.

பாடசாலை ஒழுங்கமைப்பில், மேலே விளக்கப்பட்ட முறைசார்ந்த நிருவாக அமைப்பு மட்டுமன்றிக் கீழ் தரப்பட்டுள்ள அம்சங்களும் சேர்கின்றன என ஒலிவ் பான்க் (6) குறிப்பிடுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. கற்றற் கருமத்தொடரை ஒழுங்கமைத்துள்ள விதம்..

இது பல பிரிவுகளாக் கொண்டது.

1. தரங்களைக வகுத்தல் (Grading)

2. திறமைக்கு ஏற்ப வகைப்படுத்தல் (Streaming)

3. அவ்வப் பாடங்களில் காட்டும் திறமைக்கு ஏற்ப வரிசைப்படுத்தல் (Setting)

4. பாடநெறிகளுக்கு அமையப் பல்வேறு துறைகளாக வகைப்படுத்தல் (Tracking) உ-ம்: கலை, விஞ்ஞானம்.

**2. பாடசாலையின் விசாலம், வகுப்பின் பருமன்**

(சிறு குழுக்களா அல்லது பெரிய குழுக்களா என்பது)

3. பாடசாலையின் வசமுள்ள நிதி வளங்களும் பௌதிக வசதிகளும்.

4. பாடசாலையில் உள்ள முறைமையற்ற சமூக ஒழுங்கமைப்புக்கள் (Informal Social Organizations in the School)

டப்ளிவ். எம். ரய்பர்ன் (7) என்பார், பாடசாலையின் ஒழுங்கமைப்பு பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"............. பாடசாலையின் ஒழுங்கமைப்பு என்பது பாடசாலையின் நேர சூசி, கலைத்திட்டம், பாடத்திட்டங்கள், பதிவேடுகள், கட்டடங்கள் ஆகிய வற்றை முறையாகப் பேணி வைத்திருத்தல் மட்டுமல்ல. இவற்றோடு, நாம் மேற்கொள்ளும் கருமத் தொடரும், எம்முடன் தொழிற்படும் ஏனையோர் தொடர்பாக நாம் கொண்டிருக்கும் மனப்பாங்குகளும் முக்கியமானவையாக அமைகின்றன"

எமது கருமத் தொடரின் நோக்கம் பற்றியும் நாம் கற்பிக்கும் மாணவர்கள் பற்றியும் விசேடமாகக் கவனித்தல் வேண்டும்....... பாடசாலையானது முதன் முதலாகவும், பிரதானமாகவும், ஒத்துழைப்புடன் கருமமாற்றுகின்ற ஒரு சமூகமாக அமைதல் வேண்டும். அதனுள்.

அதிபர் - ஆசிரியர் ஒத்துழைப்பு<br>
ஆசிரியர் - ஆசிரியர் ஒத்துழைப்பு<br>
அதிபர் - மாணவர் ஒத்துழைப்பு<br>
மாணவர் - மாணவர் ஒத்துழைப்பு<br>
பாடசாலை -பெற்றோர் ஒத்துழைப்பு என்பன காணப்படல் வேண்டும்.

இவ்வாறான ஒத்துழைப்புடன் கூடிய சமூகத்தின், நெகிழ்ச்சியுடைய, செயற்றிறனுடைய தொழிற்பாட்டுக்கும் நிலவுகைக்கும் பங்கம் ஏற்படாதவாறு அதனுள் உள்ள மற்றைய அனைத்துக் காரணிகளையும் ஒழுங்கமைத்தல் வேண்டும்.

"பொறிமுறை ரீதியிலான ஒழுங்கமைப்பில், தனியாள்களுக்கிடையிலான விளக்கமும் தொடர்பும் இன்றிப் போகலாம். என்னும் இவ்விளக்கமும் தொடர்பும் அத்தியாவசியமானவையாகும்...."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரய்பர் அவர்களின் மேற்படி கூற்றுக்கு அமைய, பாடசாலை ஒழுங்க மைப்பில் கவனஞ் செலுத்த வேண்டிய மிக முக்கியமான ஓர் அம்சம் தெளிவுபடுத்தப்படுகின்றது. **தனியாள்களுக்கிடையிலான இடைத் தொடர்பு இன்றிப் போய்விடின், அல்லது உகப்பற்றதாகக் காணப்படின், முறைசார்ந்த நிருவாக அமைப்பை எவ்வளவு சிறப்பாக ஒழுங்கமைத்த போதிலும் நடைமுறைப்படுத்துகையில் அது தோல்வியடையக் கூடும் என்பதே அதுவாகும்.** நிருவாக அமைப்பினுள் அதிபருக்கும் ஆசிரியருக்கும் இடையிலும், ஆசிரியருக்கும் ஆசிரியைகளுக்கும் இடையிலும் ஆசிரியர்க்கும், மாணவருக்கும் இடையில் உகப்பான இடைத் தொடர்புகளும் ஒத்துழைப்பும் காணப்படல் வேண்டும்.

தொழிற்பாடு 4

(1) 1. நீங்கள் கற்பிக்கும் பாடசாலையில் காணப்படும் முறைசார்ந்த ஒழுங்கமைப்பு அமைப்பைத் தருக.

2. அவ்வொழுங்கமைப்பினுள் செயற்படும் தனியாள் இடைத்தொடர்பு வகைகள் யாவை?

3. ஒவ்வொரு தனியாள் குழுவையும் சேர்ந்தோரில் குறைந்த பட்சம் மூன்றுபேர்களுடன் கலந்துரையாடி, பாடசாலை ஒழுங்கமைப்பினுள் காணப்படும் தனியாள் இடைத் தொடர்புகளின் தன்மை பற்றிய கருத்துக்களைப் பெற்றுக் கொள்க.

4. (அ) அத்தொடர்புகள் உகப்பற்றதாகக் காணப்படின், அதனை விருத்தி செய்துகொள்வதற்காக மேற்கொள்ளக்கூடிய வழி வகைகளைக் குறிப்பிடுக.

(ஆ) அத்தொடர்புகள் உகப்பானவையாக இருப்பின் அவற்றால், நிருவாகத்திற்குக் கிடைக்கப்பெற்றுள்ள நன்மைகளை எடுத்துக் காட்டுக.

## 4.4 பாடசாலையினுள் காணப்படும் முறைமையற்ற சமூக ஒழுங்கமைப்புக்கள்

மேலே குறிப்பிடப்பட்ட முறைகள் ஒழுங்கமைப்பு தவிர்ந்த விடத்து, பாடசாலையினுள், **பல்வேறு வகைப்பட்ட முறைமையற்ற சமூக ஒழுங்கமைப்புக்களும், கட்டியெழுப்பப்படுகின்றன.** கருத்துக்கள், விருப்பு வெறுப்புக்கள், மனப்பாங்குகள், ஆர்வங்கள் போன்றவற்றைப் பொறுத்த மட்டில், தனியாள்களுக்கிடையே ஒற்றுமைகளும் வேற்றுமைகளும் காணப்படக்கூடுமாகையால்,முறைமையான ஒழுங்கமைப்பினுள் பல்வேறு கருமங்களில் ஈடுபடும் தனியாள்களுக்கிடையேயும் வெவ்வேறான குழுக்கள் தோன்றுவது இயற்கையான ஒரு தன்மையாகும். முறைசார்ந்த ஒழுங்கமைப்பு, எவ்வளவு சிறப்பாக அமைக்கப்பட்ட போதிலும் எந்தளவு செயற்றிறனுடன் செயற்பட்ட போதிலும், அவ்வொழுங்கமைப்பினுள்ளேயே தனியாள்களுக்கிடையே தொடர்புகள் கட்டியெழுப்பப்படுகின்றமையால், முறைமையற்ற ஒழுங்கமைப்புக்கள் தோன்றுவது தவிர்க்க முடியாததொன்றாகும். இவ்வாறான முறைமையற்ற ஒழுங்கமைப்பில், தனியாள்கள் சேர்க்கப்படலானது, குறித்த சட்டதிட்டங்களுக்கோ ஒழுங்கமைப்புகளுக்கோ அமைய நிகழுவதில்லை. அவ்வாறே அதில் அங்கத்துவ உறுதிப்பாடும் கிடையாது. இவற்றின் அங்கத்தவர்கள் தாமாகவே சேர்ந்து கொண்டோராவர். இவற்றின் ஒத்துழைப்புத் தன்மை மிக உயர்வானது. **இவ்வொழுங்கமைப்பினுள் பரஸ்பர இணக்கமும், மதித்தலும், சுதந்திரமும் காணப்படும். பெரும்பாலும் கலந்துரை யாடல்கள் மூலமே முடிவெடுக்கப்படும்.** இக்குழுவினுள் ஆராய்வுக்கு இடமுண்டு. எனவே முறைமையற்ற, ஒழுங்கமைப்புக்கள், சிலவேளைகளில், முறைசார்ந்த ஒழுங்கமைப்புக்களை விட வலிமைமிக்கவையாகக் காணப்படும். முறைமை சார்ந்த ஒழுங்கமைப்பிற்குரிய அதிகாரம், தலைமைத்துவம், செயற்றிறன், ஆதிக்கம் என்பன இவ்வொழுங்கமைப்பிலும் காணப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையினுள் காணப்படும் முறைமையற்ற சில சமூக ஒழுங்கமைப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1. மாணவ சமவயதுக் குழுவினர்.

2. நட்புடைய ஆசிரியர் குழுக்கள்.

3. கலாசார இயல்புகளின் அடிப்படையில் முறைமையற்ற விதத்தில் தோன்றிய குழுக்கள்.

4. ஊழியர்களின் தோழமைக் குழுக்கள் போன்றன.

இவ்வாறான முறைமையற்ற ஒழுங்கமைப்புக்கள் தோன்றுதற்கு ஏதுவாக அமையும் சில காரணிகள் வருமாறு:

1. சம வயதுடையவர்களாகக் காணப்படல்.
   உம்: சமவயதுக் குழுவினர்.

2. மாணவர்கள் தரப்படுத்தப்பட்டுள்ள விதத்துக்கு அமைய:
   உம்: ஒவ்வொரு வகுப்பினுள்ளும், ஆசிரியர்களால் கல்விக் கருமத்தை இலகுவாக்குவதற்காகத் தயார்ப்படுத்தப்பட்ட குழுக்கள் தவிர்ந்தவிடத்து, பல்வேறு ஆர்வங்களின் அடிப்படையில், மாணவர்களால் கட்டியெழுப்பப்பட்ட குழுக்களும் உள்ளன.

3. வெவ்வேறு பாடநெறிகளுக்கு அமைய:
   க.பொ.த. உயர்தர, -கலை, விஞ்ஞானம், வர்த்தகம், மனையியல் என்ற வாறு வேறாக்கியமையால், அவ்வொவ்வொரு பிரிவினுள்ளும் முறையற்ற குழுக்கள் காணப்படலாம்.

4. பாடவெளிவேலைகளின் ஒழுங்கமைவுக்கு அமைய:
   உம்: இல்ல நடவடிக்கைகள், சாரண நடவடிக்கைகள் போன்றன..

5. தொழில்சார் கருமங்களுக்கு அமைய:
   உம்: சிற்றூழியர், எழுதுவினைஞர் போன்ற பல்வேறு மட்டங்களைச் சேர்ந்த முறைமையற்ற ஒழுங்கமைப்புக்கள்.

6. ஒரே சூழலில் வாழ்தல்

7. ஒத்த விருப்பு வெறுப்புக்களை, ஆர்வங்கள் சமய நம்பிக்கைகள் ஆகியவற்றுக்கு அமைய.

8. ஒத்த சமூக மட்டத்தைச் சேர்ந்திருத்தல்.
   உம்:வெவ்வேறு சாதி, குல, அரசியல் கருத்துக்களுக்கு அமைய

9. நிருவாகிகளின் அதிகாரத்தன்மைக்கு அமைய:
   உம்: அதிபர் சர்வாதிகாரியாக இருபின் அதற்கு எதிராக, முறைமையற்ற ஒழுங்கமைப்புக்கள் கட்டியெழுப்பப்படும்.

10. அங்கத்தவர்களின் பரஸ்பர தேவைகளை நிறைவு செய்வதற்காக.

தொழிற்பாடு 5

(1) 1. உங்களது பாடசாலையில் முறைமைகள் ஒழுங்கமைப்பு தவிர்ந்தவிடத்து, காணக்கூடிய முறைமையற்ற சமூக ஒழுங்கமைப்புக்கள் பற்றி ஆய்ந்தறிக.

2. அவ்வொவ்வொரு, முறைமையற்ற சமூக ஒழுங்கமைப்பையும் அவை தோன்றுவதற்கு ஏதுவாக அமைந்த காரணிகளையும் சுருக்கமாக அறிக்கைப்படுத்துக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான முறைமையற்ற ஒழுங்கமைப்புக்கள், முறைமை சார்ந்த ஒழுங்கமைப்பினால் எதிர்பார்க்கப்படும் நோக்கங்களை வெற்றிகரமாக எய்துவதற்கும், சிலவேளைகளில் அவற்றைச் சீர்குலைப்பதற்கும் ஏதுவாக அமையக்கூடும். இவ்வொழுங்கமைப்புக்கூட முறைமை சார்ந்த ஒழுங்கமைப்பைப் போன்றே, அங்கத்துவத்தின் இடையே தலைமைத்துவம், பொறுப்பு வகித்தல், ஒத்துழைப்பு போன்ற தன்மைகளைக் கொண்டிருப்பதோடு, சிலவேளைகளில் தனியாளிடத்தே காணப்படும் ஆக்கத் திறன்களை வளர்ப்பதற்கும் வழிகோலக்கூடும். சிலவேளைகளில் இவை பாடசாலை நிருவாகத்துக்குத் துணையாக அமைவதோடு, மாணவரின் கல்வி நடவடிக்கைகளுக்கும் உகப்பானதாக அமையும். இவ்வாறான முறைமையற்ற ஒழுங்கமைப்பின் மூலம் தொழில்சார் தேவைகள், நோக்கங்கள், நிறுவனக் குறைபாடுகள் என்பன தொடர்பான போதிய விளக்கத்தை நிருவாகிகள் பெற்றுக்கொள்ள வழிகிடைக்கப் பெறுவதால் முறைசார் ஒழுங்கமைப்பின் கருமங்களை வெற்றிகரமானதாக்கிக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்களும் கிடைக்கப் பெறும்.

தொழிற்பாடு 6

(1) 1. உங்களது பாடசாலையில் காணப்படும் முறைமையற்ற சமூக ஒழுங்கமைப்புக்களுள், மாணவர் தோழமைக் குழுக்கள் (Cliques) 4 இனைத் தெரிவு செய்து கொள்க.

2. அக்குழுக்களைப் பின்வரும் அம்சங்களின் வழியே ஆய்க.(தகவல்களைச்சேகரிப்பதற்காக, அவதானிப்புக்கள் கலந்துரையாடல்கள் வினாக்கொத்துக்கள் போன்ற முறைகளைப் பிரயோகிக்கலாம்.)

(அ) தோன்றுவதற்கு ஏதுவான காரணங்கள்

(ஆ) ஒழுங்கமைப்பின் தன்மை.

1. அங்கத்துவம்
2. பாடசாலை தொடர்பான மனப்பாங்குகளும் பொதுவான மனப்பாங்குகளும்.
3. ஆடையணிகள்- (பாடசாலையிலும், பாடசாலைக்கு வெளியேயும்.)
4. வகுப்பில் நடத்தை - ஏனைய மாணவர்களுடனான தொடர்பு.
5. பாடசாலைக்கு வெளியே நடத்தை

(இ) ஒழுங்கமைப்பின் பங்களிப்பு

1. அம்மாணவர்களின் கற்கைக்கு அடைவுக்கு
2. ஏனைய மாணவர்களின் கற்கைக்கு, அடைவுக்கு
3. நடத்தை வளர்ச்சிக்கு
4. பாடசாலைக்கு வருகை தருவதற்கு
5. பாடசாலை விட்டுச் செல்லலுக்கு
6. பாடசாலை நிருவாகத்துக்கு
7. பாடசாலையின் அறநெறிகள், விழுமியங்கள், ஒழுக்கம் என்பவற்றுக்கு
8. ஆசிரியர்களின் கருமங்கள் தொடர்பாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. உங்களது ஆய்வின் மூலம் சேகரித்துக் கொண்ட தகவல்களை உள்ளடக்கிய அறிக்கையொன்றினைச் சமர்ப்பிக்க.

| | குழு 1 | குழு 2 | குழு 3 | குழு 4 |
|---|---|---|---|---|
| 1. தோன்றுவதற்கு ஏதுவான காரணிகள் | | | | |
| 2 ஒழுங்கமைப்பின் தன்மை<br>1.<br>2.<br>3. | | | | |
| 3. ஒழுங்கமைப்பின் பங்களிப்பு<br>1.<br>2.<br>3. | | | | |

பாடசாலையுள் தோன்றும் முறைமையற்ற சமூக ஒழுங்கமைப்புக்கள், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் முறைமையான ஒழுங்கமைப்பிற்கு எதிராக, தடையாக அமைகின்றமை தெரிகின்றது. முறைமையான ஒழுங்கமைப்பிலுள்ள பிணைப்பையும், ஒற்றுமையையும் விடக் கூடுதலான பிணைப்பும் ஒற்றுமையும், இம்முறைமையற்ற ஒழுங்கமைப்பினுள் காணப்படுகின்றமை, அவை வலிமை மிக்கனவாக அமைவதற்கான ஒரு காரணமாக உள்ளது. நட்புடைய ஆசிரியர் குழுக்களை நோக்கினும் கூட, ஆசிரியர் குழு என்ற வகையில், அங்கத்தவர்களுக்கிடையில் நிலவும் பிணைப்பைவிட, இவ்வாறான நட்புக் குழுக்களைச் சேர்ந்த அங்கத்தவர்களின் பிணைப்பு மிகக் கூடுதலானதாகும். பாடசாலையினுள்ளே மட்டுமன்றி, பாடசாலைக்கு வெளியேயும், கூட்டாகக் கருமமாற்றுகின்ற இவ்வாறான குழுக்கள், அதிபர், பாடசாலை அதன் நிருவாகம், மாணவரின் பங்காற்றும் மனப்பாங்குகள், பாடவெளி வேலைகள், ஆசிரியரின் கருமங்கள் என்பவற்றின்பால் உகப்பற்ற விதத்தில் கூட தாக்கம் விளைவிக்கக்கூடும்.

வாலிபச் சமவயதுக் குழுவினர் தொடர்பாக அமெரிக்காவைச் சேர்ந்த ஜே.எஸ்.கோல்மன் என்பவரால் நடத்தப்பட்ட ஆராய்ச்சியின் மூலம், பாடசாலையுள் வாலிப சமவயதுக் குழுவினர்கள் பாடசாலையின் கல்வித்துறை தொடர்பாக மட்டுமன்றி அதன் நிருவாகப் பிரிவிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றமை தெளிவாகியுள்ளது.

சமவயதுக் குழுவினரது கலாசாரம், பாடசாலைக் கலாசாரத்தில் பங்களிப்புச் செய்கின்றமை பெரும்பாலான ஆய்வுகளின் மூலம் தெளிவாகியுல்ளது. பெரும்பாலும் இது உகப்பற்ற விதத்திலேயே தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இக்குழுக்கள் ஏனைய மாணவர்களின் கருத்துக்கள், மனப்பாங்குகள், விழுமியங்கள், ஆகியவற்றில் பங்களிப்புச் செய்து பாடசாலையில் ஒழுக்கம் தொடர்பான பிரச்சினைக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளையும் தோற்றுவிக்கக்கூடும். இவ்வாறான மாணவர் சமவயதுக் குழு வினரும், மாணவர் தோழமைக் குழுவினரும் பெரும்பாலும் மாணவரின் கற்றல், பாடசாலைக்குச் சமூகமளித்தல், நடத்தை, அபிவிருத்தி, மனவெ ழுச்சி வளர்ச்சி, சமூகவளர்ச்சி, உடல்வளர்ச்சி, ஆகிய ஒவ்வொரு பிரிவிலும் உகப்பற்ற விதத்தில் (மறையான விதத்தில்) தாக்கத்தை ஏற் படுத்தும் அதே வேளைமற்றும் சில குழுக்கள், இவ்வம்சங்கள் தொடர் பாக உகப்பான (நேரான விதத்தில்) தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.

சில வேளைகளில் சாதி, மதம், குலம் போன்ற பொதுக் கலாசாரப் பண்புகளின் அடிப்படையில், முறைமையற்ற விதத்தில் குழுக்களில் ஆசிரியர்கள் மாணவர்கள் ஆகிய இரு பிரிவினரும் அடங்குவர். பாட சாலையில் ஆசிரியர், மாணவர் குழுக்கள் கட்சிகளாகப் பிரிந்து கரும மாற்ற முற்படுவர். இவ்வாறான வேளைகளில், பாடசாலையின் ஒத்து ழைப்பு, ஒற்றுமை கூட்டுணர்வு ஆகியவற்றுக்குப் பெரும் பங்கம் விளை யக்கூடும்.

பாடசாலையின் கற்பித்தற் கருமங்களுடன் தொடர்புறாத, மற்றைய பணி யணியிருக்கிடையேயும் பெரும்பாலும் இவ்வாறான முறைமையற்ற தோழமைக் குழுக்களைக் காணலாம். எழுதுவினைஞர், சிற்றூழியர் போன்ற பல்வேறு துறைகளில் இவ்வாறான குழுக்களைக் காணலாம். ஒத்த சேவை,ஒத்த விருப்பு, வெறுப்புக்கள் என்பவற்றின் மீது பெரும் பாலும் ஒழுங்கமைக்கப்படும் இக்குழுக்கள், அவர்கள் மேற்கொள்ளும் வேலைகளின் அளவு, அவற்றின் தன்மை ஆகியவற்றின்பால் பெரும் பாலும் உகப்பற்ற விதத்திலேயே தாக்கம் விளைவிக்கும். சிலவேளைக ளில் நிருவாகத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தல், தனது பொறுப்புக்களை நிறை வேற்றாதிருத்தல், வேலை நிறுத்தம் போன்ற பல்வேறு வழிவகை களைக் கையாளல் இத்தோழமைக் குழுக்களால் வேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுள் அடங்கும். இவை முறைமையான நிருவாக ஒழுங்க மைப்பின் செயற்றிறனுக்குத் தடையாக அமையும்.

இவ்வாறாகப் பாடசாலையுள் தோன்றும் முறைமையற்ற பல்வேறு ஒழுங்கமைப்புக்கள் கூட்டுமொத்தமாகப் பாடசாலையின் மீது உகப்பான விதத்திலோ உகப்பற்ற விதத்திலோ பங்களிப்புச் செய்யக்கூடும் என்பது தெரிகின்றது.

பாடசாலையொன்றுள்முறைமையான ஒழுங்கமைப்பு வெற்றிகர மாக அமுற்படுத்தப்பட வேண்டுமெனின், பாடசாலை நிர்வாகி கள், மேற்படி முறைமையற்ற சமூக ஒழுங்கமைப்புக்கள் தோன் றுவதற்கு ஏதுவாக அமையும் காரணிகள் பற்றியும், அவ்வா றான பல்வேறு வகைப்பட்ட ஒழுங்கமைப்புக்கள் பற்றியும் விள க்கத்தைப் பெற்றுக் கருமமாற்றுதல் வேண்டும். அவ்வாறான முறைமையற்ற ஒழுங்கமைப்புக்களின் ஊடாக வெளிக் கொண ரப்படும் தொழில்சார் எதிர்பார்ப்புக்கள் தேவைகள், நிறுவனக் குறைபாடுகள் போன்றவற்றை உணர்ந்து அவற்றுக்கு ஏற்ற பரி கார நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமா கும்.

மாணவர்கள் பாடசாலை நிருவாகம் ஆகியவற்றில் உகப்பற்ற விதத்தில் பங்களிப்புச் செய்கின்ற முறைமையற்ற சமூக ஒழுங்கமைப்புக்கள் வலிமை பெறுவதைத் தவிர்க்க வேண்டிய அதே வேளை, பாடசா லையின் அபிவிருத்திக்கும், செயற்றிறனுக்கும் அவற்றின் பூரண ஒத்து ழைப்பைப் பெற்றுக் கொள்வதற்கு ஏற்ப உத்திகளைப் பிரயோகித்துக் கருமமாற்றதல் வேண்டும். பாடசாலை நடவடிக்கைகளுக்கு உகப்பற்ற வையான முறைமையற்ற ஒழுங்கமைப்புக்களை கட்டுப்படுத்தும் திறமை யையும், உகப்பான ஒழுங்கமைப்புக்களை வளர்க்கும் திறமையையும் அதிபர் பெற்றிருத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை ஒழுங்கமைப்பின் தலைவர் என்ற வகையில், அதிபர், ஊடகமாக, இவ்விளக்கத்தையும் திறமைகளையும் பெற்றிருக்க வேண்டியதோடு, பாடசாலையின் கற்றல்-கற்பித்தல் கருமத் தொடரின் வெற்றிகரமான தன்மை, செயற்றிறன் ஆகியவற்றுக்காக ஒவ்வொரு ஆசிரியரிடத்திலும் இவ்விளக்கமும் உணர்வும் காணப்பட வேண்டியது அவசியம் என்பது உங்களுக்குப் புரிந்திருக்கும்.

## 5.0 சாராம்சம்

இவ்வத்தியாயத்தின் உள்ளடக்கத்தைச் சுருக்கமாகப் பின் வருமாறு குறிப்பிடலாம்.

1. பாடசாலையை ஒரு சமூகத் தொகுதியாகக் கருத முடியும் என்பது

2. பாடசாலை நிர்வாகம் இலகுவானதாக அமைப்பதற்கும் செயற்றிறனுடையதாக அமைவதற்கும், பாடசாலையுள் முறைமையான ஒழுங்கமைப்பு காணப்பட வேண்டும் என்பது

3. பாடசாலையில் முறைமையான ஒழுங்கமைப்பு தவிர்ந் தவிடத்து, முறைமையற்ற பல சமூக ஒழுங்கமைப்புகளும் தோன்றக் கூடும் என்பது

4. இவ்வாறான முறைமையற்ற சமூக ஒழுங்கமைப்புக்கள் தொடர்பான விளக்கமும் அவற்றைப் பாடசாலை நடவடிக்கைகளின் செயற்றிறனுக்காகப் பிரயோகிக்கக் கூடிய திறமையையும் ஒவ்வொரு ஆசிரியரிடத்திலும், ஒவ்வொரு அதிபரிடத்திலும் காணப்பட வேண்டும் என்பது.

## 6.0 பிற்சோதனை

பின்வரும் வினாக்களுக்கு வழங்கப்பட்டுள்ள விடைகளுள் சரியான விடையைத் தெரிவு செய்க

(1) "சமூகம்" எனும் சொல்லுக்குப் பொருத்தமான வரைவிலக்கணம் எது?

1. ஒரே வகையைச் சேர்ந்த கூட்டத்தினர்

2. கூட்டாக வாழும் குழு

3. குறித்த, விசேடமானதொரு சமுதாயம்

4. ஒழுங்கமைப்பொன்றுடன் தொடர்புடைய கூட்டத்தினர்.

(2) "ஸ்வென்ஸ்" அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கியைய, பாடசாலை என்பது

1. ஒரு சமூக அலகாகும் அல்லது விசேட வகையைச் சேர்ந்த ஒரு சமுகமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. பரந்த சமூகத்தைச் சேர்ந்த ஒன்றிணைக்கப்பட்ட சமூகமாகும்.

3. தனிப்பட்ட விதத்தில் தொழிற்படுகின்ற ஒரு சமூகமாகும்.

(3) பாடசாலை ஒழுங்கமைப்பில் இடம்பெறும் முக்கியமான அம்சம்

1. முறைமையான பாடசாலைக் கோலமாகும்.

2. முறைமையான நிருவாக அமைப்பாகும்.

3. முறைமையான இடைத்தொடர்புத் தொகுதியாகும்.

4. முறைமையான கலைத்திட்ட ஒழுங்கமைப்பாகும்.

(4) "பாடசாலையுள் தனியார்களுக்கிடையிலான இடைத்தொடர்புகள் காணப்படாவிடின், அல்லது அத்தொடர்புகள் உகப்பற்றவையாகக் காணப்படின், பாடசாலையின் செயற்பாடு வெற்றிகரமானதாக அமையாதிருக்கக் கூடும்". இக்கருத்தைச் சமர்ப்பித்தவர் யார்?

1. ஒரிவ் பான்க்ஸ்

2. ஐவர் மொரிஸ்

3. ஏ.கே.ஸீ. ஒட்டாவே

4. டபிள்யூ. எம். ரய்பர்ன்

(5) பாடசாலையினுள் காணப்படும், முறைமையற்ற சமூக ஒழுங்கமைப் பின் மூலம்,

1. முறைமையான பாடசாலை ஒழுங்கமைப்பின் நோக்கங்கள் நிறைவு செய்யப்படும்.

2. முறைமையான பாடசாலை ஒழுங்கமைப்பின் நோக்கங்கள் சீர் குலைக்கப்படும்.

3. முறைமையான ஒழுங்கமைப்பின் நோக்கங்கள் நிறைவு செய்வ தோடு அவற்றைக் குலைக்கவும் கூடும்.

பின்வரும் கூற்றுக்களில் காணப்படும் இடைவெளிகளை நிரப்புவதற்குப் பொருத்தமான சொற்களைக் கீழே தரப்பட்டுள்ள சொற்களின் பட்டியலிருந்து தெரிவு செய்க.

(6) குறித்த ஒரு பிரதேசத்தில் வாழுகின்ற, பொதுச்சமூக முறையொன்றினைச் சேர்ந்த, சிறுவர்கள், வளர்ந்தோர் ஆகிய அனைவரையும் ..............................என அழைக்கலாம்.

(7) பாடசாலை என்பது தனது ............................ பேணி நடத்திச் செல்வதற்கான தலைமை நிலையமாக சமூகத்தினால் ஏற்படுத்தப்பட்ட பிரதானமான நிறுவனமாகும்.

(8) அயலிலுள்ள பரந்து விரிந்த சமூகத்தினுள் அதற்கேயுரிய சிறப்பான ஒழுங்கமைப்பொன்றுக்கு அமைவான .................... அப்பாடசாலை கருமமாற்றுகின்றது.

(9) பரந்து விரிந்த சமூகத்தின் ................../................... என்பவற்றுக்கு அமையப் பொருத்தமானவாறு பாடசாலையின் தொழிற்பாட்டை ஒழுங்கமைத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(10) பாடசாலையில் சொழிற்படும் அனைத்து ஒழுங்கமைப்புக்களையும் பாடசாலையின் முறைமையான நிருவாக அமைப்பின் கீழ்க் கொண ர்ந்து அவற்றை அதிபர் தமது.............................. கீழ்க் கொணர்தல் வேண்டும்.

(11) பாடசாலையினுள் முறைமையற்ற சமூக ஒழுங்கமைப்பாகத் தோன்று கின்ற சமவயதுக் குழுவினர், பாடசாலையின் ...................... தாக்கம் விசாலிக்கின்றமை அறியப்பட்டுள்ளது.

சொற்கள்

அதிகாரத்தின், சமுதாயம், கலாசாரத்தை, தேவைகள், சிறிய சமூகம், எதிர்பார்ப்புக்கள், கலாசாரத்தில், சமூகம்.

## 7.0 விடைகள்

1. (3)
2. (1)
3. (2)
4. (4)
5. (5)
6. சமுதாயம்
7. கலாசாரத்தை
8. சிறிய சமூகம்
9. தேவைகள்/எதிர்பார்ப்புக்கள்
10. அதிகாரத்தின்
11. கலாசாரத்தின்

## 8.0 ஒப்படைகள்

1. "பாடசாலையை முறையாக நிர்வகிப்பதற்கு சிறப்பான ஒழுங்க மைப்பு காணப்பட வேண்டியது அவசியமாகும்". அவ்வாறாயின்,

   1. பாடசாலை ஒழுங்கமைப்பில் காணப்பட வேண்டிய பிரதான மான அம்சங்களையும்

   2. அது வெற்றிகரமாக அமுற்படுத்தப்படுவதற்கான நிறைவு செய் யப்பட வேண்டிய பிரதானமான விடயங்களையும் விளக்குக.

2. பாடசாலையினுள் தோன்றக்கூடிய முறைமையற்ற சமூக ஒழுங்க மைப்புக்களைக் குறிப்பிட்டு, அவற்றுள் ஓர் ஒழுங்கமைப்பு

   1. பாடசாலை நிருவகத்தில்

   2. கற்றல்-கற்பித்தல் கருமத் தொடரில் தாக்கம் விளைவிக்கக்கூடிய விதத்தை விபரிக்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பின்வரும் விடயங்களைக் கருத்திற் கொண்டு கீழே தரப்பட்டுள்ள கற்பனைப் பாடசாலையை நிருவகிப்பதற்கான முறைமையான நிருவாக அமைப்பைக் கட்டியெழுப்புக.

(அ) பாடசாலையின் மாணவர் தொகை 3000,
ஆசிரியர் தொகை 150

(ஆ) ஆண்டு 5 தொடக்கம் ஆண்டு 13 வரையிலான வகுப்புக்கள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு ஆண்டிலும் 3 சமாந்தர வகுப்புக்கள் வீதம் உள்ளன. ஒவ்வொரு வகுப்பிற்கும் வகுப்புப் பொறுப்பாசிரியர் ஒருவர் வீதம் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(இ) விஞ்ஞானம், அழகியல், மனையியல், தொழில் நுட்பவியல், ஆகிய ஒவ்வொரு பிரிவுக்குமென ஒதுக்கப்பட்ட அறைகளும் அவற்றுக்குரிய ஊழியர்களும் உள்ளனர்.

(ஈ) பாடசாலை நிருவாக வசதிக்காக பிரதம எழுது வினைஞர் ஒருவரும் அவரின் கீழ் மற்றும் மூன்று எழுதுவினைஞர்களும், தட்டெழுத்தாளர் ஒருவரும் அலுவலகக் கரும உதவியாள் ஒருவரும் உள்ளனர்.

(உ) சிற்றூழியர்கள் 5 பேர் உள்ளனர்.

(ஊ) பாடசாலையில் பாடவெளிவேலைகள் பல உள்ளன.

(எ) சமாந்தர வகுப்புக்களில் ஒரே பாடத்தைக் கற்பிக்கும் பல ஆசிரியர்கள் உள்ளனர்.

(ஏ) 2500 இற்குக் கூடிய மாணவர் தொகையைக் கொண்ட பாடசாலைகளில் உதவி அதிபர்கள் இருவரை நியமிக்க முடியும்.

(ஐ) பாடசாலையின் பிரதான மாணவர் தலைவரும்-ஏனைய தலைவர்களும், ஒவ்வொரு வகுப்புக்குமுரிய வகுப்புத் தலைவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(ஒ) பாடசாலையில் விடுதியும் போசனசாலையும் உள்ளன.

(2) நீங்கள் கட்டியெழுப்பிய முறைமை சார்ந்த நிருவாக அமைப்பினுள் நிருவாக, கற்பித்தற் கருமத் தொடர்களில் மிக முக்கியமானவையாக அமையும் மூன்று பதவிகளுக்காக ஒப்படைக்கக் கூடிய பொறுப்புக்களைத் தனித்தனியே பட்டியற்படுத்துக.

## 9.0 கலைச்சொற்றொகுதி

முறைமையற்ற - Informal
முறைமையான - Formal
கட்டமைப்பு - Structure
தொகுதி - System
ஒழுங்கமைப்பு - Organization
சமவயதுக் குழுவினர் - Peer group
தோழமைக்குழுவினர் - Cliques
மறையான/எதிரான - Negative
நேரான - Positive

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10.0 மேலதிக வாசிப்புக்கான நூல்கள்

1. Ottaway A.K.C. - **Education and Society**, Routledge and Kegan Paul, London, Reprinted 1980.

2. ஜயசேக்கர யு.டீ. - கல்வியும் சமூகமும் (சிங்களம்)

3. **Secondary Education** - Spence Report, 1938.

4. Marrish Ivor - **The Sociology of Educaiton, an Introduction.** George Allen and Unwin Ltd. 1976

5. இரண்டாம் மூன்றாம் தரப் பாடசாலை அதிபர்களுக்கான கைந்நூல் -திட்டமிடல் முகாமைத்துவ அபிவிருத்திப் பிரிவு. கல்வி அமைச்சு, இசுருபாய - 1986.

6. Banks Olive - **The Sociology of Education.** B.T. Batsford Ltd. London 1976.

7. Ryburn W.M. - **The Organization of Schools.** 4th Ed. Oxford University press-1960.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறாம் அத்தியாயம்

# வகுப்பறை ஒரு சமூகக் குழுவாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உள்ளடக்கம்**

பக்கம்

1.0 அறிமுகம் ........ 109

2.0 சிறப்பு நோக்கங்கள் ........ 109

3.0 முற்சோதனை ........ 110

4.0 வகுப்பறை – ஒரு சமூகக் குழுவாக ........ 110

4.1 வகுப்பறை – ஒரு குழுவாக ........ 110

4.2 வகுப்பறையுள் ஆசிரியர் மாணவர் தொழிற்பாட்டுக் கோலங்கள் ........ 111

4.3 மாணவர் மாணவர் இடைத்தொழிற்பாடுகள் ........ 115

4.4 இடைத் தொழிற்பாட்டுக்கு ஏற்ற வகுப்பறைச் சூழ்நிலை ........ 116

4.5 இடைத்தொழிற்பாட்டில் பங்களிப்புச் செய்யும் பிற மாறிகள் ........ 120

4.6 இடைத்தொழிற்பாட்டுக் கற்றற் கருமத் தொடரின் முக்கியத்துவத்தைக் காட்டும் கற்றற் கொள்கைகள் ... 120

4.7 தொடர்பாடலும் மொழியும் ........ 121

4.8 வாய்மொழிமூலமற்ற தொடர்பாடல் ........ 125

5.0 சாராம்சம் ........ 127

6.0 பிற்சோதனை ........ 127

7.0 விடைகள் ........ 129

8.0 ஒப்படைகள் ........ 129

9.0 கலைச்சொற்றொகுதி ........ 130

10.0 மேலதிக வாசிப்புக்கான நூல்கள் ........ 130

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.0 அறிமுகம்

எந்தவொரு கல்வித் தத்துவத்தினதும் அல்லது கலைத்திட்டத்தினதும், அல்லது கற்பித்தல் முறையினதும் வெற்றியும் செயற்திறனும் அது வகுப்பறையில் அமுல் நடத்தப்படும் விதத்திலேயே தங்கியுள்ளது. ஆசிரியரின் பொறுப்பாகிய இக்கருமம், உரிய விதத்தில் ஆற்றப்பட வேண்டுமெனின், ஆசிரியர்-மாணவர், மாணவர்-மாணவர் இடைத் தொழிற்பாடுகளைக் கொண்ட வகுப்பறையின் தன்மைகளை இனங்கண்டு கொள்ள வேண்டியது அவசியமாகும். வகுப்பு அங்கத்தவர்களின் பரஸ்பர தொடர்பு, கவனம், தொழிற்பாடு, விளக்கம், கருத்துப் பரிமாற்றம் போன்றன இடைத் தொழிற்பாடுகளுள் அடங்குவனவாகும். இவ்விடைத் தொழிற்பாடுகள் ஒவ்வொருவரினதும் நடத்தைகளை ஒழுங்குபடுத்திக் கொள்ளவும், மாற்றமைத்துக் கொள்ளவும் இடையறாது உதவக் கூடியனவாகும். எனவே பிள்ளைகளின் முழுமையான வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையும் வண்ணமும், இடைத்தொழிற்பாடுகள் இடம்பெற வழிசெய்யும் விதத்திலும் ஆசிரியர் எவ்வாறு கருமமாற்றுதல் வேண்டும் என்பது தொடர்பாக உங்களது கவனத்தை ஈர்க்கும் பொருட்டு, ஒரு சமூகக்குழு என்ற வகையில் வகுப்பறையின் பண்புகள், வகுப்பறையுள் இடம்பெறும், இடைத்தொழிற்பாட்டுக் கோலங்கள், அதற்கு ஏற்ற வகுப்புச் சூழ்நிலை, இடைத் தொழிற்பாடுகளில் பங்களிப்புச் செய்யும் மற்றைய மாறிகள், வகுப்பறைத் தொடர்பாடல், மொழி ஆகிய தலைப்புக்களின் கீழ் இவ்வத்தியாயம் தயார்ப்படுத்தப்பட்டுள்ளது. ஏற்கனவே கற்ற அத்தியாயங்களின் மூலம் நீங்கள் பெற்ற அறிவும் விசேடமாக ஆசிரியர் என்ற வகையில் நீங்கள் பெற்றுள்ள அனுபவங்களும் இவ்வத்தியாயத்தைக் கற்றுக் கொள்ள உங்களுக்குத் துணையாக அமையும்.

## 2.0 சிறப்பு நோக்கங்கள்

* ஒரு சமூகக் குழு என்ற வகையில் வகுப்பறையின் தன்மையை இனங்காணக்கூடிய தன்மையைப் பெறல்.

* மாணவர்களின் முழுமையான வளர்ச்சியில் தாக்கம் விளைவிக்கும் நேரான மறையான (Positive & Negative) ஆசிரியர்-மாணவர், மாணவர்-மாணவர் இடைத் தொழிற்பாடுகளைத் தேடியறிய முனைதலும் அவற்றை இனங்கண்டு கொள்ளும் தன்மையைப் பெறலும்.

* மாணவரின் முழுமையான வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையுமாறும், இடைத்தொழிற்பாடுகளுக்கு வழி பிறக்குமாறும் கற்றல்-கற்பித்தல் சந்தர்ப்பங்களைத் திட்டமிடல் வேண்டும் என்பதை உணர்ந்து கொள்ளல்.

* வகுப்பறையில் நிகழும் இடைத்தொழிற்பாடுகளில், தொடர்பாடல் அதாவது கருத்துப் பரிமாற்றம் தாக்கம் விளைவிக்கும் விதத்தை அறிய முற்படுதல்.

* மாணவரின் முழுமையான வளர்ச்சிக்காக தொடர்பாடலையும் மொழியையும் பிரயோகிக்க முடியும் என்பதை உணர்ந்து கொள்ளல்.

* செயலமர்வுகளில் நுணுக்கமான கற்பித்தல் முறைகள், செய்து காட்டல்கள் என்பனவற்றைக் கையாளல் மூலமும் தான் கற்பிக்கும் பாடசாலையில் தானாகத் திட்டமிட்டுக் கையாளும் கற்றல்-கற்பித்தல் சந்தர்ப்பங்கள் மூலமும் ஆசிரியர்க்குரிய இத்திறன்களை வளர்த்துக் கொள்ளல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.0 முற்சோதனை

1. நீங்கள் கற்பிக்கும் வகுப்பின் அங்கத்தவர்களாகக் கருதப்படுவோர் யாவர்?

2. மேற்படி அங்கத்தவர்களுக்கிடையே, சமூக ரீதியில் காணப்படும் ஒத்த இயல்புகள் யாவை?

3. வகுப்பறையின் முறைமையான தலைவராகக் கருதப்படுபவர் யார்?

4. மாணவர் இடைத் தொடர்புகளில், வகுப்பறைச் சூழ்நிலை எவ்வாறு விளைவிக்கக்கூடும்?

5. வகுப்பறை அங்கத்தவர்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளும் ஊடகங்கள் யாவை என உங்களால் கூற முடியுமா?

6. வகுப்பறையில் சமூகத் தொடர்புகளைப் பேணுவதில் தாக்கம் விளைவிக்கும் பல்வேறு காரணிகள் யாவை?

# 4.0 வகுப்பறை - ஒரு சமூக குழுவாக

## 4.1 வகுப்பறை - ஒரு குழுவாக

ஆசிரியர் என்ற வகையில் நீங்கள் பற்பல அனுபவங்களைப் பெற்றவராக இருக்கக்கூடும். பாடசாலை எனும் சமூகத்தில் உள்ள வகுப்பறையில், உங்களுக்கு மிகவும் பரிச்சயமான ஒரு சமூகத்தை நீங்கள் சந்திக்கின்றீர்கள். ஒரு சமூகக் குழுவாக் அதன் தன்மையை இனங் கண்டு கொள்வதில் பின்வரும் விடயங்கள் துணையாக அமைகின்றமையால், அவை தொடர்பாக நீங்கள் பெறும் விளக்கம் உங்களது தொழில்சார் அபிவிருத்திக்கு உறுதுணையாக அமையும்.

* ஆசிரியரும், மாணவர்களும் வகுப்பறையின் அங்கத்தவர்களாவர்.

* வகுப்பறையிலுள்ளோரில் வயதில் மூத்தவர் ஆசிரியராவார். பொதுவாக உடல் ரீதியிலும் அவர் மாணவர்களை விடக் கூடுதலான வளர்ச்சியடைந்த தனியாளராவார். வகுப்பின் முறைமையான தலைவரும் அவரேயாவார்.

* பாடசாலைச் சட்டதிட்டங்களுக்கு அமைய, சம வயதெல்லையுள் அடங்கும் பிள்ளைகள் ஒரே வகுப்பில் சேர்க்கப்படுகின்றமையால் அவ்வகுப்பு, முறைமையான சம வயதுக் குழுவாக் அமைகின்றது.

* சமவயதுக் குழுவினரிடத்தே பல அம்சங்களில் வேறுபாடுகள் காணப்படும்.

  1. ஆண்/பெண் பால் வேறுபாடு
  2. இன வேறுபாடுகள்
  3. சமூக நிலை
  4. கல்வி அடைவு
  5. விசேட திறன்கள்
  6. விருப்பு வெறுப்புக்கள்
  7. நோக்கங்கள்/எதிர்பார்ப்புக்கள்
  8. கலாச்சார இயல்புகள், ஆடையணிகள், பழக்க வழக்கங்கள்
  9. மனப்பாங்குகள்
  10. விழுமியங்களும்-பண்புகளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை தவிர்ந்தவிடத்து, முறைமையின்றி ஒழுங்கமைந்த பல்வேறு தோழமைக் குழுக்களும், அக்குழுக்களின் தலைவர்களும் வகுப்பறையில் காணப்படுவர். ஆசிரியர்-மாணவர், மாணவர்-மாணவர் ஆகியோருக்கிடையில் பரஸ்பர ரீதியான கருத்துப் பரிமாற்றமும் இடம்பெறும்.

செயற்பாடு 1

உங்களது பாடசாலையில் மற்றொரு ஆசிரியர் கற்பிக்கும் ஒரு வகுப்பைத் தெரிவு செய்து ஒரு பாடவேளை நேரமளவு அவ்வகுப்பில் தங்கியிருந்து, வகுப்பு ஆய்வொன்றில் ஈடுபடுக. ஆய்வுக்குள்ளாகும் பாடத்தில் கீழே தரப்பட்டுள்ள பண்புகள் காணப்படின் குறித்த கூற்றின் இலக்கத்தைச் சுற்றி வட்டமிடுக. இவற்றை விட வேறுபட்ட பண்புகள் காணப்படின் அவற்றைப் பிறிதொரு விதத்தில் குறித்துக் கொள்க.

1. ஆசிரியர் அமைதியாக இருக்கும் மாணவரை விழித்து உரையாடுகிறார்.

2. ஆசிரியர் ஒரு குறித்த மாணவனிடமே வினாக்களை வினவுகிறார்.

3. ஒரு மாணவர் ஒரு குறித்த விடயம் பற்றி ஆசிரியருக்கு விளக்கமளிக்கிறார். ஏனையோர் அதனை செவிமடுக்கின்றனர்.

4. ஆசிரியர் ஒரு குறித்த மாணவர் குழுவுடனேயே உரையாடுகிறார். ஏனைய மாணவர்களின் கவனத்தை ஈர்க்க அவர் முனையவில்லை.

5. ஆசிரியரின் தலைமையின் கீழ் மாணவர்கள் கலந்துரையாடலில் ஈடுபடுகின்றனர்.

6. ஆசிரியரின் உதவியின்றி மாணவர்கள் சிறுசிறு குழுக்களாகச் சேர்ந்து கலந்துரையாடுகின்றனர்.

வகுப்பறையுள், ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் இடையிலும் மாணவர்கள்-மாணவர்களுக்கிடையிலும் இடைத்தொழிற்பாடுகள் நிகழுகின்றன என்பதை நீங்கள் மேற்படி ஆய்வின் போது அவதானித்திருப்பீர்கள்.

## 4.2 வகுப்பறையுள் ஆசிரியர்-மாணவர் தொழிற்பாட்டுக் கோலங்கள்


வகுப்பறையுள் ஆசிரியரின் முறைமையான நடிபங்குக்குரிய கருமம் மாணவர்கள் கற்பதற்கு ஏற்ற சுற்றாடலை அதாவது கற்றல்-கற்பித்தல் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுப்பதாகும். இக்கருமத்தின் போது பாடத்தின் நோக்கங்கள் பாடத்தில் அடங்கும் விடயங்கள், பொருத்தமான கற்பித்தல் முறைசார், கற்றல்-கற்பித்தல் துணைச் சாதனங்கள் போன்றவற்றுக்கு அமையவே ஆசிரியர்-மாணவர் தொழிற்பாடுகள் தீர்மானிக்கப்படுகின்றன.

எமது பாடசாலைகளில் ஆசிரியர்கள் பின்பற்றுகின்ற சில கற்றல்-கற்பித்தல் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சந்தர்ப்பம் 1

ஏறத்தாழ 30 மாணவர்களைக் கொண்ட ஆண்டு 6 வகுப்பறையில் ஓர் ஆசிரியர் மாணவரின் முன்னணியில் நின்றபடி, தாவரத்தின் ஒரு பகுதி தொடர்பான விடயங்களை மாணவர்க்குச் சொல்லிக் கொடுக்கின்றார். மாணவர்கள், அமைதியாக எவ்வித தொழிற்பாட்டிலும் ஈடுபடாது ஆசிரியர் கூறுவதைச் செவிமடுக்கின்றனர். வினாக்கள் வினவுவதற்கான சுதந்திரம் மாணவர்க்குக் கிடையாது. ஆசிரியரின் தனி அதிகாரம் வகுப்பிலும் ஆதிக்கம் புரிகின்றது.




சந்தர்ப்பம் 2

ஆண்டு 6 வகுப்பில் ஆசிரியர், மாணவர்களுக்குப் பாடத் தலைப்பை அறிமுகஞ் செய்கின்றார். பின்னர் தாவரங்கள் பற்றி மாணவர்கள் அறிந்து வைத்துள்ளவற்றை ஆராயவதற்காகச் சில வினாக்களை வினவுகிறார். மாணவர்கள் அவற்றுக்கு விடையளிக்கிறார்கள், தாம் அறியாதவை குறித்து மாணவர்கள் ஆசிரியரிடம் வினாக்கள் வினவுகின்றனர். அதற்கு விடையளித்தவாறு பாடத்தை வளர்த்துச் செல்லவும், மாணவர்களைத் தொழிற்பாட்டு ரீதியில் பாடத்தில் ஈடுபடச் செய்யவும் ஆசிரியர் முயற்சிக்கின்றார்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சந்தர்ப்பம் 3

ஆண்டு 6 வகுப்பு மாணவர்களை ஆசிரியர் சிறு சிறு குழுக்களைக் வகுத்துள்ளார். அவர்களது மேசைகளின் மீது, பற்பல வகையான தாவரங்கள் உள்ளன. (தாவரங்களைக் கொணரும்படி முன்கூட்டியே ஆசிரியர் அம்மாணவர்களுக்கு அறிவித்துள்ளனர்) ஒவ்வொரு குழுவையும் சேர்ந்த மாணவர்கள் தமக்கிடையே இவ்வெண்ணத்துடன் நட்புறவுடன் கலந்துரையாடி அத்தாவரங்களின் பகுதிகளை இனங்கண்டு கொள்ள முயற்சிக்கின்றனர். ஆசிரியர் ஒவ்வொரு குழுவிடத்திலும் சென்று மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளைத் தீர்க்க வழிகாட்டுகின்றார்.




சந்தர்ப்பம் 4

ஆண்டு 9 ஆசிரியர் மாணவர்களுக்கு, சில தினங்களுக்கு முன்னர், பாடத்தலைப்பொன்றினைக் கொடுத்து, அதுதொடர்பான விடயங்களைச் சேகரிக்கும்படி அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர். மாணவர்கள் தாம் சேகரித்த தகவல்களைத் துணையாகக் கொண்டு, ஆசிரியரின் வழிகாட்டலின் கீழ், தலைப்புக்குப் பொருத்தமான விதத்தில் கலந்துரையாடலில் ஈடுபடுகின்றனர். கருத்துக்களை வெளியிடல், தர்க்கித்தல், ஏனையோரின் கருத்துக்களுக்கு மதிப்பளித்தல் போன்றன காணப்படுகின்றன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே குறிப்பிட்ட கற்றல்/கற்பித்தல் சந்தர்ப்பங்களில் ஆசிரியர் மாண வர், மாணவர்-மாணவர் இடைத் தொழிற்பாடுகள் நிகழ்ந்த விதம் தொட ர்பாக ஆராய்ந்தறிக. ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் பின்வரும் விடயங்க ளுக்கு அமைய ஆராய்க.

| | |
|---|---|
| மாணவர் ஈடுபாடு | தொழிற்படுகிறார்கள்/தொழிற்படவில்லை. |
| மாணவர் ஒத்துழைப்பு | இல்லை/தனித்தனியாக/ஒருவருக்கொருவர் உதவுகிறார்கள். |
| ஆசிரியரின் தலைமைத்துவம் | சர்வாதிகாரம்/சனநாயகம் |
| வகுப்புச் சமூகச் சூழ்நிலை | சர்வாதிகாரம்/சனநாயகம் |
| கற்றல் நிகழும் விதம் | பாடமையமானது/ஆசிரியர் மையமானது/ மாணவர் மையமானது |
| ஆசிரியரின் கருமம் | வழிகாட்டல்/கட்டளையிடல் |
| இடைத்தொழிற்பாடு | ஆசிரியர்-மாணவர்/ஆசிரியர்-மாணவர்-மாணவர்/மாணவர் அமைதியாயிருத்தல் |
| மாணவர் தொகை | சிறு குழுக்கள்/முழு வகுப்பு |
| கற்றல் துணைச்சாதனைப் பயன்பாடு | இடைத் தொழிற்பாட்டுக்கு வழி கோலப் படுகிறது/கோலப்படவில்லை. |
| கற்றலில் பங்களிப்புச் செய்யும் விதம் | செயற்றிறன் கூடுதலானது/குறைவானது. |
| மாணவர்க்குப்பொறுப்புக்கள்— | ஒப்படைக்கப்பட்டுள்ளன/ஒப்படைக்கப் படவில்லை |
| அடக்கம் | சுயமானது/கட்டாயப்படுத்தப்படுவது/ஆசி ரியருக்குப் பயந்து அடக்கமாயிருத்தல் |

நீங்கள் கண்டறிந்தவற்றுக்கு அமைய, கற்றலுக்கும் மாணவரது அபிவிருத் திக்கும் மிகப் பொருத்தமாக அமையும் சந்தர்ப்பங்களின் பண்புகளை உணர்ந்து ஒரே வகையான தொழிற்பாட்டைப் பிரயோகிக்க முடியுமா எனச் சோதித்தறிக.

உங்களது பாடசாலையில் கடமையாற்றும் சில ஆசிரியர்கள்/ஆசிரியை கள் கற்பிக்கும் வேளைகளில் அவ்வகுப்புக்களை ஆய்வு செய்க. மாண வர்களின் வளர்ச்சிக்கும், கற்றலுக்கும் மிகப் பொருத்தமானவை என நீங்கள் கருதும் இடைத் தொழிற்பாடுகளை உள்ளடக்கிய கற்பித்தல் முறைகள் யாவை எனக் குறிப்பிடுக.

1.
2.
3.
4.
5.
6.
7.
8.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.3 மாணவர்-மாணவர் இடைத்தொழிற்பாடுகள்.

வகுப்பில் மாணவரின் முறைமையான பங்கு கற்றலாகும். அக்கருத்துக் காக ஆசிரியர், மாணவர்களுக்குப் பல்வேறு கற்றல் தொழிற்பாடுகளைத் தயார்ப்படுத்துகின்றனர். மாணவர் குழுக்களைத் தொழிற்பாடுக ளில் ஈடுபடுத்துவதன் மூலம் ஏற்படுத்தப்படும், மாணவர்/மாண வர் இடைத் தொழிற்பாடுகள், குழுவைச் சேர்ந்த அங்கத்தவர்களின் கற்றலில் மட்டுமன்றி, நல்லொழுக்க, மனவெழுச்சி, சமூக, உடல் சார்ந்த ஆகிய ஒவ்வொரு பிரிவினதும் வளர்ச்சியில் பெருமளவுக்குப் பங்களிப் புச் செய்கின்றது.

அத்தோடு வகுப்பில் முறைமையின்றி ஒழுங்கமையப்பெற்றுள்ள சில தோழமைக் குழுக்களையும் காணலாம். அவர்களது மனப்பாங்குகள், நோக்கங்கள், விழுமியங்கள் போன்றன கற்றலிலும், வளர்ச்சியிலும் உகப்பற்ற விதத்தில் பங்களிப்புச் செய்வதோடு, வகுப்பின் ஏனைய அங்கத்தவர்களது கற்றலில் தடைகளை ஏற்படுத்தும். இவ்வாறான குழுத்தொழிற்பாடுகள் தொடர்பான விளக்கத்தை ஆசிரியர்கள் பெற்றுக் கொள்ளல் மிக அவசியமானதாகும். வெளித் தோற்றக்கூடிய தொடர்பி லிருந்து முற்றிலும் வேறுபட்ட சமூகத் தொடர்புகளும் அவர்களிடத்தே காணப்படக்கூடும்.

முன்னர் நீங்கள் கற்ற ஓர் அத்தியாயத்தில் சமவயதுக் குழுவினர் பற்றி அறிந்து கொண்டீர்கள். தொரிவோ (1934) என்பவரால் சமர்ப்பிக்கப் பட்ட சமூகமான (Sociometry) முறைக்கு இயைய உங்களது வகுப்பில், மாணவர்க்கிடையே சமூக நட்சத்திரங்கள், பரஸ்பரச் சோடிகள், தோழ மைக் குழுக்கள், சங்கிலிகள், தனியானவர்கள் மறுதலிக்கப்பட்டோர், ஆகியோரை இனங்காண முயற்சிக்க. இவ்வாறான பிள்ளைகளின் நடத் தையைச் சீர்செய்வதற்காக, ஆசிரியராகிய உங்களால் மேற்கொள்ளக் கூடிய வழிவகைகளை மேன்மேலும் உணர்ந்து கொள்ளலாம்.

எமது பாடசாலைகளில் பொதுவாகக் காணக்கிடைக்கின்ற இரண்டு சம் பவங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

"காலை 7.00 மணியளவில் பாடசாலைக்கு வந்த குணசீலன், முன்னைய தினம் ஆசிரியர் கொடுத்த கணக்குகளைச் செய்வதற்காகப் பயிற்சிப் புத்தகத்தைக் கையிலெடுத்தான். கிராமத்தில் முக்கியமானதெனக் கருதப் படும் குடும்பமொன்றினைச் சேர்ந்த ஒரு பிள்ளையாகிய ராமு அவ்விட த்துக்கு வந்தான். அவன் குணசீலனின் கையிலிருந்த புத்தகத்தை உருவி அப்பால் வைத்துவிட்டு, குணசீலனை விளையாட்டு மைதானத்துக்கு இழுத்துச் செல்கின்றான்."

"கற்பதில் விருப்போ திறமையோ காட்டாத நிமலன் அவனது விளை யாட்டுத் திறமைகள் காரணமாக வகுப்பறையில் மாணவ குழுவொன் றினது தலைவனாகக் காணப்படுகின்றான். கற்பதில் ஆர்வம் காட்டும் காதர் எனும் மாணவனுக்கு அவர்கள் "புத்தகப் பூச்சி" என்னும் பெயரைச் சூட்டியுள்ளனர்".

**கற்றலுக்கு உகப்பற்ற மனப்பாங்குகளையும் விழுமியங்களையும் கொண்ட இவ்வாறான தோழமைக் குழுக்களின் தாக்கம் காரண மாக வகுப்பறையில் பொதுவாக மோதல்கள் ஏற்படும்.**

இவ்வாறான குழுக்களை, ஆசிரியர் இனங்கண்டு, அவர்களின் தேவை கள் வகுப்புகள் ஆகியவற்றுக்குப் பொருத்தமானவாறு பல்வேறு தொழி ற்பாடுகளில் அவர்களை ஈடுபடுத்துவதன் மூலம் அவர்களது மனப்பாங் குகளைச் சீரமைத்தல் வேண்டும். வயதுக் குழுவின் தொடர்பாக நீங்கள் கற்றுக் கொண்ட விடயங்கள் உங்களுக்குத் துணையாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பறையில் மாணவர்-மாணவர் இடைத் தொழிற்பாடுகளுக்காகப் பிரயோகிக்கப்படும் இரண்டு வழிவகைகள் உள்ளன. போட்டி, ஒத்துழைப்பு என்பனவே அவையாகும்.

செயற்பாடு 3

உங்கள் வகுப்பு மாணவர்களை இரண்டு குழுக்களாக வகுக்க. ஒரு குழுவைச் சேர்ந்த மாணவர்களைச் சிறு சிறு குழுக்களாகவும் வகுத்துத் தொழிற்பாடுகளில் ஈடுபடுத்துக. பின்வரும் விடயங்களில் கவனஞ் செலுத்தி அவர்களது தொழிற்பாடுகளை அவதானிக்க.

1. ஒத்துழைப்புடன் கருமமாற்றுதல்.

2. ஒருவருக்கொருவர் உதவி புரிதல்.

3. கற்றலுக்குத் தேவையான பொருள்களைக் கையாளல்.

4. மாணவர்களுக்கிடையிலான நட்புறவு

5. தனித்துக் கருமாற்றுதல்

6. கற்றல் தொடர்பான பயனுடைய உரையாடல்களில் ஈடுபடல்.

7. ஏனையோரின் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளல்.

8. பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ளல்.

9. ஒழுங்கு முறைமை

10 அவர்களது முகத்தினால் வெளிக்காட்டப்படும் மனவெழுச்சிகளின் தன்மை.

11. செலவாகிய நேரம்.

12. தொழிற்பாடுகளின் வெற்றிகரமான தன்மை.

உங்களது அவதானிப்புக்களுக்கு அமைய மாணவரை கற்றலுக்கும் வளர்ச்சிக்கும் மிகப் பொருத்தமாயமைவது போட்டியா அல்லது ஒத்துழைப்பா என்பது குறித்து உங்களது கருத்துக்களை குறிப்பிடுக.

## 4.4 இடைத்தொழிற்பாடுகளுக்கு ஏற்ப வகுப்பறைச் சூழ்நிலை


வகுப்பின் சமூகச் சூழ்நிலையை பூரண சயாதீனமுடைய சனநாயகச் சூழ்நிலை, பூரண அடிமை நிலை (சர்வாதிகார)ச் சூழ்நிலை என்பனவாகக் கொண்டு, லிபிற், லெவின், வயிற் (1939) ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் மூலம் அறியப்பட்ட தகவல்களை ஏற்கனவே கற்ற அத்தியாயங்களில் நீங்கள் கற்றீர்கள். அதற்கு அமைய, இடைத் தொழிற்பாடுகளுக்கு மிக உகந்த, வகுப்புச் சூழ்நிலையின் தன்மையையும் தலைவனின் இயல்புகளையும் விளங்கிக் கொள்க.

தொழிற்பாடு 4


உங்களது பாடசாலையைச் சேர்ந்த ஓர் ஆசிரியருக்கு அவரது கற்பித்தல் நடவடிக்கைகளுக்காக, வகுப்பறையைப் பின்வருமாறு தயார்ப்படுத்திக் கொண்டு படிபிப்பதற்கு உதவிபுரிக. அவ்வாறான பௌதிகச் சூழ்நிலைக்கு அமையத் திட்டமிடப்பட்ட பாடத்தை ஆய்வு செய்க. இடைத் தொழிற்பாடுகள் நிகழும் விதத்தைக் குறித்துக் கொள்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) நீண்ட வாங்குகள்




(ஆ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ)




(ச)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதிரி "ஈ" இற்கு அமைய ஒவ்வொரு குழுவினதும் தொழிற்பாட்டை அவதானிப்பது கடினமானதாய் இருப்பின் இரண்டு குழுக்களை மட்டும் தெரிவு செய்து கொள்க.

ஒவ்வொரு வகுப்புச் சூழ்நிலையிலும், மாணவர்கள் காட்டிய துலங் கலைக் குறித்துக் கொள்வதற்காகப் பின்வருவது போன்றதொரு அட்ட வணையைப் பயன்படுத்தலாம். ஒவ்வொரு மாணவரும் காட்டிய துலங் கல்களின் எண்ணிக்கையை வரவுக்குறிகள் மூலம் குறிக்க.

| மாணவர் இல: | துலங்கலைக் காட்டிய தடவைகள் (வரவுக் குறிகள் மூலம் காட்டுக) | மொத்தத் தொகை |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |
| 6 | | |
| 7 | | |

பின்னர் மிகக் கூடுதலான துலங்கலைக் காட்டிய மாணவர்க்குரிய இருக் கைகளைக் கடுங் கருநிறத்தினாலும், நடுத்தர அளவு துலங்கலைக் காட் டிய மாணவர்களுக்குரிய இருக்கைகளை நரை நிறத்தினாலும் வர்ணந் தீட்டுக. துலங்கலைக் காட்டாத அல்லது குறைவாகத் துலங்கலைக் காட் டிய மாணவர்களின் இருக்கைகளை நிறந்தீட்டாது விடுக.

இடைத்தொழிற்பாடுகள் இடம்பெறுவதில் வகுப்பின் பௌதிகச் சூழ் நிலை பங்களிப்புச் செய்யும் விதத்தை உங்களது இத்தொழிற் பாட்டின் மூலம் விளங்கிக் கொள்ளலாம். ஆசிரியரை நேரடியாக நோக்கியபடி ஆசிரியரின் முன்னே இருக்கும் மாணவர்கள் தொடர்பாகவே ஆசிரியர் கூடிய கவனம் செலுத்துகின்றார் என்பது பல ஆய்வுகளின் மூலம் அறியப்பட்டுள்ளது. எனவே ஒவ்வொரு மாணவரும் துலங்களைக் காட் டுவதற்கான வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்க ஆசிரியர் முயற்சித் தல் வேண்டும். கற்றற் தொழிற்பாடுகள் எப்போதும் வகுப்பறைக்கு மாத்திரம் வரையறைப்பட்டுக் காணப்படல் வேண்டுமா என்பது தொடர் பாகச் சிந்தியுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.5 இடைத் தொழிற்பாடுகளில் பங்களிப்புச் செய்யும் பிற மாறிகள்.

1. ஆசிரியரின் பொதுவான தோற்றம்

உ.ம்: மறைத்தன்மையுடைய தோற்றம்

- முரட்டுத் தோற்றம்
- தாடி வளர்ந்துள்ள ஆசிரியருடன் பேசுவதற்கு மாணவர்கள் காட்டும் தயக்கம்.

நேர்த்தன்மையுடைய தோற்றம்.

- புன்முறுவல் பூத்தமுகத்துடன் வகுப்பறையுள் நுழையும் ஆசிரியருடன் மாணவர்கள் தயக்கமின்றிக் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வர்.

2. ஆசிரியரின் உடைகள்
3. ஆசிரியரின் உரையாடற் பாங்கு
4. ஆசிரியரின் மொழி நடை
5. மாணவர்களைக் குழுக்களாக வகுத்தல்
6. மாணவரது தேவைகளை நிறைவு செய்யும் விதம்
7. ஆசிரியர் வழங்கும் தண்டனைகள், பரிசுகள்
8. ஆசிரியர், மாணவர்கள் தொடர்பாகக் காட்டும் மனப்பாங்குகள், கற்பதில் திறமைமிக்க/திறமை குறைந்த பிள்ளைகளின் சமூக நிலைமைகள்.
9. ஆசிரியர் வகுப்பில் தங்கியிருக்கும் இடம்.
   - முன்னால் நின்றிருத்தல்
   - வகுப்பில் நடமாடுதல்.

இவ்வாறாக வகுப்பறையின் இடைத் தொழிற்பாடுகளில் தாக்கம் விளைவிக்கும் காரணிகளை அவதானித்துப் பதிவு செய்து கொள்க. மேலே முதலாவது காரணியில் சமர்ப்பிக்கப்பட்டவாறு உதாரணங்களின் துணையுடன் ஒவ்வொரு காரணியையும் விளக்குக.

## 4.6 இடைத் தொழிற்பாட்டுக் கற்றற் கருமத் தொடரின் முக்கியத்துவத்தைக் காட்டும் கற்றற் கொள்கைகள்.

கர்ற் லெவின் (1951) என்பாரின் **களக் கொள்கை** தொடர்பாக கற்றற் கொள்கைகள் எனும் அத்தியாயத்தின் மூலம் ஏற்கனவே கற்றுள்ளீர்கள். **"வாழ்க்கை வெளி"** தொடர்பான எண்ணக்கருவே அவரது கருத்துக்களுள் முக்கியமானதாகும். **ஒரு தனியாளின் வாழ்க்கை வெளி என்பது அவரது உளவியல் உலகமாகும்.**

**இக்கொள்கைக்கு அமைய, தனியாள் அடங்கும் குழுவில் காணப்படும் இடைத்தனியாள் தொடர்புகள் இவ்வுளவியற் சுற்றாடலில் தாக்கம் விளைவிக்கின்றன.**

ஒவ்வொரு மாணவனதும் நடத்தையைத் தனித்தனியாக மாற்றியமைப்பதைவிட, குழுக்களாகக் கொண்டு, அவர்களது நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்துவது மிக இலகுவானதாகும். தனித்தனியாக ஏற்படுத்தும் மாற்றத்தைவிடகுழு நிலையில் ஏற்படுத்தும் மாற்றங்கள் உறுதியானவை என்பது அவரது ஆராய்ச்சிகளின் மூலம் அறியப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.7 தொடர்பாடலும் மொழியும்.

செயற்பாடு 5

ஆசிரியர் புன்முறுவல் முகத்துடன் வகுப்பறையுள் நுழைகின்றார். மாணவர்கள் எழுந்து "வணக்கம்" கூறுகின்றனர். ஆசிரியரும் மாணவர்களும் வணக்கம் தெரிவிக்கின்றனர். ஆசிரியர் மாணவர்களுக்கு வணக்கம் தெரிவிக்கின்றார். மாணவர்களுக்கு அமரும்படி ஆசிரியர் கைகளால் சைகை காட்டுகிறார். மாணவர்கள் அமர்கின்றனர். ஆசிரியர் வகுப்பு மாணவர்களிடம் வினாக்கள் வினவுகிறார். விடைகளை அறிந்து வைத்துள்ள மாணவர்கள் கை உயர்த்துகின்றனர். சில மாணவர்களை விழித்து ஆசிரியர் விடைகளைப் பெறுகின்றார். அதன் வழியே பாடத் தலைப்பை அறிமுகஞ் செய்யும் அதனைக் கரும்பலகையில் எழுதுகிறார். ஒரு மாணவன், பிறிதொரு கருமத்தில் ஈடுபட்டுள்ள மற்றுமொரு மாணவனை நோக்கிக் கையை நீட்டியபடி அவனது கவனத்தைப் பாடத்தின்பால் ஈர்க்க முயற்சிக்கின்றார்".

ஒரே வகுப்பறையில் பாட ஆரம்பத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் மேலே தரப்பட்டுள்ளன. அதனைக் கற்று, ஆசிரியர் மாணவர், மாணவர்-மாணவர் ஆகியோருக்கிடையே கருத்துப் பரிமாற்றத்துக்கும், கருத்துக்களையும் உணர்வுகளையும் வெளியிடுவதற்காகவும் பிரயோகிக்கப் பட்ட முறைகளையும் பகுத்தாய்க.

**உதாரணம்:**

1. ஆசிரியரின் புன்முறுவல் பூத்த-முகத்தின் தன்மை-மகிழ்ச்சியான தன்மை

2. மாணவர்கள் எழும்புதல்-மெய்நிலைகள்-மதிப்பளித்தல்.

3. "வணக்கம்" கூறல்-சொற்பயன்பாடு-வாழ்த்துதல்.

4.

5.

6.

7.

8.

9.

10.

11.

இந்த ஆய்வுக்கு அமைய, வகுப்பறையில் கருத்துப் பரிமாற்றமும், இடைத் தொழிற்பாடுகளுக்குப் பெரும்பாலும் வாய்மொழி மூலமும் வாய்மொழி மூலமற்ற முறையிலும் நிகழ்கின்றன.. என்பதை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள். இங்கு ஒவ்வொருவரின் இடையிலும் நேரடியாகவே தொடர்பாடல் நிகழுகின்றது. எனவே வகுப்பறையினுள் ஆசிரியர்களும், மாணவர்களும்/மாணவருக்கும் தமது துலங்கல்களையும் நடத்தைகளையும் அதேகணத்தில் தயார்ப்படுத்திக் கொள்ளக்கூடிய வாய்ப்புக் கிடைக்கப்பெறுகின்றது. எனவே இத்தொடர்பாடல் கருமத் தொடர் நேரடித் தொடர்பாடல் என அழைக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு ஆரம்பிப்பவர் -ஆசிரியர்/மாணவன்/மாணவர் குழு/முழு வகுப்பும் ஆக இருக்கலாம்.

வாங்குகள்-ஆசிரியர்/மாணவன்/மாணவர்குழு/முழு வகுப்பும் ஆக இருக்கலாம்.

நேரடித் தொடர்பாடல் முறைகளின் ஒரு பண்பாகிய பின்னூட்டல், கற்றற் கருமத் தொடரில் மிக முக்கியமானதாகும். கற்றல் சந்தர்ப்பத்தின் போது தொடர்பாடலை ஆரம்பிப்பவர் பெரும்பாலும் ஆசிரியராவார். அவர், அறிவு, திறன்கள், மனப்பாங்குகள் ஆகிய அம்சங்கள் தொடர்பாக மாணவர் நடத்தைகளை மாற்றியமைப்பதற்காகத் தமது தொடர்பாடல் முறைகளைக் கையாளுகின்றார்.

ஆசிரியர் கற்பித்தவற்றை மாணவர்கள் விளங்கிக் கொண்டனரா, இல்லையா என்பதை வாய்மொழி மூலமோ வாய்மொழி தவிர்ந்த பிற முறைகளிலோ அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்புக் கிடைப்பதனால், ஆசிரியருக்கு, மாணவரின் தவறுகள், உகப்பற்ற துலங்கல்கள் போன்றவற்றை மாற்றியமைப்பதற்கும் தமது நடத்தைகளை மாணவர்க்குப் பொருத்தமானவாறு மாற்றியமைத்துக் கொள்வதற்கும் வாய்ப்புக் கிடைக்கும்.

ஆண்டு 3 மாணவர்களுக்கு ஆப்பிள் பழம் தொடர்பான விபரமொன்றினை (ஆப்பிள் பழத்தையோ அதன் படத்தையோ காட்டாது) வழங்கிப் பின்னர் ஆப்பிள் பழமொன்றினை வரையும்படி அவர்களுக்குக் கூறுங்கள். அவர்கள் வரையும் படங்களுடன் ஆப்பிள் பழமொன்றின் படத்தை ஒப்பிட்டுப் பார்க்க. ஆப்பிள் பற்றி அறிந்திராத மாணவர்களிடத்தே அவ்வெண்ணக் கருவை ஏற்படுத்துவதற்காகச் சொற்களை மட்டும் பயன்படுத்துவது போதியதாகாது என்பது உங்களுக்குப் புரிந்திருக்கும். இவ்வாறான பல்வேறு சந்தர்ப்பங்களின்போது வகுப்பறையினுள் பயன்படுத்தப்படும், தொடர்பாடல் முறைகளை, மறைமுகமான தொடர்பாடல் முறைகள் என அழைக்கப்படுகின்றன. கரும்பலகை, நூல்கள் வானொலி, தொலைக்காட்சி போன்ற இவ்வாறான முறைகள் பெரும்பாலும் தொழில்நுட்பத்துடனும், தொடர்புபடினும் தொடர்புடைய ஊடகங்களாகும்.

வாய்மொழி மூலம் தொடர்பாடல்-மொழி.

வகுப்பறைத் தொடர்பாடல் கருமத் தொடரில் பிரதானமாக உரையாடும் மொழியும் எழுதும் மொழியும் பயன்படுத்தப்படுகின்றன. ஆசிரியர் தான் அறிந்துள்ளவற்றை மாணவர்க்குச் சொல்லிக் கொடுப்பதற்காக மாத்திரம் தான் மொழியைப் பிரயோகிக்கின்றார் என்று கூறிவிட முடியாது. ஆசிரியர்கள் கூறுபவைகளை அமைதியாகச் செவிமடுப்பதன் மூலம் மட்டும்தான் மாணவர்கள் கற்றுக் கொள்கின்றார்கள் என்று கூறிவிட முடியாது. ஆசிரியர்-மாணவர், மாணவர்-மாணவர் இடைத்தொழிற்பாடுகளுக்காகவும், கற்றல் கற்பித்தல் சந்தர்ப்பங்களின் போது பல்வேறு கருமங்களை ஆற்றிக் கொள்வதற்காகவும் ஆசிரியரும் மாணவரும் மொழியைப் பயன்படுத்துகின்றனர்.

செயற்பாடு 6

உங்களது பாடசாலையில் மற்றோர் ஆசிரியர் ஒரு வகுப்பில் பாடமொன்றினைக் கற்பிக்கும் விதத்தை ஆராய்க. அந்த ஆசிரியர் மாணவருடனும், மாணவர்கள் ஆசிரியருடனும், மாணவர்கள் மாணவர்களுடன் யாதேனும் கருத்துக்காக மொழியைப் பயன்படுத்துகின்றனரா என அவதானிக்க.

உம்: 01. பாடவிடயங்களை விளக்குவதற்காக (ஆசிரியர்-மாணவர்கள்)
02. அறியாததொன்றை அறிவதற்காக மாணவனொருவர் வினவுதல். (மாணவன்-ஆசிரியர்)
03.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04.
05.
06.
07.
08.
09.
10.

உங்களது அவதானிப்புக்கு அமைய வகுப்பறையினுள் ஆசிரியரும் மாணவரும் மொழியைப் பயன்படுத்தி மாணவரும் மாணவரும் மொழியைப் பயன்படுத்தி மேற்கொள்ளும் கருமங்களைப் பரந்த அடிப்படையில் பிரிவுகளாக வகுத்துக் காட்டுவோம்.

01. பாடவிடயங்களை விளக்குதல், விபரித்தல், சொல்லிக் கொடுத்தல்.

02. ஆக்கபூர்வமாகவோ, கற்பனை மூலமாகவோ கருத்துக்களை வெளியிடல்

03. ஒவ்வொருவருக்கிடையேயும் தொடர்புகளைப் பேணல்.

04. தனிப்பட்ட முறையில் தத்தமது கருத்துக்களை வெளியிடல், தர்க்கித்தல், வாதித்தல்.

05. ஏனையோரின் நடத்தைகளைக் கட்டுப்படுத்தல், ஆணையிடல், கட்டளைப் பிறப்பித்தல்.

06. அவதானித்தல், தேடியறிதல், அறிந்துகொள்ளல், வினவுதல்

07. சொந்தக் கருமங்களையோ சொந்தத் தேவைகளையோ நிறைவேற்றிக் கொள்ளல்.

08. வலியுறுத்தல், தைரியமூட்டுதல், அனுமதி வழங்குதல்.

வகுப்பறையினுள் ஆசிரியர் விசேடமாகத் தனது உரையாடற் பங்கு, மொழிநடை போன்றனபற்றிக் கவனஞ்செலுத்துதல் வேண்டும்.

உ-ம்: குரல், உச்சரிப்பு, விரைவு, இனிய சொற்களைப் பயன்படுத்தல். அத்தோடு மாணவர்கள் அவரவர்களுக்கிடையே கருத்துப் பரிமாறிக் கொள்ளும் போது பயன்படுத்தும் மொழி பற்றியும், ஆய்ந்தறிந்து உகப்பற்ற துலங்கலைக் காட்டும் மாணவர்கள் தொடர்பாகப் பொருத்தமான வழிவகைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். உரையாடலில் பங்குகொள்ளாது அமைதியாக இருக்கும் பேசுவதில் குறைபாடுகளைக் கொண்ட மாணவர்க்கு வேண்டிய வழிகாட்டலை வழங்குவதும் அவசியமாகும். பேச்சு மொழியில் மாத்திரமன்றி, எழுதும் மொழியிலும மாணவரின் கவனம் ஈர்க்கப்படல் வேண்டும். ஆசிரியர் கரும்பலகையிலும், மாணவரின் பயிற்சிப் புத்தகங்களிலும் கட்புல சாதனங்கள் போன்றவற்றிலும் எழுதுபவை பற்றியும் கவனஞ் செலுத்துதல் அவசியமாகும். மேலும் மாணவர்கள் எழுதும் போது விடும் தவறுகள் பற்றியும் கவனஞ் செலுத்த வேண்டியது மிக அவசியமாகும்.

செயற்பாடு 7.

வகுப்பறை இடைத் தொழிற்பாடுகளைப் பகுத்தாய்வதற்காக 1970 இல் ஃப்ளன்டர்ஸ் என்பவரால் சமர்ப்பிக்கப்பட்ட அவ் மதிப்பு அட்டவணைக்கு அமையத் தயாரிக்கப்பட்ட பகுத்தாய்வுப் படிவம் கீழே தரப்பட்டுள்ளது. உங்களது பாடசாலையின் எவரேனும் ஆசிரியர் பாடமொன்றினைக் கற்பிக்கையில் அவதானித்து அப்பாடவேளையுள் கற்றல்-கற்பித்தல் கருமத் தொடரில் வெளிக்காட்டப்பட்ட பண்புகளை அவ்வச் சந்தர்ப்பங்களில் உரிய தலைப்புக்களின் கீழ் குறித்துக்கொள்ள வேண்டியதே நீங்கள் மேற்கொள்ள வேண்டிய கருமமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | நடத்தையின் தன்மை | 5 நிமி | 10 நிமி | 15 நிமி | 20 நிமி | 25 நிமி | 25 நிமி | 35 நிமி |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஆசிரியரின் பேச்சு மறைமுகமான தாக்கம். | 01. உணர்வுகளை ஏற்றுக்கொள்ளல் (மாணவரின் உணர்வுகள் பற்றி வினவுதல், மிரட்டல் மூலம் அன்று.) | | | | | | | |
| | 02. புகழ்தல், ஊக்கிவித்தல், அனுமதித்தல். | | | | | | | |
| | 03. மாணவர் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளல், அவற்றைப் பாடத் திறனுக்காகப் பிரயோகித்தல். | | | | | | | |
| | 04. வினவுதல் (பாடவிடயங்கள் பற்றி) | | | | | | | |
| ஆசிரியரின் பேச்சு நேரடியான தாககம் | 05. பாடவிடயங்களைச் சொல்லிக் கொடுத்தல் ஆசிரியரின் கருத்துக்களை வெளியிடுதல். | | | | | | | |
| | 06 ஆணையிடல் கட்டளை பிறப்பித்தல். | | | | | | | |
| | 07. விமர்சித்தல் (உகப்பற்ற நடத்தைக் கோலங்களை உகப்பான நடத்தைக் கோலங்களாக மாற்றுவதற்காக. | | | | | | | |
| மாணவர் பேச்சு | 08. துலங்கலைக் காட்டுதல் ஆசிரியர் வினவுபவைகளுக்கு. | | | | | | | |
| | 09. பேச்சை ஆரம்பித்தல் (மாணவரின் கருத்துக்களை ஆசிரியரின் ஆதிக்கமின்றிச் சமர்ப்பித்தல்.) | | | | | | | |
| | 10. அமைதி வியாகூலமான தன்மையைக் காட்டல் | | | | | | | |

உங்களது அவதானிப்புக்கு அமைய ஆசிரியர் தமது அதிகாரத்தை வலியுறுத்துவதற்காக, பேச்சைப் பயன்படுத்தும் விதத்தையும் மாணவரின் ஆக்கர்வமானசுயாதீனமான பேச்சுக்கு ஆசிரியர் முட்டுக்கட்டையாக அமையும் விதத்தையும் விளங்கிக் கொள்க. வகுப்பறையில் மாணவரின் பேச்சை மாணவரின் பயிற்சிக்காகப் பிரயோகித்தல் வேண்டும் என்பதைக் கவனத்திற் கொள்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக முதலாவது 5 நிமிட நேரத்துள் ஆசிரியர், மாணவர்களை ஒரு தடவை புகழ்ந்தாரெனின்/+ எனவும் இரண்டாந்தடவை புகழ்ந்தா ரெனின் +// எனவும் குறிக்க.

## 4.8 வாய்மொழி மூலமற்ற தொடர்பாடல்

செயற்பாடு 8

உங்களது பாடசாலையில், பிறிதோர் ஆசிரியர் பாடமொன்றினைக் கற்பிக்கையில் அவதானிப்பில் ஈடுபட்டு, ஆசிரியரும் மாணவரும் பயன்படுத்தும் வாய்மொழி மூல, வாய் மூலமல்லாத தொடர்பாடல் முறைகளைப் பதிவு செய்து கொண்டு, அவற்றினால் வெளியிடப்படும் உணர்வுகள் யாவை எனக் குறிப்பிடுக.

பின்வருவதைப் போன்றதொரு படிவத்தைத் தயாரித்துக் கொள்ளலாம்.

| வாய்மொழிமூலமல்லாத தொடர்பாடல் | முறை-வெளியிடப்படும் உணர்வுகள் |
|---|---|
| உதாரணம்: | |
| 1. முகத்தின் தன்மை | மகிழ்ச்சியாகக் இருத்தலைக் காட்டுதல் |
| * புன்முறுவல் பூத்த முகம் | |
| * | |
| * | |
| * | |
| 2. பார்வை | |
| * முறைத்துப் பார்த்தல் | கோபம், யாதேனும் செயலை அனுமதிக்காமை |
| * | |
| * | |
| 3. அங்க அசைவுகள் | |
| * விரலை உறுக்குதல் | .................................. |
| * | |
| * | |
| * | |
| 4. ஒலிகள் | |
| * | |
| * | |
| * | |
| 5. சமிக்ஞைகளும் அபிநயமும் | .................................. |
| * | |
| * | |
| * | |
| 6. பிற | |
| * | |
| * | |
| * | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான வாய்மூலமல்லாத தொடர்பாடல் முறைகள் பல விடயங்கள் காரணமாக ஆசிரியருக்குப் பயனுடையதாக அமைகின்றன. மாண வனின் நேர்மையான உண்மையான உணர்வுகள் இவற்றின் மூலம் தானாகவே வெளிக்காட்டப்படுகின்றன. வாய்மொழி மூல முறைகளுடன் வாய்மொழி மூலமல்லாத முறைகள் காரணமாக, விடயங்களை விளங்கிக் கொள்ளும் சக்தியும் கருத்துக்களை வெளியிடும் சக்திகளும் பயன்மிக்கவையாக அமைகின்றன. ஆசிரியர்-மாணவர் ஆகிய இரு பிரி னரும் தத்தமது துலங்கல்களையும், நடத்தைகளையும் அதே கணத்தி லேயே ஒழுங்குபடுத்திக் கொள்ள வாய்ப்புக் கிடைக்கும்.

ஆசிரியர்களைப் பின்பற்றிச் செய்தல் மூலமே அதாவது போறல் மூலமே மாணவர்கள் பெரும்பாலானவற்றைக் கற்றுக் கொள்கின்றனர். தமது பெற்றோரிடத்தே காட்டுவதை விட கூடுதலான அன்பாயும் மதிப்பை யும் ஆசிரியர்களிடத்தே காட்டும் மாணவர்கள் அவ்வாசிரியர்களைப் பின்பற்ற முனைவர். எனவே ஆசிரியர்களாகிய நாம், பாடசாலையில் மாத்திரமன்றி, சகல சந்தர்ப்பங்களிலும் முன்மாதிரி நடத்தையைக் காட் டுதல் மிக முக்கியமானதாகும்.

ஹற் என்பாரும் அவரது சகாக்களும் காட்டும் வகுப்பறைத் தொடர் பாடலில் பின்வரும் பிரதானமான நான்கு இயல்புகளை அவதானிப்பு மூலம் நீங்கள் இனங்கண்டிருப்பீர்கள் என நம்புகின்றோம்.

**ஆசிரியர் வகுப்பினுள் பிரவேசிக்கும் சந்தர்ப்பம் தொட்டு ஆரம்பிக்கும் தொடர்பாடலானது மாற்றமடைந்தவாறு இடையீ டின்றி நிகழும் ஒரு தொழிற்பாட்டுத் தொடராகும்.** இடையீடின்றி நிகழும் இத்தொடர்பாடல் காரணமாக, ஆசிரியரும் மாணவர்களும் அவர வர்களது துலங்கலையும் நடத்தைகளையும் மாற்றியமைத்துக் கொள்கின் றனர். இதற்கு ஏற்ப, **பின்னூட்டலுடன் கூட தொடர்பாடல், ஒரு பரஸ்பரக் கொடுக்கல் வாங்கல்** (Transaction) **தொழிற்பாட்டுத் தொடராகும்.**

ஆசிரியர்களும், மாணவர்களும் தமது கருத்துக்களை வெளியிடுதல் வினாக்கள் வினவுதல், அனுமதித்தல் போன்ற தொடர்பாடற் கருமங் களின் போது வாய்மொழி மூல, வாய்மொழி மூலமல்லாத முறைகளைக் கையாள்கின்றனர். எனவே குறியீட்டுத் தன்மையானது (Symbolic) தொடர்பாட்டின் மற்றுமொரு பண்பாகும்.

ஆசிரியர்-மாணவர், மாணவர்-மாணவர் தொடர்பாடலின்போது, அவர்கள் தம்மையறியாமலேயே இயல்பாகவே தமது கலாசார உப கலாசார இயல்புகளை (உதாரணம் மொழி, பழக்க வழக்கங்கள், மரபுகள்) பரப் புகின்றனர். அவ்வாறே வகுப்பறையில் முறைமையற்ற தோழமைக் குழுக்கள், நேரடியாகவோ மறைமுகமாகவோ தமது குழுவின் தொழிற் பாடுகள் மூலம் உகப்பானவாறு அல்லது உகப்பற்றவாறு தமது வகுப் பின் ஏனைய அங்கத்துவர்களின் கற்றலிலும், வளர்ச்சியிலும் சமூகவியல் ரீதியில் தாக்கம் விளைவிக்கின்றன. ஆசிரியர் தனது தொடர்பாடல் முறைகளின்போது வகுப்பறையில், உளவியல் அம்சம் பற்றிக் கவனஞ் செலுத்தலாம். முறைமையான ஒரு குழுவாக, தமது வகுப்பு மாணவர் களின் பொது இயல்புகளையும் அவர்களது தனிப்பட்ட பல்வகைமை களை கருத்திற் கொண்டு அவர் தமது தொடர்பாடல் முறைகளைத் தயார்ப்படுத்திக் கொள்வர். இதற்கு இயைய, வகுப்பறைத் தொடர் பாடலில் கலாசாரம், சமூகவியல், உளவியல் ஆகிய பிரிவுகள் அடங் கப்படுகின்றமையால், அது பல்பரிமாணமானது (Multidimensional) என அழைக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.0 சாராம்சம்

வகுப்பறை ஒரு சமூகக் குழுவாகும்

* வகுப்பறை இடைத்தொழிற்பாடுகள் ஆசிரியர்-மாணவர், மாணவர்-மாணவர் ஆகியோருக்கிடையே நிகழுவனவாகும்.

* வகுப்பறை இடைத்தொழிற்பாடுகள், பாடத்தின் நோக்கங்கள், பாடத்தில் அடங்கும் பாடவிடயங்கள் கற்பித்தல் துணைச் சாதனங்கள், ஆகிய காரணிகளுக்கு அமைய வேறுபடும்.

* ஆசிரியரின் ஆளுமை, வகுப்பறைச் சூழ்நிலை, ஆசிரியர் பிள்ளையின் தேவைகளை நிறைவு செய்யும் விதம், தண்டனையும் பரிசும், மாணவரின் முறைமையற்ற தோழமைக் குழுக்கள் போன்றவை இடைத்தொழிற்பாடுகளில் தாக்கம் விளைவிக்கும் பல்வேறு மாறிகளாகும்.

* மாணவரின் முழுமையான வளர்ச்சியில், வகுப்பறையும் இடம்பெறும் இடைத்தொழிற்பாடுகள் பரந்த விதத்தில் தாக்கம் விளைவிக்கின்றன.

## 6.0 பிற்சோதனை

1. "கல்விக் கருமத் தொடரின் போது வகுப்பறை முக்கிய இடம் பெறுகின்றது" வகுப்பறையின் முறைமைசார் முக்கியத்துவம் எவருக்குக் கிடைக்கப்பெறல் வேண்டும்?

   1. வகுப்புத் தலைவருக்கு.
   2. வகுப்பு பொறுப்பாசிரியருக்கு.
   3. பாடப்பொறுப்பாசிரியருக்கு.
   4. வகுப்பு மாணவர்களுக்கு.

2. வகுப்பறையுள் இடைத் தொழிற்பாடுகள் தொடர்பாக நிலவும் குறைபாடுகளைத் தவிர்த்துக் கொள்வதற்காகச் செயற்படுத்தக் கூடிய மிகப் பொருத்தமான வழிவகை யாது?

   1. ஆசிரியர், மாணவர்களைக் கடுமையான கட்டுப்பாட்டில் வைத்திருத்தல்.
   2. எவ்வாறான ஆதிக்கங்களுமின்றி ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மாணவரின் விருப்புப்படி கருமமாற்ற இடமளித்தல்.
   3. உகப்பான சம வயதுக் குழு அமைப்பு கட்டியெழுப்பப்படும் விதத்தில் வகுப்பறையை ஒழுங்கமைத்தல்.
   4. ஒவ்வொரு மாணவரையும் தனித்தனியே கவனித்து இடைத்தொழிற்பாடுகளில் ஈடுபடுத்துவதற்கான வழிவகைகளை மேற்கொள்ளல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. வகுப்பறையில் இடைத் தொடர்புகள் மிகச் சிறப்பாகத் தொழிற்படக் கூடியவாறு பாடத்தைக் கற்பிக்கக் கூடிய முறை எது?

1. ஆசிரியர், மாணவரிடத்தே வினாக்கள் வினவி, அவற்றுக்கான விடைகளைப் பெற்றுக் கொள்வதன் மூலம் பாட விடயங்களை விளக்குதல்.

2. ஆசிரியர், உரை நிகழ்த்துவதன் மூலம் பாடவிடயங்களை விளக்குதல்.

3. மாணவர்களைக் குழுக்களாக வகுத்துப் பாடவிடயங்களை அவர்கள் விளங்கிக் கொள்ளக்கூடியவாறு ஆசிரியர் அவர்களுக்குத் துணைபுரிதல்.

4. ஆசிரியரின் வழிகாட்டலுடன் பாடத் தலைப்பு தொடர்பாக வகுப்பில் பொதுக் கலந்துரையாடலைக் கட்டியெழுப்புதல்.

4. வகுப்பறையில் கற்றல்-கற்பித்தல் சந்தர்ப்பங்களின்போது நிகழும் தொடர்பாடல் ஒரு "பல்பரிமாண"க் கருமத்தொடர் என அழைக்கப்படுகின்றது. இங்கு "பல்பரிமாண" என்பதால் கருதப்படுவது யாது?

1. பாட ஆரம்பம் தொடக்கம், பாடம் முடியும்வரை தொடர்பாடல் இடம் பெறுகின்றது என்பதாகும்.

2. தொடர்பாடல் காரணமாக ஆசிரியரும் மாணவரும் அவர்களது நடத்தைகளையும் துலங்கல்களையும் வேறுபடுத்தி னங்கண்டு கொள்கிறார்கள் என்பதாகும்.

3. தொடர்பாடலின்போது வாய்மொழி மூல, வாய்மொழி மூலமல்லாத பல முறைகள் பயன்படுத்தப்படுகின்றன என்பதாகும்.

4. தொடர்பாடலில் கலாச்சாரம், சமூகவியல், உளவியல், ஆகிய பிரிவுகள் இயங்குகின்றன என்பதாகும்.

5. பின்வரும் கூற்றுக்களைச்சரியாகப் பூரணப்படுத்தும் தெரிவின் கீழ்க் கோடிடுக.

1. வகுப்பறையின் தன்மையை ஒரு சமூகக்க் குழு என்ற வகையில் இனங்காண முடியும்?முடியாது.

2. வகுப்பறையில் மிக உகப்பான இடைத் தொழிற்பாட்டைக் கட்டியெழுப்பிக் கொள்வதற்கு ஏற்ற சமூகச் சூழ்நிலை பூரண சுயாதீனமுடைய சூழ்நிலையாகும்/சனநாயக் சூழ்நிலையாகும்.

3. வகுப்பறையில் முறைமையற்ற தனியாள் இடைத் தொடர்புகளை இனங்காண்பதற்காக, சுமுகமான முறையை பயன்படுத்த முடியும்/முடியாது.

4. மாணவனின் வளர்ச்சிக்குத் தேவையான தொழிற்பாடுகள் ஏற்படுத்தக்கூடியவாறும், பாடத்தின் நோக்கங்களுக்கும் பாட விடயங்களுக்கும் இயைபாக அமையக்கூடியவாறும் கற்றல் கற்பித்தல் சந்தர்ப்பங்களைத் திட்டமிட முடியும்/முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. ஆண்டு 1 மாணவர்களுக்கு எண்ணக் கருக்களைச் சமர்ப் பிக்கையில் பெரும்பாலும் பயன்படுத்தப்படுவது நேரடி யான தொடர்பாடல் முறையாகும்/மறைமுகமான தொடர் பாடல் முறையாகும்.

6. வகுப்பறையில் ஆசிரியரின் பேச்சை, மாணவர்களின் ஆக்கபூர்வமான சுயாதீன சிந்தனை வளர்ச்சிக்கும் நடத் தை வளர்ச்சிக்கும் பயன்படுத்த முடியும்/முடியாது.

7. வகுப்பறையில் மாணவர்-மாணவர் இடைத் தொழிற்பாடு களை வளர்ப்பதற்காக, முறைமையற்ற ஒழுங்கமைப்பா கிய சம வயதுக் குழுவினரைப் பயன்படுத்த முடியும்/ முடியாது.

## 7.0 விடைகள்.

01. 2

02. 3

03. 4

04. 4

05. 1. முடியும்

2. சனநாயக சூழ்நிலையாகும்

3. முடியும்

4. முடியும்

5. மறைமுகமான தொடர்பாடல்முறையாகும்

6. முடியும்

7. முடியும்

## 8.0 ஒப்படைகள்

01. வகுப்பறையுள் இடைத்தொழிற்பாட்டில் தாக்கம் விளைவிக் கும் மாறிகளை உதாரணங்கள் மூலம் விளக்குக.

02. வகுப்பறையுள் நிகழும் வாய்மொழி மூலத் தொடர்பாடலின் போது, ஆசிரியர் கவனஞ் செலுத்த வேண்டிய அடிப்படை யான விடயங்களைப் பட்டியற்படுத்துக.

03. மாணவரின் கல்விசார்ந்த, நல்லொழுக்கஞ் சார்ந்த மனவெ ழுச்சி சார்ந்த, சமூகஞ் சார்ந்த அபிவிருத்திக்காகக் குழுத் தொழிற்பாடுகளில் ஈடுபடுவதன் முக்கியத்துவத்தை உதாணங் களுடன் தருக.

04. கற்றல்-கற்பித்தல் கருமத்துக்காக, மறைமுகமான தொடர்பா டல் ஊடகத்தைப் பயன்படுத்துவதன் நன்மை தீமைகளைப் பற்றிக் கலந்துரையாடுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.0 கலைச்சொற்றொகுதி

| | |
|---|---|
| சமூகக் குழு | - Social Group |
| இடைத்தொழிற்பாடு/ இடைத்தாக்கம் | - Interaction |
| ஆளுமை | - Personality |
| நேர் | - Positive |
| மறை | - Negative |
| தொடர்பாடல்/தொடர்புறல் | - Communication |

## 10.0 மேலதிக வாசிப்புக்கான நூல்கள்


1. Cohen Louis and Manion Lawrence - **Perspectives on classrooms and Schools.** Holt, Rinehart and Winston Ltd., 1981.

2. Oeser O.A. - **Teacher, Pupil and Task,** Social Science paper Backs Latimer Trend 9 Co. Ltd. Reprinted - 1970.

3. Morrison A. and Mc. Intyre D. - **Teacher and Teaching** Penguin Education, c. Nicholls & Co. Ltd., 2nd edition. - 1973.

4. Banks Olive - **The Sociology of Education,** Bastaford 3rd Edition - 1976.

5. Ottaway A.K.C. - **Education and Society** Routtedge. Reprinted 1980.

6. Morrish Ivor - **The Sociology of Education** - An Introduction, George Allen & Unwin Ltd. - 1976.

7. Yelon, S.L. and Weinstein g.W.A. **Teacher's World - Psychology in the classroom.**

8. *பிழைத்து வாழ்வதற்காகக் கற்றல் - உலகக் கல்வி தற்காலமும் எதிர்காலமும். யுனெஸ்கோ-1978. (சிங்கள மொழி மூலம்.)*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed by

AJ PRINTS

No: 1B, P.T. De SilvaMawatha, Dehiwala

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org